நோக்குநூல்கள்
இன்றைய நிலையும் தேவையும்

பதிப்பாசிரியர்கள்

அ. சித்திரபுத்திரன்
இரா. திருநாவுக்கரசு
மா. பார்வதியம்மாள்



தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

நோக்கு நூல்கள்

இன்றைய நிலையும் தேவையும்

நோக்கு நூல்கள்
இன்றைய நிலையும் தேவையும்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் அ. சித்திரபுத்திரன்
முனைவர் இரா. திருநாவுக்கரசு
முனைவர் மா. பார்வதியம்மாள்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 978-81-7090-412-0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 369

நூல்	:	நோக்குநூல்கள் இன்றைய நிலையும் தேவையும்
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் அ. சித்திரபுத்திரன் முனைவர் இரா. திருநாவுக்கரசு முனைவர் மா. பார்வதியம்மாள்
மொழி	:	தமிழ்
பொருள்	:	நோக்கு நூல்
பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2041, ஆனி முதற்பதிப்பு சூன் -2010
பக்கம்	:	252+12
தாள்	:	70 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதா அட்டை
விலை	:	ரூ.90/-
படிகள்	:	1200
அச்சு	:	மாசறு 28/8, முத்துக்காளத்தித்தெரு திருவல்லிக்கேணி சென்னை 600 005

முனைவர் ம. இராசேந்திரன் தமிழ்ப் பல்கலைக்கழகம்
துணைவேந்தர் தஞ்சாவூர்-613010
நாள் 03-06-2010

அணிந்துரை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம்,

இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. அவ்வகையில் இந்நூலும் ஒன்று. இதன் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய பதிப்பாசிரியர்கள் முனைவர் அ.சித்திரபுத்திரன், முனைவர் இரா.திருநாவுக்கரசு, முனைவர் மா.பார்வதியம்மாள், பதிவாளர் முனைவர் சா.பி.சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை.கண்ணபுரக்கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

பதிப்பாசிரியர் உரை

தமிழ் அகராதியியல் மிகத் தொன்மையானது. தொல்காப்பிய உரியியலில் முளைவிட்டு நிகண்டுகள் வழி ஒருமொழி, இருமொழி அகராதிகளாக வளர்ச்சி பெற்றுப் பூத்துக் குலுங்குகிறது. 120 பூக்களுடன் மலரத்தொடங்கிய இப்பணி கி.பி.8ஆம் நூற்றாண்டில் நிகண்டுகள் எனும் சொற்களஞ்சியப் பூக்காடாக மாறியது. பல ஆயிரக்கணக்கான சொற்பூக்களைத் தாங்கி வளரும் கற்பகமரமாக உருவெடுத்தது. கால வளர்ச்சிக்கு ஏற்பப் பல புதுப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. இக்கற்பக மரத்தில் நிகண்டுகள், அகராதிகள் என்பன போன்ற நோக்கு நூல்கள் பெருங்கிளைகளாக உள்ளன. இக்கிளைகளே இக்கற்பகத்தருவின் உயிர் நாடியாகவும் உள்ளன.

உரியியல் மற்றும் நிகண்டுகளில் மனன முறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பெற்றுள்ளது. இந்நிலைமாறி நோக்குநூல் எனும் வகையில் அகரவரிசை முறையிலான அகராதிகள் பிற்காலத்தில் தோற்றம் பெற்றன. மதப்பணியின் பொருட்டுத் தமிழகம் வந்த மேனாட்டு மதபோதகர்கள் தமிழ் அகராதியியலுக்கு முத்தாய்ப்பாய்ப் பல ஒருமொழி, இருமொழி அகராதிப் பணிகளை மேற்கொண்டனர். தமிழ் அகராதியியல் வளர்ச்சிக்கு 20ஆம் நூற்றாண்டு ஒரு மைல்கல்லாகும். அபிதானகோசம், அபிதான சிந்தாமணி, வாழ்வியல், அறிவியல் கலைக்களஞ்சியங்கள் தனி, கூட்டுச் சொல்லடைவுகள், பேரகராதி, பொருட்களஞ்சியம் என்பன பல தோன்றித் தமிழ் அகராதியியலைப் புகழ் ஏணியின் உச்சிக்கு உயர்த்தின. இக்காலகட்டத்தில் தனிநபர் என்ற நிலைமாறிக் குழுப் பணியாக அகராதிப்பணி மாறியுள்ளது. அகராதிப்பணி கணிப்பொறி வழிப் பணியாகவும் உருவெடுத்துள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981இல் தொடங்கப்பெற்ற பொழுது தொகுப்பியல் எனும் துறை உருவாக்கப்பட்டது. பின்னர் அது அகராதியியல் எனப் பெயர் மாற்றம் பெற்றது. இந்தியாவில் எங்கும் இல்லாத துறையாக இது அமைந்து அகராதியியல் கொள்கை மற்றும் பயிற்சிப்பணிகளில் தனது முத்திரையைப் பதித்துள்ளது. கல்லூரி,

பள்ளி, ஆசிரியர்களுக்கெனப் பல பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பெற்றன. பன்முக நோக்கில் அகராதியியல் ஆய்வுகள் பல மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

அகராதியியல் குறித்து, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்களிடையே ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. கருத்தரங்கக் கட்டுரைகள் இந்நூல் வடிவம் பெற்றுள்ளன. இதில் 34 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இந்நூல் வெளிவருவதற்கு ஊக்கமளித்த மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களுக்கு மிக்க நன்றியுடையோம்.

கட்டுரையாளர்களுக்கும், நூலினை நன்முறையில் வெளிக்கொணர்ந்துள்ள பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை.கண்ணபுரக் கண்ணன் அவர்களுக்கும் பதிப்புத்துறையினருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பதிப்பாசிரியர்கள்

பொருளடக்கம்

1. நோக்குநூல்களின் அமைப்பு வேறுபாடும் பயன்பாட்டு வரையறையும்
முனைவர் எச்.சித்திரபுத்திரன் - 7

2. நிகண்டின் தோற்றத்திற்குத் தொல்காப்பியத்தின் பங்கு
முனைவர் இரா.திருநாவுக்கரசு - 13

3. தமிழ்ச் சொற்களஞ்சியம்
முனைவர் மா. பார்வதி - 18

4. மணிமேகலை காட்டும் சொல்லாட்சி
அ.அனுசுயா - 23

5. நாமதீப நிகண்டில் நாற்காலுயிர்ப் பொருள் வர்க்கம் - ஓர் ஆய்வு
த. ஆர்த்தி - 28

6. குளோவின் சிங்கள ஆங்கில அகராதி - ஓர் அறிமுகம்
ஆன்யாழினி சதீஸ்வரன் - 35

7. நோக்கு நூல்களில் அகராதிநிகண்டு
க. உமாராணி - 40

8. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் குறுக்கு நோக்கீடு
ந. இரஞ்சன் - 51

9. கிரியா அகராதியில் இலங்கைத் தமிழ்ச் சொற்கள் (குறிப்பான்கள்)
இரா. கலா - 59

10. குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் விலங்கினச் சொற்கள்
த. சங்கர் - 65

11. நோக்குநூல்களில் பெரியபுராணச் சிறப்புப்பெயரகராதி ஊர்ப்பெயர்கள்
சு. சத்தியா - 70

12. ஒருமொழி அகராதி : அமைப்பும் போக்கும்
சா. சாந்தி - 77

13. நாமதீப நிகண்டு - பறவை உயிர்பொருள் வர்க்கம் - ஓர் ஆய்வு
பா. சிலம்பரசி - 87

14. சங்க இலக்கியக் களஞ்சியம் - உள்ளடக்க ஆய்வு
க. சுதா - 94

15. சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் உள்ள பெயரடைகள் பற்றிய வகைப்பாடு
ரெ. சுதாகர் வடிவேலு - 101

16. திருக்குறள் சொற்பொருள் சுரபி உள்ளடக்கம் - ஓர் ஆய்வு
இரா. சுமதி - 109

17. தொல்காப்பியத்தில் அகராதியியல் கூறுகள்
முனைவர் ச.திருஞானசம்பந்தம் - 117

18. நோக்குநூல் வரிசையில் சிறப்பகராதியின் பங்கு
முனைவர் அ. தீபா - 124

19. தமிழ் நிகண்டுகளின் தோற்றம் வளர்ச்சி
சி. தென்றல் அரிசி - 130

20. திவாகர நிகண்டில் பல்பொருட் பெயர்த் தொகுதியும் பிங்கலநிகண்டின் அநுபோக வகையும் ஒப்பீடு
ப. தேன்மொழி - 140

21. சைவ சமயக் கலைக்களஞ்சியம் ஒரு பார்வை
கு. பிரியா - 150

22. நோக்குநூல்கள் அமைப்பு முறையில் மரஇனப்பெயர்த்தொகுதி - 2
நீ. மகேஸ்வரி - 157

23. எழுத்துப்பெயர்ப்பு
வி.மணிபாலா - 172

24. திவாகரம், சூடாமணி, நிகண்டு - பூப்பெயர்கள் ஒப்பீடு
சு.மதிவாணி - 176

25. மொழி அகராதிகள்
பெ. மின்னல்கொடி - 184

26. துறைச் சார்ந்த அகராதிகள்
க. மீனேஸ்வரி - 195

27. நோக்குநூல் வகையில் அகராதி
சா. லில்லிநேசம் - 204

28. குறிப்பான்கள் **(Labels)**
தா. வைதேகி - 213

29. மருங்கூர் வட்டார நாடார் வழக்குச் சொல்லும் பொருண்மையும்
முனைவர் சகோ.விர்ஜின் விமலா பாய் - 217

30. நாமதீப நிகண்டில் தெய்வப்பெயர் வர்க்கம் ஓர் உள்ளடக்க ஆய்வு
இரா. வீரா - 224

31. அறிவியல் களஞ்சியத்தின் பதிவுக்கூறுகள்
ச. ஜெயந்தி - 234

32. பலபொருள் சொற்களின் தோற்றம்
ஜோ.ஜெனிட்டா ஜோப் - 242

33. இனம் - சொற்பொருள்
மு. இராஜம் - 249

34. 'அம்' எனும் பெயரடையில் பயன்பாட்டுச் சூழலும் சொற்பொருண்மைச் செயல்பாடும்
- முனைவர் த.இளஞ்செழியன் - 254

நோக்குநூல்களின் அமைப்பு வேறுபாடும் பயன்பாட்டு வரையறையும்

முனைவர் எச்.சித்திரபுத்திரன்
தஞ்சாவூர்

ஒரு மொழியைக் கற்பதற்குத் துணை நிற்பன கருவி நூல்கள். இலக்கணம், இலக்கியம், அகராதி என்பன அக்கருவி நூல்களாகும். இலக்கணம், இலக்கியம் என்பன பொதுநிலையில் ஒரு வரையறுக்கப்பெற்ற சூழலில் பயன்படத்தக்கனவாக உள்ளன. மாறாக அகராதிகள் பொதுநிலையில் எல்லாச் சூழல்களிலும் கையாளத்தக்கனவாக உள்ளன. அகராதிகள் என்று கூறும்பொழுது எழுத்துரு பெற்றனவேயே சுட்டப்பெறுகின்றன. எனினும் மனச் சொற்றொகுதி (Mental Lexicon) என்பது ஒவ்வொருவர் மூளையிலும் பதிந்து செயல்படவல்லது. இம்மனச்சொற்றொகுதியே கருத்துப் பரிமாற்றத்திற்கு ஏற்பச் சொற்களை வழங்கிக் கருத்துப் பரிமாற்றத்தை எளிமையாகவும் பொருள் உள்ளவகையிலும் அமையத் துணை நிற்கின்றது. காலந்தோறும் மாறிவரும் மொழியில் மிக எளிதாக மாற்றமடையும் மொழிக்கூறுகளுள் சொல்லும் பொருளும் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. மொழிகளில் பழைய சொற்கள் வழக்கிழந்து புதிய சொற்கள் தோற்றம் பெறுகின்றன. இது எல்லா மொழிகளுக்கும் பொதுவான ஒரு பண்பாகக் காணப் பெறுகின்றது. மனச்சொற்றொகுதியில் முழுமையான சொற்றொகுதியைப் பாதுகாத்து வைப்பதும், மாற்றமடைவன வற்றைப் பதிவுசெய்வதும் இயலாத செயலாக உள்ளது என்பதால் நோக்குநூல்கள் அல்லது அகராதிகள் எனும் எழுத்துவடிவங்களின் தேவை இன்றியமையாத ஒன்றாக அமைந்து விட்டது. எனவே, தான் அகராதிகள் மொழிகளின் சொற்றொகுதியைப் பாதுகாக்கும் “கருவூலங்களாக”க் (Treasure House) கருதப்படுகின்றன.

நோக்குநூல்கள் (Reference Books) என்பன இலக்கிய, இலக்கண நூல்கள் போலின்றி ஐயங்கள் ஏற்படும்பொழுது மட்டும் நோக்குத் தன்மையுடையன. நோக்கு நூல்கள் இலக்கிய, இலக்கண நூல்களைப் போன்று திட்டமிட்டுப் படிக்கப்பெறுவதில்லை. சுருங்கக் கூறினால் அவற்றின் துணையாகவே (supplement) இவை கருதப்பெறுகின்றன. நோக்குநூல்களில் பல வகைகள் உள்ளன. அவற்றிற்கு இடையே பொதுநிலையில் சில ஒற்றுமைகளும் பல

வேற்றுமைகளும் காணப்படுகின்றன. நோக்கு நூல்களின் பயன்பாடு குறித்து மாணவர்களுக்கோ ஆய்வாளர்களுக்கோ கற்றுத் தரப்பெறவில்லை. தற்பொழுது பள்ளிகளில் அகராதிகளைப் பார்த்து, அவற்றைப் பயன்படுத்துவது குறித்து ஓரளவு கற்றுத் தரப் பெறுகின்றது. எனினும் இது முழுநிலையில் அமைவதில்லை. ஒரு சொல்லைத் தேடிக் கண்டுபிடிப்பது அதற்குரிய பொருளைத் தெரிந்து கொள்வது என்ற நிலையிலேயே இப்பணி அமைகிறது. அகராதிகளில் இடம்பெறும் கற்றல் கூறுகள் சுட்டிக் காட்டப் பெறுவதில்லை. அகராதியைக் கையாளுவதில் மாணவர்களுக் கிடையே ஆர்வத்தைத்தூண்டும் நிலையில்தான் மாணவர்களின் கற்றல் மற்றும் படைப்பாக்கம் சிறப்புறும்.

நோக்கு நூல்களின் வகைகள்

நோக்குநூல்களின் அமைப்பு நிலையில் வேறுபட்ட பல நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள்

1. கலைக்களஞ்சியம் (Encyclopaedia)
2. அகராதி (Dictionary)
3. சொல்லடைவு (Index)
4. தொடரடைவு (Concordence)
5. பொருளடைவு (Compendium)
6. சொற்களஞ்சியம் (Theasurus)
7. சொற்பட்டியல் (Glossary)

என்பன சுட்டிக்கூறத்தக்கன. மேற்கண்ட நோக்கு நூல்களை அவற்றின் அமைப்பு மற்றும் பயன்பாடு எனும் நிலையில் இரண்டாகப் பிரிக்கலாம்.



நோக்கு நூல்களைக் கற்றல் கற்பித்தலுக்குப் பயன் உடையன; பொது அறிவை வளர்ப்பதற்குப் பயன் உடையன என இருவகை களாகப் பாகுபாடு செய்யலாம். மேற்கண்டவற்றுள் கலைக் களஞ்சியம், சொற்களஞ்சியம் என்பன பொது அறிவு பெறுவதற்குத் துணை நிற்பன. பிறநோக்கு நூல்கள் மொழியையும் இலக்கியத்தையும் கற்பதற்கும் கற்பித்தலுக்கும் துணையாகின்றன.

நோக்கு நூல்கள், அமைப்பு நிலையில் பொதுவாகச்

சொற்களும் அவற்றிற்கு எதிராக பொருளும்/விளக்கமும் அமையுமாறு தொகுக்கப்பெறுகின்றன. எல்லா நோக்கு நூல்களிலும் தலைச்சொல் பகுதியும் அதற்குரிய பொருள் விளக்கப் பகுதி எனும் இரு பகுதிகள் இடம்பெற்றிருக்கும். நோக்கு நூல்களில் பல்வேறு அகராதியியல் உத்திகள் கையாளப் பெற்றிருக்கும் எனினும் அவற்றைப் பயன்படுத்துவதில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கலைக்களஞ்சியம் மற்றும் பிற நோக்கு நூல்கள்

நோக்குநூல் வரிசையில் கலைக்களஞ்சியம் முக்கிய இடம் பெறுகிறது. கலைக்களஞ்சியத்தை உலகநூல் (World Book) என்பர். உலகத்தில் இடம்பெற்ற இன்றியமையாத நிகழ்வுகள், வரலாற்றுச் செய்திகள், இடங்கள், பொருள்கள், சிறப்புமிக்கோர் பெயர்கள், நூல் பெயர்கள் என்பன போன்ற செய்திகள் குறித்த சொற்கள் தலைச் சொற்களாக இடம்பெறுகின்றன. ஒவ்வொரு தலைச் சொல்லுக்கும் விரிவான விளக்கம் இடம்பெறும். இவ்விளக்கம் சிறிதாகவும், கட்டுரை வடிவிலும் அமைவதுண்டு. இவ்விளக்கத்தில் மொழி தொடர்பான செய்திகள் எதுவும் இடம் பெறுவதில்லை. ஒரு தலைச்சொல்லையும் அது சார்ந்த விளக்கத்தையும் ஒரு கட்டுரையைப் படிப்பது போன்று ஒருவர் படித்து முடிக்க இயலும். இத்தலைச்சொற்கள் மூலம் கிடைக்கும் விளக்கங்கள் ஒருவரின் பொது அறிவை விரிவாக்க உதவுவனவாக அமைகின்றன. கலைக்களஞ்சிய விளக்கங்களில் வரலாற்றுக் கூறுகள், வரைபடங்கள், புகைப்படங்கள், சமன்பாடுகள், குறியீடுகள் என்பன போன்றவை இடம் பெறுகின்றன. கட்டுரையின் இறுதியில் அச்சொற்குரிய விளக்கங்களைத் தொகுத்து வழங்கியோர் பெயர், துணை நூற்பட்டியல் போன்றன இடம் பெற்றிருக்கும் சான்றாகச் சுட்ட வேண்டுமென்றால் "பாலம்" என்ற தலைச்சொல்லை எடுத்துக் கொண்டால் 'பாலம்' என்ற உலகப்பொருளின் விளக்கம், உலகத்தில் காணப்படும் பலவகையான பாலங்கள், உயர்வான, நீண்டபாலம், பாலத்தின் கட்டுமானச் செய்திகள், அவைக்குறித்த வரலாற்றுச்செய்திகள் என்பன போன்றவை இடம் பெற்றிருக்கும். பல வகையான பாலங்களின் வரைபடங்களும் தரப்பட்டிருக்கும். பாலம் என்பது குறித்து மேலும் செய்திகளை அறிந்து கொள்வதற் குரிய துணைநூல் பட்டியலும் சுட்டப்பட்டிருக்கும். ஆனால் பிற நோக்குநூல்களில் "பாலம்" குறித்த பொதுச்செய்திகள் இடம் பெறாது. மொழித்தொடர்பான செய்திகள் மட்டும் இடம் பெற்றிருக்கும். 'பாலம்' என்பதன் பொருள் அதன் மொழிச்சூழல் என்பன போன்ற செய்திகள் தரப்பட்டிருக்கும்.

கலைக்களஞ்சியம் மூலம் பொது அறிவை வளர்த்துக்கொள்ள இயலும். பொது அறிவை வளர்த்துக்கொள்ள வாய்ப்பில்லை. கலைக்களஞ்சியம் அல்லாத நோக்குநூல்கள் இதற்கு மாறானவை. இவை பொது அறிவுக்குப் பயன்படுவதில்லை. மொழி அறிவைப் பெருக்கிக்கொள்ளத் துணை நிற்கின்றன.

மொழியில் வழங்கப்பெறும் சொற்களை அகராதிகள் தொகுத்தளிக்கின்றன. அகராதிகளின் தன்மைக்கும் வகைக்கும் ஏற்ப அவற்றில் இலக்கியச் சொற்களும் பொதுச்சொற்களும் இடம் பெறுகின்றன. அகராதிகளில் தலைச்சொல் மற்றும் பொருள் விளக்கத்திற்குப் பல உத்திகள் கையாளப்பெறுகின்றன. இவ்வுத்திகள் தலைச்சொல் பதிவுக்குரிய அமைப்பைத் தருகின்றன. அகராதியில் ஓர் எழுத்து, ஓர் அசை, சொல், கூட்டுச்சொல் தொடர் என்பன தலைச்சொற்களாக அமைகின்றன. தலைச்சொல், ஒலிப்பு முறை, இலக்கணக் குறிப்பு என்பன போன்ற செய்திகள் தலைச் சொல் பகுதியில் இடம் பெறுகின்றன. அகராதிகளில் தலைச்சொல் பகுதி பொருள் பகுதி எனும் இருபகுதிகளும் இன்றியமையாதவை யாக விளங்குகின்றன. சொல் திரிபுகளின் (Inflections) அடிப்படை வடிவமே தலைச்சொல்லாக இடம்பெற, பிறசொல் வடிவங்கள் இடம்பெறுவதில்லை. சான்றாக "செய்" என்பது தலைச்சொல்லாக இடம்பெற அதன் பல்வேறு திரிபுகள் (செய்தேன், செய்கின்றேன், செய்வேன், செய்த, செய்து...) தலைச்சொற்களாக இடம் பெறுவதில்லை. திரிபுகள் பொது இலக்கண அமைப்பிலிருந்தும் பொருளிலிருந்தும் மாறுபட்டுத் தோன்றுமானால் அவையும் தலைச்சொற்களாக இடம்பெற வாய்ப்புண்டு. பொருளைத் தவிர குறுக்கு நோக்கீடு, மேற்கோள், சொற்பிறப்பு என்பன போன்ற செய்திகள் பொருட் பகுதியில் இடம் பெறுகின்றன.

சொல்லடைவுகள் அமைப்பும் வகைகளும்

சொல்லடைவுகள் என்பன பெயருக்கு ஏற்பக் குறிப்பிட்ட ஒரு நூலில் அல்லது பல நூல்களில் வழங்கபெற்ற சொற்களையோ, குறிப்பிட்ட ஒரு ஆசிரியர் அல்லது பல ஆசிரியர்களின் நூல். நூல்களில் வழங்கப்பெறும் சொற்களையோ தொகுத்தளிப்பன வாகும். இதுபொதுவாக ஒரு மொழி, இருமொழி எனும் நிலையில் அமைகின்றது. அகராதிக்கும் சொல்லடைவுக்கும் இடையே பல வேறுபாடுகள் உண்டு. அதில் இன்றியமையாதது. 'தரவு' என்பதன் வரையறையாகும். சொல்லட்டைகள் வரையறுக்குப்பட்ட தரவினுக்கு உரியது. அகராதிகளில் தலைச்சொல் பல்வேறு நெறிமுறைகளின் கீழ் தொகுத்தளிக்கப்பெறும். அகராதிகளில் திரிபு வடிவங்கள் தலைச்சொற்களாக இடம்பெறுவதில்லை. திரிபு

வடிவங்களில் தெரிவு செய்யப்பெற்ற அடிப்படை வடிவமே (Cannonical form) தலைச்சொல்லாக அமைகிறது. சொல்லடைவுகளில் ஒரு சொல்லின் எல்லாத்திரிபுகளும் தலைச் சொல்லாக இடம்பெறுகின்றன. திரிபு வடிவங்களின் இலக்கணக் குறிப்பு, பொருள், வருகை, இடங்கள் என்பன குறிக்கப் பெறுகின்றன. சொல்லடைவுகள் மூலம் குறிப்பிட்டஒரு காலப் பகுதிக்குரிய மொழி அமைப்பை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். இடம்பெறும் தரவின் அடிப்படையிலும் சொல்லடைவு இருவகைப்பெறும். அவை தனிச்சொல்லடைவுகள் மற்றும் தொகுப்புச் சொல்லடைவு என்பனவாகும். தனிச்சொல்லடைவில் குறிப்பிட்ட நூல் சொற்கள் இடம்பெற்றிருக்கும். தொகுப்புச் சொல்லடைவில் பல சொற்களின் சொற்கள் இடம்பெறும் சான்றாக அகநானூறு சொல்லடைவு தனிச்சொல்லடைவு, சங்க இலக்கிய சொல்லடைவு தொகுப்புச் சொல்லடைவாகும்.

தொடரடைவும் பொருள் அடைவும்

தொடரடைவும் பொருளடைவும் சொல்லடைவைப் போன்று குறிப்பிட்ட காலக்கட்ட சொற்களைத் தொகுத்தளிப்பன வாக உள்ளன. இவை இரண்டிற்குரிய வேறுபாடு என்னவெனில் தொடரடைவில் ஒரு தனிச்சொல் இடம்பெறும் சொற்சூழல் தொகுத்தளிக்கப்பெறும். சான்றாக, 'யானை' என்ற சொல்லை எடுத்துக்கொண்டால் இலக்கியங்களில் 'யானை' எனும் சொல் இடம்பெறும் பாடல்அடி தொகுத்தளிக்கப்பெறும். பலபொருள் சொல் எனின் பலபொருளின் அடிப்படையில் சொற்சூழல் தொகுத்தளிக்கப்படும். பொருளடைவில் சொல் இடம்பெறும் பாடல் அடி இடம் பெறுவதில்லை. மாறாக அச்சொல் இடம்பெறும் சூழலின் பொருள் விளக்கம் தரப்படும் இதுவும் பல பொருள் சொல்லாகக் காணப்பெறின் பொருள்கள் தனித்தனியாக எண்ணிட்டுக்காட்டப்பட்டு அதன்கீழ் விளக்கம் இடம்பெறும் பொருளடைவின் மூலம் சொல்லின் முழுநிலையான மொழி அல்லாத (Extra Linguistic) சூழலை அறிந்துகொள்ள இயலும். தொடரடைவும் சொற்சூழலையும் பொருளடைவும் பொருள் சூழலையும் அடைவு செய்வனவாக அமைகின்றன.

சொற்பட்டியலும் சொற்களஞ்சியமும்

நோக்குநூல்களில் சொற்பட்டியல் மற்றும் சொற் களஞ்சியம் என்பன இன்றியமையாத இடம் பெறுகின்றன. சொற்பட்டியல் என்பது கடினமான சொற்களுக்கு அல்லது கலைச்சொற்களுக்கு இணைச்சொற்கள் தரும் ஒரு நூலாகும். இவ்வகையில் சொல் குறித்த எவ்வகை விளக்கமும் இடம்

பெறுவதில்லை. சொல்லுக்குரிய எளிமையான ஒரு பொருட்பன் மொழியோ, இணைச்சொல்லோ, மொழிப்பெயர்ப்போ, எழுத்துப் பெயர்ப்போ இடம்பெறும். இது பொதுவாக நூற்களில் இறுதிப் பகுதியில் இடம் பெற்றிருக்கும், அல்லது தொகுத்து அகராதி வடிவில் தனி நூலாகத் தரப்பட்டிருக்கும்.

சொற்களஞ்சியம் என்பது மிகப்பழமையான ஒரு நோக்கு நூல் பணியாகும். இது Theasurus என்று ஆங்கிலத்தில் வழங்கப் பெறும். இவ்வகை நோக்குநூல் தமிழில் நிகண்டு எனும் பெயரில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் வெளிவந்துள்ளது. ஆங்கில மற்றும் தமிழ் நிகண்டுகளுக்கிடையே சிறிது வேறுபாடு உண்டு. இரண்டு நூற்களுமே கருத்திலிருந்து சொல் நோக்கிய அமைப்புடையன (Concept → word) நிகண்டில் சொற்றொகுதி பல்வேறு பொருட் புலங்களாகப் பிரிக்கப்பட்டுப் புலச்சொற்கள் பட்டியலிடப் பெற்றிருக்கும். ஆங்கில தசாரஸ்களில் புலச்சொற்களுக்குரிய குறுக்கு நோக்கீடு வழங்கப்பெற்றிருக்கும். குறுக்கு நோக்கீட்டில் தலைச்சொல்லின் எண் தரப்பெற்றிருக்கும். ஆனால் நிகண்டுகளில் இத்தகைய குறுக்குநோக்கீட்டு வசதி இல்லை. ஒரு சொல்லிற்குரிய விளக்கத்தைக் காண வேண்டுமானால் தொகுதி முழுமையும் தேடிப் பார்க்கவேண்டிய சூழல் உள்ளது. ஆங்கில தசாரஸ் அமைப்பில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவே தமிழில் சொற்களஞ்சியம் வெளிவந்துள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கலைக்களஞ்சியம், அகராதி, பெருஞ்சொல்லகராதி, பொருட்களஞ்சியம், சொற் பட்டியல் என்பன வெளிவந்துள்ளன. செம்மொழி இலக்கியங் களின் விலங்கினச் சொற்களின் தொடரடைவு ஒன்று கட்டுரை ஆசிரியரால் முடிக்கப் பெற்றுள்ளது.

உயர்தனிச் செம்மொழியாகிய நம் தமிழ்மொழி வளம்பெற வெவ்வேறு நோக்கு நூல்களின் தேவை இன்றியமையாததாக உள்ளது.

துணை நூல்கள்

சித்திரபுத்திரன்,எச்., 1994, அகராதியியல் கையேடு (கணிப்பொறி அச்சு) அகராதியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சித்திரபுத்திரன், எச்., 2002, தமிழ் அகராதியியல், அனன்யா, தஞ்சாவூர்.

சித்திரபுத்திரன், எச்., 2004, சொல்லும் பொருளும், அன்னம், தஞ்சாவூர்.

மாதையன், பெ., 2005, தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை உருவ உள்ளடக்க ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

Zgusta, Ladislav. 1971, Manual of Lexicography, Mouton, The Hague, New York.

Singh, R.A., 1982, An Introduction to Lexicography, Central Institute of Indian Languages, Mysore.

நிகண்டின் தோற்றத்திற்குத் தொல்காப்பியத்தின் பங்கு

முனைவர் இரா.திருநாவுக்கரசு
தஞ்சாவூர்

முன்னுரை

தமிழ்மொழியைக் கற்பவரும் சரி, பிறமொழியைக் கற்பவரும் சரி யாராயினும் சொல்லுக்குப் பொருள் கூறும் நூலின் துணையின்றி எம்மொழியையும் எளிதில் கற்கமுடியாது என்பது தெளிவு. தமிழ்மொழியில் சொல்லுக்குப் பொருள் கூறும் நூல்கள் இன்றுவரை ஏராளமாகத் தோற்றம் பெற்றன. அந்த வகையில் சொல்லுக்குப் பொருள் கூறுவதையே நோக்கமாகக் கொண்டு தோற்றம் பெற்ற முதல் நூலாக நிகண்டு விளங்குகிறது. எனவேதான் நோக்குநூல்களின் வரிசையில் நிகண்டு முதலிடம் பெறுகிறது. இந்நிகண்டு நூல் எதற்காகத் தோன்றியது? அது தோன்றுவதற்கு ஏதேனும் வேறு நூல்களோ நூலோ அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளதா? என்னும் வினாக்களுக்கு விடைகாணும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.

நிகண்டு

நிகண்டு எனும் சொல் முதலில் தோன்றிய திவாகரத்திலோ அடுத்துத் தோன்றிய பிங்கலத்திலோ காணப்படவில்லை என்பது தெளிவு. நிகண்டு என்னும் சொல் வழக்கு தமிழ்ப் பரப்பில் இறையனார் அகப்பொருளில்தான் முதன்முதலில் பயன்படுத்தப் படுகிறது. எனினும் சொல்லுக்குப் பொருள் கூறும் நூல் என்ற அடிப்படையில் நிகண்டு என்னும் சொல்லை மண்டலபுருடர்தான் தாம் இயற்றிய சூடாமணி நிகண்டில் பதிவு செய்கிறார்.

திவாகரம், பிங்கலம் ஆகிய நிகண்டுகளில் நிகண்டு என்னும் சொல்லின் பதிவு இல்லையா? என்ற வினா நம் கண்முன் எழுவது சரியே. திவாகரத்தில் ஆறு அங்க வகைகளைக் குறிப்பிடும்பொழுது தான் 'நிகண்டு' என்னும் சொல் பதிவு செய்யப்பட்டு உள்ளதை அறியமுடிகிறது.

சான்று

“ஆறுஅங்கம் மந்திரம், வியாகரணம், நிகண்டு
சந்தோ பிசிதி, நிருத்தம், சோதிடம்” **(திவா. 2731)**

அதன்பின் பல்வேறு நூல்களும் நிகண்டு என்னும் பெயரிலேயே தோன்றின. பிற்காலத்தில்தான் நிகண்டு என்னும் சொல், சொற்பொருள் கூறும் நூலுக்குப் பெயரானது என்றால், அதற்குமுன் தோன்றிய நூல்களுக்குஎன்ன பெயரை வழங்கியிருப்பார்கள்?

உரிச்சொல்

ஆரம்ப காலத்தில் சொல்லுக்குப் பொருள் கூறும் நிகண்டு நூல்களுக்கு உரிச்சொல், உரிச்சொல் பனுவல் என்னும் பெயர்களே வழங்கப்பட்டு வந்தன. இதனை நன்னூல் நூற்பா மூலம் அறியலாம்.

“பிங்கலம் முதலா
நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே” **(நன்.460)**

உரிச்சொல், உரிச்சொல் பனுவல் என்னும் பெயர்கள் ஆரம்ப காலத்தில் சொற்பொருள் கூறும் நூலுக்கு வழங்கி வந்தன. எனினும் நிகண்டு என்னும் சொல்லே நிலைத்துவிட்டது என்பதை யாவரும் மறுக்க முடியாது.

நிகண்டுக் காலம்

சொல்லக்கு நூற்பா வடிவில் பொருள்தரும் நோக்கு நூலே நிகண்டாகும். தொல்காப்பியத்திற்குப் பின் சில நூற்றாண்டு சமணம், பௌத்தம் சைவம் போன்ற மதங்கள் இந்தியாவில் வேரூன்றத் தொடங்கின. இம்மாற்றங்களைத் தழுவி எண்ணிறந்த இலக்கிய நூல்கள் தமிழில் தோற்றம் பெற்றன. எனவே, தமிழில் சொற்றொகுதியில் பெருக்கும் ஏற்பட்டது. அதனால் சொற்பொருளிலும் மாற்றமும் வளர்ச்சியும் ஏற்படும் நிலை உருவானது. இதுவே நிகண்டு நூல் தோன்றுவதற்கு அடித்தளமிட்டது. கி.பி.8 ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை எண்ணற்ற நிகண்டுகள் அறிஞர்களால் தோற்றம் பெற்றன. எனவே இக்காலத்தை நிகண்டுக் காலம் என்று வழங்கலாம். நிகண்டு தோன்றுவதற்குக் காரணமாக ஏதேனும் வேறு நூல் அமைந்துள்ளதா?

தொல்காப்பியம்

தொல்காப்பியம் பல்வேறு இலக்கண, இலக்கியங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படியிருக்கையில் நிகண்டின் தோற்றத்திற்கும் தொல்காப்பியம் அடிப்படையாக அமைகின்றதா? என்றால் அமைகின்றது என்ற விடையையே பலரும் கூறுவர். நிகண்டு முழுமையுமே தொல்காப்பியத்தைப் பின்பற்றியே எழுந்துள்ளது.



என்ற வரைபடத்தின் மூலம் மேற்சுட்டிய கருத்தை நிரூபிக்கலாம்.

நூற்பொருள்

தொல்காப்பியத்தின் இடையியலும், உரியியலும் சொல்லுக்குப் பொருள் கூறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இவ்விரு இயல்களும் சொல்லுக்கு நூற்பா வடிவில் பொருள் கூறுகின்றன. இந்த முறையை அப்படியே நிகண்டு எடுத்துக் கொண்டது. தொல்காப்பியத்தைப் போல நிகண்டும் பெரும்பாலும் வெளிப்படையாகப் பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுகின்றது என்பதை அறியலாம்.

நூலின் பெயர்

ஆரம்பகாலத்தில் நிகண்டிற்கு உரிச்சொல் என்ற பெயரே வழங்கப்பட்டது என்பதை முன்னர்க் கண்டோம். அதற்கும் அடிப்படைக் காரணம் தொல்காப்பியமே. உரிச்சொல் என்ற சொல் தொல்காப்பியத்திலே இடம் பெற்றுள்ளது.

சான்று :

"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை" (தொல. சொல். 297)

என்று தொடங்கும் நூற்பா மேற்சுட்டிய கருத்தை உணர்த்தி நிற்கிறது.

நூலினமைப்பு

நிகண்டுகளில் சொற்கள் சொற்பொருள் உறவு மற்றும் கருத்து வகைப்பாட்டின் அடிப்படையில் பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நிகண்டுகளில் பன்னிரண்டு வகையான பொருட்புலங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.

1. ஒருபொருட் பல்பெயர்த் தொகுதி (Synonyms)
2. ஒருசொல் பல்பொருட் தொகுதி (Polysemy)
3. பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி (Group Words)

இம்மூன்று பிரிவுகளுள் முதலிரண்டு பிரிவும் தொல்காப்பிய உரியியலிலிருந்து எடுக்கப்பட்டவை.

"ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்"
(தொல். சொல். 297 : 4,5)

என்னும் நூற்பா அடிகள் மேற்சுட்டிய கருத்தை உணர்த்தி நிற்கின்றன. வைப்பு முறையில் மட்டும் மாற்றமுள்ளது. தொல்காப்பியத்தில் ஒருசொல் பலபொருட் தொகுதி முதலில் உள்ளது. ஆனால் நிகண்டில் இரண்டாவதாக உள்ளது. தொல்காப்பியத்தினுள், இரண்டாவதாகவுள்ள பலசொல் ஒருபொருட் தொகுதி நிகண்டில் முதலாவதாக உள்ளது. ஏனெனில் பிற்காலத்தில் சமயங்களின் நம்பிக்கையும் கடவுளின் நம்பிக்கையும் மிகுதியாக இருந்தன. அதனால்தான் ஒருபொருட் பலபெயர்த் தொகுதி முதலில் நிகண்டு நூல்களில் அமைந்திருக்கிறது எனலாம். இத்தொகுதியில் முதல் பகுதியாகத் தெய்வப் பெயர்கள் இடம் பெற்றிருப்பதே இதற்குத் தகுந்த சான்றாகும். இந்த முதல் பிரிவை மேலும் பத்து உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1.1. தெய்வப்பெயர்
1.2. மக்கள் பெயர்
1.3. விலங்கின் பெயர்

1.4. மரப்பெயர்
1.5. இடம்பெயர்
1.6. பல்பொருட் பெயர்
1.7. செயற்கைப் பெயர்
1.8. பண்புப்பெயர்
1.9. செயல் பெயர்.
1.10. ஒலி பற்றிய பெயர்

இப்பத்துப் பிரிவுகளும் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டவை தான். தெய்வம், விலங்கு, மரம், பல்பொருள், செயற்கை (பறை), ஒலி (பண்) போன்ற தொகுதிகள் தொல்காப்பியத்தில் சொல்லப் பட்ட கருப்பொருளை மையமாகக் கொண்டு தோன்றியவை. இடப்பெயர், மக்கட்பெயர் என்னும் இரண்டு தொகுதிகள் அகத்திணையியலை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்றன. பண்புப் பெயர் உரியியலில் வரும் ‘இசையினும் குறிப்பினும் பண்பிலும் நிலையீஇ’ என்பதன் அடிப்படையில் உருவானது. செயல் பற்றிய பெயர் வினையியலைக் கொண்டு உருவானது.

இறுதியாக உள்ள பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியானது தொல்காப்பிய மரபியலை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றது. மரபியலில் ஐம்பூதம், பத்துக்குற்றம், முப்பத்திரண்டு உத்தி போன்றவை இதற்குச் சில சான்றுகளாகும்.

முடிவுரை

இக்கட்டுரை நிகண்டின் தோற்றத்திற்குத் தொல்காப்பியம் எவ்வகையில் அமைந்துள்ளது என்பதை மட்டும் ஆராய்ந்துள்ளது.

நிகண்டின் நூற்பொருள், நூற்பெயர், நூலின் அமைப்பு ஆகிய அனைத்திற்கும் தொல்காப்பியமே அடிப்படையாய் அமைந்துள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

முதலிரண்டு பெரும் பிரிவுகளில் வைப்பு முறையிலுள்ள மாற்றமும் அதற்கான காரணமும் விளக்கப்பட்டுள்ளன.

துணைநூற்கள்

1. தொல்காப்பியம்
2. நன்னூல்
3. திவாகர நிகண்டு

நோக்கு நூல்களில் அகராதி நிகண்டு

முனைவர் மா. பார்வதி
தஞ்சாவூர்

ஒருமொழியின் வளர்ச்சியினையும் அதன் தனித்தன்மையையும் தெரிவிக்கும் கருவி நூலாக அமைவது சொற்களஞ்சியம் (சொற்றொகை) ஆகும். சொற்கள் குறித்த ஆய்வுகள் இலக்கண உருவாக்கக் காலத்திலிருந்தே தொடங்கப்பட்டுள்ளன. தமிழ் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சொற்களின் பாகுபாடு இடம்பெற்றது. மேலும் ஒவ்வொரு சொற்கள் குறித்தும் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்று தனித்தனி இயல்கள் இடம்பெற்றுள்ளன. இடையியலில் 44 இடைச்சொற்களும், அவற்றின் பொருளும் தரப்பெற்றுள்ளன. சொல்லதிகார எட்டாவது இயலான உரியியலில் செய்யுளுக்கே உரித்தான 120 உரிச்சொற்கள் தொகுத்துத்தரப்பட்டுள்ளன. மேலும் அவற்றின் பொருளும் தரப் பெற்றுள்ளன. அப்பொருள்கள் மூன்று நிலையில் அமைந்தன

உரிச்சொல் → பொருள்
→ 1. ஒருசொல் ஒருபொருள்
→ 2. ஒருசொல் பலபொருள்
→ 3. ஒருபொருள் பலசொல்

இவ்வாறு சொற்பொருள் கூறும் தன்மை இலக்கணத்தின் ஒரு பகுதியாக இடம்பெற்றது. பின்னர் தனிநூலின் தேவை உணர்ந்து நிகண்டுகள் உருவாக்கப்பட்டன.

முதன் முதலில் 'நிகண்டு' என்னும் சொல் வடமொழியில் வேதத்தின் அங்கமாய், வைதீகச் சொற்களின் பொருளை உணர்த்தும் கருவி நூலுக்கு மட்டுமே சிறப்பாக வழங்கப்பட்டது. பின்னர் நாளடைவில் சொற்பொருள் உணர்த்தும் நூலுக்கும் இப்பெயர் வழங்கப்பட்டது. நிகண்டுகளில் முதன் முதல் வந்த நிகண்டு திவாகரநிகண்டு. அதன்பின்னர் ஏராளமான நிகண்டுகள் தோற்றம் பெற்றன. நிகண்டுகளில் சொற்றொகை பாகுபாடு (தொகுதி. வகை) எனும் பல நிலைகளில் அமைந்திருந்தாலும் கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுக்குள்ளேயே அவை அடக்கப்பட்டன.

1. ஒருசொல் பலபொருள்
2. ஒருபொருள் பலசொல்
3. தொகைச்சொல்

இந்நிகண்டுகளே சொற்களஞ்சியம் உருவாக முன்னோடிகளாக அமைந்தன.

தோன்ற காரணம்

நிகண்டுகள் பல நிலைகளில் தொகுதிகளாக வெளிவந்தாலும் அவற்றில் சொல்லுக்குப் பொருள் காண்பது எளிதான முறையில் இல்லை. எனவே எளிமையான நோக்கு நூலின் தேவை ஏற்பட்டது.

நிகண்டுகள் மனனம் செய்யும் வகையில் சூத்திர்களாக எழுதப்பட்டன.

தலைச்சொல் ஒருபொருள் பன்மொழி அமைப்பில் அமைந்திருந்தது.

வழக்கிலுள்ள எல்லாச் சொற்களும் நிகண்டுகளில் தரப்படவில்லை.

தற்காலத் தமிழுக்குத் தேவையான பல சொற்கள் நிகண்டுகளில் தரப்படவில்லை.

நிகண்டுகளில் இடம்பெற்றுள்ள பலசொற்கள் தற்காலத்தமிழில் வழக்கிறந்துள்ளன.

வடமொழிச்சொற்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

சொல் வழு, பொருள் வழு அதிகமாக காணப்படுகின்றன.

எதுகை, மோனைகளுக்குக் கொடுத்த இன்றியமையாமை பொருளுக்குத் தரப்படவில்லை.

இதனைப்போன்று ஏராளமான குறைபாடுகள் நிகண்டுகளில் காணப்பட்டன. நிகண்டு போல மனனக்கருவியாக அமையாமல் நோக்கீட்டு நூலாக அமைய சொற்களஞ்சியம் ஒன்று உருவாக்கும் அவசியம் ஏற்பட்டது.

சொற்களஞ்சியம்

சொற்களஞ்சியம் என்பது சொற்களின் தொகுப்பு. இது அகராதியிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அகராதியில்

சொல்லுக்கான பொருள் தரப்பட்டிருக்கும். ஆனால் ஒருசொற் களஞ்சியத்தில் பொருளிலிருந்து சொல் தரப்பட்டிருக்கும். சொற்களஞ்சியம் மூன்று பொருள்களை உள்ளடக்கியது.

1. கருத்து (Concepts)
2. தலைப்பு (Topics)
3. பிரிவு (Subjects)

சொற்களஞ்சியத்தில் ஒருபொருள் பன்மொழிகள் இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை. மேலும் ஒருபொருள் பன்மொழி அகராதி ஒரு சொற்களஞ்சியம் ஆகாது. சொற்களஞ்சியத்தில் அகரவரிசை அட்டவணை மிக இன்றியமையாததாகும். இது சொற்களஞ்சியத்தின் இறுதியில் இடம் பெறும். சொற்களஞ்சியத்தில் கூறப்பட்ட எல்லா சொற்களும் அகரவரிசைப் படுத்தப்பட்டுப் பக்க எண்கள் நோக்கீட்டுக் குறிப்புகளாகத் தரப்பெறும். இதனால் ஒருசொல்லை வைத்துக்கொண்டு அது தொடர்பான சொற்களை அறிய இயலும். ஒரு சொல்லைப் பல இடங்களில் தருவதைச் சொற்களஞ்சியத்தில் தவிர்க்க வேண்டும். சொற்களஞ்சியம் தமிழ்ச் சொல்லிலக்கணம் நன்றாக அறிந்தவர்க்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் பயன்படும் வகையில் அமையவேண்டும்.

சொற்களஞ்சிய முன்னோடிகள்

ஆங்கிலத்தில் ராஜெட் என்பவரால் எழுதப்பட்ட Thesaerus என்பது தான் முதன்முதலில் உருவாக்கப்பட்டது. இதில் சொற்கள் சொல்லுறவு அடிப்படையில் அமைந்தது. சொற்களைச் சொற்களங்கள் மற்றும் சொற் குவியல்களாகப் பிரித்து இச்சொற்களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து பேராசிரியர் சு.ராசேந்திரன் எழுதிய தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் என்ற நூல். இதில் ஒரு சொற்களஞ்சியம் எவ்வாறு உருவாக்க வேண்டும், சொற்களஞ்சியத்தின் சொற்றொகை பாகுபாட்டின் பின்னணியில் அமையும், பொருண்மைக் கோட்பாடு, சொற்றொகையைப் பகுப்பதில் ஏற்படும் சிக்கல்கள், சொல் தேர்வு, முன்னிலைப்படுத்துகை, சொற்களஞ்சியத்தின் பயன் ஆகியன முதல் பகுதியிலும், இரண்டாம் பகுதியில் சொற்களஞ்சியமும் மூன்றாம் பகுதியில் அகரவரிசை அட்டவணை நோக்கீட்டுப் பக்க எண்ணுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

சொல் தேர்வு

சொற்களஞ்சியத்தில் எந்த வகையான சொற்கள் இடம்பெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- அகராதியினைப் போன்றே சொற்களஞ்சியமும் உயர்வழக்கு நிலைபேறு பெற்ற தாழ்வழக்கு இரண்டு வழக்குகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். (உயர்வழக்கு மாதம், நிலைபெறு தாழ்வழக்கு மாசம்)

- தற்காலத்தமிழ் ஆங்கிலத்திலிருந்து பல சொற்களைக் கடன் வாங்கியுள்ளது. ஆங்கிலக் கடன் சொற்களைச் சொற்களஞ்சியத்தில் சேர்ப்பது அந்த அந்தப் பதிப்பாசிரியர் முடிவே ஆகும்.

- பரவலாக்கப்பட்ட தாவரம் மற்றும் விலங்குப் பெயர்கள் சொற்களஞ்சியத்தில் இடம்பெறலாம்.

- கூட்டுச்சொற்களையும், தொடர்களையும் சொற் களஞ்சியத்தில் தருவதைப் பற்றி சொற்களஞ்சியத்தை உருவாக்குபவரே தீர்மானம் செய்ய வேண்டும்.

- சொற்களஞ்சியம் உருவாக்குகையில் சிக்கனம் கருதி எந்த எந்தச் சொற்களைச் சொற்களஞ்சியத்தில் சேர்க்காமல் விட்டுவிட வேண்டும் என்பதைத் திட்டவட்டமாய்த் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

வழக்கிறந்த சொற்களைத் தற்காலத் தமிழுக்கென்று எழுதப்பட்ட சொற்களஞ்சியத்தில் சேர்ப்பது நல்லதல்ல.

பயன்

சொற்கள் எத்தனைப் பொருள்களைக் கொண்டுள்ளன. அவற்றின் இடையே உள்ள தொடர்பு ஆகியவை சொற்களஞ்சியம் வெளிப்படுத்தும் ஒரே கருத்தைத் தருகின்ற சொற்கள் எத்தனை உள்ளன என்பதையும் ஒரு சொல்லுக்குப் பதிலாக மற்றொன்றை தேர்ந்தெடுக்கும் அவசியமும் தெளிவாக்கும்.

உள்ளன என்பதையும் ஒரு சொல்லுக்குப் பதிலாக மற்றொன்றை தேர்ந்தெடுக்கும் அவசியமும் தெளிவாக்கும்.

பார்வை நூல்கள்

1. *எச். சித்திரபுத்திரன், 2002, தமிழ் அகராதியியல், அனன்யா, தஞ்சாவூர்.*
2. *மாதையன், பெ, 1997, அகராதியியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
3. *ராசேந்திரன்,ச. 2002, தமிழ்ச் சொற்களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
4. *ஜெயதேவன், வ. 1977, தமிழ் அகராதியியல், அன்பு நூலகம், சென்னை.*

மணிமேகலை காட்டும் சொல்லாட்சி

அ.அனுசுயா
தஞ்சாவூர்

மொழி காலந்தோறும் மாறிவரும் இயல்பினைக் கொண்டது. மொழியின் வளர்ச்சியில் சொற்களின் பெருக்கமும், பொருள்களின் விரிவும் முக்கியக் கூறுகளாகும். சமுதாய வளர்ச்சியின் காரணமாய்ப் புதுப்புதுச் சொற்கள் படைக்கப் படுவதினாலும், பழைய சொற்கள் புதுப்பொருள் பெறுவதினாலும் ஒரு மொழியின் சொற்றொகுதியில் மாற்றம் ஏற்படுகின்றது. ஒருவர் கருத்துப் பரிமாற்றத்திற்குச் சொற் களையும் அவற்றின் பொருள்களையும் அறிந்திருத்தல் தேவை யாகிறது. காலந்தோறும் மாறிவரும் சொற்றொகுதியையும் சொற்பொருளையும் ஒருவர் நினைவில் வைத்துக் கொள்வது அரியது. சொற்களையும் அவற்றின் பொருள்களையும் எளிதில் பார்த்துத் தெரிந்து கொள்ளவும், மனதில் பதித்துக் கொள்ளவும் துணை நிற்பன நோக்கு நூல்களாகும். நோக்கு நூல்கள் பல நிலைகளில் காணக்கிடக்கின்றன.

நோக்குநூல் வளர்ச்சி

சொற்களைத் தொகுக்கும் பணி பழங்காலம் முதல் அதாவது தொல்காப்பிய காலத்திலிருந்து நடைபெற்று வருகின்றது. இலக்கணம், இலக்கியம், நாடகம், புதினம், கவிதை, பொதுச்செய்திகள் போன்றவற்றைப் படிக்கும்பொழுது ஏற்படும் சிக்கலைத் தீர்ப்பதற்கும் பொது அறிவை வளர்ப்பதற்கும் பயன்படும் கருவி நூல்கள் நோக்குநூல்கள் ஆகும். இந்நோக்கு நூல்களின் மூலம் ஒருவருக்கு ஏற்படும் ஐயங்களை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளலாம். மேலும் ஒருவர் முதலில் அறிந்துகொண்ட செய்திகளைவிடக் கூடுதலான செய்திகளை இந்நோக்கு நூல்களின்வழி பெற்றுக்கொள்ளலாம். பொதுவாக நோக்குநூல்கள் ஏழு வகைகளாகப் பிரிக்கப்படும். அவை கலைக் களஞ்சியம், அகராதி, சொல்லடைவு, சொற்பட்டியல், தொடர் அடைவு, பொருள் அடைவு, சொற்களஞ்சியம் என்பன ஆகும்.

மேற்கூறிய நோக்குநூல்கள் சில ஒற்றுமைகளையும் பல வேற்றுமைகளையும் கொண்டுள்ளன. அகர வரிசை என்பது முதல் ஒற்றுமையாகும். ஆனால் அமைப்பிலும் பயன்பாட்டிலும் அவற்றிற்கிடையே வேறுபாடுகள் உண்டு. நோக்குநூல்கள் வரிசையில் அகராதிக்கு அடுத்து இடம்பெறுவன சிறப்பு அகராதிகள் என்று அழைக்கப்படும் சொல்லடைவுகளாகும்.

சொல்லடைவு

சொல்லடைவு அல்லது சொற்றொகை என்பது பெயருக்கு ஏற்பச் சொற்களின் தொகுப்பு என்று மேலோட்டமாகக் கூறலாம். ஓர் இலக்கியத்தில் அல்லது ஒரு காலக்கட்டத்து இலக்கியத்தில் அல்லது ஓர் ஆசிரியரின் படைப்புக்களில் சொற்கள் எவ்வாறு எவ்வெப் பொருள்களிலும் விரிவுகளிலும் பயின்று வந்துள்ளன என்று தொகுத்தும், வகுத்தும், பகுத்தும் அகரவரிசையில் வெளிவரும் நோக்குநூலே சொல்லடைவாகும்.

சொல்லடைவின்மூலம் ஆசிரியரின் மொழிநடையையும் நூலின் மொழிச் சிறப்பையும் சொற்களின் பயன்பாட்டுச் சூழலையும் சொற்களின் மொழியியல் அதாவது ஒலியனியல், உருபனியல், தொடரியல் குறித்த செய்திகளையும் விரிவாகவும் தெளிவாகவும் அறிந்துகொள்ள முடியும்.

மணிமேகலைக் காப்பியம்

மணிமேகலைக் காப்பியம் பதிகம் முதலில் அமையப் பெற்று, 30 காதைகள் கொண்டது. 4286 வரிகளையுடையது. இரட்டைக் காப்பியங்களில் ஒன்றாகவும், ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. இதன் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் இவர் இளங்கோவடிகளின் நண்பராவார். இவர் பௌத்த சமயத்தவர். மணிமேகலை துறவு பூண்டதால் இக்காப்பியத்திற்கு மணிமேகலை துறவு என்ற பெயரும் உண்டு.

மணிமேகலையில் பயின்றுவரும் சொற்கள்

எளிய மக்களின் இயல்புகளையும் இல்லாமை இயலாமை களையும், பெருங்குடி மக்களின் பெருமிதப் பண்புகளையும், காலப்போக்கில் கலையாலும், பிறவற்றாலும் கலந்துவிட்ட கறைகளையும் குறைகளையும் கடமைகளையும் எடுத்துச்

சொல்லும் முறைகளால் இன்றும் இக்காப்பியம் வாழ்கின்றது. இனி என்றும் வாழும். மணிமேகலையின் பதினொன்றாம் காதையில் வரும் சொற்களை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒருசொல் பலபொருள்

ஒரு சொல்லிற்கு ஒரு பொருள் அன்றிப் பல பொருள்கள் வழக்கில் காணப்படும் நிலையில் அவை, அனைத்தும் ஒன்றிற்கொன்று தொடர்புடையனவாக இருப்பின் அவை ஒருசொல் பல பொருள்களாகுகின்றன. மணிமேகலையில் இடம் பெற்றுள்ள ஒருசொல் பலபொருள்களைப் பின்வரும் சான்றுகள் மூலம் அறியலாம்.

எ.கா.

1. ஈங்கு - இப்பொழுது *(123 : 134)*
   - இந்த *(21 : 126)*
2. அல்லது - இயலாது *(71 : 130)*
   - அல்லாமல் *(49 : 129)*

ஒருபொருள் பலசொல்

ஒரு வடிவத்தில் வேறுபட்டும் பொருளில் ஒற்றுமை காட்டி நிற்கும் சொற்கள் ஒரு பொருள் பல சொற்களாகும். பொருளில் ஒற்றுமை காட்டும் சொற்கள் ஒருபொருள் பல சொற்கள், ஒரு பொருட் பன்மொழிகள், நிகர்நிலைச் சொற்கள் என்றும் அழைக்கப்பெறுகின்றன.

எ.கா.

தரும தலைவன் *(30 : 127)* அறவியங்கிழவோன் *(23 : 126)* போதித்தலைவன் *(43 : 128)* நாதன் *(74 : 131)*	புத்ததேவன்

பொருள் முரண்

ஒரு சொல்லின் பொருள் கூறுகளில் சில மற்றொரு சொல்லின் பொருள் கூறுகளில் முரண்பட்டுக் காணப்படும் போது அல்லது இல்லாமல் போடும்போது முரண்சொற்கள் அமைகின்றன. இத்தகு சொற்கள் மணிமேகலையில் சில வழங்கப் பெற்றுள்ளன.

எ.கா.

அந்நாள் (46 : 129) × இந்நாள் (46 : 129)
முன்னர் (130 : 135) × பின்னர் (1:125)

உறவுமுறைச் சொற்கள்

மனித உறவுகளின் அடிப்படையில் எழும் உறவுமுறை அமைப்பு, பிறப்பு மற்றும் திருமணம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறுபட்ட உறவுமுறைச் சொற்களைப் பெற்று நிற்கின்றது. மணிமேகலையில் உறவுமுறையைக் குறிக்கப் பின்வரும் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

எ.கா.

1. தவ்வையர் - தமக்கையர் (136 : 135)
2. அவ்வையர் - தாய்மார் (137 : 135)
3. மனையான் - மனைவி (12 : 126)

உடல் உறுப்புப் பெயர்கள்

மனித உடலில் முக்கியமாகக் கருதப்படுவது உறுப்புகள் ஆகும். மணிமேகலையில் உறுப்புப்பெயர்கள் அதிகம் இடம் பெற்றுள்ளன. முகம், கண், செவி, நா, வயிறு, கை, பாதம் போன்ற உடலுறுப்பு குறித்த சொற்கள் மணிமேகலையில் காணப்படுகின்றன.

(எ.கா)

1. நாதன் பாதம் நவைகெட ஏத்தித் (74 : 131)
2. இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது (81, 131)
3. ஈன்ற குழவி முகங்கண்டு இரங்கித் (114, 133)
4. நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்து (116, 134)
5. தீமொழிக்கு அடைத்த செவியோய் நின்னடி (67, 130)

தெய்வப் பெயர்கள்

மணிமேகலையில் இடம்பெற்றுள்ள தெய்வப் பெயர்களைப் பின்வரும் சான்றுகள் மூலம் அறியலாம்.

1. தீவதிலகை (20 : 126)
2. இந்திரன் (தேவர்கோன்) (28 : 126)
3. மணிமேகலா தெய்வம் (1:125)

விளிச்சொற்கள்

விளிச்சொற்களில் 'ஆய்' எனும் விகுதி அதிகம் இடம் பெற்றுள்ளது. பின்வரும் மணிமேகலைச் சான்றுகள் மூலம் விளிச்சொற்களை அறியலாம்.

(எ.கா)

1. அன்னாய் (10 : 126)
2. கேளாய் (45 : 128)

மணிமேகலையில் தனித்தன்மை தரும் சொற்கள்

பின்வரும் சொற்கள் மணிமேகலையில் இடம் பெற்றிருப்பது தனிப்பெரும் சிறப்பாகும்.

1. அணியிழை (36 : 127)
2. சேயிழை (75 : 131)
3. மடக்கொடி (45 : 128)
4. இளங்கொடி (53 : 129)
5. பைந்தொடி (49 : 129)
6. பூங்கொடி அன்னாய் (18, 126)
7. ஆயிழை (19, 126)

தொகுப்புரை

மணிமேகலை பதினொன்றாம் காதையில் ஒருசொல் பலபொருள், ஒருபொருள் பலசொல், பொருள் முரண், விளிச் சொற்கள், உறுப்புப் பெயர்கள், தெய்வப்பெயர்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

நாமதீப நிகண்டில் நாற்காலுயிர்ப் பொருள் வர்க்கம் - ஓர் ஆய்வு

த. ஆர்த்தி
தஞ்சாவூர்
வி

முன்னுரை

சொற்பொருள் அறிவைப் பெருக்கிக்கொள்ள நிகண்டுகள் தோற்றம் பெற்றன. ஒருசொல்லைக் குறிப்பதற்குப் பல பொருள்களும், ஒரு பொருளைக் குறிப்பதற்குப் பல சொற்களையும் அடிப்படையாக வைத்து எழுதப்பட்டதே நிகண்டு ஆகும். நிகண்டுகளை அடிப்படையாக வைத்து அகராதிகள் தோற்றம் பெற்றன. நோக்குநூல்களுள் ஒன்றான நிகண்டுகளில் நாமதீப நிகண்டின் அஃறிணை உயிர்ப்பொருள் படலத்தில் நாற்காலுயிர்ப் பொருள் வர்க்கத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நிகண்டு – பெயர்க்காரணம்

வடமொழியிலுள்ள வேதத்தின் ஆறு அங்கங்களுள் நிருத்தம் என்பதும் ஒன்று. நிருத்தத்தின் ஒரு பகுதி நிகண்டு ஆகும். இப்பகுதியில் சொற்பொருள் விளக்கம் செய்யப் பட்டுள்ளது. சொல்லுக்குப் பொருள் கூறும் தனி நூல்கள் நிகண்டு என வடமொழியில் அழைக்கப்பட்டன. சொற்பொருள் கூறத்தொடங்கிய தமிழ் நூல்களும் நிகண்டு என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டன.

நிகண்டுகளின் தோற்றம்

தொல்காப்பிய உவமையியல் பிற்கால அணி இலக்கண வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்ததுபோல உரியியல் என்ற சொற்பொருள் விளக்கும் இயல் நிகண்டாகியது. இடைக் காலத்தில் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) தோன்றிய இலக்கியங்களில் காணப்பெறும் செய்யுள்நடை, கவிதைப்பண்பு, சொற்களின் தன்மை, வடிவம் - சொற்றொடர் அமைப்பு முதலியன சங்கத்

தமிழிலிருந்து பெரிதும் வேறுபட்டிருந்தன. அதனால் பண்டைத்தமிழ் நூல்களின் இலக்கியச் செழுமையை அறிந்து கொள்வதில் இடர்ப்பாடு இருந்தது. புலவர்களுக்கும் இலக்கியப் பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்கும் பண்டைக்கால நூல்களைப் படித்துச் சுவைப்பதற்கு உதவும் கருவி நூல்களாக, புதிதாக இலக்கியம் படைக்க உறுதுணை நூல்களாக நிகண்டுகள் தோன்றின.

சொல்லுக்கு இருபெரும் இயல்புகள் உள்ளன. அவை சொன்மை, பொருண்மை என்பனவாகும். சொன்மை, பொருண்மை ஆகிய இவ்விரு சொற்கூறுகளைத் தெளிந்தால் அன்றிச் சொற்களையோ அவற்றின் செயல்பாட்டையோ அறிய இயலாது. எனவேதான், பொருண்மை அறிவு கருதி முதலில் நிகண்டுகளையும், சொன்மை அறிவு கருதி இலக்கணங்களையும் பயில்வது பண்டைய தமிழகத்தில் மரபாக இருந்து வந்துள்ளது. எனவே நிகண்டுகளின் தோற்றம் இன்றியமையாத தேவையாக இருந்தது.

நாமதீப நிகண்டு

நாமம் என்றால் பெயர் : தீபம் என்றால் விளக்கு. பெயர்ப் பொருள விளக்கம் செய்வதால் நாமதீப நிகண்டு எனப் பெயர் பெற்றது. இந்நூலின் ஆசிரியர் சிவசுப்பிரமணிய கவிராயர். இவர் காலம் 19ஆம் நூற்றாண்டாகும்.

நூல் அமைப்பு

இந்நிகண்டு ஒருபொருள் பல்பெயர்த் தொகுதியை விளக்குகின்றது. வடமொழியாளர் ஒருபொருட் பல் பெயரை 'ஸ்மாநார்த்தபம்' என்பர். இந்நூலின் பொருட் பாகுபாடு பின்வருமாறு அமைந்துள்ளது.



இந்நூல் வெண்பா யாப்பினால் ஆனது. 16 தொகுதிகளை உடையது. 8 பாக்கள் பாயிரத்திலும் 800 பாக்கள் பதினாறு தொகுதிகளிலுமாக மொத்தம் 808 வெண்பாக்கள் உள்ளன.

இந்நிகண்டில் அஃறிணை உயிர்ப்பொருள் படலத்தில் முதலாவதாக நாற்காலுயிர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்நாற்காலுயிர்களின் வகைகளும் அவற்றின் உணவு முறைகளையும் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

நாற்காலுயிர்ப்பொருள் வர்க்கம்

நாற்காலுயிர்ப்பொருள் வர்க்கத்தில் விலங்குகள், அவற்றின் இனங்கள், விலங்கின் உடல் உறுப்புக்கள், ஆண், பெண் விலங்கின் பெயர், இளமைப் பெயர்கள், விலங்குக் கூட்டத்தின் பெயர், நாற்காலுயிர்ப் பொதுப்பெயர் என்பனவற்றிற்குரிய சொற்கள் காணப்படுகின்றன. இவற்றின் வகைப்பாடு பின்வருமாறு அமைகின்றது.

நாற்காலுயிர்ப் பொருள்

விலங்குகள் (இனம்) | உடல் உறுப்புகள் | ஆண்பெண் விலங்கின் பெயர் | விலங்கின் இளமைப் பெயர் | விலங்கு கூட்டத்தின் பெயர் | நாற்காலுயிர்ப் பொதுப் பெயர்

விலங்குச் சொற்கள்

நாமதீப நிகண்டில் முப்பத்தொன்று நாற்காலுயிர்கள் இடம்பெற்றுள்ளன. அவை

	விலங்குகள்	வகைகள் (இனங்கள்)
1.	ஆளி	
2.	சிங்கம்	
3.	புலி	
4.	யானை	பிடி
5.	குதிரை	
6.	பசு	(நற்பசு, தீப்பசு, மலட்டா ஓரீற்றாவின்பசு)
7.	காளை	
8.	காட்டா (காட்டுப்பசு)	
9.	எருமை	ஆணெருமை, ஈனாதமாடு
10.	ஆடு	ஆணாடு, வரையாடு
11.	உடும்பு	
12.	கரடி	
13.	பன்றி	முட்பன்றி
14.	அணில்	
15.	காண்டாமிருகம்	
16.	புருடாமிருகம்	
17.	தேவாங்கு	
18.	மூஞ்சூறு	
19.	பூனை	
20.	மான்	கருமான்,புல்வாய்,கத்தூர் (கவரிமான்)
21.	குரங்கு	கருங்குரங்கு, முசு
22.	புழுகுப்பிள்ளை	

23.	கீரிப்பிள்ளை	
24.	நரி	
25.	முயல்	
26.	நாய்	பெண்நாய், செந்நாய், சடைநாய்
27.	கோவேறு கழுதை	
28.	கழுதை	
29.	ஒட்டகம்	
30.	ஒந்தி	
31.	எலி	பெருச்சாளி, காரெலி

விலங்குகளின் வகைகள்

நாமதீப நிகண்டில் காணப்படும் விலங்குகளை இரு பெரும் பிரிவுகளாக பிரித்து ஆராயலாம். அவை காட்டு விலங்கு, நாட்டு விலங்கு என்பனவாகும்.

விலங்கு

காட்டு வலங்கு	**நாட்டு விலங்கு**
ஆளி	அணில்
சிங்கம்	குதிரை
புலி	பசு
யானை	காளை
காட்டா	எருமை
உடும்பு	ஆடு
கரடி	மூஞ்சூறு
அணில்	பூனை
காண்டாமிருகம்	நாய்
புருடா மிருகம்	கழுதை
தேவாங்கு	எலி
மான்	ஒட்டகம்
குரங்கு	ஒந்தி
புழுகுப்பிள்ளை	எலி
கீரிப்பிள்ளை	பன்றி
நரி	
முயல்	
கோவேறு கழுதை	

நாமதீப நிகண்டில் காணப்படும் காட்டுவிலங்கு மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது. அவை பின்வருவன

காட்டு விலங்கு

தாவரம் உண்பன	மாமிசம் உண்பன	இரண்டும் உண்பன
யானை	ஆளி	பன்றி
காட்டா	புலி	நரி
அணில்	சிங்கம்	புழுகுப்பிள்ளை
காண்டாமிருகம்	கரடி	எலி
புருடாமிருகம்	கீரிப்பிள்ளை	
மான்	தேவாங்கு	
குரங்கு	உடும்பு	
முயல்		
கோவேறு கழுதை		
ஒட்டகம்		
ஒந்தி		

நாற்காலுயிர் பற்றிய பொதுச்செய்திகள்

ஆண் மற்றும் பெண் விலங்குகளைக் குறிப்பதற்கு 20 சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(எ.கா.) ஆண் - மா, ஒருத்தல், கடுவன், களிறு, சேவல்
பெண் - பாட்டி, பிடி, பிணை

விலங்குகளின் இளமைப்பெயர்களாக எட்டுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அவை

பறழ், குழவி, குட்டி, பிள்ளை, பார்ப்பு, குருளை, மறி கன்று என்பனவாகும்.

விலங்குகளின் உடலுறுப்புக்களான தலை, வாள், துதிக்கை, பல்லடி, முதுகு போன்ற பல சொற்கள் இடம் பெற்றுள்ளன.

(எ.கா.) வாலுக்குரிய வேறுப்பெயர்களை காணலாம்.

வாலின் பெயர் - கூலம், விலானம், தோகை, கூறம், வேசகம், வால், வாலதி (*நூ.235*)

தொகுப்புரை

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய திவாகர, பிங்கல நிகண்டில் விலங்கினப் பெயர்த் தொகுதி மற்றும் மாப்பெயர் வகையில் விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன போன்ற உயிரினச்சொற்களைப் பிரித்துக்கூறவில்லை.

நாமதீப நிகண்டில் மட்டுமே விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் போன்ற உயிரினச் சொற்களுக்கு தனித்தனி வர்க்கங்களாகப் பிரித்துப் பாகுப்படுத்தியுள்ளார்.

இந்நூல் முழுவதும் நான்கு படலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு படலமும் பல வர்க்கங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்நிகண்டில் 12000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. சங்ககால வழக்காற்றுச் சொற்கள் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வழக்காற்றுச் சொற்கள் வரை காணப்படுகின்றன.

குளோவின் சிங்கள ஆங்கில அகராதி - ஓர் அறிமுகம்

ஆன்யாழினி சதீஸ்வரன்
தஞ்சாவூர்

வணிகத்தை முதன்மை நோக்கமாகவும், மதம் பரப்புதலைத் துணை நோக்கமாகவும் கொண்டு கீழைத் தேயத்தை நாடி வந்தவர்கள் மேனாட்டார் என்றே நாம் கூறிக் கொண்டிருக்கிறோம். ஆனால், தமிழ் உள்ளிட்ட கீழைத்தேய மொழிகள் பலவற்றின் இலக்கிய வளர்ச்சிக்கும் மொழி ஆய்விற்கும் அவர்கள் ஆற்றிய பங்களிப்புகள் பல. இந்த வகையில் சிங்கள மொழியின் ஆரம்ப அகராதி முயற்சிகளை மேற்கொண்டவர்களும் மேனாட்டினர் ஆவார்கள்.

1830 ல் முதல் பதிப்புக்கண்ட சிங்கள - ஆங்கில அகராதியை உருவாக்கியவர், வெஸ்லியன் மிஷனரியைச் சேர்ந்த Rev.B.Clough ஆவார். அதன் விரிவாக்கப்பட்ட மறுபதிப்பு 1892ல் வெஸ்லியன் மிஷனரிமார்களால் வெளியிடப்பட்டது. அந்த மறுபதிப்புப் பற்றியதாகவே இந்த ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

முதல் பதிப்பின் பிரதிகள் கிடைக்க அரிதாயிருந்தமையாலும், அதிக விலையுடையனவாயிருந்ததாலும் பல ஆண்டுகளாகப் புதிய பதிப்பு மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், Rev. George Baugh, Rev.Robert Tebb ஆகியோரால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட 2ம் பதிப்புக்கான முயற்சிகள் Rev.John Scott அவர்களால் 1887 ல் நிறைவுக்குக் கொணரப்பட்டது.

சிங்களத்தைக் கற்கும் ஐரோப்பியர்களுக்கும், சிங்கள மாணவர்களுக்கும் மிகவும் பயன்தரக்கூடியது என அறிமுகப் படுத்தப்படும் இவ்வகராதி முழுமையும் பார்த்தலேமியு குணசேகர அவர்களால் மேற்பார்வையிடப்பட்டு, அவரது பரிந்துரையின்படி முதல் பதிப்பிலிருந்த, சிங்கள மொழிக்கு உரிமையில்லாத பாலி, சமஸ்கிருதச் சொற்கள் பல நீக்கப் பட்டன; மாறாகப் பல புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன; இத் தொகுதியில் உள்ள மொத்தச்

சொற்களின் எண்ணிக்கை, குளோர்வின் மொத்த சொற்களின் எண்ணிக்கையைவிட அதிகமாயுள்ளது முதலான செய்திகள் Rev. John Scott ஆல் எழுதப்பட்ட முன்னுரையில் இருந்து அறியக்கிடக்கின்றன.

அகராதி அமைப்பு

தலைச்சொல் பகுதி,
சொல், எழுத்துப்பெயர்ப்பு, குறிப்பான்
எனும் ஒழுங்கில் அமைகின்றது.
உ.ம் - ஆரண்ய, Aranya, S.

பொருள் விளக்கப் பகுதி,
(கூட்டுச்சொல் / எதிர்ச்சொல் விளக்கம்), பொருள்,
(பேச்சு வழக்குச் சொல்), (தாவரவியல் பெயர்),
(பன்மைச் சொல்), (பிற).
எனும் வகையில் அமைகின்றது.
உ.ம் : (பரி round and மண்டல boll) ball, globe

சிறப்புக்கள்

ஓர் அகராதி என்பது வெறுமனே சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் கூறுவதோடு நின்றுவிடுவதில்லை. மாறாக, அது நோக்கீட்டு உத்திகள் முதலான சில விடயங்களைக் கொண்டு ஒவ்வொரு சொல்லுக்கும் அது குறித்த தெளிவையும் துல்லியத்தையும் நோக்குனருக்கு வழங்க வேண்டும். அந்த நிலையிலேயே அது சிறப்பான அகராதி எனப்படும்.

காலவோட்டத்தில் இன்று அகராதிகள் மிகச் சிறப்பான முறையில் உருவாக்கப்படுகின்றன. ஆனால், ஆரம்ப காலத்திலேயே மிகுந்த கருத்துணர்வுடன் சிறப்பாக அகராதிகள் படைக்கப்பட்டன என்பதற்குச் சிறந்த உதாரணமாக குளோவின் அகராதி விளங்குகிறது. சில சிறப்புகளை நோக்கலாம்.

1. ஒவ்வொரு எழுத்துக்குமான சொற்பட்டியல் தரப்படும் முன்பு அந்த எழுத்து உச்சரிக்கப்படும் விதம், ஓர் ஆங்கில எழுத்து, அதன் சொற்சூழல் மூலம் விளக்கப்பட்டுள்ளது. கூடவே, அது எத்தனையாவது உயிர் அல்லது மெய் என்பது சுட்டப்பட்டுள்ளது.
உ.ம் : க : The first consonant of the alphabet and sounds like K in Kalendar.

2. உயிர் எழுத்துக்களில் சில குறிலா நெடிலா எனக் குறிப்பிடப் பட்டுள்ளன.

உ.ம் : உ : The third short vowel

3. எல்லாச் சொற்களுக்கும் எழுத்துப் பெயர்ப்பு தரப்பட்டுள்ளது. உச்சரிப்பின் அடிப்படையில் மூல மொழியான சிங்களத்தின் சொற்களது ஒலியமைப்பு, குறிக்கோள் மொழியான ஆங்கிலத்தின் எழுத்துக்களில் தரப்பட்டுள்ளது. இது ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட நோக்குனன் குறிப்பிட்ட சொல்லை மிகச்சரியாக உச்சரிக்க உதவுகிறது.

உ.ம் : இட - Ida . அறக - Araka

4. எல்லாச் சொற்களுக்கும் இலக்கணக் குறிப்புத் தரப்பட்டுள்ளது.

உ.ம் : அங்கறய - Ankaraya, S.

5. பல சொற்களுக்குப் பேச்சு வழக்கு வடிவம் தரப்பட்டிருத்தல் சிறப்பு. இத்தகைய வழக்குச் சொற்கள் தரப்படுமிடத்து அவற்றுக்கும் எழுத்துப்பெயர்ப்பு தரப்பட்டுள்ளமை மேலதிக சிறப்பு.

"பொதுமக்களால் புரிந்து கொள்ளப்பட முடியாத அல்லது புழக்கத்தில் இல்லாத, புத்தகங்களில் மட்டுமே காணக் கிடக்கின்ற பல சொற்களுக்கு வழக்குச் சொற்கள் இணைக்கப் பட்டுள்ளன" என முன்னுரையில் பதிப்பாசிரியர் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

உ.ம் : அக்ஷரய - Aksaraya (Colloq - அகுர, akura)

6. குறிப்பிட்ட சொல் எழுத்து வழக்கில் மட்டுமே இருக்குமாயின் அதுவும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

உ.ம் : தெளெஸ் Teles, a thirteen (used in writing)

7. கூட்டுச் சொற்களாயின் தனித்தனியே சொல் விளக்கம் கூறி, பின் ஒன்றாக்கிப் பொருள் கூறப்பட்டுள்ளன.

(உ+ம்) : அக்ரஜ, Agraja, S.(அகர first, ஜ who is born)

first born, elder brother or sister

8. எதிர்மறைச் சொற்களுக்கும் மேற்கண்டவாறே பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

உ.ம் : அனல்ப, Analpa, a. (அன் an neg, அல்பு alpa few)
many, not a few

9. பன்மை வடிவம் மாறுபடும் சில சொற்களுக்குப் பொருளின் பின்பான பன்மைச் சொல்லும் தரப்பட்டுள்ளது.

உ.ம் : அறமுதல, Aramudala, s. the treasury of the king or government money; pl. அறமுதல் aramudal.

10. தாவரங்கள் (மரங்கள், பூக்கள்) போன்றவற்றுக்குத் தாவரவியல் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

உ.ம் : சுகன்த, Sugandha,S. blue lotus (nymphoea stellata) Sandal wood tree (Santalum album)

11. சில சொற்கள் உதாரணங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

உ.ம் : திக்பால, Dikpala,S. regent of a quarter of the universe, as Indra of the east, Agni of the south east.

12. நிறப்பெயர்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன

உ.ம் : காலவர்ண, Kalawarna, s. black (colour)

13. விளக்கப்படங்கள் தரப்படாவிட்டாலும், நோக்கிய அளவில் ஓரிடத்தில் மட்டும் குறியீடு ஒன்று விளக்கத்துக்காகத் தரப்பட்டுள்ளது.

உ.ம் : குறுகிய Kurusiya,S. cross. gibbet consisting of two pieces of timber placed accross each other either in form of T or an X.

14. பிறமொழிச் சொற்கள் சில சிங்கள மொழியில் எடுத்தாளப் பட்டிருந்தால் அச்சொற்களும், மூலமொழியும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

உ.ம் : 1. தம்பி Tambi,S. term used in addressing
a Moor man. (Tamil.)
2. சிஞ்ஞோ, Sinno S. Master (Port.)

15. மதங்களால், குறிப்பாக உரோமன் கத்தோலிக்க மதத்தின் தாக்கத்தால் சிங்கள மொழியில் இணைந்த சொற்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

உ.ம் : சற்பிரசாதய, Satprasadaya,S. Sacrament of the lords supper (R.C.)

16. பொருள் விளக்க உத்தியான குறுக்கு நோக்கீடு பல இடங்களில் காணப்படுகின்றது.
உ.ம் : Dasaparamitawa - see. paramitawa.

குறைபாடுகள்

ஆரம்ப காலப் பணி எனும் வகையில் தவிர்க்கமுடியாத படி சில குறைபாடுகளும் இவ்வகராதியில் காணப்படுகின்றன.
சான்று : 1. வேறுபட்ட உறவுச் சொற்களாயினும் எல்லாப் பொருளும் ஒன்றாகத் தரப்பட்டுள்ளன.
உ+ம் : தந்தசத்த, Dantasatha,S. elephant or woodapple

அதேவேளை, கவனக்குறைவான சில தவறுகளும் இந்த அகராதியில் காணப்படுகின்றன.

1. உயிர், மெய் எண்ணிக்கை மாறுபட்டு அமைதல்
2. சில உயிர் எழுத்துக்களுக்கு எத்தனையாவது குறில் எனக் குறிப்பிட்டு வேறுசிலவற்றுக்குக் குறிப்பிடாது விடல்.
3. சில சொற்களுக்கு விளக்கமாகப் பொருள் கூறப்பட வேண்டிய நிலையிலும் கூறாமல் விடுதல்.உம். Kagavisa - unicorn
4. குறுக்கு நோக்கீட்டில் சில சொற்களுக்கு அகரவரிசையின்படி பின்னுள்ள சொற்களைத் தருதல். உம். Kantha - See kantha
5. குறிப்பான்கள் s, a ஒழுங்கு மாறி மாறி இடப்படல்.
   உ ம். 1. Adhyaksha - s - a.
   2. Adhutrama - a - s.

இங்ஙனம், சில குறைபாடுகளையும், அதைவிட மேலாகப் பல சிறப்புகளையும் கொண்டுள்ள குளோவின் சிங்கள - ஆங்கில அகராதி மேலும் பல ஆய்வுகளுக்குரிய சிறப்பான களமாக அமைந்து உள்ளது.

* (சிங்க மொழிச் சொற்கள் புரிதல் கருதித் தமிழில் தரப்பட்டுள்ளன).

நோக்கு நூல்களில் அகராதிநிகண்டு

க. உமாராணி
தஞ்சாவூர்

முன்னுரை

உயர்தனிச் செம்மொழியாய் விளங்கும் தமிழ்மொழியின் ஆய்வுகளுக்கு அருந்துணையாய் நிற்பவை நோக்குநூல்களாகும். தமிழாய்விற்குப் பயன்படும் கூடுதலான செய்திகளை அறிந்து கொள்ள நோக்குநூல்கள் உதவுகின்றன. புதிய ஆய்வுக் கருது கோள்களுக்கு தீர்வு காணப்பட்ட ஆய்வு முடிவுகள் நோக்கு நூல்களாகின்றன. சொற்களின் பல்வேறு பொருள்களைத் தெரிந்து கொள்வதற்கும், பல சிறப்பான செய்திகளைக் கூடுதலாகத் தெரிந்து கொள்வதற்கும் நிகண்டு, அகராதி, கலைக்களஞ்சியம், சொல்லடைவு, பொருளடைவு, ஆய்வடங்கல் போன்ற நோக்குநூல் வகைகள் பயன்படுகின்றன. ஆய்வினைச் செம்மையுறச் செய்யவும், பல்வேறு கோணங்களில் ஆய்வுத்தடத்தைக் கொண்டு செல்லவும் நோக்குநூல் இன்றியமை யாததாகும். அவ்வகையில் நோக்குநூல் வரிசையில் முதலாவதாகக் காணப்படும் நிகண்டுகளில் அகராதி நிகண்டின் உள்ளடக்கத்தைப் பற்றியும், அது நோக்குநூலாகப் பயன்படும் பயன்பாட்டைப் பற்றியும் இவண் காண்போம்.

நிகண்டு

'நிகண்டு' என்பது முதன்முதலில் வடமொழி வேதத்திற்கு அங்கமாய் அதன் கண்ணே பயின்றுவருஞ் சொற்களின் பொருளுணர்த்துங் கருவி நூல் ஒன்றனுக்கே சிறப்பாக வழங்கப்பட்டது.

உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வழங்கப்பட்டு வரும் இயற்சொல்லும், திரிசொல்லுமாகிய சொற்றொகுதிகளுள் இன்னசொல் இன்ன பொருளையுணர்த்துவதெனத் தெரிதுணர்த்தும் நூல்களையெல்லாம் "நிகண்டு" என்னும் பெயரால் வழங்குவர். தமிழிலும் உரிச்சொல் பிங்கலம், திவாகரம், சூடாமணி, ஆசிரியம், கயாதரம் என்னும் பல நிகண்டுகளுள்ளனவாகக் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் ஒருபொருட்

பலபெயர்களையும், சிறுபான்மை ஒருசொற் பலபொருள்களையும் உணர்த்துவனவாகும். ஒன்பதாம் நூற்றாண்டு முதல் நிகண்டுகள் படைக்கப்பட்டன. இம்மரபும் சங்ககாலம் முதற்கொண்டே இருந்து வந்துள்ளது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

சங்க இலக்கியப் பாடலான நற்றிணையின் 382-ம் பாடலின் ஆசிரியர் நிகண்டன் கலைக்கோட்டுத்தண்டனார் என்பவராவார். கலைக்கோட்டுத் தண்டனார் என்னும் பொருளுக்கு முன்னுள்ள 'நிகண்டன்' என்ற அடைமொழியைக் கொண்டு அவர் ஒரு நிகண்டு நூல் இயற்றியுள்ளார் என்பது வரை உறுதி என்கிறார் சுந்தரசண்முகனார் (1965 : 74).

'நிகண்டன்' என்ற அடைமொழியைக் கொண்டு இவர் தமிழ் நிகண்டு ஒன்றை ஆக்கியுள்ளார் என்பது புலப்படுகிறது. கலைக்கோட்டுத்தண்டன் என்பதனை இடுகுறியாற் பெற்ற பெயரென்று களவியலுரைகாரரும், நன்னூல் விருத்தியுரை காரரும் (சூத். 49) கூறி முடித்தனர். சென்னைப்பல்கலைக்கழக அகராதியில் நிகண்டு எனும் சொல்லுக்கு nighantu என்னும் வடசொல்லே மூலமாய்க் காட்டப்பட்டுள்ளது. வடமொழி நிருக்கத்தின் மூன்று காண்டங்களில் (நைகண்டுகம், நைகமம், தைவதம் என்பன) 'நைகண்டுகம்' என்பதே நிகண்டாகும் என்கிறார் மு.அருணாசலம் (1995 : 92). புராணம், பிரபந்தம் முதலிய பெயர்களைப்போல 'நிகண்டு' என்னும் வடமொழிப் பெயர் தமிழ் உலகில் பெருக வழங்கி நிலைபெற்றுவிட்டது. யாப்பு நெறியில் சொற்பொருள் கூறும் தமிழ் நூல்கள் 'நிகண்டு' என்னும் பொதுப்பெயரால் வழங்கப்படுகின்றன. (1985 : 61) என்கிறார் வ.ஜெயதேவன்.

> **ஆறங்கம் மந்திரம் வியாகரணம் நிகண்டு**
> **சந்தோ பிசிதி நிருத்தம் சோதிடம் (திவா.ப.292)**

எனத் திவாகரம் ஆறங்கப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது. கி.மு.5ஆம் நூற்றாண்டில் யாஸ்கரால் படைக்கப்பட்ட நிருத்தம் 1.நைகண்டுகம் 2. நைகமம் 3.தைவதம் எனும் மூன்று காண்டங்களைக் கொண்டது. இவற்றுள் முதலாவது காண்டம் ஒருபொருட் பலசொற்களின் தொகுதியாய் உள்ளது. இரண்டாவது காண்டத்தில் ஒருசொல்லின் பல்வேறு பொருட்களும் திரட்டித் தரப்பட்டுள்ளன. மூன்றாவது காண்டம் வைதிக தேவதை பற்றிய ஆராய்ச்சியாய் உள்ளது.

அகராதி நிகண்டின் அமைப்பு

கி.பி.8 -ம் நூற்றாண்டில் திவாகரம் தோன்றியது. முதல் நிகண்டுகளின் தோற்றம் ஆரம்பமானது. சொற்பொருள் கூறும் மரபு நிகண்டு என்ற தனியொரு பிரிவாக வளர்ந்தது. நிகண்டுகள் அகராதி அமைப்பினைப் போலில்லாமல் பலவகைப் பொருட்புல வகைப்பாடு (Semantic field) உடையனவாய் காணப்பட்டன. ஒருபொருட் பலசொற்கள் அனைத்தும் பொருட்புல அடிப்படையில் திரட்டித்தரப்பட்டுள்ளன. அந்த வரிசையில் சிதம்பரரேவண சித்தரால் 1594-ல் தொகுக்கப்பட்ட அகராதி நிகண்டு ஒருபொருட் பலசொல் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. சொற்கள் முதலெழுத்து அடிப்படையில்

அகராதிப்பெயர்த்தொகுதி
சகராதிப் பெயர்த்தொகுதி
சகராதிப் பெயர்த்தொகுதி
ஞகராதிப் பெயர்த்தொகுதி
தகராதிப் பெயர்த்தொகுதி
நகராதிப் பெயர்த்தொகுதி
பகராதிப் பெயர்த்தொகுதி
மகராதிப் பெயர்த்தொகுதி
யகராதிப் பெயர்த்தொகுதி
வகராதிப் பெயர்த்தொகுதி

எனும் பத்துத் தொகுதிகளில் தரப்பட்டுள்ளன.

அகராதிப்பெயர்த்தொகுதி - அ முதல் ஔ வரையிலான எழுத்துகளில் தொடங்கும் சொற்கள்.

ககராதிப் பெயர்த்தொகுதி - க முதல் கௌ வரையிலான எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள்.

சகராதிப் பெயர்த்தொகுதி - ச முதல் சௌ வரையிலான எழுத்துகளில் தொடங்கும் சொற்கள்.

ஞகராதிப்பெயர்த்தொகுதி - ஞ, ஞா, ஞு, ஞெ, ஞே, ஞௌ முதலான எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள்.

தகராதிப்பெயர்த்தொகுதி - த முதல் தௌ வரையிலான எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள்.

நகராதிப்பெயர்த்தொகுதி - ந முதல் நௌ வரையிலான எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள்.

பகராதிப்பெயர்த்தொகுதி - ப முதல் பௌ வரையிலான எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள்.

மகராதிப் பெயர்த்தொகுதி - ம முதல் மௌ வரையிலான எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள்.

யகராதிப் பெயர்த்தொகுதி - ய, யா, யு, யூ, யொ, யோ, யௌ முதலான எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள்.

வகராதிப்பெயர்த்தொகுதி - வ முதல் வௌ வரையிலான எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள்.

எனும் நிலையில் அகராதியில் தொடங்கி வகராதி வரையிலும் உள்ள பெயர்த்தொகுதிகளில் மேற்குறிப்பிட்டுள்ள வாறு சொற்கள் அகர வரிசையில் அமைந்துக் காணப்படுகின்றன.

முதல் தொகுதியான அகராதி எனும் பெயருடன் நிகண்டு எனும் பெயரையும் சேர்த்து அகராதி நிகண்டெனப் பெயரிட்டதை, இந்நூலாசிரியர் தற்சிறப்புப்பாயிரத்தில்,

"நாற்கவிவாணர் நகையதரயானும்
நூற்பாவதனால் நுண்ணிய வறிவினில்
ஆதரவால் அகராதி நிகண்டென
ஓதினன் யாவரும் உணர்ந்திட நினைந்தேன்"

எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்நிகண்டில் அமைந்துள்ள நூற்பா எண்ணிக்கையும்,

"மன்னு சூத்திர மூவாயிரத் துடனே
முந்நூற் றறுபத் தெட்டெனுந் தொகையாய்
வந்திருந் தொகுதி ஈரைந்தென வகுத்தே"

எனச் சுட்டப்பட்டுள்ளது.

அகராதி நிகண்டின் சிறப்பு

இந்நூலுள் ஒரு பொருட்பல பெயர்களை உணர்த்தா தொழித்து, ஒவ்வொன்றும் ஒரு பொருளும், பல பொருளும் உணர்த்துஞ் சொற்களையே அகராதியாகத் தொகுத்துச் சூத்திரப்பாவாற் பொருளுரைக்கப்பட்டிருக்கிறது. இந்நிகண்டில் பிற நிகண்டிலுள்ள சொற்களும், பொருளும் பெரும்பாகம் காணப் பட்டாலும், அவற்றிலில்லாத சங்கமருவிய சான்றோர் செய்யுட் களிலும், அவற்றின் உரைகளிலும், பிற்காலத்தமிழ் நூல்களிலும் வழங்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்களும், ஆங்காங்குச் செந்தமிழ்

நாட்டுள் வழங்கும் திசைச்சொற்களும், மருவியும் திரிந்தும் வழங்கும் வடசொற்களும், பிறசொற்களும் இடையிடையே மலிந்து கிடக்கின்றன.

இந்நூலைப்பற்றி சென்னை இராசாங்கப் புத்தகசாலைப் பிரதிகளைக் கண்ணுற்ற ஸ்ரீமத் எம்.ரங்காசாரியர் எழுதி வைத்திருக்கும் அபிப்பிராயமும், சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் எழுதிய அபிப்பிராயமும் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

"இந்நூல் சிறந்த நிகண்டுகளில் ஒன்று. இதில் முதலெழுத்துக்கள் மட்டும் அகராதியாக அமைந்திருக்கின்றன. மற்றையெழுத்துக்கள் அவ்வாறு அமையவில்லை. பிங்கலம், திவாகரம் முதலிய நிகண்டுகளுக்குப் பிற்பட்டது. புலியூர்ச் சிதம்பர ரேவணசித்தர் இயற்றியது. இஃது "ரேவணாத்திரியார் சூத்திர" மெனவும் வழங்கும். இஃது இதுவரையில் அச்சிடப்பட்டதன்று. (Page 4 of the Descriptive catalogue of the Tamil manuscripts Library in the Government oriental manuscripts library, Madras.)

"அகராதி நிகண்டும் அவசியம் வெளிப்பட வேண்டியதே படிப்போர் சொற்களின் பொருளையறிவதேயன்றிப் பழந்தமிழ்நூற் பரிபாலனமுமாகும். அதிலே "கச்சுரி" "கம்பில்" "கலவகம்" முதலிய அருஞ்சொற்கள் வருகின்றன. சொற்களை அதிகந் திரிவாக்கிப் பாடினார் போலும். "விலாழி" என்பதன்றி "இலாழி" என்பது குதிரைவாய்நீர் என்கிறார். எங்கேயாவது பிரயோகமிருக்கலாம்.

வடமொழியில் பலகறைக்குக் "கௌடி" என்று பெயர். இவர் "கவடி" என்பர். வேறுநூல்களிலுங் "கவடி" என்று வருகின்றது. அது "கவடி" என வருதல் நன்று. ஆயினும் முன்னோர் வழக்கு இருக்கட்டும். இக்காலத்திலே இவைகளைப் படிப்பார் அரியர். இவ்வாறு அகராதி நிகண்டின் அபிப்பிராயங்களைச் சான்றோர் பெருமக்கள் கூறியிருக்கின்றனர்.

அகராதி நிகண்டின் பயன்பாடு

'அகராதி நிகண்டு' நோக்குநூல் வரிசையில் ஒன்றாக அமைகின்றது. நிகண்டுகள் குறித்த ஆய்விற்கும், வரலாற்று ரீதியான மொழி ஆய்விற்கும், மொழி வளர்ச்சி குறித்த ஆய்விற்கும்,

நிகண்டுகளில் சொற்பொருள் கூறும் முறை மற்றும் வகைப்பாடு குறித்த ஆய்விற்கும் இந்நிகண்டு சிறந்ததொரு நோக்கு நூலாகப் பயன்படும். நூற்பா நடையில் ஏனைய நிகண்டுகளைப் போன்றிருப்பினும் பெயருக்கேற்றாற்போல அகராதி அமைப்பில் காணப்படும் இந்நிகண்டு பின்வந்த அகராதிகளுக்கு முன் மாதிரியாய் அமைந்திருக்கின்றது. ஒரு சொல்லுக்கு ஒரு பெயர், இருபெயர், முப்பெயர், நாற்பெயர், ஐம்பெயர், அறுபெயர், ஏழ்பெயர், எண்பெயர் போன்று பலபெயர்களை வழங்கி நிற்கின்றது.

(சான்று)

'அரனென்பது வேசங்களாகும்'

'ஆலகண்டமென்பது சிவனாகும்'

'கங்கண மென்பது கடகமாகும்
தணியே தண்மை மலையென இருபெயர்'

'மஞ்சரியே பூங்கொத்துந் தளிரு
மாலையுமெனவே மதிக்கு முப்பேர்'

தமிழ் மொழியின் சொல் வளத்தைக் காட்டுகின்ற நிகண்டாக இது திகழ்கின்றது. அகராதி நிகண்டில் இடம்பெற்றுள்ள அகராதி முதல் வகராதி வரையுள்ள எழுத்துகளில் பல பெயர்களைக் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தலாம்.

அகராதி நிகண்டில் அ முதல் வௌ வரையிலான எழுத்துக்களுக்குரிய பலபெயர்களின் எண்ணிக்கை அட்டவணை

	பல பெயர்கள்																			
எழுத்துகள்	ஒருபெயர்	இருபெயர்	மூப்பெயர்	நாற்பெயர்	ஐம்பெயர்	அறுபெயர்	எழுபெயர்	எண்பெயர்	ஒன்பதுபெயர்	பத்துப்பெயர்	பதினொரு பெயர்	பன்னிரண்டு பெயர்	பதின்மூன்று பெயர்	பதினான்கு பெயர்	பதினைந்து பெயர்	பதினாறு பெயர்	பதினேழு பெயர்	பதினெட்டு பெயர்	பத்தொன்பது பெயர்	இருபதுப்பெயர்
அ	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ஆ	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
இ	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ஈ	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
உ	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ஊ	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
எ	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ஏ	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ஐ	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ஒ	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ஓ	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ஔ	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
க	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗
கா	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
கி	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
கீ	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
கு	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
கூ	✓	✓	✓	✓	✗	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
கெ	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
கே	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
கை	✓	✓	✗	✓	✗	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
கொ	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
கோ	✓	✓	✓	✓	✗	✓	✓	✓	✗	✓	✓	✗	✓	✓	✗	✗	✗	✗	✗	✗
கௌ	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ச	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
சா	✓	✓	✓	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
சி	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
சீ	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗

ச	✓	✓	✓	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
சு	✓	✓	✓	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
செ	✓	✓	✓	✓	×	✓	×	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×
சே	✓	✓	✓	✓	✓	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
சை	✓	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
சொ	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
சோ	✓	✓	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
சௌ	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
ஞ	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
ஞா	✓	✓	✓	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
ஞி	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
ஞெ	✓	✓	✓	×	×	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
ஞே	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
த	✓	✓	✓	✓	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×
தா	✓	✓	✓	✓	✓	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×
தி	✓	✓	✓	✓	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
தீ	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
து	✓	✓	✓	✓	✓	✓	✓	×	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×
தூ	✓	✓	✓	✓	×	✓	×	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×
தெ	✓	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
தே	✓	✓	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
தை	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
தொ	✓	✓	✓	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
தோ	✓	✓	✓	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
தௌ	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
ந	✓	✓	✓	✓	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×
நா	✓	✓	✓	✓	✓	×	×	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×

நி	✓	✓	✓	✓	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×
நீ	✓	✓	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
நு	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
நூ	✓	✓	×	×	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
நெ	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
நே	✓	✓	✓	✓	×	✓	×	×	×		×	×	×	×	×	×	×	×	×	×
நை	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
நொ	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
நோ	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
நௌ	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
ப	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	×	✓	✓	×	✓	×	×	×	×	×	×	×
பா	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×
பி	✓	✓	✓	✓	×	×	✓	×	×	×	×	✓	×	×	×	×	×	×	×	×
பீ	✓	✓	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
பு	✓	✓	✓	✓	×	✓	✓	×	×	✓	×	×	✓	×	×	✓	×	×	×	×
பூ	✓	✓	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
பெ	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
பே	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
பை	✓	✓	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
பொ	✓	✓	✓	✓	✓	×	✓	✓	×	×	×	✓	×	×	×	×	×	×	×	×
போ	✓	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
பௌ	✓	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
ம	✓	✓	✓	✓	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
மா	✓	✓	✓	✓	✓	✓	✓	×	×	×	✓	×	×	×	✓	×	×	×	×	×
மி	✓	✓	✓	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×
மீ	✓	✓	×	×	×	✓	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×	×

மு	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
மூ	✓	✓	✗	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
மெ	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
மே	✓	✓	✗	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
மை	✓	✗	✗	✗	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
மொ	✓	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
மோ	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
மௌ	✓	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ய	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
யா	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
யு	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
யூ	✗	✗	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
யோ	✓	✗	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
யௌ	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
ஞொ	✗	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
வ	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
வா	✓	✓	✓	✓	✓	✓	✗	✓	✗	✗	✗	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗
வி	✓	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
வீ	✓	✓	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗
வெ	✓	✓	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗	✗

இவ்வாறு அகரம் முதலாக உள்ள எழுத்துக்களின் பல பெயர்களை அட்டவணைப்படுத்தலாம். அகராதி நிகண்டில் பெயர்த்தொகுதிகளின் கீழ்காணப்படும் ஒரு சொல் பல பெயர்களை இவற்றின்மூலம் சொற்பொருண்மைக் குறித்த ஆய்வுகளும், மொழிநடைக்குறித்த ஆய்வுகளும் மேற்கொள்ளலாம்.

தொகுப்புரை

நோக்குநூல் வரிசையில் அகராதி நிகண்டு எனும் தலைப்பிலான இக்கட்டுரையில்,

- ‘நிகண்டு’ எனும் சொல்லின் தோற்றமும், அதன் சொல்லாட்சியும் பற்றிக் குறிப்பிட்டுள்ளன.
- அகராதி நிகண்டின் உள்ளடக்க அமைப்பு பற்றிக் கூறப் பட்டுள்ளது.
- அகராதி நிகண்டின் தனித்தன்மையான சிறப்பு பற்றிச் சொல்லப்பட்டுள்ளது.
- அகராதி நிகண்டு பற்றிய சான்றோர்களின் அபிப்பிராயங்கள் கூறப்பட்டுள்ளன.
- நோக்கு நூலாக அகராதி நிகண்டு பயன்படுவது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

துணைநூல்கள்

1. அகராதி நூல்கள், சிதம்பரரேவணசித்தர், 1921.
2. அகராதியியல், பெ. மாதையன், 1997.
3. நாமதீப நிகண்டு, சிவசுப்ரமணியக் கவிராயர், 1930.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் குறுக்கு நோக்கீடு

ந. இரஞ்சன்
தஞ்சாவூர்

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்)

மனிதனை ஆறறிவு உடையவனாக மாற்றியது மொழி. அத்தகைய மொழி காலந்தோறும் மாற்றமடைந்து வளர்ந்துவரும் இயல்புடையது. இம்மாற்றத்திற்கு உட்படாமல் இருக்கும்மொழி காலப்போக்கில் வீழ்ந்துபோகும் என்பது உறுதி. உலகில் எண்ணற்ற மொழிகள் தோன்றின. இருப்பினும் அவற்றுள் தொன்மையானதும் இளமையானதுமாகத் திகழும் மொழி தமிழ்மொழி. தமிழ்மொழியின் வளர்ச்சி இலக்கியம், இலக்கணம் போன்றவற்றின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைகிறது. இவை அமைப்பால் வேறுபட்டாலும் ஒன்றோடொன்று தொடர்புடையன. இவற்றுள் இலக்கணம் குறித்த கட்டுரைகள் அதிகம் வெளிவராக் காரணத்தால் இத்தலைப்புத் தெரிவு செய்யப்படுகிறது.

நோக்குநூல்

பண்டைக்காலம் முதல் இக்காலம் வரையிலும் தமிழகமும் தமிழ்மொழியும் பல்வேறு வகையான மாற்றங்களுக்கு ஆளாகி வந்துள்ளன என்பதை அனைவரும் அறிவர். இக்காலத்தில் தமிழகத்தில் வழங்கப்பட்டு வரும் சொற்களனைத்திற்கும் பொருள் தெரியுமா? என்று யாரையாவது கேட்டால் தெரியாது என்றே விடை அளிப்பர். அப்படி இருக்கையில் பண்டைக்காலத்தில் வழங்கப்பட்டு வந்த சொற்களுக்கான பொருள் இன்று நமக்குத் தெரிவதற்கு வாய்ப்பே கிடையாது எனலாம். நாம் ஒரு நூலைப் படிக்கின்றபோது தெளிவாகப் பொருள் தெரியாப் பகுதிகளும் காணப்படும். அல்லது கூடுதலான செய்திகளையும் அதுகுறித்துத் தெரிந்துகொள்ள விரும்புவோம். அப்பொழுது ஆசிரியர்களிடமோ அறிஞர்களிடமோ ஐயத்தைக் கேட்டு விளக்கம் பெற்றுக் கொள்கிறோம். அதைப்போலவே தொடர்ப்பொருள் போன்ற வற்றையும் கற்றறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறோம்.

தெரியாச் சொற்பொருளுக்காக எந்நேரமும் கற்றறிந்த அறிஞரை நாடிச்செல்ல முடியாது. ஏனெனில் அவர், ஒரே இடத்திலோ ஒரே மனநிலையிலோ இருப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. அதனால் எண்ணிய உடனே நமக்குத் தெரியாத வற்றிற்குப் பொருள் சொல்லக்கூடிய நூல்கள் பல தோற்றம் பெற்றன. இவற்றிற்குத்தான் நோக்குநூல்கள் என்று பெயர்.

தொல்காப்பியம்

நோக்கு நூல்களின் வரிசையில் தொல்காப்பியம் முதலிடம் பெறுகிறது எனலாம். ஏனெனில் எந்தத் தமிழறிஞரும் நாடகம், சிற்றிலக்கியம், மொழியியல் போன்றவை பற்றியான கட்டுரையோ, நூலோ எழுதும்போது அதுபற்றியான கூடுதல் செய்தியை அறிந்துகொள்ளவும் சொல்லுக்குப் பொருளைத் தெரிந்து கொள்ள தொல்காப்பியத்தை நாடுவர் என்பதை மறுக்க முடியாதது. தொல்காப்பியத்தில் நிகண்டு, அகராதி போன்ற நோக்கு நூல்களுக்கான கூறுகள் பொதிந்தும் வெளிப்படையாகவும் உள்ளன. இனிக்கும் இலக்கணமாக விளங்கும் தொல்காப்பியத்தில் குறுக்கு நோக்கீடு என்னும் உத்திமுறை இருக்கிறதா? எல்லா வற்றிற்குமான கூறு தொல்காப்பியத்தில் இருக்கின்றபோது, குறுக்கு நோக்கீடு இல்லாமல் போகுமா?

குறுக்கு நோக்கீடு

நோக்கு நூல்களில் பொருள் விளக்கும் பகுதியில் பல்வேறு உத்திமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் குறுக்கு நோக்கீடு. ஒரு பொருளைத் தரும் பல சொற்களுக்கும் எதிர்ச்சொற்களுக்கும் இடைப்பட்ட பொருளுறவுகளைக் காட்டப் பயன்படும் பதிவுக்கூறுதான் இந்தக் குறுக்கு நோக்கீடு. ஒரு பொருளைத் தரும் பல சொற்கள் மொழியில் உள்ளன. அச்சொற் களுக்குப்பொருள் கூறும் நிலை ஏற்படும்போது, எல்லாச் சொற் களுக்கும் பொருளைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அந்நிலையில் வழக்குப் பயிற்சி மிகுந்த சொல்லில் மட்டும் அதன் பொருள் தரப்படும். மற்றச் சொற்களுக்குப் பொருளைச் சுட்டும் போது, ஏற்கெனவே பொருள் தந்துள்ள சொல்லைக் காண்க, பார்க்க என்று குறிப்பிடப்படும். இதன்மூலம் அச்சொல்லுக்கான பொருள் எந்தச்சொல்லில் தரப்பட்டுள்ளதோ அந்தச் சொல்லைக் கண்டறிந்து அதன் பொருளை அறிந்துகொள்ளலாம். இந்த உத்திக்குத்தான் குறுக்கு நோக்கீடு என்று பெயர்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் குறுக்கு நோக்கீடு சொல்லுக்கான பொருளைக் கூறுவதாக இல்லை. மாறாக இரண்டு சொற்கள் புணரும்போது என்னென்ன மாற்றம் நிகழ்ந்து புணரும் என்பதைக் குறிப்பிடுவதாகவே உள்ளது. எனவே, தொல்காப்பியர் காலத்தில் குறுக்கு நோக்கீடு சொல்லுக்குப் பொருள் கூறுவதாகவோ, கட்டுரை வடிவில் பொருள் கூறுவதாகவோ இல்லை. ஒருசொல் புணர்ச்சியில் மாற்றமடையும்பொழுது அதே மாற்றத்தை மற்றொரு சொல்லும் அடைகின்றபோது இவ்வுத்தி முறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. மாற்றம் மட்டுமே மாறாதது என்பதற்குக் குறுக்கு நோக்கீடும் சான்றாக உள்ளது.

குறுக்கு நோக்கீட்டின் வகைகள்

தொல்காப்பியத்தில் காணப்படும் குறுக்கு நோக்கீட்டினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



இக்குறுக்கு நோக்கீட்டை (Cross Reference) 1.வெளிப்படைக் குறுக்கு நோக்கீடு (Explicit Cross reference), 2.மறைமுகக் குறுக்கு நோக்கீடு (Implicit Cross reference) என ஆர்.ஏ.சிங். இரண்டாக வகைப்படுத்துவதாக பெ.மாதையன் தம் நூலில் கூறியுள்ளார்.

1. வெளிப்படைக் குறுக்கு நோக்கீடு

ஒருமொழி அகராதியிலோ கலைக்களஞ்சியங்களிலோ ஒருபொருட் பன்மொழிகளை இணைத்து விளக்கையில், ஒரு சொல்லில் மட்டும் பொருளைத் தந்துவிட்டு, ஏனைய பதிவுகளில் பொருள் தரப்பட்ட சொல்லை வெளிப்படையாகத் தந்து, காண்க,

பார்க்க, பார் எனக் குறிப்பிடுவது வெளிப்படைக் குறுக்கு நோக்கீடாகும். தொல்காப்பியத்தில் இச்சொற்கள் பயன்படுத்தப் படவில்லை. இயல, இயற்று, இயற்றே, நிலையும் என்னும் நான்கு சொற்கள் தொல்காப்பியத்தில் குறுக்கு நோக்கீட்டை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நான்கு சொற்களும் குறுக்கு நோக்கீட்டிற்காக மட்டும் பயன்படுத்தப்பட வில்லை. குறியீடுகள் எதுவும் எழுத்ததிகாரத்தில் கொடுக்கப்பட வில்லை.

1.1. தொடரா வெளிப்படைக் குறுக்கு நோக்கீடு

சொற்களின் புணர்ச்சியில் பெரும்பாலும் மாற்றங்கள் நிகழும். அப்படி ஏற்படக்கூடிய மாற்றத்தை அச்சொல்லுக்குரிய அதே நூற்பாவில் சொல்லும்போது இவ்வுத்திமுறை பயன்படாது. அதே மாற்றத்தை வேறு சொற்கள் புணரும்போது அடைந்தால், முன்பு மாற்றம் சுட்டப்பட்ட சொல்லைக் கொடுத்து அங்குப் பார்த்துக் கொள்க என்று கொடுக்கப்படுவதே தொடரா வெளிப்படைக் குறுக்கு நோக்கீடாகும். ஒரு சொல்லின் மாற்றத்தை அறிய குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சொல்லைக் கண்டவுடன் பொருள் தெரிந்துகொள்ளும் முறையே இது.

சான்று

“ஆகார இறுதி அகர இயற்றே” (சொல்.222)
“உகர இறுதி அகர இயற்றே” (தொல். 255)
“தொழிற்பெய ரெல்லாம் தொழிற்பெய ரியல” (தொல்.307,328,402)

இவற்றில் ஆகாரத்தை இறுதியிலுடைய சொற்கள் புணரும்போது, எத்தகைய மாற்றம் அடையும் என்றால் அகரத்தை இறுதியிலுடைய சொற்கள் எத்தகைய மாற்றம் அடைந்ததோ (வல்லினம் வரின் வல்லினம் மிக்கு வரும்) அதே மாற்றம்தான் இங்கும் நிகழும் என்பதை முதல் நூற்பா கூறுகிறது. இரண்டாவது நூற்பாவும் இதே முறையைப் பின்பற்றி வந்துள்ளது. இறுதி நூற்பா தொழிற் பெயர்கள் எல்லாம் எத்தகையமாற்றம் அடைந்து வந்தனவோ அதே மாற்றத்தையே இத்தொழிற்பெயர்களும் அடையும் என்பதைக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு தொழிற்பெயரைப் போல மாற்றமடையும் பதிவுகள் தொடரா வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டில் ஆறு நூற்பாக்கள் எழுத்ததிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் பதினாறு

நூற்பாக்கள் தொடரா வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டை விளக்குகின்றன *(107, 222, 255, 263,305, 307, 328, 339, 346, 363, 367, 374, 387, 397, 402, 404).*

1.2. தொடரும் வெளிப்படைக் குறுக்கு நோக்கீடு

உயிரையோ மெய்யையோ இறுதியிலுடைய சொற்கள் புணரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் என்பன நிகழ்கின்றன. ஒரு சொல் (அ) புணரும்போது வரும் மொழியில் வல்லெழுத்து வரின் வல்லினம் மிக்கு முடியும் என்று விதியொன்று கூறப்பட்டுள்ளதாகக் கொள்வோம். இதே மாற்றத்தை வேறொரு சொல்லும் (ஆ) பெறுமாயின் முன்பு கூறப் பட்டுள்ள சொல்லின் (அ) விதிதான் இதற்கும் பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இவ்வாறு முன்னாடி சுட்டப்பட்டுள்ள நூற்பா ஒன்றை மட்டும் பார்த்த உடனே பொருள்இருப்பின் அது தொடரா வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டிற்கு உரியதாகும். மாறாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நூற்பாக்களைக் கண்டால்தான் பொருள் விளங்குமாயின் அத்தகைய நிலைக்கே தொடரும் வெளிப்படைக் குறுக்கு நோக்கீடாகும். இந்நிலை இன்றைய நோக்குநூல்களில் காணப்படவில்லை.

சான்று

“ஈகார இறுதி ஆகார இயற்றே” (தொல். 250)
“ஓகார இறுதி ஏகார இயற்றே” (தொல். 290)
“சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே” (தொல். 279)

இவற்றுள் ஈகாரத்தை இறுதியிலுடைய சொல் எவ்வாறு புணரும் என்றால் ஆகார ஈற்றுச்சொல்லைப் போல என்கிறார் தொல்காப்பியர். ஆகார ஈற்றுச்சொல் எப்படிப் புணரும் என்று பார்த்தால் அங்கு அதன் விளக்கம் இருக்காது. மாறாக, அகர ஈற்றுச் சொல்லுக்குச் சென்று பார்த்தால்தான் பொருள் தெரியும். ஓகார இறுதிச்சொல்லின் புணர்ச்சி மாற்றத்தை அறிய ஏகாரம் → ஊகாரம் → ஆகாரம் → அகரம் என இறுதிவரை (அகரம் வரை) தொடர்ந்து சென்றால்தான் மாற்றத்தை அறியமுடியும். இவை அனைத்துமே வருமொழியில் வல்லினம் வந்தால் அதற்குரிய ஒற்று மிகுந்துவரும் என்பதையே சுட்டி நிற்கும். அதைப்போலச் ‘சே’ மரத்தின் புணர்ச்சியைப் பார்க்க ஒடுமரம் → உதிமரம் ஆகியவற்றைத் தொடர்ந்து பார்க்க வேண்டும். உதிமரம் எவ்வாறு வல்லினத்திற்

கினமான மெல்லினம் பெற்று வருகிறதோ அதைப்போலவே ஒடுமரமும் சேமரமும் பெற்று வரும்.

சான்று

உதி + கோடு = உதிங்கோடு
ஒடு + கோடு = ஒடுங்கோடு
சே+கோடு = சேங்கோடு

இவ்வாறு தொடரும் வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டு நூற்பாக்கள் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் பன்னிரெண்டு உள்ளன *(250, 265, 275, 279, 283, 288, 290, 314, 337, 378, 384, 403).*

2. மறைமுகக் குறுக்கு நோக்கீடு

ஒரு தலைச்சொல்லுக்கு அதற்கு இணையான ஒருபொருட் பன்மொழிகளைத் தருவதன்மூலம் இம்முறை கையாளப்படுகிறது. இதில் வெளிப்படையான குறுக்கீட்டுச் சொற்களோ குறியிடுகளோ இடம்பெறா. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் ஒருசொல்லின் புணர்ச்சி மாற்றம் பின்னர்ச் சொல்லப்படும் என்றோ குறிப்பிட்ட இயலில் சுட்டப்பட்டு உள்ளது என்றோ இருப்பதை இங்கு மறைமுகக் குறுக்கீட்டு நூற்பாவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. பின்னர்ச் சொல்லப்படும், முன்பே சொல்லப்பட்டதைப் போல, குறிப்பிட்ட இயலில் சுட்டியதைப் போல என்று இக்குறுக்கு நோக்கீடு அமைந்திருக்கிறது. ஆனால் வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டில் சுட்டப்பட்டுள்ளதைப் போல, இச்சொல்லிற்கான புணர்ச்சி மாற்றம் அச்சொல்லில் சுட்டியதைப் போல என்று குறிப்பிட்ட அந்தச்சொல் வெளிப்படையாகத் தெரிவதில்லை.

சான்று

> **"புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே**
> **உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்" (தொல். 35)**
> **"அளவும் நிறையும் வேற்றுமை யியல" (தொல். 320)**

இச்சான்றுகள் வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டைப் போலச் சொற்கள் வெளிப்படையாகத்தெரியவில்லை. மாறாக முன்னர்ச் சொல்லப்படும் என்றும் வேற்றுமையில் சொல்லப்பட்டுள்ளதைப் போல என்றும் வழங்கப்பட்டு வந்திருப்பதை அறியமுடிகிறது.

மறைமுகக் குறுக்கீட்டு நூற்பா எழுத்ததிகாரத்தில் பன்னிரண்டு இடங்களில் வருகின்றது *(35, 37, 240, 310, 320, 325, 353, 379, 389, 420, 423, 446).*

குறுக்குநோக்கீட்டின் பயனும் வளர்ச்சியும்

தொல்காப்பியத்தில் புணர்ச்சியின்போது ஒரே மாற்றம் நிகழும் சொற்களுக்குக் குறுக்கு நோக்கீடு பயன்படுத்தப்பட்டது. இந்த முறையைத் தொல்காப்பியர் எதற்காகப் பயன்படுத்தினார்? அன்றைய காலங்களில் நூற்பா மனனம் செய்ய எளிமையாக இருக்க எதுகை, மோனையைப் பயன்படுத்தினர். படித்ததை நினைவுக்குக் கொண்டு வருவதற்காக இம்முறையைத் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளார் எனலாம். காலப்போக்கில் சொல்லுக்குப் பொருள்கூறும் நிகண்டு, அகராதிகள் தோற்றம் பெற்றன. அகரவரிசைப்படுத்திச் சொல்லுக்குப் பொருள் கூறப் பட்டது. ஒரே பொருளைக் குறிக்க பல சொற்கள் இருப்பின் அதற்குக் குறுக்கு நோக்கீடு பயன்பட்டது. தொல்காப்பிய எழுத்ததி காரத்தைப் பார்க்கும்போது முதலில் (அகர வரிசைப்படியோ அகர வரிசையில்லாமலோ) எந்தச் சொல் வருகிறதோ அந்தச் சொல்லிலேயே புணர்ச்சி மாற்றத்தைச் சொல்லி, அதன்பின் வரும் சொல்லின் புணர்ச்சியை முன்பு கூறப்பட்டுள்ள சொல்லைக் கொடுத்து அங்குக் கண்டுகொள்க என்று அமைவதாய் இம்முறை உள்ளது. அன்று வழக்குப் பயிற்சி மிகுந்த சொல்லைக் கண்டறிந்து அதற்குக் குறுக்கு நோக்கீட்டைப் பயன்படுத்தவில்லை. இன்றுதான் வழக்குப் பயிற்சி மிகுந்த சொல்லுக்குப் பொருள் தந்துவிட்டு, மற்றச் சொற்களுக்குக் கூறும்போது வழக்குப் பயிற்சி மிக்கச் சொல்லைக் கொடுத்து, காண்க, பார்க்க என்று குறிப்பிடும்முறை தோன்றியது. புணர்ச்சியில் ஒரே மாற்றத்தைத் தரும் பல்வேறு சொற்களோ, ஒருபொருட் பன்மொழியோ இல்லை என்றால் குறுக்கு நோக்கீட்டு முறை இருக்காது.

நூற்பாவிலிருந்து எளிமையாக அகரவரிசைக்கு நோக்கு நூல்கள் வந்துவிட்டன. எளிமை என்று கூறினாலும் சோம்பேறித் தனமும் இன்று நம்முள் புகுந்துவிட்டது. அதனால் ஒருபொருட் பன்மொழிகள் அனைத்திற்கும் அந்தந்த இடத்தில் பொருள்தரும் முறை நாளை உருவாகலாம். காண்க என்று கொடுத்திருக்கும் போது அந்தச் சொல்லை வேறு கண்டால்தான் பொருள் தெரியுமா? என்ற எண்ணம் உருவாகலாமல்லவா? எனவே, குறுக்கு நோக்கீ

என்ற எண்ணம் உருவாகலாமல்லவா? எனவே, குறுக்கு நோக்கீ டென்பதே இல்லாத நோக்கு நூல்கள் உருவாவதற்கும் வாய்ப்புள்ளது. அகராதியில் மட்டுமே குறுக்கு நோக்கீடு என்ற சொல்லின் பொருளை அறியும் நிலை ஏற்பட்டுவிடுமா? என்பதைக் காலம்தான் பதில் சொல்லும்.

முடிவு

தொல்காப்பியம் பல நூல்களின் தோற்றத்திற்குக் காரணமாய் இருப்பதைப் போலவே குறுக்கு நோக்கீட்டிற்கும் முக்கியக் காரணமாய் விளங்குகிறது.

குறுக்கு நோக்கீட்டின் வகையுள் வெளிப்படைக் குறுக்கு நோக்கீட்டைத் தொடரா, தொடரும் என இரண்டாக வகைப் படுத்தியமை காணலாம்.

சொற்கள் புணரும்போது ஏற்படும் மாற்றத்தைக் குறிக்க தொல்காப்பியத்தில் குறுக்கு நோக்கீடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

படித்ததை நினைவு கூறவே தொல்காப்பியர் குறுக்கு நோக்கீடு என்னும் உத்திமுறையைக் கையாண்டுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

வழக்குப் பயிற்சி மிகுந்த சொல்லன்றி முதலில் வரும் சொல்லுக்குத் தான் புணர்ச்சி மாற்றம் சுட்டப்பட்டுள்ளது.

குறுக்கு நோக்கீட்டின வளர்ச்சியும் சொல்லப்பட்டுள்ளது.

துணைநூற் பட்டியல்

1. தொல்காப்பியம், எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை,2002.
2. அகராதியியல் - பெ.மாதையன், 1997.
3. தொல்காப்பியம் முத்துவீரியம் சொல்லதிகார ஒப்பீடு (ஆய்வேடு) - ந.இரஞ்சன், 2007.

கிரியா அகராதியில் இலங்கைத் தமிழ்ச் சொற்கள் (குறிப்பான்கள்)

இரா. கலா
தஞ்சாவூர்

தமிழ் அகராதியியல் வரலாற்றில் அகராதிகள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சங்க மருவிய காலத்தில் புலவர்கள் தங்களது புலமையையும், செல்வாக்கையும் நிலைநாட்ட விரும்பி பக்தி சார்ந்த பல இலக்கியங்களை வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதினர். அவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தினாலும், மாறி வருகின்ற மொழியின் அமைப்பையும், சொற்றொகுதியையும் புரிந்து கொள்ள நோக்கீட்டு நூல்களின் தேவை ஏற்பட்டது. இத்தேவையை நிறைவேற்றும் பொருட்டுத் தோற்றம் பெற்றவையே நிகண்டுகளும் அகராதிகளும் ஆகும்.

அகராதி

அகராதி உருவாக்கத்திற்குக் களம் அமைத்ததும், சொற்பொருள் கூறும் துறை தனியே உருவாவதற்கு வழி வகுத்ததும் தொல்காப்பிய உரியியல் ஆகும். தற்காலத்தில் நாம் பயன்படுத்தக்கூடிய சொற்களின் ஆட்சி பெருகிக்கொண்டே செல்கின்றது. இந்தச் சொற்களைப் பாதுகாக்கும் பெட்டகமாகத் திகழ்வது அகராதி. அத்தகைய அகராதிகளில் ஒன்றான கிரியாவின் தற்காலத் தமிழகராதியில் - குறிப்பான்களைப் பற்றி (இலங்கைச் சொல்) ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அகராதி என்பது ஒரு மொழியில் உள்ள சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் கொள்ளும் முறையாகும். மொழியின் பயன்பாட்டில் உள்ள சொற்கள் மட்டுமே அகராதியில் இடம் பெறும். அகராதி என்பது அகரத்தை ஆதியாக உடைய சொற்கள் என்னும் பொருளுடையது என்பர்.

அகராதிப் பதிவுக் கூறுகள்

அகராதியில் தலைச்சொல் பகுதி, பொருள் பகுதி என்ற இரண்டு பகுதிகளைக் கொண்ட பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

இந்த இரு பகுதிகளிலும் அடங்கும் கூறுகளே அகராதிப் பதிவுக் கூறுகளாகும். பதிவுக் கூறுகள் அகராதியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பதிவுச் சொற்களும் அவற்றிற்குரிய பொருள்களும் அகராதிப் பதிவுகளாக அமைகின்றன.

அகராதிப் பதிவு

தலைச்சொல் பகுதி → ஒலிப்புமுறை, இலக்கணக் குறிப்பு இடம் பெற்றிருக்கும்

பொருள் பகுதி → சொற்பொருளும், பொருளுக்குரிய மேற்கோளும் தரப்பட்டிருக்கும்

ஒருமொழி அகராதியில் தான் சொல்லும் அதற்குரிய பொருள்களும் மட்டுமே இடம் பெற்றுள்ளன. சொல்லின் வேறுபட்ட இலக்கணச் செயற்பாடுகள் பொருட்பகுதியில் தரப்பட்டுள்ளன.

இருமொழி அகராதியில் கூடுதல் பதிவுக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. இதில் ஒவ்வொரு பதிவின் இலக்கணப் பொருள், வினைச் சொற்களின் விரிவுகள், தன்வினை, பிறவினை என்பன போன்றவை பதிவுக்கூறுகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

குறிப்பான்கள்

தலைச்சொல்லின் பொருள் விளக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் உத்திகளில் ஒன்று குறிப்பான். 'ஒரு அகராதியில் சொல் மற்றும் பொருள் குறித்தத் தகவல்களை அறிந்து கொள்ளத் தரப்படும் உத்திகளில் ஒன்று குறிப்பான் எனப்படும். தலைச்சொல் பகுதி, பொருள் பகுதி எனும் இரு பகுதிகளிலும் குறிப்பான்கள் தரப்பெறுகின்றன. இவை அடைப்புக் குறிகளுக்குள்ளும், அடைப்புக் குறிகளின்றியும் தரப் பெறுகின்றன.

பதிவுச்சொல் புதுச்சொல்லா, பழஞ்சொல்லா, வட்டார வழக்கா, மத வழக்கா, இழி வழக்கா, உயர் வழக்கா, சாதி வழக்கா, வழக்கொழி சொல்லா, பெருவழக்கா அருகிய வழக்கா என்பதை அறிந்து கொள்ளும் வகையில் பொருட்பகுதியில் தரப்பெறும் சிறு

குறிப்பே குறிப்பான் எனக் குறிப்பிடப்படுகின்றது. (பெ. மாதையன்)

குறிப்பான்களின் வகை

1. இலக்கணக் குறிப்பான்
2. துறைக் குறிப்பான்
3. நிலைக் குறிப்பான்

என்ற நிலையில் குறிப்பான்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர்.

கிரியாவின் தற்காலத் தமிழகராதி

முழுக்க, முழுக்க கணினி உதவியுடன் உருவாக்கப்பட்டு வெளிவந்த முதல் அகராதி என்னும் பெருமைக்குரிய அகராதி கிரியாவின் தற்காலத் தமிழகராதியே. இவ்வகராதியின் முதன்மைப் பதிப்பாசிரியர் பா.ரா.சுப்ரமணியம். தமிழ்ச் சொல்லகராதிக்குப் பின் முழுமையாய் விளக்கச் சொற் பொருளோடு வந்த முதல் அகராதி என்னும் சிறப்பையும் பெற்றது இதுவே. இதில் 15875 சொற்கள் இடம் பெற்றுள்ளன.

கிரியா அகராதி உருவாக்கப்பட்டதன் நோக்கம்

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மட்டுமின்றித் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களும் தற்காலத் தமிழைப் புதிதாகக் கற்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் இவ்வகராதி தேவை என்ற நோக்கமே அடிப்படையாக இருந்தது எனலாம்.

மேலும் வட்டார வழக்குச் சொற்களும் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்கள் பயன்படுத்தும் சொற்களும் இடம் பெற்றுள்ளன. மேலும் இதுவரை வந்த அகராதிகளில் இல்லாத பொருள் வகைப்பாடு, ஒப்புருச் சொற்களின் ஒலிப்பு வேறுபாடு எல்லாச் சொல்லுக்கும் விளக்கச் சொற்பொருள் அதற்கான எடுத்துக்காட்டுகள், தமிழுக்கு இணையான ஆங்கிலச் சொல் மற்றும் 209 படங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

கிரியாவின் தற்காலத் தமிழகராதியில் இலங்கைச் சொல்லின் பயன்பாடு

கிரியாவின் தற்காலத் தமிழகராதியில் 436 இலங்கைச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கைத் தமிழுக்குப் பல தனிக்கூறுகள் உண்டு. இலங்கையின் எழுத்துத் தமிழில் பெரும் பான்மையாக வழங்கும் இந்தியத் தமிழில் இல்லாதச் சொற்களும் இவ்வகராதியில் இடம்பெற்றுள்ளன. இந்தச் சொற்கள் அனைத்தும் இந்தியத் தமிழுக்கு அறிமுகமாகி வருகின்ற சொற்களாகும் என்பர்.

கிரியாவில் குறிப்பான்கள்

கிரியாவில் குறிப்பான்களின் பயன்பாடு மிகுதியாக உள்ளன. அவற்றில் இலங்கைச் சொல்லில் இடம்பெற்றுள்ள குறிப்பான்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. (436 சொற்களில் மிகக் குறைந்த சொற்கள் மட்டுமே) அவற்றைப் பற்றி பின்வருமாறு காணலாம்.

இலங்கைச் சொல்லில் தலைச்சொல் பகுதியில் பதிவுச் சொல்லாகத் தரப்பட்ட அனைத்திற்கும் குறிப்பான் தரப்பட்டுள்ளது. அவை பயன்படும் சூழலை எடுத்துக் காட்டுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

சான்று

அலவாங்கு (பெ) - கடப்பாறை : Crow - bar (கல் உடைப்பதற்குப் பயன்படும் கருவி)

இடாப்பு (பெ) - (பள்ளி அலுவலகம் முதலிய வற்றின்) பதிவேடு : Register

ஏரிக்கட்டு (பெ) - (காளை மாட்டின்) திமில் : hump

அடுகிடை படுகிடை யாகக்கிட - (கிடக்க) பழிகிடத்தல் : Stayput

ஒப்புருச் சொற்கள்

வடிவத்தில் ஒன்றுபட்டு பொருளில் மாறுபட்டு இருக்கும் சொற்கள் ஒப்புருச் சொற்கள் எனப்படும். தமிழ் மொழியில் வழங்கப்படும் சொற்களிலும், இலங்கைத் தமிழில் வழங்கப்படும் சொற்களிலும் சில சொற்கள் வடிவத்தில் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன.

சான்று

1. அரணை[1] (பெ) - (தமிழ்) (உடம்பில் வரியைப் பெற்றுள்ள) ஊர்வனவற்றில் ஒன்று.
அரணை[2] (பெ) - (இலங்) (கணிதத்தில்) வகுத்தல் குறி.

2. இடமாற்றம்[1] (பெ) - (தமிழ்) இடம்பெயர்தல்
இடமாற்றம்[2] (பெ) - (இலங்) மாற்றல்

3. உறுதி[1] (பெ) - (தமிழ்) வலிமை
உறுதி[2] (பெ) - (இலங்) பத்திரம்

4. சேட்டு[1] (பெ) - (தமிழ்) வடஇந்தியர்
சேட்டு[2] (பெ) - (இலங்) சட்டை

அருகிய வழக்குச் சொல்

தமிழ் மொழியில் அருகியவழக்காக வழங்கப்படும் சொல் இலங்கைத் தமிழில் வழங்கப்படுகின்றது.

சான்று

ஒழுங்கை[1] (பெ) - (தமிழ்) ஓரம் (வேலியோரம் என்ற பொருளில்)
ஒழுங்கை[2] (பெ) - (இலங்) சந்து

உறவுமுறைச் சொல்

இரத்த சம்பந்தமான உறவுகளைக் குறிக்கப் பயன்படும் சொற்கள் உறவுமுறைச் சொற்களாகும்.

சான்று

அம்மாஞ்சி (பெ) - தாய்மாமன்

கிரியாவில் சில சொற்கள் வடிவத்தில் சில மாறுதல்களை மட்டும் பெற்று காணப்படுகின்றன. அவை

எடுகோள் (பெ) - கருதுகோள்

ஓதப்பள்ளி (பெ) - பள்ளிவாசல்

ஐமிச்சம் (பெ) - சந்தேகம்

இக்கட்டுரையின் வாயிலாக அகராதியைப் பற்றியும் கிரியா அகராதியில் இடம்பெற்றுள்ள இலங்கைச் சொல்லின் எண்ணிக்கையையும் அறிய முடிகின்றது.

கிரியாவில் வழங்கப்பட்டு வரும் பிறமொழிச் சொல்லான இலங்கைச் சொற்களைப் பற்றியும் அறிய முடிகின்றது.

மாறிவரும் இன்றைய காலத்தில் பல மொழிகளின் அறிவு என்பது தேவையான ஒன்றாகிறது. அவற்றை முழுதாகக் கற்க முடியவில்லை என்றாலும் ஓரளவு தெரிந்துக்கொள்ள கிரியாவின் பயன்பாடு தேவையான ஒன்றாகின்றது.

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் விலங்கினச் சொற்கள்

த. சங்கர்
தஞ்சாவூர்

முன்னுரை

அகராதி, நிகண்டு, கலைக்களஞ்சியம், சொல்லடைவு, தொடரடைவு, ஆய்வடங்கல் போன்ற பல்வேறு நோக்கு நூல்கள் இருந்தாலும் குழந்தைகளுக்கெனத் தனி சிறப்பாக உள்ளது "குழந்தைகள் கலைக்களஞ்சியம்" ஆகும். குழந்தைகள் கலைக் களஞ்சியம் இதுவரை பத்து தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றில் சில விலங்குகளைப் பற்றி இங்கு காண்போம்.

கலைக்களஞ்சியம்

அறிவின் எல்லாப் பிரிவும் பற்றிய அல்லது ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய தகவல்களைக் கட்டுரையில் அகர நிரலில் தொகுத்துத் தரும் நூல் "கலைக்களஞ்சியம்" எனப்படும். கலைக்களஞ்சியம் பொது, சிறப்பு என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

கலைக்களஞ்சியம்

பொதுக் கலைக்களஞ்சியம் — சிறப்புக் கலைக்களஞ்சியம்

வாழ்வியல் களஞ்சியம் — அறிவியல் களஞ்சியம் — குறிப்பிட்ட வயதினர் — குறிப்பிட்ட துறை — குறிப்பிட்ட ஆசிரியர்

குழந்தைகள் களஞ்சியம் — நாடகக் களஞ்சியம் — டாக்டர் மு.வ. களஞ்சியம்

குழந்தைகள் கலைக்களஞ்சியம்

படிப்போரின் வயதைப் பொறுத்துத் தொகுக்கப்படும் கலைக்களஞ்சியம் "குழந்தைகள் கலைக்களஞ்சியம்" ஆகும். குழந்தையின் ஆர்வம், வயது, தேவை, மொழித்திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கலைக் களஞ்சியத்தைச் சுருக்கமாகவும் எளிய நடையிலும் தருவதே இதன் நோக்கம் என்று கூறலாம். பொதுமை, எளிமை, செய்தி களைப் படங்களுடன் விளக்குதல், சுருக்கம் ஆகிய பண்புகள் குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் சிறப்புக் கூறுகளாக உள்ளன. (சான்று) பெரியசாமித் தூரனின் குழந்தைகள் கலைக்களஞ்சியம் *1968 - 76.*

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் விலங்குகள்

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள், பறவைகள், நீர்வாழ் உயிரினம் மற்றும் பூச்சி முதலான இதர உயிரினங்களும் படங்களுடன் கொடுக்கப் பட்டுள்ளன. குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் விலங்குகள் பற்றிய செய்திகளை மட்டும் இங்குக் காண்போம்.

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் கடல் சாமந்தி, கரடி, கவரிமா, கழுதை, கழுதைப்புலி, கங்காரு, காட்டு எருமை, காண்டாமிருகம், குதிரை, சீல், சிங்கம், புலி, குளம்புள்ள விலங்குகள், செல்லப்பிராணிகள் என்று பல வகையான விலங்குகளைப் பற்றியும் அவற்றின் உருவப்படங்களும் அழகாகவும் தெளிவாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒருசில அரியவகை விலங்குகளைப் பற்றி இங்கு காண்போம்.

கடல் சாமந்தி

கடலில் வாழும் விலங்குகளில் மிக விந்தையானவை பல உள்ளன. சிலவற்றை விலங்குகள் என்றே கூறமுடியாது. அவை சிறுசெடிகளைப் போலவும் பூக்களைப் போலவும் காணப்படும். கடல் சாமந்திபுரம் இத்தகைய விலங்குகளில் ஒன்று. கடல் சாமந்தி பலவகையான வண்ணப்பூக்களைப் போன்று வெள்ளை, பச்சை, நீலம், சிவப்பு, ஆரஞ்சு போன்ற நிறங்களில் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் இராமேசுவரம், பாம்பன், அடையாறு ஆகிய இடங்களில் அடுத்துள்ள கடல் பகுதிகளில் இவற்றைக் காணலாம்.

கணவாய்

கணவாய் என்பது இரண்டு பொருளைக் குறிக்கும். (1)கடலில் வாழும் ஒருவகைச் சிறு பிராணி (2) மலைகளுக் கிடையே உள்ள இடைவெளி. இதற்குத் தலையிலிருந்தே கால்கள் முளைத்திருக்கும். அதனால் இதனை "தலைக்காலிகள்" என்றும் அழைப்பர். இதில் பலவகைகள் உண்டு. ஒட்டுக்கணவாய், கூந்தற்கணவாய், பேய்க் கணவாய் என்பன முக்கியமானவை. பொதுவாக இதன்கால்கள் அரை மீட்டர் நீளம் இருக்கும். 15 மீட்டர் நீளம் கால்களுள்ள கணவாய்கள் இருக்கின்றன. உடல்கள் மெல்லியதாக இருப்பதால் இதனை "மெல்லுடலிகள்" அழைப்பர். இதனை ஆங்கிலத்தில் Cephalopod என்று அழைப்பர்.

கழுதைப்புலி

மலை, கணவாய்ப் பகுதிகளில் வாழும் ஒரு விலங்கு. இதற்கு கழுதைக் குறத்தி, கழுதைக் குடத்தி என்ற பெயர்களும் உண்டு. இது ஓநாயைப் போன்றே இருக்கும். இது இரவில்தான் இரைதேடச் செல்லும். இந்தியா, தென்மேற்கு ஆசியா, வட ஆப்பிரிக்கா ஆகிய இடங்களில் இது வாழ்கிறது.

சீல்

இதனை ஆங்கிலத்தில் seal என்று அழைப்பர். இது நீரில் வாழும் பிராணி. இது குட்டிப்போட்டுப் பாலூட்டும் பாலூட்டிகள் வகுப்பைச் சேர்ந்தது. குளிர்ந்த நீருள்ள வடதுருவக் கடல் பகுதிகளில் சீல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதில் பல வகைகள் உண்டு. ஆண் சீல்கள் 6 மீட்டர் நீளம் உள்ளன. இவை நீரில் வாழ்ந்தாலும் நிலத்தில் தான் குட்டி போடும்.

கவரிமா

இதனை ஆங்கிலத்தில் Yak என்று அழைப்பர். ஆடு, மாடுகளைப் போல இந்தியா முழுவதும் பார்க்கலாம். ஆனால் இந்தியாவுக்கு வடக்கில் உள்ள திபெத்து நாட்டில் வாழ முடியாது. ஏனெனில் அங்குக் குளிரும் பனியும் மிகுதியாக இருக்கும். உணவும் சிறிதளவே கிடைக்கும். தவிர, அந்த நாடு ஒரு மலைப்பிரதேசம். எனினும் ஒரு மாட்டைப்போல ஒரு விலங்கு வாழ்கிறது. அதுதான் "கவரிமா1". இதில் காட்டு கவரிமா, வீட்டுக்

கவரிமா என்று இருவகை உள்ளன. இந்தியாவில் இமயமலைச் சரிவில் கவரிமா காணப்படுகிறது.

மேலே விளக்கமாக விளக்கப்பட்ட இந்த அரிய வகை விலங்குகளைக் குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் வண்ணப் படங்கள் மூலமாகவும், அந்த விலங்குகளின் உருவம், உண்ணும் உணவு, அதன் வாழிடம் ஆகிய அனைத்துச் செய்திகளையும் குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் காணமுடிகிறது.

குழந்தைகள் கலைக்களஞ்சிய செய்திகள்

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் பல அரிய வகையான செய்திகள் கிடைக்கின்றன.

(1) எந்த இடத்தில் வாழ்கிறது என்ற செய்தி விளக்கமாகத் தரப்பட்டுள்ளது. (சான்று : கடல் சாமந்தி)

(2) விலங்குகளில் எத்தனை வகையான விலங்குகள் இருக்கின்றன. அவை எந்த வகையைக் (நீரில், நிலத்தில்) குறிக்கிறது என்ற செய்தியைக் காணமுடிகிறது. (சான்று : கணவாய், கழுதைப்புலி)

(3) விலங்குகளானது எங்கு இனப்பெருக்கம் செய்கின்றன. அதற்கான சூழல் ஆகியவற்றைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. (சான்று : சீல்)

(4) நீளம் அகலம் பற்றிய செய்திகளைக் காண முடிகிறது. குட்டியாக இருக்கும்போது எவ்வளவு நீளம் இருக்கிறது. அது வளர்ந்த பிறகு எவ்வளவு நீளம் இருக்கிறது என்ற செய்திகள் காணப்படுகின்றனள. (சான்று : கணவாய், சீல்)

(5) விலங்குகள் என்ன நிறத்தில் இருக்கிறது என்ற செய்திகளைக் காண முடிகிறது. (சான்று : கடல் சாமந்தி, கவரிமா)

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் பயன்கள்

- ❖ அகர வரிசைப்படி அமைந்துள்ளதால் நமக்குத் தேவை யானவற்றை எளிதில் எடுத்துப் பார்க்க உதவுகிறது.
- ❖ எழுத்து வடிவில் புரியாதவற்றைப் படங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.
- ❖ இதுவரை குழந்தைகள் பார்க்காத உருவங்களை, கருப்பு, வெள்ளை, வண்ணப்படங்களைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

- ❖ அகராதிகளில் பொருள் விளக்கம் தரவு அடிப்படையில் இடம் பெற்றிருக்கும். ஆனால் குழந்தைகள் கலைக் களஞ்சியம் விரிவாகவும் பத்திகளாகவும் படங்களாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது.
- ❖ கு.கலைக்களஞ்சியத்திலுள்ள கட்டுரைகளுக்கு இடை யிடையே அடைப்புக் குறிகளுக்குள் 'த. க' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு தனிக்கட்டுரை என்பதன் சுருக்கம் ஆகும்.
- ❖ குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் கட்டுரைகளில் ஆங்காங்கு 'பார்க்க' என்ற குறிப்பைத் தொடர்ந்து வேறு தனிக்கட்டுரைகள் சிலவற்றின் தலைப்புகள் கொடுக்கப் பட்டிருக்கும். இந்தக் கட்டுரைகளையும் சேர்த்துப் படித்தால், ஒரு பொருளைப் பற்றி மேலும் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம்.
- ❖ குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து செய்திகளும் அகர வரிசைப்படி இடம்பெற்றிருக்கிறது.

முடிவுரை

ஆர்வம், மொழித்திறன், எளிமை ஆகிய கருத்துக்களை உள்ளடக்கியதே குழந்தைகள் கலைக்களஞ்சியம் ஆகும். இது முழுக்க முழுக்க குழந்தைகளுக்குப் பயனளிப்பதாகவே உள்ளது. இதுபோன்ற பலவகையான நோக்குநூல்கள் தோன்றி எதிர்கால, வளரும் சமுதாயத்திற்கு பயனுள்ளதாக அமைய வேண்டும்.

"நோக்குநூல்களில் பெரியபுராணச் சிறப்புப்பெயரகராதி ஊர்ப்பெயர்கள்"

சு. சத்யா
தஞ்சாவூர்

முன்னுரை – நோக்குநூல்

"நூலறிவை வளர்க்க நூலைப் படிப்பதும்
படிக்கும் நூலிலெழும் சிக்கலைத் தீர்ப்பதும்
இலக்கண இலக்கியம் இதுதான் என்பதும்
ஐயம் நீக்கி அறிவை வளர்ப்பதும்
சான்றோர் கூற்றை ஆய்ந்து அறிவதும்
சொல்லும் பொருளும் புரிந்து கொள்வதும்
இச்சொல்லுக்கு இதுதான் பொருள் என்பதும்
வரலாறு படித்து நிகழ்வு தெரிவதும்
உலக நிகழ்வு இதுதான் என்பதும்
இவற்றிற்கு எல்லாம் வழிநூலே நோக்குநூலாம்
அந்நோக்கு நூலே பல்துறை சார்ந்தக் கருவிநூலாம்
அக்கருவிநூலால் வந்ததுவே இன்றுள்ள உயர்தனிச் செம்மொழித்
தமிழ்மொழியாம்"

நோக்குநூல் – விளக்கம்

ஒருவர், ஒரு நூலைப் படிக்கும்போது ஏற்படும் ஐயங்களைப் போக்குவதற்குப் பயன்படும் கருவிநூல்தான் நோக்கு நூலாகும். அதாவது, இலக்கியம், இலக்கணம், செய்திகள், நாவல், கவிதை போன்றவற்றைப் படிக்கும்பொழுது ஏற்படும் ஐயங்களைத் தீர்ப்பதற்கும், பல்துறை அறிவை வளர்ப்பதற்கும் பயன்படும் கருவிநூலே நோக்கீட்டு நூலாகும். இதன்மூலம் பயனுள்ள செய்திகளைத் தெரிந்துக்கொள்வதோடு நமக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள ஒரு வழிகாட்டி நூலாகவும் இந்நோக்குநூல் பயன்படுகிறது. அவ்வகையில் அந்நோக்கு நூல்களில் ஒன்றான பெரியபுராணச் சிறப்புப்பெயரகராதி ஊர்ப்பெயர்கள் அமைப்பு பற்றியும் அது நோக்குநூலாக எந்தெந்த விதத்தில் பயன்படுகிறது என்பதையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிறப்பகராதிகள்

அகராதிகள் சொற்பொருளை விளக்குவன. கலைக் களஞ்சியங்கள் என்பவை வரலாற்று நிலையில் பல்வேறு உலக பொருள்கள், பெருமக்கள் நிலை, வாழ்வுத்துறைகள் கருத்தோட்ட வளர்ச்சி நிலை, பயன்பாட்டு நிலை ஆகியவைப் பற்றி விரிந்த நிலையில் விளக்கி நிற்கும். இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் பொருள்களை வேண்டுமளவு விளக்கி நல்லறிவு பெறுவதற்குத் துணை செய்யும். இவை பரந்த நிலையிலும் அமையும். எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்பச் சிறிய அளவிலும் அமையும். அவை இடப்பெயர்களிலும் மலை, ஆறு, நிலம் முதலிய பெயர்களை விளக்கி ஊர்ப்பெயர் என்ற நிலையில் இப்பெரியபுராணச் சிறப்புப்பெயரகராதி வரையறை செய்து உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்டக் காலத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட ஆசிரியர் நூலில் காணும் ஊர்ப் பெயர்கள் பற்றியும், அந்நூலில் அவ்வூர்ப்பெயர்கள் தொடர்பான செய்திகள் பற்றியும் அந்நூலில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பற்றியும், அமைப்பு நிலையில் மேற்சொன்ன தகவல்களை உள்ளடக்கிய தாகவும் அமைந்துள்ளன.

ஊர்ப்பெயர்கள் அமைப்பு

சங்கப் பாடல்களிலே ஊர்ப்பெயர்களின் பொருள் விளங்குமாறு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவைபோல் பெரியபுராண நூலாசிரியர் தொண்டை நாட்டைச் சார்ந்தவர் என்பதால் தாம் இயற்றிய இப்புராணத்தில் தொண்டை நாட்டுத் தலங்கள் பற்றித் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் விரிவாகக் கூறியுள்ளார். சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் வழங்கிய ஊர்ப்பெயர்கள் இந்நூலில் தலைச்சொல்லாகக் குறிப்பிட்டுள்ளன. ஒவ்வோர் ஊர்ப்பெயருடன் அவ்வூர் பற்றிய விளக்கமும் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

சான்று

"தலைச்செங்காணம்" என்பதை அடியார்க்கு நல்லார் "தலைச் செங்காடு என்னும் ஊர் என உரை எழுதியுள்ளார். தலைச் செங்காடு என்பது காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தென் மேற்கே நான்கு நாழிகை வழித் தூரத்திலுள்ள தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலம்" என உ.வே.சாமிநாதையரின் அடிக்குறிப்பும் கூறுகிறது.

தேவாரத்திலும் தலைச்சங்கை என்றே குறிக்கப் பெறும். சேக்கிழாரின் பெரியபுராணத்தில் 'தலைசை' (2015) என இவ்வூர் குறிப்பிடப் பெறுகிறது. இங்குள்ள கோயிலை 'அணிநற் சங்கத்தின் தருமுறை நெறியக் கோயில்' (2017) என சேக்கிழார் கூறுவது கோயிலமைப்பால் ஊர்ப்பெயர் வடிவையும் காண வழி செய்கிறது. இதனால் இவ்வூர்ப்பெயர் மாறி வருவதை அறிய முடிகிறது.

பெரியபுராண ஊர்ப்பெயர் ஆய்வின் சிறப்பு

பெரியபுராண ஊர்ப்பெயராய்வில் சோழ நாட்டில் காவிரிக்கு வடகரை, தென்கரையிலுள்ள ஊர்கள் மேலும், ஈழநாடு, தொண்டைநாடு, துளுவநாடு, வடநாடு ஆகியவற்றில் உள்ள ஊர்கள் பற்றிய தகவல்களைத் தனித்தனியே பகுத்தளிப்ப தோடு தேவாரத்தில் மூவர் பாடலில் காணும் ஊர்களைத் தனியாக ஒவ்வொரு ஊராகக் குறிப்பிடுவதோடு அவ்வூர்ப் பற்றிய குறிப்பிடத்தக்கச் செய்திகளை அகரவரிசையில் ஊர்ப் பெயர்களும் அந்தந்த ஊர்களின் விளக்கங்களோடு புராணக்கதை, கோயில் விளக்கம், அரிய பாடல்கள் ஆகியவை குறிப்பிட்டுள்ளவை இப்பெரியபுராண ஊர்ப்பெயராய்வின் சிறப்பாகும்.

சான்று

அகத்தியான்பள்ளி (திருவகத்தியான்பள்ளி)

இவ்வூர் காவிரியின் தென்கரையில் உள்ளது. தெள்ளிய அலைகள் சூழ்ந்த கடற்கானலை உடையது.

திருஞானசம்பந்தர் இவ்வூர்க் கோவில் இறைவனை 'வாடி வெண்டலை' என்ற தேவாரப்பதிகம் பாடி வணங்கினார் (2520).

சுந்தரரும், சேரமான் பெருமாளும் இங்கு வந்து இறைவனை வணங்கினர் (383).

(இறைவனின் மணக்கோலம் காண அகத்தியர் இங்குத் தவம் செய்தார் என்பது வழக்கு தி.தொ.பு. IV சு. உரை 1949 ப.770 த.ஊ.பே.ப.237)

வேதாரணியத்திற்குத் தெற்கே 1 கி.மீ. இல் இத்தலம் உள்ளது.

மரூஉநிலை

சில ஊர்களின் பெயர்கள் மருவி வழங்கப்படும் பெயர்களுடன் பெரியபுராணத்தில் காணப்பெறும். அவை தனிப்பதிவாக இடம்பெறும்போது அதற்குரிய இயற்பெயரை அறியும் வகையில் குறிப்புக் காணப்படுகிறது. இப்பெயரினை ஒட்டிய அடைப்புக் குறியின் உள்ளே மருவி வழங்கப்பெற்ற பெயர்கள் இருக்கும்.

சான்று

ஊர்ப்பெயர்		மரூஉப்பெயர்
இளையான்குடி	-	இளசை
கடம்பூர்	-	கடம்பை
சாத்தமங்கை	-	சாந்தை
தலைச்சங்காடு	-	தலைசை
நாகப்பட்டினம்	-	நாகை

பெரியபுராணத்தில் குறைந்த அளவிலே இத்தகைய மரூஉப் பெயர்கள் காணப்படுகின்றன.

புராணச் செய்திகள்

இச்சிறப்பகராதியில் காணும் ஊர்ப்பெயர்களைப் பற்றிய புராணச் செய்திகள் ஒவ்வோர் ஊரின் விளக்கங்களுக்குக் கீழே தரப்பெற்றுள்ளன. மொத்தம் 106 ஊர்களின் புராணச் செய்திகள் பல நூல்களில் காணும் செய்திகளோடும், அவை அவ்விடத்திலே அடிக்குறிப்புடனும் தரப்பெற்றுள்ளன.

பெரியப்புராணச் சிறப்புப்பெயரகராதியின் – ஊர்ப்பெயர்களின் பயன்பாடு

1. இவ்வூர்ப் பெயராய்வில் பாடல் பெற்ற தலங்கள் பற்றியும், எந்த ஊர்களில் யார் சென்று பாடினார்கள் என்ற குறிப்புகளை இந்நூல் வழி அறிந்து பயன்பெற முடிகிறது.
2. மேலும் வடமொழித் தாக்கத்தினால் முன்பு இருந்த தமிழ் மொழிப் பெயர்கள் உருமாற்றம் அடைந்துள்ளன. அவற்றுள் புரம், புரி, ஆச்சிராமம் போன்ற பின்னொட்டுகள் சேர்ந்து ஊர்ப் பெயர்கள் அமைந்திருப்பதால் வடமொழியின் ஆதிக்கம் தமிழகத்தில் பரவியதை அறிய முடிகிறது.

சான்று

தமிழ்ப் பெயர்கள்		வடமொழியில் திரிபு அடைந்த பெயர்கள்
உறையூர்	-	மூக்கீச்சுரம்
ஆடானை (திருஆடானை)	-	அஜகஜபுரம்
நல்லூர்பெருமணம்	-	ஆச்சாபுரம்
திருப்பாச்சில்	-	ஆச்சிராமம்
ஒற்றியூர்	-	ஆதிபுரி
திருவெண்ணியூர்	-	இட்சுபுரி

3. ஆரம்ப காலத்தில் உள்ள ஊர் இப்பொழுது எப்படியழைக்கப் படுகிறது என்பதைப் பற்றியும் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது என்பதையும் அறிந்து கொள்ள நல்லதொரு வழிகாட்டி நூலாகவும் பயன்படுகிறது.

சான்று

சிராப்பள்ளி (திருச்சிராப்பள்ளி)

சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ளது. சிராப்பள்ளி மலைமீதுள்ள இறைவனை வணங்கிய திருநாவுக்கரசர் 'மட்டுவார் குழாலாளொடு' என்ற பதிகம் பாடி வணங்கினார் (1567).

திருஞானசம்பந்தர் இம்மலையை அடைந்தார் (2241) என்பதும் செம்மணிகளை வாரிக்கொண்டு அருவி பாயும் இம்மலையில் எழுந்துள்ள இறைவன் மீது 'நன்றுடையானை' என்ற பதிகம் பாடி வணங்கினார் என்பதும் இந்நூலின் வழி அறிய முடிகிறது.

(இங்கு திரிசிரன் என்பவன் இறைவனை வணங்கியதால் இவ்வூர்க்கு இப்பெயர் அமைந்தது. திரு என்னும் அடையைத் திரியாகத் திரித்தனர். அதனால் திருச்சிராப்பள்ளி, திரிசிராப் பள்ளி என்றும் திரிசிரபுரம் என்றும் வழங்கலாயிற்று (த.ஊ.பே. 1976, ப.287)

4. முனிவர்கள்

சிவனை வழிபட சென்ற ஊர்களும் அவர்கள் பெயர்களும் அறிந்துகொள்ள இந்நூல் உதவுகிறது.

சான்று

அகத்தியர்	-	அகத்தியான்பள்ளி
உரோமர்	-	கழுமலம்
கபிலர்	-	சண்பை
திருணபிந்து	-	குடவாயில்
தீர்க்கவாகு	-	குறுக்கை
துவட்டா	-	மாதோட்டம்
பராசரர்	-	கொச்சைவயம்
பிருகு	-	ஆடானை
பிருங்கி	-	வேனுபுரம்
புலிக்காலர்	-	பெரும்புலியூர்

(*சம்பந்தர் பிறந்த ஊர்க்குரிய பெயர்கள்)

5. இச்சிறப்புப் பெயரகராதி மூலம் பெரியபுராணத்தில் உள்ள ஊர்ப்பெயர்களைத் தெரிந்து கொள்வதுடன் அந்நூலில் ஊர்ப் பெயர்நிலை, தலைச்சொல், மாற்று வடிவங்கள், திரு-முன்னடை, இயற்கை அமைப்பு, தேவாரக் குறிப்பு, புராண இதிகாசச் செய்திகள், பண்பாடு நாகரிக வளர்ச்சி, வடமொழிக் கலப்பால் தமிழ்ப் பெயர்களில் உருமாற்றம் பெற்றவைகள் என பல் நோக்குச் சிந்தனைகளை ஆய்வு செய்வதற்கும் அவற்றைத் தெரிந்து கொள்வதற்கும், கருவி நூலாகவும் இந்நூல் பயன்படுகிறது. ஊர்ப்பெயர் ஆய்வுக்கு இந்நூல் சிறந்ததொரு நெறிமுறையை பல வழிகளில் பயன்பெற உதவும் வகையில் அமைகிறது.

தொகுப்புரை

- பெரியபுராணச் சிறப்புப்பெயரகராதி ஊர்ப்பெயர்கள் என்னும் இக்கட்டுரையில்,
- தமிழகத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை வளர்ந்து வந்த சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சி நிலைகளை தெரிந்து கொள்வதற்கு இப்பெரியப்புராணச் சிறப்புப் பெயரகராதி பெரிதும் துணைபுரிகிறது.
- ஊர்ப் பெயர்களில் தமிழ்ப்பெயர்கள், வடமொழித் தாக்கத்தால் திரிபு அடைந்த நிலையையும் அறிந்துக் கொள்ள முடிகிறது.

❖ சில ஊர்களின் பெயர்கள் இயற்பெயரைக் குறிப்பிட படாமல் மரூவி வழங்கப்படுகின்றனள. இன்றுவரை இப்பெயர்களே பதிவுச் செய்யப்பட்டு நிலைத்துவிட்டன.

❖ ஊர்ப் பெயர்களின் மூலம் தேவாரப் பாடல் பெற்றத் தலங்களைத் தெரிந்து கொள்வதோடு, நாயன்மார்கள் எந்தெந்த ஊர்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்தார்கள் என்ற குறிப்புகளை அறிய முடிகிறது. மேலும் இவர்களால் பாடப் பெற்ற (ஊர்த்) தலங்கள் யாவும் திரு என்னும் அடைமொழியோடு பாடல்பெற்ற தலங்களாக வரலாற்றில் பதிவுச் செய்யப்பட்டுள்ளன.

ஒருமொழி அகராதி : அமைப்பும் போக்கும்

சா. சாந்தி
தஞ்சாவூர்

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்"

என்ற பாரதியாரின் பாடலுக்கு இணங்க இலக்கியம், இலக்கணம், செய்திகள், நாவல், கவிதை போன்றவற்றைப் படிக்கும்பொழுது ஏற்படும் சிக்கலைத் தீர்ப்பதற்கும் அறிவை வளர்ப்பதற்கும் பயன்படும் கருவி நூல் நோக்கீட்டு நூல் எனப்படும். இதன்மூலம் முதலில் தெரிந்துகொண்ட செய்திகளை விட கூடுதலான செய்திகளை அறிந்துகொள்ளவும் முடியும். இவ்வாறு நோக்குநூல்களை மையமாகக் கொண்டு அகராதியில் இடம்பெறும் மொழி எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த ஒருமொழி அகராதியின் அமைப்பையும் அதன் வளர்ச்சிப் போக்கையும் இக்கட்டுரையின் மூலம் காணலாம்.

ஒருமொழி அகராதி

ஐரோப்பியரின் வருகை ஒருமொழி அகராதிக்கு வித்திட்டாக அமைந்தது. நோக்கீட்டு அடிப்படையில் முழுமையான அகரநிரலுடன் அகராதிகள் தொகுக்கப்பட்டன. இம்மரபும் தொடர்ந்து வளர்ந்து வருகின்றது.

தலைச்சொல் பகுதியும் (மூலமொழி)
பொருள் பகுதியும் (இலக்குமொழி)

ஒரேமொழியில் கொண்டது ஒருமொழி அகராதி ஆகும். இதனை அமைப்பு மற்றும் பொருள் விளக்கத்தின் அடிப்படையில் இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

அமைப்பு 1 : சொற்றொகுதி பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டு தனித்தனியாக அகரவரிசையில் இருத்தல். அதாவது அகராதிகள் பெயர், பொருள், தொகை, தொடை எனும் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அமைப்பு 2 : சொற்றொகுதி எவ்வித உட்பிரிவுமின்றி அகர வரிசையில் கோர்வையாக இருத்தல். இவை 'அ' முதல் 'ன' வரை வரிசைமுறையில் அமைந்திருக்கும்.

முதலிரண்டு எழுத்துவரை அகரநிரலைக் கைக்கொண்ட 'அகராதி மோனைக் ககராதி எதுகை' எனும் அகராதியும் எழுத்தெண்ணிக்கை அடிப்படையில் பத்தெழுத்து வரையிலான சொற்களைத் தொகுத்துத் தந்த பத்துச் சொல்லகராதியும் 17-ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டன. இவை இரண்டும் அச்சாக வில்லை. சீகன்பால்கு தமிழ் அகராதி (1732) ஒன்றையும் தமிழ் உரைநடை அகராதி (1726) ஒன்றையும் தொகுத்துள்ளார். இவையும் அச்சாகவில்லை. பதிவுகளுக்குப் பதிவுச் சொல்லின் மொழியிலேயே பொருள்விளக்கம் தரும். அவை,

தமிழ் → தமிழ்
ஆங்கிலம் → ஆங்கிலம்
இந்தி → இந்தி

ஒருமொழி அகராதிகள்

எண்	அகராதி	ஆசிரியர்	ஆண்டு
1.	சதுரகராதி	வீரமாமுனிவர்	1732
2.	மானிப்பாய் அகராதி	சந்திரசேகர பண்டிதர்	1842
3.	தமிழ்ப் பேரகராதி	நா.கதிரைவேற்பிள்ளை	1899
4.	தமிழ்ச் சொல்லகராதி	சி.டபிள்யூ.கதிரைவேற் பிள்ளை	1904
5.	இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி	பி.இராமநாதன்	1909
6.	மாணவர் தமிழ்அகராதி	அனவராத விநாயகம் பிள்ளை	1921
7.	தற்காலத் தமிழ் சொல்லகராதி	ச.பவானந்தம்பிள்ளை	1925
8.	தமிழ்-தமிழ் அகரமுதலி	மு.சண்முகம்	1985
9.	பெருஞ்சொல்லகராதி	த.வே.வீராசாமி	1984

சதுரகராதி

கி.பி.1732-இல் வீரமாமுனிவரால் (Constantinus Joseph Beschi) உருவாக்கப்பட்ட சதுரகராதி தமிழ்அகராதி வரலாற்றின ஒருமொழி அகராதி வளர்ச்சிக்கு அடிப்படையானது. இவ்வகராதி பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி எனும் நான்கு பகுதிகளை உடையது. ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனி அகரநிரல் பின்பற்றப் பட்டுள்ளது.

1. பெயரகராதி

ஒருசொல் பல்பொருளும் உள்ளன.

எ.கா. இனம் = குலம், கூட்டம், சுற்றம், திரள், பசுக்கூட்டம், மந்திரிகள்

2.பொருளகராதி

ஒரு பொருள் பல சொற்கள் காணப்படுகின்றன.

எ.கா. சிரிப்பு = ஆசம், ஆர்ப்பு, இளி, நகை, முறுவல், மூரல், அன்றியும் அவமதிச்சிரிப்பு, அசி, ஆசியம் இளி.

3. தொகையகராதி

தொகையகராதியில் தொகைச்சொற்கள் காணப்படுகின்றன.

எ.கா. இடம் 3 : தன்மை, முன்னிலை, படர்க்கை

4. தொடையகராதி

தொடையகராதியில் ஒத்த ஈறுடைய, முதலெழுத்து போக எஞ்சிய எழுத்துகள் ஒத்துள்ள இரலை, குரலை, சிதலை, திதலை, பதலை, மிதலை, மதலை, முதலை, விதலை என்பன போன்ற சொற்களும் உரிய பொருட்களுடன் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன.

அதிர் - அதிரென்னெவல், ஒளி
எதிர் - எதிரென்னேவல், ஒப்பு, முன்
கதிர் - கதிர், சூரியகிரகணம், சூரியன்

என இப்பதிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிற்பெயர் தலைச்சொல்லாகக் கொடுக்கப் பட்டுள்ளது. வினைச்சொற்களுடன் - தல் - த்தல் எனும் பின்னொட்டுகளின் இணைவு காணப்படுகிறது.

தலைச்சொல்லிற்குப் பொருள் விளக்கம் தரும்போது சுழற்சி முறையில் கூறுகிறது. இவை ஒரு பொருள் பன்மொழி களுடன் தொடர்புபடுத்தி மட்டுமே காட்டப்படுகிறது. இவ்வகையான சுழற்சி முறை 4, 5 முறைகளில் இடம் பெற்றுள்ளன. பொருள் விளக்க உத்திகளில் ஒன்றான குறுக்கு நோக்கீடு இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொருள் விளக்குவதற்குச் சான்றுகள் மூன்று வகையில் கையாளப் படுகின்றன.

1. இலக்கண இலக்கியத்திற்கு மேற்கோள் காட்டுதல்
2. பழமொழி போன்றவற்றிற்கு தருதல்
3. ஆசிரியர் தாமே தருவது.

இவற்றுள் மூன்றாவது அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வாறு நான்கு பதிவுகளைக் கொண்டுள்ளமையால் இவ்வகராதி சதுரகராதி எனப்பட்டது.

சதுரகராதியின் திருத்திய பதிப்பு 1819 - இல் எல்லீசு என்பவரால் பதிப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 8 பதிப்புகள் வெளிவந்துள்ளன.

மானிப்பாய் அகராதி

சந்திரசேகர பண்டிதரால் உருவாக்கப்பட்ட இவ்வகராதி லெவி ஸ்பால்டிங் என்பவரால் 1842 - இல் வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்த கிறித்தவ சங்கத்தார் இருமொழி அகராதிகளுடன் தமிழ் - தமிழ் அகராதி ஒன்றையும் தொகுக்கத் திட்டமிட்டிருந்தனர். இதன் காலம் 1833. இம்முயற்சி நடைபெறவில்லை. எனினும் இவ்வகராதிக்கெனத் திரட்டப் பட்ட தரவுகளை அடிப்படையாய்க் கொண்டு மானிப்பாய் அகராதி எனப்பெறும் The Manual Dictionary of the Tamil Language எனும் அகராதி உருவாக்கப்பட்டது. மானிப்பாய் அமெரிக்க மிஷன் என்னும் அச்சுக்கூடத்தில் வெளியிடப்பட்டதால் அதன் பெயரைக் கொண்டு வெளிவந்தது. இவ்வகராதி மானுவல் அகராதி எனவும் யாழ்ப்பாண அகராதி எனவும் அழைக்கப் படுகிறது.

சதுரக்ராதியைவிட நான்கு பங்கு பெரியது. 58,500 சொற்கள் பதிவுகளாக இடம் பெற்றுள்ளன. இதில் சதுரகராதியில் இடம் பெற்றுள்ள தொடையைத் தவிர மற்ற மூன்று வகைகள் உள்ளன.

1. தலைச்சொல் தொழிற்பெயர் வடிவத்தில் கொடுக்கப் பட்டுள்ளது.
2. பொருள் பகுதி அகரவரிசையில் கொடுக்கப்பட்டுள்ளது.
3. பொருள் மிகுதியை விளக்கப் பொதுநிலையிலான விளக்கங்கள் இவ்வகராதியில் காணமுடிகிறது.
4. புதிதாகச் சேர்க்கப்பட்ட சொற்களுக்கும், சொற் பொருளுக்கும் உடுக்குறி (*) கொடுக்கப்பட்டுள்ளது.
5. ஒன்றிற்கு மேற்பட்ட தலைச்சொற்களை ஒன்றாக இணைக்கும் உத்தி முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமர் →அமரென்னேவல், போர் மதில், மூர்க்கம், வெறி தலைச்சொற்களாய் தரப்படுகையில் ஏவல் வினை எனும் பொருட்களும் தரப்படுகின்றன.

தமிழ்ப்பேரகராதி

1899-இல் நா.கதிரைவேற் பிள்ளை என்பவரால் தமிழ்ப் பேரகராதி தொகுக்கப்பட்டு வெளிவந்தது. இவ்வகராதி அமைப்பு-1 வகையைச் சார்ந்தது. இது மானிப்பாய் அகராதியின் விரிவு எனலாம்.

தலைச்சொல் தொழிற்பெயராகக் கொடுக்கப் பட்டுள்ளது. அகர வரிசை பின்பற்றப்பட்டுள்ளது. பொருள் பகுதியை விளக்க குறுக்குநோக்கீடுகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவ்வகராதிகளில் இஊ என்னும் சொல் பயன் படுத்தப்படுகிறது. கலைக்களஞ்சிய விளக்கங்கள் வரையறைக் குட்பட்டே பயன்படுத்தப்பட்டுள்ளன. பொருள்களை விளக்க மூன்றுவகை எடுத்துக்காட்டுகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வகராதியில் நிறுத்தல் குறியீடுகள் பயன்படுத்தப்படவில்லை.

இவ்வகராதியில் தான் முதன்முதலாக இலக்கணக் குறிப்பான்களுக்குப் பதிலாகக் குறியீடுகள் பயன்படுத்தப் பட்டன.

1. வினையெச்சம் = $
2. பெயரெச்சம் = &
3. குறிப்பு வினைமுற்று = %
4. புதிதாகச் சேர்க்கப்பட்டச் சொற்கள் = *
5. சொற்பிறப்பைச் சுட்ட = <

இக்குறியீடுகள் முதற்பதிப்பில் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

தமிழ்ச்சொல் அகராதி

1904 - இல் சி.டபிள்யூ. கதிரைவேற் பிள்ளையால் தொகுக்கப்பட்ட அகராதி தமிழ்ச் சொல்லகராதி என்பதாகும். சங்க அகராதி தமிழ்ச்சங்க அகராதி என்று வழங்கப்பெறும் இவ்வகராதி வரலாற்றில் திருப்புமுனையாகக் காணப்படுகிறது. 1800 பக்கங்களைக் கொண்ட இவ்வகராதி 63,900 சொற்களைக் கொண்டது.

இலக்கணச் சொற்களின் விளக்கத்திற்குச் சிறந்து விளங்குவது இவ்வகராதியாகும். தலைச்சொல் பகுதி தொழிற் பெயராகக் கொடுக்கப்பட்டுள்ளது. பொருள் பகுதியை விளக்கும்போது ஒரு சொல்லுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட பொருள் இருந்தால் பொருளுக்கு எண்ணிட்டுக் கூறியுள்ளது. அகரவரிசை யிலும் இவ்வகராதி அமைந்துள்ளது.

சான்று

அரிகரகுமரன் → அரிகரபுத்திரன் (சூ.நிகண்டு 28)
ஹரி - விட்ணு
ஹர - சிவன்

இவ்வகராதியில் மூன்று வகையான சான்றுகளும் கூறப் பட்டுள்ளன. கலைச்சொல்லின் எல்லாப் பொருளும் மேற் கோளுடன் விளக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 344 நூல்களிலிருந்து மேற்கோள்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. விளக்கக் குறிப்புகளும் கலைக்களஞ்சியக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. அகராதி உத்திகளின் ஒன்றான சொல்மூலம் காட்டப்படுகிறது.

அகந்தை 1. அங்கார தத்துவம்
2. செருக்கு
3. நான் என்னும் தன்மை
(அஹந்தா, அஹம் - நான், தா - நான்
வடமொழிச் சொல்)

இவ்வகராதி மூன்று தொகுதிகளைக் கொண்டது.

முதல் தொகுதி	*- 1904*
இதன் இரண்டாம் பதிப்பு	*- 1910* வெளிவந்தது.
இரண்டாம் தொகுதி	*- 1912* லும்
மூன்றாம் தொகுதி	*- 1923* லும் வெளிவந்தது.

தமிழ் ஒரு மொழி வரலாற்றில் சிறப்பான பதிவமைப்புடன் வெளிவந்த இவ்வகராதி பல பதிவுக் கூறுகளையும் கொண்டுள்ளது. ஒருபொருட் பல சொற்களை மட்டுமே பொருட்சொல்லாய்த் தந்த அகராதி மரபிலிருந்து வேறுபட்டுப் பெயர்கள் பலவற்றுக்கும் விளக்கச் சொற்பொருள் அளிக்கப்பட்டுள்ளது.

இதைக் காட்டிலும் பரந்த நிலையில் பெயர்களுக்கு விளக்கச் சொற்பொருள் தந்த அகராதி *1904* - இல் வெளிவந்த தமிழ்ச் சொல்லகராதியே ஆகும். விளக்கச் சொற்பொருள் தருதலில் பெருமாற்றத்தை ஏற்படுத்திய ஒருமொழி அகராதி இதுவே ஆகும். பின்வரும் பட்டியல் இதை விளக்கும்.

பதிவுச் சொல்	தமிழ்ச் சொல்லகராதி *(1904)*	பேரகராதி *(1883)*	தமிழ் மொழியகராதி	20-ம் நூற்றாண்டு தமிழ் அகராதி *1909*
அக்கப் பாடு	கடலிலாவது ஆற்றிலாவது மரக்கலத்தில் ஏற்றப்பட்ட தானியங்கள் விளைப் பொருட்கள் கடுங்காற்று முதலிய காரணங் களினால் நட்டப்படுகை	மரக்கலச் சேதம்	மரக்கலச் சேதம்	மரக்கலச் சேதம்
அச்சாணி	பண்டியிலே யுருள்கோத்த மரத்திலேயது கழலாமற் செருகும் ஆணி	அச்சுரு வாணி	அச்சுரு வாணி	அச்சுரு வாணி

அணில்	தாய்முலையுண்டு வளர்வ தாயும் முதுகிலே மூன்று வரியுடையதாயும் மரங் களிலே விரைந்தோடும் பயிற்சி உடையதாயு முள்ள ஒரு பிராணி	அணிற் பிள்ளை	அணிற்பிள்ளை	அணிற் பிள்ளை

எனத் தமிழ்ச் சொல்லகராதியில் முன்வந்த அகராதிகளிலும், பின் வந்த அகராதிகளிலும் இல்லாத நிலையில் பல பெயர்ச்சொற்கள் விளக்கச் சொற்பொருளுடன் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன. இம்மரபு இவ்வகராதியோடு முற்றுப் பெற்றுவிட்டது.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி

1909 - இல் பி.இராமநாதனால் வெளியிடப்பட்டது. *1600* பக்கங்களைக் கொண்ட இது இரண்டு தொகுதிகளாக வெளி வந்தது. அமைப்பு - *1* வகையைச் சார்ந்தது. இவ்வகராதியில் இலக்கணக் குறிப்பான்களும், பிற குறிப்பான்களும் இடம் பெறவில்லை. இவ்வகராதி தமிழ்மொழியின் கலைக்களஞ்சிய மாகக் கருதப்பட்டது. தமிழ் அகராதி வரலாற்றில் விளக்கப் படங்கள் இந்த அகராதியில் தரப்பட்டிருந்தது. விளக்கப் படங்கள் தந்த முதல் அகராதி இதுவேயாகும்.

மாணவர் தமிழ் அகராதி

1921 - இல் அனவரத விநாயகம் பிள்ளை என்பவரால் மாணவர் தமிழ் அகராதி தொகுக்கப்பட்டது. இவ்வகராதி அமைப்பு - *1* வகையைச் சார்ந்தது. தலைச்சொல்லை வினையடி யாகக் கொண்ட அகராதி.

செய் - செய்தான், செய்கிறான்

பொருள் உறவைச் சுட்ட ஒப்புருச் சொல்லைக் காட்டிய முதல் அகராதி இது.

அரி - அரிசி, அழுகு; அரிதல் ....
அரி - பகை, பகைவன்
அரி - ஹரி, விஷ்ணு, இந்திரன்...

இவ்வகராதியில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான இலக்கணக் குறிப்பான்கள் கையாளப்படவில்லை. தலைச்

சொல்லில் ஆண், பெண் வேறுபாடுகளும், நடைக்குறிப்பான் களும் கையாளப்பட்டுள்ளன.

அப்பி எஜமாட்டி (ஆண்பால் - அப்பன்)
அரி ஹரித் பொன்னிறம்

தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி

1925 - இல் ச. பவானந்தம் பிள்ளையால் தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி தொகுக்கப்பட்டது. இது அமைப்பு - 2 வகையைச் சார்ந்தது.

வினையடியைத் தலைச்சொல்லாகத் தந்து இருந்தாலும், பல இடங்களில் வினையெச்சம் தலைச்சொல்லாக இடம் பெறுவதைக் காண முடிகிறது.

அகப்பட - 1. அடைக்க
2. வசப்பட
3. சிக்கிக்கொள்ள

குறிப்பான்களைக் குறுக்கங்களாக அடைப்புக்குள் பதிவு செய்த பெருமை இவ்வகராதியைச் சாரும்.

அரவணை (பெ) - சேஷசயனம்
அகற்று (வி) - நீக்கு
அகைதல் (தொ.பெ) - 1. அரிதல் 2.ஒடித்தல் 3. தளர்தகல்

தமிழ் – தமிழ் அகரமுதலி

மு. சண்முகம் பிள்ளையால் தொகுக்கப்பட்ட தமிழ் - தமிழ் அகர முதலி 1985 இல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத் தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இது அமைப்பு - 2 வகையைச் சார்ந்தது. தலைச்சொல்லைப் பெயராகவும், வினையடியாகவும் தொழிற்பெயராகவும் தந்துள்ளது. மானிப்பாய் அகராதியைப் போன்று இவ்வகராதியிலும் சொல் இணைப்பு காணப்படுகிறது. பொருள் விளக்குவதற்குக் குறுக்கு நோக்கீடுகள் கையாளப் பட்டுள்ளன. பொருளை வேறுபடுத்திக் காட்ட அரைப்புள்ளி (;) முக்காற்புள்ளி (;) பயன்படுத்தப்படுகிறது.

1984-இல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெருஞ் சொல்லகராதித் திட்டம் தொடங்கப்பட்டது. தா.வே.வீராசாமி என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த பெருஞ்சொல்லகராதியின்

முதல் தொகுதி - 1988 லும்
இரண்டாம் தொகுதி - 1989 லும்
மூன்றாம் தொகுதி - 1992 லும்
நான்காம் தொகுதி - 2002 லும்

இது அமைப்பு - 2 வகையைச் சார்ந்தது. இருமொழி அகராதியின் பாதிப்பால் இவ்வகராதிப் பதிவமைப்பிலும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. ஒருமொழி அகராதி மரபினின்றும் வேறுபட்டுள்ளது.

1. *வினையடியைத் தலைச்சொல்லாய்த் தருதல்*
2. *காலநிரலில் மேற்கோள் தரல்*
3. *ஒப்புருச் சொற்களுக்குத் தனிப்பதிவு தருதல்*
4. *வினைத்திரிபை அறிதற்கு ஏற்ப வினைப்பதிவில் வினை வகைப்பாட்டு என் தருதல்*
5. *செயப்படுபொருள் குன்றிய வினை குன்றாவினைக் குறிப்பு தருதல் (இரண்டாம் தொகுதியில் மட்டும்)*
6. *எல்லாப் பதிவுகளுக்கும் இலக்கணக் குறிப்பு தருதல்*

எனும் பதிவுக்கூறுகள் இவ்வகராதியில் இடம்பெற்றுள்ளன.

முடிவுரை

ஒருமொழி அகராதியின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது சதுரகராதியாகும். இதனை அடுத்து வந்த மானிப்பாய் அகராதியில் சொல் இணைப்பு சிறப்பாகப் பேசப்படுகிறது. தமிழ்ப் பேரகராதியில் குறிப்பான்களுக்குப் பதிலாகக் குறியீடுகள் பயன்படுத்தும் முறைகள் காணப்படு கின்றன. தமிழ்ச் சொல்லகராதியில் 'அ' கரம் முதல் 'ன' கரம் என்னும் முறையும், எண்ணிட்டுக் கூறும் முறையும் கையாளப் பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி வளர்ச்சி களையும் பெருஞ்சொல்லகராதியில் கடைப்பிடிக்கப் பட்டுள்ளன. இது சிறப்பான அகராதியாகக் கருதப்படுகின்றது. இவ்வாறாக ஒருமொழி அகராதிகள் வளர்ச்சி அடைந்துள்ளது.

நாமதீப நிகண்டு - பறவை உயிர்பொருள் வர்க்கம் - ஓர் ஆய்வு

பா. சிலம்பரசி
தஞ்சாவூர்

முன்னுரை

இலக்கணக் கல்வியின் ஒரு பகுதியாகச் சொற்பொருள் மாற்றங்களைக் கற்பது ஒரு பிரிவு. இதனைத் தமிழ்மொழியில் முதல் நூலான தொல்காப்பியம் அக்காலக்கட்டத்தில் இருந்த கடினச் சொல்லுக்கான பொருளை 'உரியியல்' என்னும் பகுதியில் எடுத்துக் கூறுகிறது. இலக்கணங்களின் ஒரு பிரிவுகளாக இருந்த சொற்பொருள் கூறும் மரபு காலப்போக்கில் வளர்ச்சியுற்று நிகண்டு என்ற தனி நூலாக வளர்ந்தது. இதற்குக் காரணம் தமிழ் இலக்கியப் பரப்பில் ஏற்பட்ட மாறுதல்களே. தமிழகத்தில் களப்பிரர் காலத்தில் சமண, பௌத்த செல்வாக்கின் காரணமாக அம்மதச்சொற்கள் தமிழில் புகுந்தன. புலவர்களும் தமது புலமைகளையும், செல்வாக்கையும் நிலைநாட்ட முயன்ற வடமொழிச் சொற்கள் கலந்த மணிபிரவாள நடையில் இலக்கியங்களை படைக்கத் தொடங்கினர். இவ்வாறு மாறிவரும் மொழி அமைப்பையும், சொற்றொகுதிகளையும் புரிந்துக்கொள்ள நோக்கு நூல்கள் தேவை ஏற்பட்டது. மேலும் ஒரு காலத்திய சொற்களின் பொருளைப் பிற்காலத்தவர் அறிந்து கொள்ளவும், காலந்தோறும் சொற்பொருளில் நிகழும் மாறுபாடுகளை அறியவும் நிகண்டுகள் பயன்படுகின்றன.

நிகண்டுகளின் அமைப்பு முறை

ஒருபொருள் பலசொல், ஒருசொல் பலபொருள், தொகுப்புபெயர் என்ற மூன்று பெரும் பிரிவுகளின் அடிப்படையில் சொற்பொருளை நிகண்டுகள் கூறுகின்றன. நிகண்டுகளின் உட்பிரிவுகள், தொகுதி, வகை, படலம், வர்க்கம், இயல் என்பனவற்றுள் ஏதேனும் ஒரு பெயரைக் கொண்டுள்ளன.

நாமதீப நிகண்டு

தமிழில் முதல் நிகண்டு சேந்தன் திவாகர நிகண்டு கி.பி. 8 நூற்றாண்டில் தோன்றியது. இதன் பிறகு வந்த நிகண்டுகள்

அனைத்தும் திவாகர நிகண்டின் அமைப்பு முறையை பின்பற்றின. சிவசுப்ரமணிய கவிராயரால் கி.பி.19 நூற்றாண்டில் இயற்றப் பட்ட நாமதீப நிகண்டு திவாகர நிகண்டின் முறையிலிருந்து வேறுபட்டு வெளிவந்தது. நிகண்டுகளின் முப்பெரும் பிரிவுகளுள் முதலாவதாகிய 'ஒரு பொருள் பல்பெயர்த்தொகுதி' என்னும் பிரிவைச் சார்ந்தது நாமதீப நிகண்டு.

நாமதீப நிகண்டின் அமைப்பு முறை

நாமதீப நிகண்டு நான்கு படலங்களாக அமைந்துள்ளது. இந்நான்கு படலங்களும் 16 வர்க்கங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

சொறகள்

- உயர்திணைப் படலம்
- அஃறிணை உயிர்ப் பொருட்படலம்
- அஃறிணை உயிரில் பொருட்படலம்
- குணநாமப் படலம்

உயர்திணைப் படலம்
- தெய்வ வர்க்கம்
- மானிட வர்க்கம்

அஃறிணையுயிர்ப் பொருள் படலம்
- நாற்காலுயிர் பொருள் வர்க்கம்
- பறவையுயிர் பொருள் வர்க்கம்
- ஊருயிர்ப் பொருள் வர்க்கம்
- நீர்வாழுயிர்ப் பொருள் வர்க்கம்
- தாவரவுயிர்ப் பொருள் வர்க்கம்

அஃறிணையுயிரில் பொருட் படலம்
- இயற்கைப் பொருள் வர்க்கம்
- செயற்கைப் பொருள் வர்க்கம்
- இட வர்க்கம்
- கால வர்க்கம்
- சினை வர்க்கம்

குணநாமப் படலம்
- உயிர்ப்பொருள் மனக்குண வர்க்கம்
- உயிர்ப்பொருள் வாக்குக் குணவர்க்கம்
- உயிர்ப்பொருள் செயற்குண வர்க்கம்
- உயிரில் பொருட் குணவர்க்கம்

இந்நிகண்டின் அஃறிணை உயிர்பொருள் படலத்தில் பறவை இனச்சொற்களின் வகைப்பாட்டை இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

பறவையுயிர் பொருள் வர்க்கம்

நாமதீப நிகண்டில் அஃறிணையுயிர் பொருட்படலத்தில் இரண்டாவது வர்க்கமாக பறவையுயிர்ப் பொருள் வர்க்கம் கூறப்பட்டுள்ளன.

கருடன், சரபம், அன்னம், கிளி, பொய்யாப்புள், மயில், மரங்கொத்தி, நாகணவாய், பருந்து, காக்கை, அண்டங்காக்கை, நீர்க்காக்கை, சிவல், கவுதாரி, அன்றில், குயில், சாதகப்புள், புறா, ஆந்தை, நீர்ப்புள், சக்கரவாகம், செம்பகம், சம்பங்கோழி, காடை, ஊமன் கூகை, கோட்டான் கூகை, கொக்கு, நாரை, கோழி, அசுணம், தாரா, கானாங்கோழி, வானம்பாடி உள்ளான், தூக்கணம், அடைக்கலங் குருவி, சில்லம், வல்லுறு, கழுகு, கரிக்குருவி, வண்டு, வெளவால், கொதுகு, விட்டில், இந்திரகோபம், தேனீ, மின்மினி என்னும் 47 பறவை பெயர்கள் நாமதீப நிகண்டில் பறவை உயிர்ப்பொருள் வர்க்கத்தில் இடம் பெற்றுள்ளன.

இந்நிகண்டில் பறவைகளின் பொதுப்பெயராக 17, குஞ்சியின் பெயர் 3, பெண் பறவை 6, ஆண் பறவை 3, பறவை முட்டை பெயர் 5, சிறகடித்தல் 2, புட் கூட்டம் 2, புள்ளோசை 2 என பறவை வர்க்கத்தில் பறவை இனங்களில் பல்வேறு பெயர்கள் கொண்டுள்ளன. பறவைகள் வாழும் இடத்தைப் பொறுத்து கீழ்வருமாறு நான்கு வகையாகப் பிரிக்கலாம்.



வளர்ப்புப் பறவை

நாமதீப நிகண்டில் கூறப்பட்டுள்ள பறவை இனங்களில் வீட்டில் வளர்க்கப்படும் பறவைகளைக் கீழ்வருமாறு வகைப்

படுத்தலாம்.

வளர்ப்புப்பறவை → அன்னம்
→ கிளி
→ புறா

அன்னம் என்னும் பறவை இக்காலத்தில் இல்லையென்றாலும் சங்க காலத்தில் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. அன்னம் என்னும் பறவையைக் குறிக்க நிகண்டில் 7 சொற்களும், கிளியைக் குறிக்க 10 சொற்களும், புறாவைக் குறிக்க 6 சொற்களும் இடம் பெற்றுள்ளன.

பாலூட்டிப் பறவை

பறவை பிரிவுகளில் பாலூட்டிப் பறவைகளும் இடம் பெற்றுள்ளன. பாலூட்டிப் பறவையான வெளவாலைக் குறிக்க இந்நிகண்டில் 6 சொற்கள் இடம் பெற்றுள்ளன.

பாலூட்டிப் பறவை → வெளவால் → வாகுரம், துரிஞ்சில், வாவல் அஞ்சலி, ஆலாயம், வெளவால்

இறைச்சிப் பறவை

பறவைகளை இறைச்சிக்காகப் பயன்படுத்தும் முறைகள் இக்காலத்தில் காணப்படுகின்றன. இறைச்சிக்குப் பயன்படுத்தும் பறவை வகைகள் நாமதீப நிகண்டில் காணப்படுகின்றன.

இறைச்சிப் பறவை → கோழி, கொக்கு, காடை

கோழி → கானாங்கோழி, சம்பங்கோழி

கோழி வீட்டில் வளர்க்கும் பறவை என்றாலும் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. கோழி சிறிது தூரம் பறந்தாலும் அவற்றையும் பறவை இனத்தில் சேர்த்து அவற்றுக்கென 8 சொற்கள் நாமதீப நிகண்டு கூறுகின்றது. கோழியின் வகையைச் சார்ந்த கானாங்கோழிக்கு 3, சம்பங்கோழிக்கு இரண்டுச் சொற்களும் கொண்டு காணப்படுகின்றன. கொக்கு என்னும் பறவையைக் குறிக்க 4, காடை கூற மூன்று சொற்களும் இடம் பெற்றுள்ளன.

ஊர்ப்பறவைகள்

நாமதீப நிகண்டில் பறவை வகைகளில் ஊர்ப்பறவைகளே அதிகம் இடம் பெற்றுள்ளன.

கருடன், மயில், அன்றில், காக்கை, நீர்காக்கை, அண்டங் காக்கை, பருந்து, ஊமன் கூகை, கோட்டான் கூகை, குயில், சரபம், பொய்யாப்புள், மரங்கொத்தி, நாகணவாய், சிவல், கவுதாரி, கரிக்குருவி, தூக்கணம், உள்ளான், அடைக்கலங்குருவி, வானம்பாடி, சாதகப்புள், ஆந்தை, நீர்ப்புள், சக்கரவாகம், செம்பகம், நாரை, அசுணம், சில்லம், வல்லூறு, கழுகு, வண்டு, கொசுகு, இந்திரகோபம், தேனீ, மின்மினி, விட்டில்தாரா போன்ற *38* பறவைகள் ஊர்ப்பறவைகள் நிகண்டில் இடம் பெற்றுள்ளன.

நாமதீப நிகண்டில் பறவைகளும் ஒருபொருட் பன்மொழிச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.

		பறவைகள்	ஒருபொருட் பன்மொழிகள்
1.	வளர்ப்புப் பறவை	அன்னம்	*7* (அன்னம், எகினம், வக்கிராங்கம், மராளம், விகங்கம், அஞ்சம், ஓதிகம்)
		கிளி	*10* (தந்தை, அரி, வன்னி,கிள்ளை, கிறம் அவந்திகை, சுவாகதம், சுகம், கிளி, சாரு)
		புறா	*6* (காளபதம், தூணம், களரவம், பாராவதம், கபோதம், புறவு)
2.	பாலூட்டிப் பறவை	வௌவால்	*6* (வாகுரம், துரிஞ்சில, வாவல், அஞ்சலி, ஆலாலம், வௌவால்)
3.	இறைச்சிப்பறவை	கோழி	*8* (குருகு, ஆண்டலைப்புள், ஞானி, குக்குடம், காற்படை, கோழி, துவகம், வாரணம்)
		கானாங்கோழி	*3* (பூழான், காதம்பம், கான்கோழி)
		சம்பங்கோழி	*2* (சம்பங்கோழி, கம்புள்)
		கொக்கு	*4* (குரண்டம், பகம், வலாகம், கொக்கு)
		காடை	*3* (காடை, குறும்பூழ், கபிலசம்)

4.	ஊர்ப்பறவை	கருடன்	*13 (தாக்கியன், நாகாசனன், வயினதேயன்...)*
		மயில்	*11 (சிகி, ஞமலி,வன்னி,கிள்ளை,கீரம்...)*
		காக்கை	*9 (காரி, கொடி, கரடம், கூகைப்பகை...)*
		அண்டங்காக்கை	*2 (அண்டங்காக்கை, காகோலம்)*
		நீர்க்காக்கை	*3 (அற்கம், காரண்டம், நீர்க்காக்கை)*
		பருந்து	*5 (பாரசிகை,சேனம்,பாறு,கங்கம், பருந்து)*
		ஊமன் கூகை	*3 (ஊமன் கூகை,கவுசிகம், பெரும்புள்)*
		கோட்டான்கூகை	*6 (கோட்டான்,உலூகம்,கொடிப்பகை)*
		அன்றில்	*5(காமகாளம், கிரவுஞ்சம்,குநரம், காரிஅன்றில்)*
		குயில்	*8 (காமசின்னம், காரி, களகண்டம், கோரகை....)*
		சரபம்	*14 (சம்பரம், வாருண்டம், சாஹவம், சிம்புள், வருடை....)*
		பொய்யாப்புள்	*2 (பொய்யா, சலாங்கு)*
		மரங்கொத்தி	*6 (தத்திரி, பொன்வாய்ப்புள், சிரல், கவுதம்....)*
		வானம்பாடி	*3 (கம்புள், கலிங்கம், வானம்பாடி)*
		சாதகப்புள்	*2 (சாரங்கம், சாதகம்)*
		ஆந்தை	*5 (ஆந்தை, இருடி, கின்னரம், கூன்...)*
		நீர்ப்புள்	*4 (கின்னரம், கிராமம், உன்னம், உற்குரோசம்)*
		சக்கரவாகம்	*6 (சக்கரவாகம், கோகம், நேமி, கொம்பி ....)*
		செம்பகம்	*6 (போதகை, சகோரம், நிலாமுக்கு, குக்கில்....)*
		நாரை	*8 (போதா, பிதா, குருகி, புட்கரம், சாரசம் .....)*
		அசுணம்	*4 (அசுணம், கேகயம், பறைப்பகை, இசைப்பிரியி)*
		சில்லம்	*2 (பகண்டை, சில்லம்)*
		வல்லூறு	*2 (வல்லூறு, கடகம்)*
		கழுகு	*5 (எருவை, புண்டரம், சகுந்தம், உவணம்....)*
		வண்டு	*28 (தும்பி, மதுபம், கீடம், மா,அளி, சுரும்பு...)*
		கொசுகு	*5 (துள்ளல், மூவல், மசகம், கொசுகு, ஓலுங்கு)*
		தேனீ	*3 (தேனீ, சாகம், பிரகம்)*
		இந்திரகோபம்	*3 (கோபம், ஈயல், மூதா)*

நாகணவாய்	3 (சாரிகை, பூவை, நாகணவாய்)
சிவல்	6 (இதல், கோரசம், புல் சிவல், பாரதம், இலாதம்)
கவுதாரி	3 (இதற்பூழ், சிரவம், கவுதாரி)
கரிக்குருவி	11 (கஞ்சனம், வயான், வலியான் ......)
மின்மினி	4 (மின்மினி, கச்சோதம், நித்தில், நுளம்பு)
விட்டில்	8 (சில்லிகை, சீள்வீடு, சிமிலி, சலபம், பதங்கம், சில்லை, சிதடி, விட்டில்)
துக்கணம்	2 (சிதகம், தூக்கணம்)
அடைக்கலக்குருவி	6 (ஊர்க்குருவி, குதிகாலி, சகடம் குலிங்கம்,புலிங்கம், அடைக்கலங்குருவி)
உள்ளான்	2 உள்ளான், உல்லல்
தாரா	3 குழறி, நீராடி, தாரா

தொகுப்புரை

❖ திவாகரம், சூடாமணி, பிங்கலம் போன்ற நிகண்டுகள் சொற்புலங்களை தொகுதி, வகை என்று வகைப்படுத்தியுள்ளன. நாமதீப நிகண்டு சொற்தொகுதிகளை 4 படலமாகவும், படலத்தை 16 வர்க்கமாகவும் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

❖ திவாகரம், சூடாமணி போன்ற நிகண்டுகளில் 'வருடை' என்ற சொல்லானது பறவைகளையும், விலங்குகளையும் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் நாமதீப நிகண்டில் இச்சொல் பறவையை மட்டும் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியக் களஞ்சியம் - உள்ளடக்க ஆய்வு

க. சுதா
தஞ்சாவூர்

முன்னுரை

தமிழ்மொழி இன்று செம்மொழி என்னும் தகுதியைப் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. அதற்குக் காரணம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்றவை இன்றுவரை சுவை குன்றாமல் இருப்பதே எனலாம். அத்தகைய நூல்களின் கருத்தைப் புரிந்துகொண்டு பயணம் செய்ய நோக்கு நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன. அவை (நோக்கு நூல்கள்) இல்லை யென்றால் பண்டைய இலக்கண இலக்கியங்களைப் புரிந்துகொள்ள முடியாது. அந்நோக்கு நூல்களில் ஒன்றுதான் கலைக்களஞ்சியம். அதில் சங்க இலக்கியக் களஞ்சியத்தின் உள்ளடக்கத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

கலைக்களஞ்சியம்

அறிவு சார்ந்த எல்லாத் துறையின் கருத்துக்களையோ அல்லது குறிப்பிட்ட ஒரு துறை பற்றிய அனைத்துச் செய்தி களையோ கட்டுரை வடிவில் தொகுத்துத் தரும் நோக்கு நூலுக்குக் கலைக்களஞ்சியம் என்று பெயர். இது பெரும்பாலும் பல தொகுதிகளாய் வெளிவருவது. இக்கலைக் களஞ்சியத்தை இரண்டு பெரும்பிரிவாக வகைப்படுத்தலாம்.

பல்வேறு துறைசார் செய்திகள் ஒரே களஞ்சியத்தில் இடம் பெறுமாயின் அதற்குப் பொதுக்களஞ்சியம் என்றும், ஒரு குறிப்பிட்ட துறைசார் செய்திகள் மட்டும் இடம்பெற்றால் அதற்குச் சிறப்புக்களஞ்சியம் என்றும் பெயர். இதனைக் கீழ்வரும் வரைபடம் உணர்த்தும்.



சங்க இலக்கியக் களஞ்சியம்

சங்க இலக்கியக் களஞ்சியம் என்ற நூலை சு.அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ளார். அவர் அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்திலுள்ள பாப்பாக்குடி என்னும் சிற்றூரில் பிறந்தார். தற்போது விருத்தாசலத்திலுள்ள கௌஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிகின்றார். இவர் சங்க இலக்கியம்மீது கொண்ட அதீத பற்றினால் அது குறித்த களஞ்சியம் ஒன்றைத் தொகுத்து 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் நாளில் வெளியிட்டார். இதன் முதன்மைப் பதிப்பாசிரியர் ச.மெய்யப்பன் ஆவார்.

உள்ளடக்க ஆய்வு

சங்க இலக்கியக் களஞ்சியத்தை அதில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் ஏழு பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.

1. நூற்களஞ்சியம் (23 - 146)
2. கட்டுரைகள் (147 - 283)
3. ஆய்வேடுகள் (284 - 311)
4. களஞ்சியச் செய்திகள் (312 - 352)
5. பதிப்புகள் (353 - 365)
6. அட்டவணை (366 - 378)
   366 லிருந்து 377 வரை பக்கஎண் இந்நூலிலில்லை
7. பிற்சேர்க்கை (379 - 383)

என்பதாகச் சங்க இலக்கியக் களஞ்சியத்தை வகைப்படுத்தலாம். இந்நூலை, வ.அய்.சுப்பிரமணியம் இந்நூலுக்கு அளித்த அணிந்துரையில் ஆறாக வகைப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. நூற்களஞ்சியம் (23 - 146), கட்டுரைகள் (147 - 283), ஆய்வேடுகள்

376), பிற்சேர்க்கை (377 - 383) என்று அவர் வகைப்படுத்தியுள்ளார். இவற்றுள் பிற்சேர்க்கையானது இந்நூலில் 379-ஆம் பக்கத்திலிருந்தே தொடங்குகிறது. அவ்வாறு இருக்கும்போது 377 - ஆம் பக்கத்திலிருந்து பிற்சேர்க்கை தொடங்குகிறது என்று அவர் குறிப்பிட்டதற்கான காரணம் மறதியா? அச்சுப்பிழையா? எவ்வாறாயினும் பிழைதிருத்தம் செய்யும்பொழுது சரிசெய்து இருக்கலாம். எனினும் மறு பதிப்பிலாவது இம்முறை சரிபார்க்கப்படுமாயின் மகிழ்ச்சிக் குரியதே. இனி நேரடியாக உள்ளடக்கத்திற்குச் செல்வோம்.

1. நூற்களஞ்சியம்

சங்க இலக்கிய நூற்களஞ்சியத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அடைப்புக்குறியில் பக்களண் கொடுக்கப் பட்டுள்ளது.



களஞ்சியங்கள் பொதுவாக ஒவ்வொரு தலைச் சொல்லுக்கும் கட்டுரை வடிவிலான பொருள் விளக்கம் இருக்கும். ஆனால் இக்களஞ்சியம் அவ்வாறில்லை. சங்க இலக்கியம் தொடர்பான நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள்.. போன்றவை எங்கெங்கு வெளியிடப்பட்டுள்ளன? அவற்றின் ஆசிரியர்கள், பதிப்பகங்கள் போன்றவற்றைக் கொடுப்பதாக இக்களஞ்சியம் உள்ளது.

சங்க இலக்கியம் தொடர்பான நூல்களை எழுதியவர்களின் பெயர்ப்பட்டியலைத் தொகுத்து அகரவரிசைப் படுத்தித்

தலைச்சொல் பதிவில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஆசிரியரே பல நூல்கள் எழுதியிருப்பின் காலநிரல் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. நூலாசிரியராக இல்லாமல் தொகுப்பாசிரியராக இருந்தால் அடைப்புக்குறியில் தொகுப்பாசிரியர் என்று கொடுக்கப்பட்டுள்ளது. ஆய்வேடு நூலாக்கம் பெற்றிருப்பின் அதனையும் அடைப்புக் குறியில் கொடுக்கப்படும். பதிப்பகத்தின் முகவரி, ஆண்டும் பதிப்பும் (எத்தனை பதிப்புகள் இருந்தாலும் கொடுக்கப்படும்), பக்கங்கள் என்ற முறையில் செய்திகளைத் தருகிறது. இவை மட்டுமின்றி அந்த நூல் ஒவ்வொரு செய்தியையும் எந்தப் பக்கத்திலிருந்து எந்தப் பக்கம் வரை சொல்லப்பட்டுள்ளது என்பதனைக் குறிக்கவும் பக்க எண் தரப்பட்டுள்ளது.

சான்று

இளங்குமரன், புலவர் இரா.,
சுவடிப்பதிப்பு வரலாறு,
ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.
முதற்பதிப்பு 1990, பக்கங்கள் : 6 + 95

பொழிவோன் புகல்வு (3-5), தமிழ்க்கோயில் (1-3), தமிழ்த்தொண்டர்கள் (4-8), ஏடு போற்றிய பீடுடையாளர் (9-23), ஏடு தொகுத்த ஏந்தல்கள் (24-32), பழந்தமிழ்ப் பதிப்பாளர்கள் (33 - 45) பதிப்புப் பணி (46 - 89), செய்யத்தக்கன (90-95) இம்முறை அனைத்துப் பிரிவிலும் (பகுதியிலும்)பின்பற்றப்பட்டுள்ளது.

சொற்பொழிவுப் பகுதிகள் எந்தச் சங்க நூலுக்குச் சொற்பொழிவு நடந்ததோ அந்த நூலின் பெயரே தலைச்சொல் பதிவில் இடம்பெற்றுள்ளது. இதில் அகரவரிசைமுறை பின்பற்ற வில்லை. மாறாகச் சங்க நூல்களைக் குறிக்கும் பழைய வெண்பாவில் சுட்டப்பட்டுள்ள நூல்களின் வரிசைமுறை இங்குப் பின்பற்றப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. எனினும் ஆறாவது பெரும்பிரிவாக இருக்கக்கூடிய அட்டவணைகள் என்னும் பகுதியில் முதலில் இம்முறையிலேயே வரிசைப்படுத்திச் சொல்லிவிட்டு, அதே பகுதியின் பிற்பகுதியில் அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்று சிலவற்றிற்கு வரிசைப்படுத்தியுள்ளது. இவ்வாறு இரண்டு

முறையில் வரிசைப் படுத்துவதற்குப் பதிலாக அகரவரிசையிலேயே களஞ்சியம் முழுக்க வரிசைப்படுத்தியிருந்தால் சிறப்பாக இருக்கும்.

2. கட்டுரைகள்

தமிழ்க் கட்டுரைகளைப் பெயருள்ள கட்டுரைகள் (147 - 267), பெயர் தெரியாக் கட்டுரைகள் (267 - 268) என்று பகுக்கலாம். இப்பகுதியில் கட்டுரையின் பெயர், வெளியிடப்பட்ட இதழ் முகவரி, ஆண்டு, பக்கம் தெரிந்திருப்பின் பக்க எண் ஆகியவை தரப்பட்டுள்ளன. ஆங்கிலக் கட்டுரைக்கும் (269 - 283) இம்முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

சான்று

அகத்தியலிங்கம், முனைவர் ச.,
'காலமும் கவிஞனும்'
செந்தமிழ், தொகுதி - 55, பகுதி - 5, மதுரைத் தமிழ்ச் சங்க
வெளியீடு, மதுரை, 1959 - 60.

பெயர் தெரியாக் கட்டுரையில் பத்துப்பாட்டு மாநாடு (1939 - 40), பதிற்றுப்பத்து மாநாட்டு வாழ்த்தில் அறிஞர் கருத்துரைகள் (1955 - 56) என்னும் கட்டுரைகளுக்கு இடையில் பறம்பு மலை பாரி விழா (1969 - 70) என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. அகரவரிசை முறை இந்த இடத்தில் தவறாக உள்ளது. இதைப்போலவே 268 ஆம் பக்கத்திலும் உள்ளது. இம்மாதிரியான பிழைகளை மறுபதிப்பில் சரிசெய்தால் நன்று.

3. ஆய்வேடுகள்

சங்க இலக்கியம் தொடர்பாகப் பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கும் கல்லூரிக்கும் சென்று தகவல்களை ஆசிரியர் திரட்டியுள்ளார் என்று நினைக்கும்போது அவரைப் பாராட்டாமல் எந்த அறிஞராலும் இருக்கமுடியாது எனலாம். ஆய்வேடுகளை பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., எம்.ஓ.எல்., எம்ஃபில்., எம்.லிட்., பிஎச்.டி., டி.லிட் என்று முறையே 284, 284, 284-292, 292-293, 293-297, 298-300, 300-311, 311 ஆகிய பக்கங்களில் தொகுத்து அகரவரிசையில் கொடுத்திருக்கும் ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

4. களஞ்சியச் செய்திகள்

இப்பகுதியில் அபிதான சிந்தாமணி, கலைக்களஞ்சியம், வாழ்வியற் களஞ்சியம் ஆகியவற்றிலுள்ள சங்க இலக்கியம் தொடர்பான செய்திகளின் தலைச்சொல் இம்மூன்று களஞ்சியங்களில் எங்கு வந்துள்ளது என்று கொடுக்கப்பட்டுள்ளது. எந்தத் தொகுதி? பக்க எண் என்ன? என்பதை அடைப்புக் குறியில் தரப்பட்டிருப்பதைக் காணாம். இப்பகுதியில் மெய்யெழுத்துக் களை இறுதியில் கொண்டு அகரவரிசைப்படுத்தியிருப்பதை அணிலாடு முன்றிலார், அண்டர்மகன் குறுவழுதி என்பவற்றால் அறியலாம். தமிழ்க் களஞ்சியச் செய்திகளை 312 - 349 ஆம் பக்கங்களிலும், ஆங்கிலக் களஞ்சியச் செய்திகளை 350 - 352 ஆம் பக்கங்களிலும் கொடுத்துள்ளது.

5. பதிப்புகள்

சங்க இலக்கிய நூல்கள் எப்பொழுது யாரால் அச்சிடப் பட்டுள்ளன என்பதைத் தொகுப்பாக இப்பகுதியில் கொடுக்கப் பட்டுள்ளது. சொற்பொழிவுப் பகுதியில் கொடுக்கப்பட்ட வரிசை முறையிலேயே இங்குப் பதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு (திருமுருகு, பொரு., சிறு., பெரும்., முல்., மது., நெடு., குறிஞ்., பட்., மலை.,), சைவசித்தாந்த சமாஜப் பதிப்பு என்ற வரிசையில் சங்க இலக்கியப் பதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

6. அட்டவணை

அட்டவணை என்னும் பகுதியில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூற்கள் பழம்பாடலின் அடிப்படையில் வரிசைப் படுத்தப்பட்டுள்ளது. சங்க நூல்களைப் பற்றிய பொதுவான செய்திகளான பாடியோர், பாடப்பட்டோர், அடி வரையறை போன்ற செய்திகளும் பெண்பால் புலவர்களின் (30) பெயர்ப் பட்டியலும் சங்ககாலப் புலவர்களின் பெயர்ப்பட்டியலும் (பெண்பால் புலவர்களின் பெயர்கள் உட்பட) சங்ககால அரசர் முதலானோரின் பட்டியலும் அகரவரிசையில் தரப்பட்டுள்ளன.

7. பிற்சேர்க்கை

பிற்சேர்க்கையில் சங்க இலக்கியக் களஞ்சியம் தொகுக்க உதவிய நூலகங்களின் பட்டியல், சங்க இலக்கியக் கட்டுரைகள் தொகுக்க உதவிய இதழ்கள், சங்க இலக்கியக் கட்டுரைகள் உள்ள மலர்கள், தமிழ் உலா தொகுதி I & II போன்றவை சேர்க்கப் பட்டுள்ளன.

முடிவுரை

இந்நூலை ஏழு பெரும் பிரிவினில் அடக்கப்பட்டுள்ளது.

வ.அய். சுப்பிரமணியம் சுட்டிய பக்க எண்ணில் 379-க்குப் பதில் 377 என்று குறிப்பிடப்பட்டது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சங்க நூல்களைக் குறித்த வரிசைமுறையில் இரண்டு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

மறு பதிப்பில் செய்ய வேண்டியவற்றையும் குறிப்பிடப் பட்டுள்ளது.

மெய்யெழுத்துக்கள் அகர வரிசையின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வுள்ளடக்க ஆய்வு பக்கத்தைக் கருத்தில் கொண்டு மிகவும் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

துணைநூல்கள்

சங்க இலக்கியக் களஞ்சியம், சு.அமிர்தலிங்கம், 2000.
அகராதியியல், பெ.மாதையன், 1997.

சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் உள்ள பெயரடைகள் பற்றிய வகைப்பாடு

ரெ. சுதாகர் வடிவேலு
தஞ்சாவூர்

சொற்றொகுதி அறிவைப் பெருக்கிக் கொள்ள நிகண்டுகள் தோற்றம் பெற்றன. நிகண்டுகள் செய்யுள் வடிவில் இருந்ததால் கற்றவர்களுக்கு மட்டுமே புரிந்து கொள்ளும் வகையில் இருந்ததால் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் அகராதிகள் தோற்றம் பெற்றன. ஐரோப்பியர்கள் தங்களுடைய மதத்தைப் பரப்பும் நோக்கத்துடன் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்க ஆரம்பித்த நிலையில் அகராதிகளையும், இலக்கணங்களையும் படைத்தனர். இந்த அகராதிகள் இலக்கணத்தின் பின்னிணைப்பாகவும் செயல்பட்ட காரணத்தால் இலக்கணங்களில் கிடைக்காத ஒவ்வொரு தனிச்சொல்லும் பற்றிய இலக்கணத் தகவல்களை அவை ஆவணப்படுத்தியுள்ளன. தமிழ் மரபிலக்கண வரையறைகளில் இடம்பெறாத பெயரடைகள் சங்க காலந்தொட்டு வரும் தமிழில் பெருவழக்குடையாக உள்ளன. இவற்றின் இலக்கணமாகவும் சொற்பொருள் தரும் நோக்கு நூலாகவும் அகராதிகள் உருப் பெற்றன. அவ்வகையில் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் 140 பெயரடைச் சொற்கள் பதிவுகளாகத்ள தரப்பட்டுள்ளன. அவற்றை வகைப்படுத்தி காணலாம்.

அகராதிச் சொற்கள்

“அகராதியில் பதிவாய்த் தரப்படும் ஒவ்வொரு சொல்லும் அகராதிச் சொல்லே ஆகும். ஓரெழுத்து தனிச்சொற்கள், கூட்டுச் சொற்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள், வினையடைகள், பெயரடைகள், வேற்றுமை உருபுகள், சாரியைகள் என அனைத்துமே அகராதிப் பதிவுகளாய் இடம்பெறும். கட்டிலா வடிவம், கட்டுடை வடிவம் எனும் இரண்டுமே அகராதிச் சொற்களாய்த் தெரிவு செய்யப்பெறும். எனவே பொதுநிலையில் அகராதியில் பதிவுச் சொல்லாய்த் தரப்பெறும் அனைத்துமே அகராதிச் சொல் எனக் குறிப்பிடப்பெறும்” என. பெ.மாதையன் கூறுகிறார். அகராதியில் பொருளுக்குரிய சொற்களாக இடம் பெறுகின்ற அனைத்துமே அகராதிச் சொற்கள் ஆகும்.

தமிழிலக்கண நூலார் சொற்களைப் பெயர், வினை, இடை,

உரி என்று நான்கு வகையாகப் பிரித்துள்ளார்கள். இக்காலத் தமிழைப் பொருத்தவரையில் சொற்களைப் பாகுபடுத்துவதில் பெயர் வினைகள் போல் வேறு பிற வகைப்பாடுகளும் தேவைப் படுகின்றன. இந்தத் தேவை இக்கால மொழியியலாளரால் நிறைவு செய்யப்பட்டுள்ளது. பொன்.கோதண்டராமன் 1.பெயர், 2.வினை, 3.பெயரடை, 4.வினையடை, 5.வல்இடை, 6.இணைப்பான், 7. உணர்ச்சி வெடிப்புச்சொல், 8. உணர்குறிப்புச் சொல், 9. விளிம்புச் சொல், 10. விளி ஏற்புச்சொல் எனப் பத்தாகவும், எம்.ஏ. நுஃமான் 1.பெயர்ச்சொல், 2.வினைச்சொல், 3.இடைச்சொல், 4. பெயரடை 5. வினையடை என ஐந்து வகையாகவும் வகைப்படுத்தியுள்ளனர். இவற்றுள் பெயரடையும் அடங்கியுள்ளது. தமிழ் அகராதிகளில் பெயர், பெயரடை, வினையடை ஆகியவை அகராதிப் பதிவுகளாகத் தரப்பெறும் நிலைமை ஒரு பொதுவான அகராதியில் நெறியாக இடம் பெற்றுள்ளது.

அடை

பெயரடை என்பதற்கு இலக்கண வரையறை மரபு இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை. இருந்தாலும் 'அடை' எனும் சொல்வகை மொழியில் உண்டு என்பதற்கு அந்த மரபிலக்கணங்களே சான்றுகளாக உள்ளன.

> **"அடைசினை முதல் என்ற முறை மூன்றும் மயங்காமை**
> **நடைபெற்றியலும் வண்ணச் சினைசொல்"**
>
> **(தொ. சொ. 501)**

என்ற நூற்பாவில் 'அடை' என்ற சொல் தொல்காப்பியரால் குறிப்பிடப்பட்டுள்ளது. 'செங்கால் நாரை' என்பது இந்த நூற்பாவிற்கு உரிய மேற்கோள். இதில் 'செம்' என்ற அடை பயன்படுத்தப்பட்டுள்ளது. வண்ணச்சினை சொல்லில் அடை பயன்படுத்தப்படும் செய்தியை மட்டுமே இந்நூற்பா குறிப்பிடுகின்றது.

> **"நிறுத்தச் சொல்லும் குறித்து வருகிளவியும்**
> **அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய"**
>
> **(தொ. எ. 110)**

என்று புணரியலிலும்,

> **"அடையொடு தோன்றிலும் அதனோரற்றே"**

(தொ. எ. 319)

என்று புள்ளிமயங்கியலிலும் 'அடை' எனும் சொல் தொல்காப்பியரால் கையாளப்பட்டுள்ளது. அடை பற்றித் தொல்காப்பியர் வேறு எந்த வரையறைகளையும் தரவில்லை. பெயரடை, வினையடை என்ற வகைப்பாடு இவரிடம் மட்டுமல்ல பின்வந்த மரபு இலக்கணங்களிலும் இல்லை.

நன்னூலார்,

"பொருண்முத லாறோ மடைசேர் மொழியினம்" (401)

"அடைசினை முதன்முறை யடைதலு மீரடை
முதலோ டாதலும் வழக்கிய வீரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்டே" (403)

"அடைமொழி யினமல் லதுந்தரு மாண்டுறின்" (402)

என இரண்டு இடங்களில் 'அடை' என்ற சொல்லையும் ஒரு இடத்தில் 'அடைமொழி' என்ற சொல்லையும் பயன்படுத்தி யுள்ளார்.

இவ்வாறு தமிழ் இலக்கணங்களில் மொழியில் அடையாக வரும் சொற்களுக்கான வருகை நிலையையும் அவை சேர்ந்த சொற்களின் பொருள் உணர்த்தும் நிலையையும் ஆராய்ந்து கூறியுள்ளனரே அன்றிப் பெயரடைகளுக்கான இலக்கண வரையறையைக் கூறவில்லை. அது ஒரு இலக்கண வகையாகக் கொள்ளப் பெறவில்லை.

பெயரடை

ஐரோப்பிய அறிஞர்களான ஜி.யு.போப், ஜான் லாசரஸ் போன்றவர்களும் மொழியியலறிஞர்களான ஆஷர், லேமன், பொற்கோ ஆகியோரும் பெயரடைகள் தமிழின் ஒரு சொல்வகை (சொல் பகுப்பு) என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். பெயரடைகள் பற்றி பல ஆய்வாளர்கள் வரையறைகளைத் தெரிவித்துள்ளனர். "எல்லாத் திராவிட மொழிகளிலும் பெரும்பாலான பெயரடைகள் பண்பு அல்லது உறவு உணர்த்தும் பெயர்களே. அவை மாறுதல் என மதிக்கத்தக்க சொற்சிதைவு எதையும் பெறாமலும் பெயர்ச் சொற்களாம் தம் இயல்பிற் குன்றாமலும் வந்து வழங்கும் இட வேறுபாடு ஒன்றால் மட்டுமே பெயரடைகள் ஆகின்றன" என்று குறிப்பிடுகின்றார் கால்டுவெல்.

"பெயருக்கு அடைமொழிகளாக வரும் கிளவிகள் அல்லது

பெயர் கொண்டு முடியும் கிளவிகளைப் பெயரடை என்று குறிப்பிடுகிறார்” பொற்கோ.

இவர் பெயரடைகளை 9 வகையாக வகைப்படுத்தி உள்ளார்.

1. தனிநிலைப் பெயரடைகள்
2. கூட்டுநிலைப் பெயரடைகள்
3. ஆன ஈற்றுப் பெயரடைகள்
4. உள்ள ஈற்றுப் பெயரடைகள்
5. என்ற ஈற்றுப் பெயரடைகள்
6. எண்ணுப் பெயரடைகள்
7. எண்ணுமுறை / வரிசைமுறைப் பெயரடைகள்
8. சுட்டுவழிப் பெயரடைகள்
9. ஏனைய பெயரடைகள்

ஜான் லாசரசஸ் ‘A Tamil Grammar’ (1878) எனும் நூலில் பெயரடைகளைப் பெயருரி என்று குறிப்பிட்டு 5 வகையாக வகைப்படுத்தியுள்ளார்.

1. சுட்டுரி
2. வினாவுரி
3. எண்ணுரி
4. அளவுரி
5. பண்புரி

கு.பரமசிவம் பெயரெச்சங்களை எல்லாம் பெயரடைகள் என்றே கொண்டுள்ளார். இப்பெயரெச்சங்களை அவர் பெயரடையின் வகை என்று கூறி நான்கு வகைப்படுத்தி உள்ளார்.

1. தெரிநிலைப் பெயரெச்சம்
2. குறிப்புப் பெயரெச்சம்
3. எதிர்மறைப் பெயரெச்சம்
4. ஆன விகுதி பெற்றவை

இவ்வகைப்பாடுகளின் அடிப்படையில் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் இடம்பெற்றுள்ள பெயரடைப் பதிவுகளை வகைப்படுத்தலாம்.

1. தனிப் பெயரடை

"ஒரு அடிச்சொல்லும் விகுதியும் கொண்டு அமைந்துள்ள பெயரடைகளைத் தனிநிலைப் பெயரடைகள் என்கிறோம்" என்று பொற்கோ கூறுகிறார்.

சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் அந்த, அரிய, ஆர், ஆன, ஆனா, அவ்வோ, இந்த, இரு, இன்ன, உந்த, உள்ள, எந்த, ஒரு, ஓர், கய, கழி, கிஞ்சு, குழ, குட, கோழ், சாதா, திகர், திகிரி, தீம், பிறிதி, நல், பிரதி, புது, பூரி, வேண, மம, மறு, மிக, முன், மெல், தொட்ட, தெட்ட போன்றவை தனிப்பெயரடைகள் பதிவுகளாக இடம் பெற்றுள்ளன.

கூட்டுப் பெயரடை

அடிச்சொற்களுடன் ஆன, உள்ள என்ற விகுதிகளை இணைத்து உருவாக்கப்படும் பெயரடைகள் ஆக்கப் பெயரடைகள் அல்லது கூட்டுநிலைப் பெயரடைகள் எனப்படும்.

முதலான என்ற ஒரு கூட்டுப் பெயரடை மட்டுமே அகராதியில் பதிவாக இடம் பெற்றுள்ளது.

சுட்டுப் பெயரடை

ஒரு குறிப்பிட்ட மனிதனையோ பொருளையோ சுட்டிக் காட்டப் பயன்படுவது சுட்டுப் பெயரடைகளாகும்.

அந்த, அந்தந்த, இந்த, உந்த என்ற சுட்டுப் பெயரடைகள் பதிவுகளாக இடம் பெற்றுள்ளன.

எண்ணுப் பெயரடை

ஏற்கும் பெயர்ச் சொல்லின் எண்ணிக்கையைக் குறிப்பிடப் பயன்படும் இவை எண்ணுப் பெயரடை ஆகும்.

அட்டம், இரு, ஒரு, ஒரே, ஓர், மூ போன்ற எண்ணுப் பெயரடைகள் இடம் பெற்றுள்ளன.

வினாப் பெயரடை

எ என்ற வினா எழுத்தை அடிப்படையாகக் கொண்டு உருவான பெயரடைகளை வினாப் பெயரடை ஆகும்.

வினாப் பெயரடையாக எந்த, எத்தனை என்ற இரண்டு மட்டுமே இடம் பெற்றுள்ளன.

பண்புப் பெயரடை

ஒன்றின் பண்பினைச் சிறப்பிக்கக்கூடிய பெயரடைகளே பண்புப் பெயரடைகள்.

மெல், தீய, செவ்விய என்ற பெயரடைகள் பதிவாகத் தரப்பட்டுள்ளன.

குறிப்புப் பெயரடை

பண்பின் அடியாகப் பிறந்து பெயருக்கு அடையாக வருவது குறிப்புப் பெயரடை.

நல்ல, பெரிய என்ற குறிப்புப் பெயரடைகள் பதிவாகத் தரப்பட்டுள்ளன.

எதிர்மறைப் பெயரடை

அல்லாத, இல்லாத போன்ற செய்யாத வாய்ப்பாட்டுப் பெயரடைகள் பதிவாகத் தரப்பட்டுள்ளன. இவை மரபிலக்கணங்களில் குறிப்புப் பெயரெச்சம் என்றழைக்கப் படுகின்றன.

பெயரெச்ச வடிவப் பெயரடை

பெயரெச்சமாகச் செயல்படும்போது காலங் காட்டுகின்ற இது பெயரடையாகச் செயல்படும்போது காலங்காட்டாது.

ஆன்ற, இட்டிய, இடவிய, இதவிய, இப்படிக்கொத்த, இப்பேர்ப்பட்ட, எப்பேர்ப்பட்ட, சுமந்த, தொட்ட, தெட்ட, போந்த, கெட்ட, மிக்க, மிகுந்த, வேண்டிய போன்றவை வினையடி களிலிருந்து பிறந்த செய்த வாய்ப்பாட்டில் உள்ள பெயரெச்ச வடிவப் பெயரடைகள் பதிவுகளாக இடம் பெற்றுள்ளன.

ஈறு அடிப்படையிலான பெயரடைகள்

பெயரடைகள் அவை பெற்றுள்ள ஈற்றின் அடிப்படையில் இங்கு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

அத்தி ஈறு

மேற்கத்தி, கிழக்கத்தி, தெற்கத்தி போன்றவை அத்தி விகுதி இணைந்த பெயரடைகள்.

அது ஈறு

நாளது என்ற பெயரடை அது இணைந்த பெயரடையாக உள்ளது.

அல் ஈறு

அவ்வல் என்ற பெயரடை மட்டும் இவ்வகையில் அடங்குவதாக உள்ளது.

அன்ன ஈறு

அருமருந்தன்ன என்ற பெயரடை இவ்வகையைச் சார்ந்தது.

ஆல் ஈறு

பெயர்ச் சொல்லுடன் ஆல் விகுதி இணைந்த பெயரடையாக மேலால் என்பது உள்ளது.

இத்தி ஈறு

தெற்கித்தி என்ற பெயரடை மட்டும் இடம் பெற்றுள்ளது.

இது ஈறு

நாளிது என்ற ஒரு பெயரடை மட்டும் இடம் பெற்றுள்ளது.

இய ஈறு

அறவிய, இன்றிய, ஈரிய, கன்னங்கரிய, சீரிய திவ்விய, முதலிய, விழுமிய போன்ற பெயரடைகள் இடம் பெற்றுள்ளது.

இல் ஈறு

பெயர்ச் சொல்லுடன் இல்ஈறு சேர்ந்து ‘முன்பில்’ என்ற பெயரடை மட்டும் உள்ளது.

ஐ ஈறு

இன்ன, என, மற்றை, மேலை போன்றவை ஐ ஈறு பெயரடைகளாக இடம் பெற்றுள்ளது.

பெயரடை மரபு இலக்கணங்களில் வகைப்பாடுகளாகக் கொள்ளாவிட்டாலும் அடை எனும் சொல் மொழியில் உண்டு என்பதற்கு அந்த மரபு இலக்கணங்களே சான்று. பெயரடையை ஜான் லாசரஸ் பெயருரி என்றும், பொற்கோ, எம்.ஏ.நுஃமான் போன்றோர் பெயரடை என்றும் குறிப்பிடுகின்றனர். சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் மொத்தம் 140 பெயரடைச் சொற்கள் பதிவுகளாக தரப்பட்டுள்ளன. இவை தனிப் பெயரடையாகவும், கூட்டுநிலை, பொருண்மை அடிப்படை, ஈறு அடிப்படையிலான பெயரடைகளாக பதிவமைந்துள்ளதை காண முடிகிறது.

திருக்குறள் சொற்பொருள் சுரபி உள்ளடக்கம் - ஓர் ஆய்வு

இரா. சுமதி
தஞ்சாவூர்.

'நோக்கு' என்ற சொல் நோக்கிப் பயன்கொள்ளும் கருவியைக் குறிக்கிறது. வெறும் எழுத்தையோ, சொல்லையோ செய்யுளிற் கண்டவிடத்தெல்லாம் நோக்கு எனல் இயலாது. அவ் எழுத்தையும், சொல்லையும் நோக்கிப் பயன்கொள்ளுமாறு திறம்பட அமைந்திருக்கும் இலக்கிய கலை நுட்பத்தையே நோக்கு என்றனர். 'கற்பார் கண்டு மகிழ்தற்குரிய காரணமாகிய இனிமைத்திறம் அமைந்திருப்பது நோக்கு எனப்படும்.

தமிழுக்கு இலக்கணம் கூறவந்த தொல்காப்பியத்தில் அகராதிகளுக்குரிய பண்புகள் சொல்லப்படவில்லை. ஆனால் அகராதிக் கூறுகள் அதில் அமைந்துள்ளதை நம்மால் அறிய முடியும். திருவள்ளுவர் 'அகர முதல எழுத்தெல்லாம்' என முதற் குறட்பாவைத் தொடங்கி 1330வது குறளை முடிக்கும்போது 'ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்' என்று முடிப்பதால் அவரது திருக்குறளிலும் அகர வரிசையின் துவக்கமும் முடிவும் அமைந்துள்ள நிரல் வரிசையைக் காணமுடிகின்றது.

பலவகையான அகராதிகள் தோன்றினாலும் 1886 ஆம் ஆண்டில் திருக்குறளுக்கெனத் தனி அகராதியையும், சொற்குறிப்பு அகராதியையும் தொகுத்தளித்தவர் வீரமா முனிவர். வீரமா முனிவருக்குப் பிறகு நமக்கு அடையாளமாகக் காட்சி தருபவர் திரு மார்க்க சகாயம் செட்டியார் என்பவர். இவர் 1924-ஆம் ஆண்டில் திருக்குறள் என்ற பொய்யாமொழிக்குத் திருக்குறள் சொற்குறிப்பு அகராதி என்ற நூலை இயற்றித் தமிழ் மறைக்குத் தொண்டாற்றினார். தாமோதரன் பிள்ளை என்ற தமிழ்ப் பெருந்தகை திருக்குறள் மேற்கோள் அகராதியை இயற்றினார். பிறகு ந.சி. கந்தையா போன்றோரும் திருக்குறளுக்கென அகராதியை வெளியிட்டனர்.

இன்று வளர்ந்துவரும் அகராதியியல் வளர்ச்சிக் கேற்றவாறு திருக்குறளில் காணும் சொற்கள் அல்லது சொற் கூறுகள் குறித்து

தமிழியல் முறையிலும், அறிவியல் ஆய்வுக் கேற்பவும், பொருள், வடிவம், சொற் பயன்பாடு, சொல்லாக்கம், சொல்வரலாறு, சொற்கூறு ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கி அகராதியியல் கண்டுரைத்த ஆய்வுகளைப் பயன்படுத்திக் கொண்டு புலவர் என்.வி.கலைமணி என்பவரால் 'திருக்குறள் சொற்பொருள் சுரபி' என்ற இந்தச் சொற்பிறப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

சொற்பொருள் சுரபி என்ற இந்தச் சொற்பிறப்புப் பட்டியலின் உள்ளடக்கத்தை,

1. உரை ஆசிரியர்கள் வேறுபாடு உணர்த்தல்
2. இலக்கணக் குறிப்பை அறிதல்
3. தமிழ்ச்சொல், வடச்சொல் வேறுபாடு உணர்த்தல்
4. எழுத்து, எழுத்தின் பிறப்பு
5. நீண்ட விளக்கம் தரும் சொற்கள்

என்று இதன் உள்ளடக்கத்தைக் கீழ்வருமாறு அறிந்து கொள்ளலாம்.

உரை ஆசிரியர்கள் வேறுபாடு உணர்த்தல்

உரை ஆசிரியர்களின் கருத்துக்களை அவரவர் உரை நூல்களைப் படிக்கும்பொருட்டுத்தான் அறிந்துக்கொள்ள முடியும். ஆனால் இந்தச் சொற்பிறப்பு பட்டியலின்மூலம் பல உரையாசிரியர்களிடையே உள்ள சில கருத்து மாறுபாடு களையும் அறிந்துக்கொள்ள முடிகின்றது. சான்றாக,

'அடி அளந்தான்' என்ற சொல்லைப் பரிமேலழகர், மணக்குடவர், பாவாணர் போன்றோர் 'அடி அளந்தான்' என்றே குறிப்பிட நாவலர் 'மடி அளந்தான்' என்று குறிப்பிடுவதாகப் புலவர் வேறுபாட்டை உணர்த்துகிறார். இவ்வேறுபாட்டிற்குக் காரணம் அவரவரின் பார்வையும், புரிதல் தன்மையுமே ஆகும்.

'ஆ என்றால் பசு என்று பரிமேலழகர் உட்பட பலரும் பொருள் கூறுகின்றனர். 'ஆபயன்' என்பதற்குக் குடிமக்களின் முயற்சியால் ஆகும் பயன்கள் என்கிறார் (560) ஆனால் 1066 வது குறளில் வரும் 'ஆ' என்ற சொல்லிற்குப் 'பசு' என்று உரை கூறுகிறார் நாவலர். நாவலர் இந்த இரண்டு குறள்களுக்கும் தனித்தனி பொருள் உரைக்கப் பரிமேலழகர் போன்றோர் ஒரே பொருளை உரைக்கின்றனர்.

'ஈதல்' என்ற சொல்லிற்கு மணக்குடவர் புகழ்பட வாழ்தலாவது கொடுத்தல் என்கிறார். பரிமேலழகர் வறியார்க்கு ஈதல் என்கிறார். நன்னூல் இலக்கண உரையாசிரியர் இராமானுசர் ஈதல் என்றால் உண்ணும் பண்டங்கள் உணவு முதலியவற்றையே குறிக்கும் என்கிறார். இதனால் மணக்குடவர், பரிமேலழகர் இருவரும் 'ஈதல்' என்பதற்குப் பிறருக்குக் கொடுத்தல் என்ற பொருளைக் கூறியிருந்தாலும் யாருக்கு என்பதை பரிமேலழகர் தெளிவாக விளக்குகிறார்.

'கடப்பாடு (211) என்பதற்கு இல்லன இரந்து வந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் மாற்றலிலரெனினும், தம்மளவில் தாம் தம் வருவாய் அளவிற்கும் ஏற்கத் தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தல்' என்கிறார் மணக்குடவர். உலக நடையினை அறிந்து செய்தல் என்கிறார் பரிமேலழகர். இவ்விரு வகையில் நோக்கும்போது 'கடப்பாடு' என்பதற்கு உலகிற்குச் செய்யும் உபகாரம், உதவிகள் எனப் பொருள் கொள்ளலே சிறப்பாக அமைந்து உள்ளது.

'குன்ற மதித்தல் (898) என்ற சொல்லிற்கு மணக்குடவர்' அவமதித்தல் என்றும், பரிமேலழகர் 'ஒருவன் கெட்டுவிட நினைப்பாரானால்' என்றும் வேறுபாடு உணர்த்துகின்றனர். மணக்குடவர் பெரியோரை மதித்து நடக்க வேண்டும் என்றும், பரிமேலழகர் பிறரைக் கெட்டுவிட நினைத்தார் தாம் அழிவர் என்றும் பொருள் உரைக்கின்றனர்.

எனவே இந்தச் சொற்பிறப்பு பட்டியல் உரையாசிரியர் களின் உரைகளை ஆராயும் முகமாக அமைந்துள்ளதை அறியலாம்.

இலக்கண குறிப்பை அறிதல்

சொற்பொருள் சுரபி என்னும் இந்நூலின் மூலம் குறிப்பிட்ட சில சொற்களை அறிமுகப்படுத்தும்போது ஒரு சொல்லுக்கான பார்வைகள் நிறைய உள்ளன என்பதை அறிந்து கொள்ளும் முகமாகத்தான் இலக்கணக் குறிப்பும் அமைந்துள்ளது. இந்த இலக்கணக் குறிப்புகளை வைத்துக்கொண்டு சொல்லிற்கான பொருளைப் பார்வையிடும்போது தெள்ளத் தெளிவாகிறது. எனவே சில சொல்லிற்கான இலக்கணக் குறிப்புகளை மட்டும்

இங்கே காணலாம்.

இ	-	சுட்டுப்பெயர்
இயன்றது	-	வினையாலணையும் பெயர் (35) இடைவிடாது நடந்தது, நடை பெறுவது
ஊடலின்	-	வியங்கோள் வினைமுற்று (களவியற் பிணங்கல்)
ஒ	-	அசைநிலை
ஒடு	-	மூன்றாம் வேற்றுமை உருபு
ஒரும்	-	அசைநிலை
கண்ணும்	-	சிறப்பும்மை (இடத்தும்) (கண்ணும் என்ற சொல் பெறுவதற்குரிய அருமையை விளக்கி நிற்பதால் இது சிறப்பும்மையாகிறது)
கு	-	நான்காம் வேற்றுமை உருபு
குறித்தலும்	-	சிறப்பும்மை (இது சிறப்பும்மை பெற்ற சொல். கடத்தலும் எனலாம். காரியம் நடவாமையை விளக்குகிறது வென்று நிற்றலும் ஆகும்.)
நின்று	-	ஐந்தாம் வேற்றுமை சொல்லுருபு
நோற்கிற்பவர்	-	எதிர்கால வினையாலணையும் பெயர் பொறுத்துக்கொள்பவர். (நோன் - பகுதி, இல்-சாரியை, இடைச்சொல், பகரஒற்று, எதிர்கால இடைநிலை, அர் - விகுதி, அ-சாரியை, வகர ஒற்று உடம்படுமெய், இது எதிர்கால வினையாலணையும் பெயர்.
மன்	-	அசைநிலை, ஒழிபிசை (ஆக்கம், மிகுதி, நிலைபேறு அசைநிலை. மற்றும் வருபவை ஒழிபிசைகள். சொல்லாது விட்ட சொற் களால் இசைப்பது ஒழிபிசை ஆகும்).

தமிழ்ச்சொல், வடசொல் வேறுபாடு உணர்த்தல்

திருக்குறளில் சில வடசொற்கள் உள்ளதாகக் கூறப் பட்டுள்ளது. ஆனால் இவற்றில் சில தமிழ்ச்சொற்களே என்று தமிழ்க்கடல் மறைமலை அடிகள், மொழிஞாயிறு, தேவநேயப் பாவாணர், பாவேந்தர் பாரதிதாசன் போன்ற பலரும் மொழியாய்வு செய்து நிரூபித்திருக்கிறார்கள். பல தமிழ்ச் சொற் களுக்கும், ஆரியச் சொற்களுக்கும், வேர்ச்சொற்கள் (Roots)

ஒன்றாக இருக்கின்றன என்பதையும் சில மொழியாய்வு அறிஞர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

'அமிழ்தும்' எனும் சொல் அம்ருதம் என்னும் வடசொல்லின் வேறுபாடு என்பர். இன்பத்தில் அமிழ்த்தும் சுவையுணவு அமிழ்தம் என்று பொருள்கூறி இச்சொல் தமிழே என்றும் சொல்வர் தமிழர். இந்தச் சொல் 'ழ' கர உச்சரிப்பு பெற்றுள்ளது. 'ழ' கரத்தின் சிறப்பு தமிழ் மொழியில் மட்டுமே உள்ளது. கட்டுமரம் என்ற தமிழ்ச்சொல் ஆங்கில மொழியில் கட்டுமரான் ஆனது போல 'அமிழதம்' என்ற சொல்லும் வடமொழியில் அம்ருதமாக மாறியிருக்கின்றது. ஏனென்றால் வடமொழியில் 'ழ'கர ஒலி இல்லை.

ஆசாரம் என்பதற்குப் பல பொருள்களைக் கதிர்வேற் பிள்ளை தமிழ் அகராதி கூறியிருக்கிறது. ஆனால் இதனை வடசொல் என சுட்டவில்லை 'ஒழுக்கம்' என்ற தூய தமிழ்ச் சொல்தான் ஆசாரம் என்கிறார் நாவலர். பாவாணர் போன்ற தனித்தமிழ் அறிஞர்களும் இதனை ஆரியச்சொல் எனக் குறிப்பிடவில்லை.

'கணம்' என்ற சொல்லை வடமொழி என்று கூறுவர். இது வடசொல் அன்று. தூய தமிழ்ச்சொல். அதாவது சிறுபொழுது என்பதுதான் உண்மைப்பொருள். கண்+அம் என்பது கணம். கண் இமைக்கும் சிறுநேரம் என்பதாகும்.

'குடும்பத்தை' வடசொல் என குறிப்பிடுவர். ஆனால் இதற்கு விளக்கம் தரும் வகையில் சேர்ந்து வாழும் மக்களை எவ்வாறு சேரி என்று குறிப்பிடுகின்றோமோ, அதனைப் போலவே உறவு முறையோடு கூட்டமாகக் கூடி வாழ்பவர் களைக் குடும்பம் என்கிறோம். கூந்தலைப் பெண் கூடி முடிக்கின்றாள். அதனால் அதை குடுமி என்கிறோம். கூடு என்பது வேர்ச்சொல் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை பெருகும் என்ற உயர்ந்த நோக்கத்திலே உருவான ஒருசொல் குடும்பம் என்ற சொல். எனவே இது தமிழ்ச்சொல்.

மேலே கூறிய சில தமிழ்ச்சொற்களை வடமொழிச் சொற்கள் என்றாலும் அதனை ஏற்றுக்கொள்ளதான் வேண்டும்

என்கிறார் பாவாணர். இதற்கு உவமையாக ஆயிரக்கணக் கானோர் விருந்துண்ணும் பந்தியில் அயலார் ஒருவர் விருந்துண்ண அவரை பரிமாறிகள் புறக்கணிப்பதில்லை அவருக்கும் விருந்து படைப்பர். இதைப்போலத்தான் நாம் சில வடச்சொற்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்.

எழுத்து எழுத்தின் பிறப்பு

திருக்குறள் சொற்பொருள் சுரபி எனும் இந்நூலில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டிற்கும், மெய்யெழுத்துக்கள் 18-ல் (க) ஒன்றிற்கும் எழுத்துக்கள் பிறக்கும் இடத்தைச் சுட்டி அதனை எவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்று விளக்குகிறார்.

திருக்குறள் சொற்பிறப்புப் பட்டியலில் அ, உ, எ, க என்ற எழுத்துக்களைச் சுட்டும்போது இதனை எண்ணின் குறி என விளக்குகிறார்.

எ, ஒ போன்ற எழுத்துக்களின் வடிவ மாற்றத்திற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் வீரமாமுனிவர் என விளக்கம் தருகிறார்.

அ, இ, உ என்ற எழுத்துக்களைக் குறிப்பிடும்போது இதனை சுட்டுப்பெயர் என விளக்கம் தருகிறார்.

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டிற்கும் விரிவாக விளக்கம் தந்து பின்பு சொற்பொருளைக் காணச் செய்கிறார். இவ்வாறாக ஓர் உயிர் எழுத்தை அறிமுகப்படுத்தும்பொழுது அதற்கான வடிவ அமைப்பினையும், மாற்றத்தினையும் சுட்டிக்காட்டி படிப்போரை விரைவில் புரிந்து கொள்ளும்படி செய்திருக்கிறார்.

நீண்ட விளக்கம் தரும் சொற்கள்

ஒரு சொல்லிற்கான பொருளைக் குறிப்பிடும்போது அதனை எந்த முறையில் சொன்னால் படிப்போரைச் சென்றடையும் எனக் கருதி விளக்கமாகப் படிப்போருக்குச் சலிப்புத் தட்டாமல் புரிய வைத்துச் சில சொற்களுக்கு நீண்ட விளக்கங்கள் தந்திருக்கின்றார்.

‘இந்திரன்’ என்ற சொல்லுக்குப் பொருள் காணும்போது திருக்குறளுக்குரிய சொற்பொருளை விட்டுவிட்டு இந்திரனுக் குரிய

சொற்பொருளை ஆராயும் முகமாகச் சொற்பொருள் விளக்கம் தந்திருக்கிறார். ஏனென்றால் இந்திரனுக்குரிய சொற் பொருள் விளக்கம் அத்தகையதாக அமைந்திருக்கிறது.

'இந்திரன்' என்பதற்கு 'கோமான்' என்றும், 'தேவர்க்கு அரசன்' என்றும் பலவாறாகக் குறிப்பிட்டு இந்திரனுக்கான பொருளை விளக்குகின்றார். இந்திரனுக்கான பொருளை அறிந்த பிறகு இந்திரன் எத்தன்மையவன் என்பதற்கு கேள்வியாக,

அகல் விசும்புளார் கோமானா?

அகத்திய முனிவரால் சாபம் பெற்றுப் பூலோக பூமியில் பாம்பான நகுஷன் என்பவனா?

திருவிளையாடல் புராணத்தில் வரும் இந்திரனா?

மணிமேகலை காப்பியத்தில் வரும் இந்திரனா?

நாவலர் நெடுஞ்செழியன் தனது திருக்குறள் தெளிவுரையில் விளக்கியுள்ள 'இந்திரன்' அதாவது இனிய திறமைமிக்க அறிவன் என்ற புலனடக்கம் பெற்ற சான்றாண்மை மிக்கவனா?

அகலிகை இந்திரன் பற்றிய பழங்கதைகள் திருக்கோவில் சுவர்களிலே எழுதப்பட்டிருந்த செய்தி 'பரிபாடல்' என்ற நூலிலே உள்ளதே அந்த இந்திரனா?

எனப் பலவகையான பொருள் குழப்பங்களை உண்டு பண்ணி எல்லாவற்றையும் அறிந்துக்கொள்ளுதல் அவசியம் என எண்ணி ஆசிரியர் இவ்வாறாக விளக்கியுள்ளார்.

இதனைப்போல் கடவுள், இறைவன், காமம், கற்பு, புதல்வர், ஊழ் போன்ற சொற்களுக்கும் நீண்ட விளக்கத்தினைத் தந்திருக்கின்றார்.

திருக்குறள் சொற்பொருள் சுரபி எனும் இந்நூல் இன்றைய திருக்குறள் ஆர்வலர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது. திருக்குறளுக்கென பொருள் புரியாத இடங்கள் சில இருந்தாலும் இவற்றை அகற்றி அறநூலாக விளங்கும் திருக்குறளுக்கு மேலும் பொழிவைக் கூட்டுகின்றது.

மாணவர்களும், பாமரர்களும் திருக்குறளை நன்கு அறிந்துக்கொள்ள இந்நூல் ஏதுவாக அமைந்திருக்கின்றது. ஆய்வு

நோக்கத்துடன் பார்க்கும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றது. ஒரு சொல்லிற்கான பொருளையும், வருமிடங்களையும், உரை வேறுபாடுகளையும், இலக்கணக் குறிப்புகளையும் தமிழ்ச்சொல், வடச்சொல் வேறுபாட்டினையும் நன்கு உணர்த்துகின்றது.

எனவே சொற்பொருள் சுரபி போன்ற நூல்களின் தேவை இன்றைய ஆய்வு வளர்ச்சிக்கு மிகவும் தேவை என்பதை இக்கட்டுரையின் வழி அறிந்துக்கொள்ள முடிகின்றது.

தொல்காப்பியத்தில் அகராதியியல் கூறுகள்

முனைவர் ச.திருஞானசம்பந்தம்
திருவையாறு.

தொன்மைத்தன்மை வாய்ந்த தமிழ்மொழியின் சொல்வளம் அளவிடற்கு அரியதாகும். இச்சொற்கள் காலந்தோறும் பல மாற்றங்களை அடைந்து வருகின்றன. ஒரு சொல் மறைவதும் புதுப்புதுச் சொற்கள் தோன்றுவதும் இயற்கையாக நடைபெறுகின்றன. பழமையான சொற்களுக் குரிய பொருளைக் காண்பதிலும் முட்டுப்பாடு தோன்றுகிறது. இவற்றின் காரணமாகச் சொற்களை விளக்கிப் பொருள் கூறும் நிலை ஏற்பட்டது. இதுவே அகராதி என்னும் புதியவகை நூல்கள் தோன்றுவதற்கு அடிப்படையாயிற்று. பிற்காலத்தில் தோன்றிய இவ்வகராதி நூல்களின் கூறுகள் தொல்காப்பியத்துள் இடம் பெற்றுள்ள பாங்கினை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

தொல்காப்பியமும் – சொற்பொருள் விளக்க நூல்களும்

தொல்காப்பியம் ஓர் இலக்கணநூல். இது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று இலக்கணத்தையும் எடுத்துரைக்கிறது. முன்னோரின் இலக்கிய, இலக்கணங்களோடு உலக வழக்கையும் அடியொற்றி இயற்றப்பட்டது. இந்நூலில் பெருகிவரும் தமிழ்ச்சொல் கூட்டத்தைப் பல்வேறு வகைகளில் பாகுபடுத்திப் பொருள் கூறுகின்ற நிகண்டு முறையும் பின்பற்றப் படவில்லை. எளிதில் இனம்காணும் வண்ணம் சொற்களை நெடுங்கணக்கு முறையில் வரிசைப்படுத்திப் பொருள் விளக்கும் அகராதி முறையும் இடம்பெறவில்லை. இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் இம்முறைகளை முழுமையாக எதிர்பார்ப்பதும் இயலாததாகும். ஆயினும் நிகண்டு, அகராதி ஆகியவற்றின் சில கூறுகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.

தொல்காப்பியத்தை வைத்தே எல்லா இலக்கண வளர்ச்சியையும் கணிப்பது மரபு என்பார் மு.அருணாசலம்.[1] இதற்கேற்பப் பொருள் விளக்கம் செய்யும் நூல்களை இலக்கண நூல்களாகக் கொண்டு அவற்றின் கூறுகளோடு தொல்காப்பியத்தை ஒப்பிட்டுக் காண்பது முறையான ஒன்றாகவே கொள்ளப்படும். சொல்லிலக்கண்த்தின் ஒரு பகுதியாக உரிச்சொல் விளங்குவதால்

அதற்குப் பொருள் கூறும் நிலையைத் தொல்காப்பியம், நன்னூல் ஆகிய நூல்கள் சொல்லதி காரத்தில் எடுத்துரைக்கின்றன. ஆகவே நிகண்டையும் அகராதியையும் இலக்கண நூலாகவே வரையறை செய்யலாம்.

1. அகரநிரல்

மேலைநாட்டார் தம் சொற்பொருள் விளக்க நூல்களில் (Dictionaries) சொற்களை அகரநிரலில் (Alphabet) அமைத்தே பொருள் விளக்கம் செய்வர். தமிழ் எழுத்துக்களைத் தொகைப் படுத்தி அறிமுகம் செய்யும் தொல்காப்பியர் அகர முதல் னகர இறுவாய் (நூ.1) எனக் குறிப்பிடுகிறார். இது அகரம் முதலாக எழுத்துக்களை வரிசைப்படுத்திக் கூறும் நிலையைக் காட்டுகிறது. மொழிக்கு முதலாகவும் ஈறாகவும் வரும் எழுத்துக்களைத் தொல்காப்பியர் உயிர், மெய் என்னும் வரிசையிலேயே சுட்டுகிறார். மொழிக்கு ஈறாகும் எழுத்துக்களை உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல் என்னும் இயல்களில் விரிவாகக் காணலாம்.

மொழிக்கு முதலாக வரும் எழுத்துக்களை உயிர், மெய் முதல்கள் எனக் காட்டும் தொல்காப்பியர் மெய்யெழுத்துக்கள் மொழி முதல் வாரா எனக் குறிப்பிடுகிறார். பின்னர் மெய்யெழுத்துக்களுள் க், த், ந், ப், ம் என்னும் ஐந்து எழுத்துக் களும் 12 உயிர்களோடும் கூடி மொழிக்கு முதலாகும் எனக் காட்டுகிறார். இவ்வைந்தும் நெடுங்கணக்கு முறையில் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் தொல்காப்பியர் இன்றியமையாமை கருதித் தலை தடுமாறவும் கூறியுள்ளார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

எழுத்துக்களை அகர வரிசைப்படுத்துவது போலவே அவற்றால் ஆகிய சொற்களையும் அகரவரிசைப்படுத்திக் கூற வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். இதனை உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டுகள் மெய்ப்பிக்கின்றன. தமிழக அரசால் மேற்கொள்ளப்பெறும் சொற்பிறப்பியலை ஆராயும் திட்டத்திற்கு அகரமுதலித் திட்டம் எனப் பெயரிட்டிருப்பதும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

2. ஒலிப்பு முறை

சொற்களைப் பொருள விளங்கும்படி ஒலிக்க வேண்டும். அவ்வாறு ஒலிக்காவிட்டால் சொல்லின் பொருளைப் புரிந்து கொள்வதில் மிகுந்த இடர்ப்பாடு ஏற்படும். இதனை நீக்குவதற்காகப் பெரும்பாலான மேலைநாட்டு அகராதிகளில் சொற்களின் ஒலிப்புமுறை சில குறியீடுகளால் சுட்டப் பெறுகின்றன. இம்முறை, தமிழ் அகராதிகளில் பின்பற்றப்படு வதில்லை. மிகவும் நுட்பமான ஒலி வேறுபாடு கொண்ட எழுத்துக்களால் ஆகியது தமிழ்மொழி. இதில் காணப்படும் ண, ந, ன; ல, ள ; ர, ற ஆகிய எழுத்துக்களை ஒலிக்கும்போது ஒன்று மற்றொன்றாக பிறநாட்டவரால் ஒலிக்கப்பெறுகின்றது. இவ்வெழுத்தொலிகளைத் தமிழ்நாட்டார் பலரும் பொருத்தமுற உச்சரிப்பதில்லை. ஆயினும் பழக்கத்தின் காரணமாக எளிதில் பொருள் விளங்கிக் கொள்கின்றனர். தமிழ் எழுத்துக்களை எவரும் பிழையின்றி ஒலிப்பதற்குத் தொல்காப்பியரின் எழுத்ததிகாரப் பிறப்பியல் முழுமையாகத் துணை செய்கிறது. உயிர், மெய், குறில், நெடில் என்னும் பாகுபாடுகளைக் கொண்ட எழுத்துக்களால் ஆகிய தமிழ்மொழியின் சொற்களுக்கு ஒலிப்பு முறை அகராதி தேவையில்லை.

உலக மொழியாக விளங்கும் ஆங்கிலத்தை எடுத்துக் கொள்வோம். அதில் குறில், நெடில் என்னும் பாகுபாடு இல்லை. அதனால் RAMA என ஆங்கிலத்தில் எழுதிக் குறில், நெடில் களுக்கு இடும் குறியீட்டைக் கொண்டே அதற்கேற்ப உச்சரிக்க இயலும். ஆனால் தமிழில் குறில், நெடிலுடன் வேற்றுமைப் படுத்தி ரமா, ராமா என எழுதிக் காட்ட முடியும். ஆங்கிலத்தைப் போலவே இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த வடமொழியும் உயிர, மெய் என்னும் பகுப்பற்றதாய் அமைந்திருந்தது. அதற்கு உயிரெழுத்துக்களைத் தந்து குறில், நெடில் ஒலி வேறுபாட்டைத் தமிழ்மொழியே தந்தது என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

ஒலிப்பும் – பொருளும்

ஒலிப்பால் சொற்கள் வேறுபொருள் தரும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். இதற்குச் சான்றாகத் தொல்காப்பியர் உப்பகாரச் சொல்லைக் காட்டுகிறார். அச்சொல் தபு என்பதாகும். அச்சொல் படுத்துச்சொல்ல (மென்மையாக) நீ சா எனத் தன்வினை ஆகும். எடுத்துச்சொல்ல (கடுமையாக) நீ ஒன்றனைச் சாவி எனப் பிறவினையாகும். இவ்வாறு ஒரு சொல் ஓசை வேறுபாட்டால்

இருபொருள் தருவதைத் தொல்காப்பியர்,

"உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே" (நூ. 76)

என்னும் நூற்பாவில் எடுத்துரைக்கிறார்.

தமிழ் மொழியில் எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டு நிற்கும் புணர்மொழிகள் உள்ளன. அவை ஓசை வேற்றுமையால் புணர்ச்சி வேறுபடும். அவ்வேறுபாட்டிற்கு ஏற்பப் பொருள்களும் வேறுபடும். இச்சொற்களைத் தொல்காப்பியர்,

"எழுத்தோர் அன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையில் திரிதல் நிலைஇய பண்பே" (நூ. 141)

எனக் காட்டுகிறார். இந்நூற்பாவில் அமைந்த இசை என்பதனை ஓசை எனக்கொண்டு, ஓசை என்றமையான் அஃது ஒலியெழுத்திற் கெனவும்... கொள்க என்று இளம்பூரணர் குறிப்பிடுகிறார்.[2] இதிலிருந்து தொல்காப்பியர் சொற்களின் ஒலிப்பு முறைக்குக் கொடுத்த முதன்மை வெளிப்படுகிறது.

3. சொல் மூலங்கள்

ஒரு சொல்லை மட்டும் குறிப்பிடாமல் அச்சொல்லுக் குரிய வேர்ச்சொல்லை எடுத்துக்காட்டும் நிலையைப் பல அகராதிகளும் மேற்கொள்கின்றன. இவ்வாறு சொற்களின் மூல வரலாற்றை ஆராய்ந்து வெளியிடுதல் என்பது மிகவும் பிற்காலத்தில் எழுந்த முறையாகும்.

தொல்காப்பியர் சொற்களின் மூல வரலாற்றை எவ்விடத்தும் சுட்டவில்லை என்பதோடு அவ்வாறு மூல வரலாற்றைச் சுட்டுதல் இயலாத ஒன்று என்னும் கருத்தினராக அவர் தோன்றுகிறார் என்று பேராசிரியர் ஜெயதேவன் பிறர் கூற்றை எடுத்துக்காட்டுகிறார்.[3] ஆயினும் தொல்காப்பியர் சொற்களைப் பகுதி, விகுதி என்பன போன்று பிரித்துக் காணும் முறையைக் குறிப்பிடுவது சொற்களின் மூலவரலாற்றை எடுத்துரைக்க மேற்கொண்ட முதன் முயற்சியாகக் கொள்ளலாம். தொல்காப்பியர் சொல்லைப் பலவாகப் பகுத்துக் காணும் முறையைச் சொற்சிதர்த்தல் எனக் குறிப்பிடுகிறார். இதனை,

.....
ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது
இடைநின்று இயலும் சாரியை இயற்கை (நூ. 133)

என்னும் பகுதியால் அறியலாம். மேலும் சொற்களைப் பெயர் முதல் நான்காகப் பகுத்துக் கூறுகிறார். அவற்றிற்குரிய சிறப்பிலக் கணங்களைத் தனித்தனி இயலாகக் காட்டுகிறார். இவை அனைத்தும் தொல்காப்பியரின் சொல் மூலம் குறித்த சிந்தனை யாகக் கொள்ளலாம்.

எழுத்ததிகாரத்தில் புணர்ச்சிக்குரியதாகக் கூறப்பெறும் சொற்கள் ஒன்று முதலாகக் கூறப்படுகின்ற எண்ணுப்பெயர்கள், சிறப்பாக ஒலித்துணை உகரம் பெறாத ஏழ் என்னும் சொல் மரூஉச் சொற்களாகிய யாவர், யாது போன்றவை தொல்காப்பியர் குறிக்கின்ற சொல் மூலங்களாகும்.

செலவு, வரவு, தரவு, கொடை என்கின்ற நான்கு தொழிற் கண்ணும் வெளிப்பட்டுத் தோன்றும் சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடத்திற்கும் உரியவாகும் (நூ.28). இச்சொற்கள் செல், வா, தா, கொடு என்னும் மூலங்களாக நிற்பனவாகும். இச்செய்தியைச் சேனாவரையர், முற்றும் எச்சமும் தொழிற் பெயருமாகி அத்தொழில் பற்றி வரும் வாய்பாடு பலவாயினும் அவை எல்லாம் இந்நான்கு தொழிலும் பற்றித் தோன்றுதலின் நான்கு சொல் என்றார் என்று விளக்குகிறார்.[4] இதிலிருந்து செலவு முதலாயின நான்கும் தொல்காப்பியர் வெளிப்படுத்தும் சொல் மூலங்களே ஆகும்.

4. பொருள் கூறும் நிலை

சொல்லுக்குப் பொருள் என்பது ஒருசொல்லை ஒருவர் கேட்டவுடன் அவருடைய மனத்துள் தோன்றுகின்ற கருத்தாகும். ஒவ்வொரு சொல்லும் ஒரு பொருள் குறித்தே வரும். பொருளற்றவை சொல்லாகக் கருதப்பட மாட்டா. அவ்வாறு பொருள் உணர்த்தும்போது குறிப்பாகவும் வெளிப்படை யாகவும் பொருள் பெறப்படும். சொற்கள் தனித்து நின்றும் பொருள் உணர்த்தும். சில சொற்கள் தான் சார்ந்து நிற்கும் சொல்லின்

பொருளை உணர்த்தும். தொல்காப்பியர் அசைநிலை, இசைநிறை, சொல்லடுக்கு எனக் குறிக்கும் சொற்கள் தாம்தாம் சார்ந்த சொல்லின் பொருளைக் குறிப்பனவாம்.

தொல்காப்பியர் ஒரு பொருளை உணர்த்தும் ஒரு சொல், ஒரு சொல் உணர்த்தும் பல பொருள், பல சொல் உணர்த்தும் ஒரு பொருள் என்னும் மூன்று வகையில் உரியியலில் சொல்லுக்குப் பொருள் காண்கின்றார். ஒரு சொல் பல பொருள்களைக் குறிக்குமானால் அப்பொருள்களை வேற்றுமைப்படுத்திக் காட்டித் தெளிவுபட விளக்குகிறார்.

சொற்பொருள் விரித்தல்

தொல்காப்பியர் இலக்கணம் கூறும் வகையில் சொற்பொருள் விரித்தலில் முழுக்கவனம் செலுத்தியுள்ளார். குறிப்பாக ஒருசொல் பல பொருள் குறித்து வரும்போது அவற்றைத் தெளிவுபடுத்தி விளங்க வைத்துப் புணர்ச்சிக்குரிய இலக்கணம் கூறுவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளார்.

இதனைப்

பனை – அளவு (நூ. 170) பனைமரம் (நூ.284)
யா – வினா (நூ.176) யாமரம் (நூ. 230)
மா – மாமரம் (நூ. 232) விலங்கு (நூ. 232)
அளவு (நூ. 480)

புளி – புளியமரம் (நூ. 245) புளிப்புச்சுவை (நூ. 246)
சே – சே மரம் (நூ. 279) பெற்றம் (மாடு) (நூ. 280)
இல் – வீடு (நூ. 294) இன்மைப்பொருள் (நூ. 373)
ஆண் – ஆண்பால் (நூ. 304) (விரிவுப்பெயர்) ஆண் (மரம்.நூ.305)
எகின் – எகின் மரம் (நூ.337) அன்னப்பறவை(நூ. 338)
குமிழ் – குமிழமரம் (நூ. 387) குமிழ்த்தல் (நூ. 387)

என்னும் விளக்கங்கள் எடுத்துரைக்கின்றன.

முடிவுரை

தொல்காப்பியத்தைப் போலவே சொற்பொருள் விளக்க நூல்களை இலக்கண நூல்களாகக் கருத வேண்டும். அகரநிரலில் சொற்களை அமைக்கும் முறை தமிழர் முறையாகும். இதனைத் தொல்காப்பியம் சிறப்புற எடுத்துரைக்கிறது. தமிழ் எழுத்துக் களைப்

பிழையின்றி முறைப்படி உச்சரிப்பதற்கு எழுத்ததிகாரப் பிறப்பியல் துணை செய்கிறது. ஒலிப்பினால் சொற்களின் பொருள் வேறுபடும். ஆதலால் பொருளின் தனமை அறிந்து அதற்கேற்ப எழுத்துக்களையும் சொற்களையும் ஒலிக்க வேண்டும் என்பது தொல்காப்பியரின் ஆணையாகும். ஒரு சொல்லுக்கு அடிப்படையாய் இருக்கும் வேர்ச்சொல்லைப் பற்றிய ஆராய்ச்சித்தன்மை தொல்காப்பியத்தில் முகிழ்த்துள்ளது. ஒரு சொல் உணர்த்தும் பல பொருள்கள் தொல்காப்பியரால் மிக நுட்பமாக வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. இவையனைத்தும் தொல்காப்பியத்துள் அகராதிக் கூறுகள் மிகுந்துள்ளதை மெய்ப்பிக்கின்றன.

சான்றெண் விளக்கம்

1. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு -10ஆம் நூற்றாண்டு, ப.185
2. இளம்பூரணர், தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், நூ.142, உரை.
3. வ.ஜெயதேவன், தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ப.45.
4. சேனாவரையர், தொல்காப்பியம் - சொல்லதிகாரம், நூ. 28, உரை.

நோக்குநூல் வரிசையில் சிறப்பகராதியின் பங்கு

முனைவர் அ. தீபா
தஞ்சாவூர்

நோக்கு நூல்கள் (Reference Books) என்பன ஒரு மொழியைக் கற்பதற்குரிய கருவி நூல்களாக அமைகின்றன. பிற இலக்கண, இலக்கிய நூல்கள் போலின்றி ஐயம் ஏற்படும் இடத்தோ விளக்கம் வேண்டுமிடத்தோ நோக்கத்தக்கனவாக உள்ளவை நோக்கு நூல்கள். நோக்குநூல் வரையறுக்கப்பட்ட சூழலின்றி எல்லாச் சூழல்களிலும் பயன்படுத்தத்தக்கனவாக அமைகின்றன. நோக்கு நூல்களுள் இன்றியமையாதவையாக விளங்குவன அகராதிகளாகும். அகராதிகள் கற்றல் கற்பித்தலில் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழில் அகராதிக் கூறுகள் தொல்காப்பிய உரியியல் முதல் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. உரியியலை அடுத்துப் பல நூற்றாண்டுகளுக்குப்பின்னர் எழுந்தவை நிகண்டுகளாகும். நிகண்டுகள் தமிழ்ச்சொற்றொகுதியைப் பல்வேறு தலைப்புக்களில் தொகுத்தளிக்கின்றன. ஒவ்வொரு தொகுதியும் ஒரு சிறப்பகராதி போன்று அமைந்துள்ளன. சான்றாக கி.பி.8 ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகரநிகண்டில் 12 தொகுதிகள் இடம்பெற்றுள்ளன. தெய்வப்பெயர்த்தொகுதி, மக்கட்பெயர்த்தொகுதி, விலங்கின் பெயர்த்தொகுதி என்பன தெய்வப்பெயர்ச் சிறப்பகராதி மக்கட் பெயர்ச் சிறப்பகராதி விலங்குப் பெயர்ச் சிறப்பகராதி எனக் குறிப்பிடும் வகையில் காணப்படுகின்றன. இக்கட்டுரையில் விலங்குச் சிறப்புபெயர் அகராதி எனும் சிறப்பகராதி தொகுக்கப் பெறின் அதில் இடம்பெறவல்ல சொற்களும், இடம்பெறும் அகராதியியல் உத்திகளும், அவ்வகை அகராதியின் பயனும் இக்கட்டுரையில் சுருக்கமாகச் சுட்டப்பெறுகின்றன.

தமிழ் நிகண்டுகளில் விலங்கினச் சொற்கள்

திவாகரம் முதல் பிற்காலம் வரை இடம்பெற்றுள்ள நிகண்டுகளில் விலங்கினச் சொற்களுக்கெனத் தனியொரு பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் விலங்குகளைச் சுட்டுவதற்குரிய விலங்கினப் பெயர்களும், விலங்கு தொடர்பான சொற்களும் இடம் பெற்றுள்ளன. இப்பகுதியில் விலங்குகளின் ஒருபொருட்

பன்மொழிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. நிகண்டுகளில் “விலங்கு” எனும் சொல் பொதுவாக 1.பாலூட்டிகள், 2.பறவைகள், 3.நீர்வாழ்வன, 4. ஊர்வன என்பனவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. மேற்கூறியவை நான்கும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டப்பெற்று அவற்றில் அடங்கும் சொற்கள் பட்டியலிட்டுத் தரப்பெற்றுள்ளன. பாலூட்டிகள் என்பதன்கீழ் 27 விலங்கினத் தலைச் சொற்களும் அவற்றிற்குரிய 276 ஒருபொருட் பன்மொழிகளும் இடம்பெற்றுள்ளன. யானையைக் குறிக்க அதிக பட்சமாக 42 ஒருபொருட் பன்மொழிகள் தரப்பட்டுள்ளன. திவாகர நிகண்டைப் போன்று பிற்கால நிகண்டுகளிலும் ‘விலங்கு’ என்பது பொதுநிலையில் கையாளப்பட்டுள்ளது. பிங்கலம், சூடாமணி மற்றும் நாமதீப நிகண்டில் விலங்குச்சொற்கள் பின்வரும் வகையில் பட்டியலிடப் பெற்றுள்ளன.

நிகண்டு	**விலங்கு – தலைச்சொல்**	**ஒருபொருட் பன்மொழிகள்**
பிங்கலம்	33	405
சூடாமணி	28	348
நாமதீபம்	38	358

நிகண்டுகளில் இடம்பெற்றுள்ள விலங்கினத் தலைச்சொற்களின் ஒருபொருட் பன்மொழிகள் மட்டும் தெரிந்திருந்தால் அவற்றிற்கான தலைச்சொல்லைக் காண்பது எளிதானது அல்ல. விலங்கினச் சொற்களை முழுவதும் பார்த்தால் மட்டுமே பொருளைத் தெரிந்து கொள்ள இயலும். இதற்கு விலங்கினச் சொற்களின் சிறப்பகராதி ஒன்று தொகுப்பது தேவையாக உள்ளது.

விலங்குச் சொற்கள் மட்டுமன்றி விலங்கினம் தொடர்பான பல சொற்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. குறிப்பாக விலங்கினச் சொற்களின் உடல்உறுப்புக்கள், உணவுவகைகள், தங்கும்இடம், வகை தொடர்பான சொற்களும் அவற்றிற்குரிய ஒருபொருட் பன்மொழிகளும் குறிக்கப்பெற்றுள்ளன.

விலங்கினச் சிறப்புப்பெயர் அகராதி

அகராதிகள் பல்வேறு முறைகளில் வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் தலைச்சொல்லின் தன்மை அடிப்படையில் அமைவது ஒரு வகை. விலங்கினச் சிறப்புப்பெயர் அகராதியில் தலைச்சொற்களாக இடம்பெறுபவை விலங்குப் பெயர்கள் ஆகும்.

விலங்கினச் சிறப்புப்பெயர் அகராதியில் தலைச்சொற்க்ள் தனிச் சொற்களாகவும், கூட்டுச்சொற்களாகவும் அமைகின்றன. கூட்டுச் சொற்களின் பொருள்தருவதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. விலங்கினச் சிறப்பகராதியின் (இருமொழி) தலைச்சொல் பதிவு, பின்வருமாறு அமையின் அது மிகுதியான பயன்தரும்.



விலங்கினத் தலைச்சொல்லில் பல மாற்று வடிவங்கள் காணப்படின் அவை குறுக்கு நோக்கீடு மூலம் இணைத்துக் காட்டப்பட வேண்டும். சான்றாக விலங்குகளின் பெண்பால் பெயர்கள் பிண, பிணவல், பிணவு, பிணா, பிணை என்றும் ஆண்பாற்பெயர்கள் இடபம், இடவம், ஏறு, ஏற்று, ஏற்றை, கடா, கடாய்,கிடாய் என்று மாற்று வடிவங்களைப் பெற்றுள்ளன. இவற்றைத் தலைச்சொற்களாகத் தரும்பொழுது குறுக்கு நோக்கீடு தரவேண்டிய சூழல் உள்ளது.

பொருள் தரும் உத்திகள்

விலங்கினச் சொற்களின் ஒருபொருட்பன்மொழிகள் தலைச் சொல்லாய் இடம்பெறும்பொழுது அவற்றின் பொருளாக வழக்கிலுள்ள சொல் தரப்பட வேண்டும். சான்றாக யானையைக் குறிக்கப் பல பெயர்கள் வழக்கிலிருக்கும்பொழுது அவற்றின் பொருளாக 'யானை' என்ற சொல் மட்டும் தரப்படும்பொழுது பொருள் விளக்கம் சிறப்புப் பெறும்.

பரவலாக வழக்கிலுள்ள விலங்கினச்சொல் பொருளாகத் தரப்படும்பொழுது அதிக விலங்கியல் விளக்கம் இடம்பெற வேண்டியதில்லை. ஆனால் தற்பொழுது வழக்கில் இல்லாத பழைய விலங்குகள் அல்லது நம்நாட்டில் வழக்கில் இல்லாத தலைச்சொல் வரும்பொழுது விலங்குகளின் குணம், உடல் அமைப்பு தொடர்பான செய்திகள் விளக்கப்பகுதியில் இடம்பெற வேண்டும்.

விலங்குகளின் வகைகள் தொடர்பான சொற்கள் தலைச் சொற்களாக இடம்பெறும்பொழுது பொருள்விளக்கம் பெறும் வகை, பிற வகைகளிலிருந்து விலங்கியல் விளக்கம் மற்றும் விலங்கியல் பெயருடன் வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டும். சான்றாக, மான், குரங்கு எனும் விலங்குகளில் பல வகைகள் காணப்படுகின்றன. இவை தெளிவாக வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டும். செம்மொழி இலக்கியங்களில் மானின் வகைகளாக இரலை, நவ்வி, மரையா, உழை, கடமா, கவரி என்பனவும் குரங்கின் வகைகளாக ஊகம், முசு என்பனவும் சுட்டப் பெற்றுள்ளன.

விலங்குகளில் பொதுவாக ஆண், பெண் விலங்குகளைக் குறிக்கத் தனிச்சொற்கள் காணப்படும் நிலையில் அவற்றின் பொருளை வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக ஏறு, பிணவு, பெடை, களிறு, பிடி, ஒருத்தல், கலை என்பனபோன்ற சொற்களைச் சுட்டலாம்.இவற்றின் விளக்கத்தில் ஆண், பெண் வேறுபாடுகள் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

விலங்குகளின் இளமைப்பெயர்களைக் குறிப்பிடும் பொழுதும் விளக்கத்தில் எவ்வகை விலங்கு என்பது தரப்பட வேண்டும். சான்றாகக் கன்று, குட்டி, பிள்ளை என்பனவற்றைச் சுட்டலாம். மேற்கண்ட சொற்கள் ஒவ்வொன்றும் ஒன்றிற்கு மேற்பட்ட விலங்குகளைச் சுட்டுவனவாக உள்ளன. இச்சொற்களின் பொருள் விளக்கத்தில் அவை ஒவ்வொன்றும் தனிப்பொருளாகத் தரப்படவேண்டும். சங்கநூற்களில் 'கன்று' என்பது 'பசு' 'யானை' 'எருமை' 'மான்' 'காளை' என்பனவற்றின் கன்றைக் குறிக்கும் வகையிலும் குட்டி என்பது 'பன்றி' 'குரங்கு' 'பூனை' என்பனவற்றை குறிக்கும் வகையிலும் 'பிள்ளை' என்பது பூனை, கீரி, புனுகுப்பூனை என்பனவற்றின் இளமையைக் குறிக்கும் வகையிலும் கையாளப்பட்டுள்ளன என்பது சுட்டத்தக்கது.

ஆண், பெண், இளமைப்பெயர்களின் விளக்கத்தில் தற்காலத்தில் இவ்வகை வேறுபாடு இல்லைஎனினும் அதுவும் தெளிவாகச் சுட்டப்பட வேண்டும். தற்பொழுது விலங்குகள் ஆண்/ பெண் விலங்கு என்று மட்டும் வேறுபடுத்தப்படுகின்றன.

விலங்கியல் பெயர்களைத் தருவதிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். வளர்ந்துவரும் அறிவியலின் தாக்கத்தால் விலங்கியல் பெயர்களில் ஏற்படும் மாற்றங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். விலங்குப் பெயர்களைத் தருவதில் சில நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவற்றையும் அறிந்து பயன்படுத்த வேண்டும்.

விலங்குச் சொற்களில் மாற்றுச் சொற்கள் காணப்படின், தேவைப்படுமிடத்து அவற்றின் மொழியியல் தொடர்பான செய்திகள் அடைப்புக் குறிக்குள் தரப்படவேண்டும். சான்றாக ஏறு, ஏற்றை, ஏற்று என்பன.

அகராதிகளில் பொருள் விளக்கப் பகுதியில் விளக்கக் குறிப்புகள் (Glosses) அதிகம் பயன்படுத்தப்படுவதுண்டு விலங்கினச் சிறப்புப்பெயரகராதி போன்ற அகராதிகளில் விலங்கினங்களின் உணவுப்பழக்கம், வாழிடம், குணம், தொடர்பான பல செய்திகளை அடைப்புக் குறிக்குள் தரலாம். இது பொது விளக்கத்தின் விரிவைக் குறைப்பதற்குப் பெரிதும் துணை நிற்கும்.

விலங்குச் சொற்களின் விளக்கத்தில் குறிப்பான்களையும் (Labels) பயன்படுத்தலாம். விலங்குகள் அதிகமாகக் காணப்படும் இடம், நாடு போன்றவற்றின் குறுக்கங்களை அடைப்புக் குறிக்குள் தரலாம்.

அறிவியல் விளக்கம் மிக எளிதாக, அதிக கலைச்சொற்களின் பயன்பாடு இன்றிஅமைய வேண்டும். விளக்கத்தில் கூறியது கூறல், சுழற்சி, வெறுமை, தேவையின்மை என்பன தவிர்க்கப்பட வேண்டும். தேவையான இடத்து படங்கள், வரைபடங்கள் தரலாம்.

முடிவுரை

மேற்கண்டவாறு எல்லா நிலைகளிலும் அகராதியியல் உத்திகளைப் பயன்படுத்தித் தொகுக்கப்பெறும் சிறப்பகராதி மிகவும் பயன் உள்ளதாய் எல்லோரும் எளிதில் பயன்படத் தக்கனவாய் அமையும் என்பதில் ஐயமில்லை. பல்வேறு சிறப்பகராதிகளைத் தொகுத்து செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்ப்போம்.

துணைநூற்கள்

1. சித்திரபுத்திரன், எச். (2002) தமிழ் அகராதியியல், அனன்யா, தஞ்சாவூர்.
2. சித்திரபுத்திரன், எச், (2004) சொல்லும்பொருளும், அகரம், தஞ்சாவூர்.
3. மாதையன்,பெ. (1997) அகராதியியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. Ladislav zgusla (1971), Manual of Lexicography, Mouton, Hauge, Newyork.

தமிழ் நிகண்டுகளின் தோற்றம் வளர்ச்சி

சி. தென்றல் அரிசி
தஞ்சாவூர்

தொல்காப்பிய உவமவியல் பிற்கால அணியிலக்கணக் கலைக்குத் தளமானதை போல உரியியல் முதலிய சொற்பொருள் விளக்கும் இயல்கள் சொற்பொருள் கூறும் முறை நூல்களாகிய நிகண்டுகளுக்குக் களமாயின. இந்நிகண்டுகளின் வளர்ச்சி வரலாறு இங்கு ஆராயப்படுகிறது.

நிகண்டு தோற்றம்

தொல்காப்பியரது காலத்திற்குப் பின் தமிழ் இலக்கியப் படைப்பும் பரப்பும் விரிந்தன. சமயத்தைப் பரப்பும் நோக்கில் நூல்கள் மிகுந்தன. பல்வேறு சமயங்கள் தத்தம் சிறப்பினை நிறுவப் போராடின.

வடமொழியின் செல்வாக்கும் தமிழில் மிகுதியாகப் படியத் தொடங்கியது. தமிழ் மக்களின் பண்பாடு, மொழி இவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ்மொழியின் சொற்றொகை பெருகியது. இந்தச் சூழலில் நிகண்டுகள் போன்ற கருவி நூல்கள் தேவையானதாகும்.

சொற்களுக்குப் பொருள் கொள்வதிலும், அவற்றிற்கு இலக்கணத்தைத் தழுவி வடிவங்களை அமைத்துக் கொள்வதிலும் சில இலக்கிய மரபுகளைக் கையாள்வதிலும் சங்க காலப் புலவர்கள் ஏறத்தாழ ஒரே மாதிரியான இலக்கிய நடையையும் செயல் முறையையும் கையாண்டனர். இந்த நிலைமை கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது.

இதற்கு அடுத்த நூற்றாண்டில் ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் சமய இலக்கியம் ஆக்கம் பெற்றது. இவர்கள் பக்திச் சுவைப் பாடல்களை இசைத் தமிழாக இயற்றினார்கள். இவர்களுடைய செய்யுள், நடை, கவிதை, பண்பு, சொற்களின் தன்மை, வடிவம், சொற்றொடர் அமைப்பு முதலியன சங்கத் தமிழினின்றும் வேறுபட்டிருந்தன.

இந்நிலைமையில் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் வழங்கி வந்த பல சொற்களுக்கும், வழக்குகளுக்கும் பொருள் தெரிந்து கொள்வது கூடப் பிற்கால புலவர்களுக்கு அரிதாக இருந்திருக்கும். புலவர்களுக்கும், இலக்கியப் பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்கு பண்டைக்கால நூல்களையும் படித்துச் சுவைப்பதற்கு உதவும் கருவி தேவைப்பட்டது. இத்தகு உதவியைப் புரியும் கருவிகளாகத் தான் நிகண்டுகள் தோன்றின எனச் சொல்லலாம்.

நிகண்டு விளக்கம்

நிகண்டாவது இச்சொல்லுக்கு இதுவே பொருள் என்று சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள ஆற்றலாகிய நியமம் அறிவிக்கும் நூல். இது இலக்கணம் போன்றதொரு கருவி நூல் ‘நிகண்டு’ எனும் சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்பது பொருள். சொற்கள் தொகுதியாக - கூட்டமாக - அமைக்கப் பட்டுப்பொருள் விளக்கப்பட்டிருத்தலால் நிகண்டு என சொல்லப்படுகிறது.

மந்திரங்களையும், பிரமாணங்களாகவும் விளங்கும் நால்வகை வேதங்களும் சுருதிகளாக, வாய்மொழி மரபு வழியாக வழங்கி வந்தன. இந்த வேதங்களை முறையாக ஒலிக்கவும் அறிந்து கொள்ளவும், வழிபாடுகளில் பின்பற்றவும் துணையா 6 கருவி நூல்கள் எழுந்தன. இவை வேதாந்தங்கள் எனப்படும்.

நிகண்டு – பெயர்க்காரணம்

நிகண்டு எனும் சொல் கி.பி.16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தான் முதன்முதலில் வெளியிடப்பட்டது. வேதங்களில் கருவி நூல்களான ஆறனுள் நிருத்தம் என்பதும் (NIRUKTA) ஒன்று.

இதன் ஒரு பகுதி ‘நைகண்டுகள்’ எனப்படும். இது நிகண்டு எனும் சொல்லிலிருந்து வந்த சொல்லாகும். இப்பகுதியில் பூமி, காற்று மூலமான பொதுத் தலைப்புகளின் கீழ் அவற்றின் ஒரு பொருள் பல சொற்கள் தரப்பட்டுள்ளன.

வேதாங்கம்
↓
நிருத்தம்
↓
நிகண்டு

நைண்டுகள்
↙ ↘
நைகமம் தைவதம்

யாஸ்கரின் நிருத்தமே வடமொழியின் முதல் அகராதி ஆகும். பின்னாளில் இதுவே சொற்பொருள் கூறும் நூலுக்கான நிகண்டு எனும் பொதுப்பெயரால் வழங்கப்பட்டது.

நிகண்டுகள் முன்னர்க் குறிப்பிட்டது போல பொருட் புலங்களின் அடிப்படையில் பல தொகுதிகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன. பொருள் கூறும் முறையில் பெரும்பாலான நிகண்டுகள் ஒரே மாதிரியான அமைப்பு முறையில் கொண்டிருந்தது.

தொல்காப்பியத்தில் காணப்படும் மூன்று

பலசொல் ஒரு பொருள்
ஒருசொல் பல பொருள்
பலபொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி

என்பனவற்றை தொகுத்துத் தருவதே எல்லா நிகண்டுகளுக்கும் குறிக்கோளாக இருந்து வந்துள்ளது.

உரிச்சொல் அல்லது உரிச்சொல் பனுவல்

நிகண்டு என்ற சொல்லாட்சியை வழங்கப் பெறுவதன் முன்னர் சொல்லுக்குப் பொருள் கூறும் துறை நூல்களை உரிச்சொல் (அ) உரிச்சொல் பனுவல் என்று அழைப்பர்.

நன்னூலில்,

> **"பிங்கலம் முதலா நல்லோர்**
> **உரிச்சொல்லின் நயந்தனர் கொளலே"**

எனும் நூற்பாவிலிருந்து திவாகரம், பிங்கலம் போன்ற நிகண்டுகளை உரிச்சொல் என்ற பெயர்களால் அறியப் பட்டுள்ளது. நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதரும்,

"விரிந்த உரிச்சொல் பனுவல்களுள் யுளிரும்
உரைத்த வாறு அறிந்து வழங்குக"

என்று உரை எழுதியுள்ளார்.

நிகண்டுகளின் அமைப்பு

தமிழ் நிகண்டுகள் அனைத்துமே அமைப்பு முறையில் தொல்காப்பியத்தை அடிப்படையாக அமைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

தமிழில் எழுந்த முதல் நிகண்டாகிய திவாகர நிகண்டு மூன்று பெரும் பிரிவுகளில் *12* தொகுதிகள் தொகுக்கப் பட்டிருக்கிறது.

முதல் *10* தொகுதிகளும் ஒரு பொருளை விளக்குகின்ற பல சொல் ஒரு பொருளைக் கொண்டதாகும்.

11 - ஆம் தொகுதி ஒரு சொல்லுக்குப் பல பொருளை விளக்குகின்ற தொகுதியாகும்.

12 - ஆம் தொகுதி தொகை எண்களை விளக்கும் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியாகும். இம்மூன்று பெரும் பிரிவுகளுக்கு அடிப்படை காரணம் தொல்காப்பியம் ஆகும்.

"ஒருசொல் பல பொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்"

இந்நூற்பாவின் வழி முதல் இரண்டு பிரிவுகளும், மரபியலில் கூறப்படும் தொகை எண்களின் விளக்கத்தை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாக்கே

மேலும் திவாகரம் 12 தொகுதிகளாகத் தொகுக்கப் பட்டுள்ளமைக்கும் தொல்காப்பியமே அடிப்படை காரணமாக திகழ்கிறது. அகத்திணையியலில்,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ"

எனும் நூற்பாவின் வழியே,

1. தெய்வப் பெயர்த் தொகுதி
2. விலங்கினப் பெயர்த் தொகுதி
3. பல்பொருள் பெயர்த் தொகுதி
4. மரப் பெயர்த் தொகுதி
5. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதிகளும் மற்றும்,

அதே இயலில்,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்"

எனும் நூற்பாவின் வழி,

6. மக்கட் பெயர்த் தொகுதி
7. இடப் பெயர்த் தொகுதி

விளக்கப்படுகிறது.

மேலும், உரியியலில் முதல் நூற்பாவில்,

"இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி"

என்ற வரியின் வழியாக,

8. பண்புப் பற்றிய பெயர்த் தொகுதி
9. ஒலி பற்றிய பெயர்த் தொகுதியும்

என்ற தொகுதிகளும் இடம் பெறுகிறது.

தொல்காப்பியத்தின் வினையியலில்,

10. செயல் பற்றிய பெயர்த் தொகுதி

அதற்கு அடிப்படை காரணம் தொல்காப்பியம் ஆகும்.

திவாகர நிகண்டின் 11-ம் தொகுதி உரியியலில், 'ஒரு சொல் பல பொருள்' என்ற வரியும், 12-ம் தொகுதியான பல் பொருள்

கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி, தொல்காப்பியர் மரபியலின் வழி தொகுக்கப்பட்டதை அறிய முடிகிறது.

1. திவாகர நிகண்டு

ஆசிரியர் - திவாகரர்
காலம் - கி.பி. 8-ம் நூற்றாண்டு
பதிப்பாசிரியர் - தாண்டவராயர் முதலியார் (1833)
நூலின் அமைப்பு - 912 தொகுதிகள்
9500 சொற்கள் உள்ளன

1. தெய்வப்பெயர்த் தொகுதி

சிவன், திருமால், முருகன், அறுகன், புத்தன் முதலிய பல்வகை தெய்வங்களின் பெயர்களைக் கூறுவதோடு மேலும் தேவர் இனங்கள், அரக்க இனம், நாள், கோள், விண், காற்று, தீ, நீர் பலவகை காலங்கள் மழை, மேகம், இடி முதலியவற்றிற்குரிய பலவகையான பெயர்களையும் கூறியுள்ளார்.

சான்றாக, சிவனுக்குரிய 63 பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

"சங்கரன் இறையோன் காமதகனன்
கங்காதரனே கறை மிடற்றண்ணல்
கூற்றை உரைத்தேன் குன்றவில்லின்
ஏற்று வாகனன் திரியம் பதன் சோதி
நக்கன் சடையோன் பாதி பாகன்
....
....
என்று எண்ணிய நாமம்"

இதனைப் போன்றே சமண, சமய கடவுளாகிய அருகனுக்கு 43 பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவர்கள் ஆதி கடவுள், பகவன், அறவாழி அந்தணன், என்புணன், கூறியிசை நடந்தோன் என்னும் பெயர்களும் அடங்கியுள்ளன.

இப்பெயர்கள் சூடாமணி முதலிய நிகண்டுகளிலிருந்து சொல்லப்பட்டன. இவை திருக்குறள் கடவுள் வாழ்த்திலுள்ள ஆதி பகவன், மலர்மிசை, ஏகினான், அறவாழி அந்தணன், எண்

குணத்தான் என்னும் பெயர்களோடு ஒத்துள்ளமை ஆராய்ச்சிக் குரியது. மேலும் மழைப் பற்றியும், அறுவகைப் பருவங்களையும் திவாகர நிகண்டு கூறுகிறது.

2. விலங்கினப் பெயர்த் தொகுதி

இத்தொகுதியில் பறவை, விலங்கு, ஊர்வன, நீர் வாழ்வன போன்றவற்றின் பல்வேறு பெயர்களும் விளக்கம் பெற்றுள்ளன.

சான்றாக,

ஆண் யானைக்கு,

'மதகரி தந்தி வண்களிறு யானை'

பெண் யானைக்கு

'கரேணு பிடி பெண் யானைப் பெயரே'

யானையின் கன்றுக்கு

'கோதகம் துடியடி கயமுனி கன்றாகும்'

மீன் போன்ற பல பறவை இனங்களின் பெயர்களும் இடம் பெறுகின்றன.

3. பல்பொருள் பெயர்த் தொகுதி

இத்தொகுதியில் பல்வகை உலோகங்கள், மணிகள், சங்கு, கற்பூரம், கத்தூரி, சாந்து, குங்கிலியம், பெருங்காயம், சுக்கு பலவகை உணவுகள், தேன், பால், தயிர், சர்க்கரை, கள், விறகு, சாம்பல், புகை, சாணம் போன்ற பல்வேறு பொருள்களின் பெயர்கள் இத்தொகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

(எ.டு) 'அப்பம் பிட்டொடு அஃகுல்லி இடியெனச்
செப்பிலிய வெல்லாம் சிற்றுண்டி யாகும்'

4. மரப்பெயர்த் தொகுதி

இத்தொகுதி மரம், செடி போன்றவைகளில் பல்வேறு பெயர்களின் அவற்றின் உறுப்புகளான கிழங்கு, வேர், தோல், கிளை, தளிர், இலை,மொட்டு,கனி முதலியன இடம் பெறுகின்றன.

(எ.டு)

'செண்பகமும் வேங்கையும் வண்டுணா மலர் மரம்'
'கோளி பூவாது காய்க்கும் குளிர் மரம்'

5. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி

ஆயுதம், அணிகலன், இசைக்கருவிகள், கண்ணாடி, கப்பல், தோணி, வீட்டு உபயோகப் பொருட்கள், ஓவியம் போன்றவற்றின் பல பெயர்களும் இத்தொகுதியில் இடம் பெறுகின்றன.

(எ.டு விசி அரி ஆகும்.

6. மக்கட் பெயர்த் தொகுதி

மக்கள் இனத்தின் சாதி, சமய துறைகளும், அரசியல் துறைகளும், தொழில் துறைகளும், தகுதி அளவிலும் வாழும் இடத்தைப் பொருத்தும், எத்தனை பிரிவுகள் உண்டோ, அத்துணை பிரிவுகளுக்கும் உரிய ஏறக்குறைய மக்கட் பெயர்த் தொகுதியில் கூறப்பட்டுள்ளன.

(எ.டு) 'மிலேச்சர் ஆரியர்'

7. இடப்பெயர்த் தொகுதி

இவற்றில் மீட்டுலகம், தெய்வ உலகம், நரக உலகம், நில உலகம் முதலியனப் பற்றிய பெயர்களும், மக்கள் வாழ்வும், நில வளமும் இத்தொகுதியில் பெரும்பகுதியைப் பிரித்துக் காட்டுகிறது.

(எ.டு)

'சுரந்த நீரும் வயலும் ஆழ்ந்த ஊர்
கிராமமாக கிழக்கப் படுமே'

8. பண்பு பற்றிய பெயர்த் தொகுதி

இதில் வட்டம், வளைவு, பரப்பு, இன்பம், துன்பம், பகை, நட்பு, பழமை, புதுமை, கசப்பு, புளிப்பு முதலிய பல்வகை பண்புகளுக்குரிய பெயர்களும் இடம் பெறுகின்றன.

(எ.டு)

'இருமாப்பு ஏகமுத்தம்'
'செம்மாப்பு அகமலர்ச்சி'
'நாட்டியம் குறிப்பே'

9. ஒலி பற்றிய பெயர்த் தொகுதி

ஒலியிலான எழுத்திலக்கணமும், எழுத்தாலான சொல்லிலக்கணமும், சொல்லிலான பொருளிலக்கணமும், பொருளால் அமைந்த செய்யுளிலக்கணமும், செய்யுளுடன் சேர்ந்து வரும் திசையிலக்கணமும் இத்தொகுதியில் விளக்கம் பெற்றுள்ளன.
(எ.டு)

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனும்
இவ்வேழ் எழுத்தும் ஏழு இசைக்குரிய

10. செயல் பற்றிய பெயர்த் தொகுதி

இத்தொகுதியில் 250 வினைகள், சில செயல்களுக்கு இனிய, அழகிய தூய தமிழ்ப்பெயர்கள் உள்ளன.
(எ.டு)

"ஊடலின் முதிர்தல் புலவியாகும்
அதனின் நீடுதல் துனி எனப்படுமே
ஒல்லும் சிரலும் முடிவிடன் உரைக்கும்"

11. ஒரு சொல் பலபொருட் பெயர்த் தொகுதி

இத்தொகுதியில் 377 சொற்களுக்குப் பொருள்கள் உள்ளன. சான்றாக, அடுதல் என்ற சொல்லுக்கு 2 பொருளுண்டு.

'அடுதல் அமைத்தலும் கோரலும் ஆகும்'

12. பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி

இதில் முக்காலம், ஐம்பொறிகள், மூவேந்தர்கள், இரட்டைக் காப்பியங்கள் என பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியில் இடம் பெறுகின்றன.
(எ.டு)

'இருவகை அறமே இல்லறம் துறவறம்'

இலக்கியத்தின் பிறகு இலக்கணம் என்பதற்கு ஏற்ப முன்னர் எழுந்த இலக்கியங்களுக்குப் பின்னர் நிகண்டுகள் எழுந்தன என்பது புலனாகிறது.

தொல்காப்பியத்தை அடியொற்றிப் பல சொற்றொகுதிகள் நிகண்டு எனும் பெயரில் உருவாக்கப்பட்டன. எனவே, தமிழ் சொற்றொகுதியில் பெருக்கமும் மாற்றமும் ஏற்பட்டது. சொற்களின் பெருக்கத்தினால் சொற்பொருளிலும் குறிப்பிடத் தக்க மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்படும் நிலையில் உள்ளது. இதுவே நோக்கு நூலின் படைப்புக்கு அடிகோலியது.

திவாகர நிகண்டில் பல்பொருட் பெயர்த் தொகுதியும் பிங்கலநிகண்டின் அநுபோக வகையும் ஒப்பீடு

ப. தேன்மொழி
தஞ்சாவூர்

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு இணங்கச் சொற்களின் பல்வேறு பொருட்களைத் தெரிந்து கொள்வதற்கும், நாம் தெரிந்து கொண்ட பொருளைவிடக் கூடுதலான பொருள்களை அறிந்து கொள்வதற்கும் நோக்குநூல்கள் மிகவும் இன்றியமையாததாக உள்ளன. நோக்கு நூல்களில் ஒன்றான நிகண்டுகளில் திவாகரம், பிங்கல நிகண்டில் காணப்படும் சொற்பொருள் அமைப்பை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நிகண்டு பெயர்க்காரணம்

நிகண்டு எனும் வடசொல்லுக்குத் தொகுதி கூட்டம் என்பது பொருளாகும். சொற்கள் தொகுதியாகக் கூட்டமாக அமைக்கப்பட்டு பொருள் விளக்கப்பட்டு இருப்பதால் நிகண்டு என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. நிகண்டு என்னும் சொல்லுக்கு உண்மை என்பது பொருள் எனவும் 'நிகழ்ந்தது' என்னும் சொல்தான் நிகண்டு என மருவிட்டது. தமிழில் கி.பி.8-ம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டு வரை நிகண்டுகள் தோற்றம் பெற்றுள்ளன.

நிகண்டின் அமைப்பு

தொல்காப்பிய உரியியல் போன்று நூற்பா அமைப்பில் நிகண்டுகள் உள்ளன. நிகண்டுகள் பெரும்பாலும் சொற்களைப் பல்வேறு பொருட்புலங்களாகத் தொகுத்து வழங்கியுள்ளன. நிகண்டுகளில் இடம்பெறும் பொருட்பாகுபாட்டினைச் சொற் பொருண்மை அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை

1. ஒருசொல் பல்பொருள் பெயர்த்தொகுதி (Polysemy)
2. ஒருபொருள் பல்பெயர்த் தொகுதி (Synonym)

3. பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி (Group words)

ஆகியவையாகும்.

திவாகரநிகண்டு

கி.பி.8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகர நிகண்டே தமிழ்மொழியின் முதல் நிகண்டாகும். இதனை இயற்றியவர் திவாகரர். இந்நிகண்டு 1. ஒருசொல் பலபொருள், 2.ஒருபொருள் பலசொல், 3. பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி என்ற மூன்று தொகுதிகளைக் கொண்டுள்ளது.

திவாகரத்தின் அமைப்பு

திவாகரம் 12 தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. தெய்வப்பெயர்த் தொகுதி
2. மக்கள்பெயர்த் தொகுதி
3. விலங்கினப் பெயர்த்தொகுதி
4. மரப்பெயர்த் தொகுதி
5. இடப்பெயர்த் தொகுதி
6. பல்பொருள் பெயர்த்தொகுதி
7. செயற்கை வடிவப் பெயர்த்தொகுதி
8. பண்பு பற்றிய பெயர்த்தொகுதி
9. செயல் பற்றிய பெயர்த்தொகுதி
10. ஒலி பற்றிய பெயர்த்தொகுதி
11. ஒருசொல் பல்பொருள் பெயர்த்தொகுதி
12. பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி

இத்தொகுதியில் முதல்10 தொகுதியை ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதியாகவும், 11-ந் தொகுதி ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதியாகவும், 12ம் தொகுதி பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்றும் வகைப் படுத்தப்பட்டுள்ளன.

பிங்கல நிகண்டு

சேந்தன் திவாகரத்திற்கு அடுத்ததாகக் காலத்தால் பிற்பட்டது பிங்கல நிகண்டாகும். பிங்கலர் என்பவரால் இயற்றப்பட்டதால் ஆசிரியர் பெயராலேயே இந்நூல் பிங்கலம் என

அழைக்கப்படுகிறது. இதன் காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டாகும். இதற்கு பிங்கலத்தை என்னும் மாற்றுப் பெயரும் உண்டு.

பிங்கல நிகண்டின் அமைப்பு

இந்நிகண்டு திவாகரம் போல நூற்பாவால் ஆன இந்நூலில் 4121 நூற்பாக்கள் உள்ளன. ஏறக்குறைய 15800 சொற்கள் விளக்கப்பெற்றுள்ள இந்நிகண்டின் முகப்பில்

> **"தன்தோள் நான்கின் ஒன்று கைம்மி கூஉம்**
> **களிறுவார் பெருங்கா டாயினும்**
> **ஒளிபெரிது சிறந்தன் றளிய என் நெஞ்சே"**

எனும் பிள்ளையார் வணக்கப்பாடல் காணப்படுகிறது. இப்பாடலை அடுத்து

> **"இருங்கடல் உடுத்த இம் மாநிலம்**
> **...............................**
> **...............................**
> **மருளற்றி வகுத்தனன் மதியினன் விரைந்தே"**

எனும் பாடல் காணப்படுகின்றது. இப்பாடலில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களையும் விளக்குவதற்காக உரிச்சொல் நூல் இயற்றத் தொடங்கி வான்வகை முதலாக ஒருசொல் பல்பொருள் வகை ஈறாக பத்து வகைகளாகப் பிங்கலர் விளக்கியுள்ளார்.

பிங்கல நிகண்டின் வகைகள்

திவாகரத்தின் ஒவ்வொரு பிரிவும் தொகுதி என்று அழைக்கப்படுவது போல பிங்கலத்தின் ஒவ்வொரு பிரிவும் வகை என்று அழைக்கப்படுகின்றது.

1. வான்வகை	6. அநுபோக வகை
2. வானவர் வகை	7. பண்பிற் செயலிற்பகுதி வகை
3. ஐயர் வகை	8. மாப்பெயர் வகை
4. அவனி வகை	9. மரப்பெயர் வகை
5. ஆடவர் வகை	10. ஒருசொல் பல்பொருள் வகை

இப்பத்து வகைகளில் முதல் ஒன்பது வகை ஒருபொருள் பலபெயர் தொகுதி, 10-வது வகை ஒருசொல் பல்பொருள் தொகுதி என்ற இரண்டு தொகுதிகள் மட்டும் பிங்கல நிகண்டில் காணப்படுகிறது. மூன்றாவது தொகுதியான பல்பெயர் கூட்டத்து ஒருபெயர்த்தொகுதி தனியாகக் கூறப்படாமல் பரவலாக பிங்கல நிகண்டில் பேசப்பட்டு உள்ளது.

திவாகரமும் – பிங்கலமும்

திவாகரநிகண்டில் காணப்படும் 12 தொகுதிகளில் 6-வது தொகுதியாகிய பல்பொருட் பெயர்த் தொகுதியும்

பிங்கல நிகண்டின் ஆறாவது வகையான அநுபோக வகையில் 20-வகையான உட்பகுப்பு வகைகளில் உணவின் வகையும் இரத்தினத்தின் வகையும் திவாகரத்தின் பல்பொருட் தொகுதியுடன் ஒப்பிட்டு அவற்றின் சொல்-பொருள் மாற்றம் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

திவாகரம் – பிங்கலம் பல்பொருட் பெயர்த்தொகுதி அனுபோக வகை உணவு – இரத்தினவகை ஒப்பீடு

உணவு வகை	திவாகரம்	பிங்கலம்	இரண்டு நிகண்டிலும் காணப்படும் ஒரேசொல்	வேறுபாடு உடையசொல் திவாகரம்	பிங்கலம்
சோற்றின் பெயர்	பொருகு மிசை	புற்கை, சரு வல்சி, துற்று கவளம், உதரகம் பதம், புகா, போனகம்	அன்னம், அயினி, அடிசில் மடை, புன்கம், மூரல், புழுக்கல், மிதவை அமலை, உணவு, அசனம், கவளம் சென்றி, பாத்து. கூழ் பதம்	பாளிகம் நிமிரம் மோதனம்	பாளிதம் நிமிரல் ஒதனம்
கஞ்சியின் பெயர்	-	யவாகு	காடி, மோழை	-	-
பிட்டின் பெயர்	-	-	ஆவி, வெந்தை	-	-
மோதகம் தோரைபெயர்	-	-	இலட்டுகம்		
உக்காரி			அஃகுல்லி		

பில்லடை			சஃகுல்லி	-	-
தினைமா	இடி,தினை நுண், பிண்டி		நுவனை		
சிற்றுண்டி	-	-	அப்பம், பிட்டு, அஃகுல்லி, இடி	-	-
கறியின்பெயர்	-	-	நீடாணம்	-	-
புளிங்கறி	-	-	துவை	-	-
குழம்பு	-	ஆணம்	பாகு	-	-
வறையல்	-	-	ஒச்சை	-	-
பிண்ணாக்கு	-	-	மலாவகம்	-	-
பால்		பயசு	கீரம்,பயம், அமிழ்து	-	-
தயிர்		பெருகு	ததி, அளை	-	-
நெய்	துப்பு	அதிரம்,நேயம்	இழுது,கிருதம், ஆச்சியம்	-	-

வெண்ணெய்			ஐயங்க,வீஃம்,நவநீதம்	-	-
கண்டசருக்கரை	-	-	கண்டம், பாளிதம்	-	-
மணற்பாகு		அக்கரம்	கட்டி, விசயம், கண்ணல்,குளம்		
கள்ளின்பெயர்	இக்கு, முருகு, சரல், வலி,கள் அருகி,மருட்டம் பாடலி, மவ்வலி சிக்கர்,பாணி, சிவிகை, பதை, கஞ்சரம், விருணி ஆன, அரை.	இலை, சாறு மாதவம், சுரை மதுவம், இரேயம், சுவி, கை, சுண்டை வெறி, வருணம், அளி பாரி, காலி சாயனம், காதம் வாணிதம் கொங்கு மகரந்தம் அருப்பம், களி கல்லியம் நாற்றம் நறை	நனை, தொப்பி, நறவு, பிரசம் தணியல், படு, அரை, வேரி மட்டு தேறல், வடி, பிலி, மது, நொண்டி, சாதி, விளம்பி, சுமரிலி, ஆளி, மாளி., முண்டகம், சாளி, மாரி ஞாலி, குந்தி, மதுரம் ஆம்பல், அம்பியம் மேதை, சுலோகி	தேம், பானம் கௌவை ஆசபம் வரிட்டம் பாலி சுமாலி	தேன் பாநம் கவ்வை ஆசுவம் அரிட்டம் பரிலி சுமரிலி
கோற்தேன்	மது	-	பிரசம்	-	-

உணவின் பெயர்(பிங்) உண்டல் தொழில்(திவா)	பிசைதல் பக்கித்தல் அனுங்கல் விழுங்கல் உய்த்தல் மெய்தல் அயிறல் நுகர்த்தல் அருந்தல் உண்டல் அயின்றல்		உணா,வல்சி,உண்டி பதம்		-

உணவு வகைகளில் மேற்சொன்ன உணவுகளின் பெயர்கள் மட்டும் திவாகரம் பிங்கலம் இரண்டு நிகண்டிலும் காணப்படுகின்றன. இதைத்தவிர பிங்கலத்தில் மேலும் பலவகையான உணவு மற்றும் அதைச் சார்ந்தவைகளின் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

பிங்கலத்தில் மட்டும் காணப்படும் பெயர்கள்

உணவு வகை பெயர்		சொல்
அவிழ்	→	பதம்
வழியுணவு	→	பொதி, தோட்கோப்பு, சம்பளம்
அடை	→	அப்பம்
நென்மா	→	இடி
தோசை	→	கஞ்சகம்
பச்சடி	→	அவித்துவையல்
சூட்டிறைச்சி	→	சூசியம், படித்திரம்
எண்ணெய்	→	தைலம், நேயம்
தேன்கூடு	→	இறால்
பலபண்டம்	→	பண்ணியம், வளம், பட்டம், பண்டம், கூலம், பண்ணிகாரம்
அரும்பண்டம்	→	தாரம்
கைப்பு(கசப்பு)	→	கைத்தல், தித்தம்
புளிப்பு	→	அமிலம், ஆம்பிரம்
துவர்ப்பு	→	துவரம்
உவர்	→	உவர்ப்பு

இரத்தின வகை

இரத்தின வகை	திவாகரம் மட்டும்	பிங்கலம் மட்டும்	இரண்டு நிகண்டிலும் காணப்படும் ஒற்றுமை உடைய சொல்	வேறுபாடு உடையவை	
மாணிக்கம்	செம்மணி		மாமணி, பதுமராகம்	திவாகரம்	பிங்கலம்
வைடூரியம்			வால வாயம்		
மரகதம்	-	-	அரி, பச்சை	-	-
நீலமணி			மணி		
பவளம்	வித்துருமம்		துப்பு, பிரவாளம்	-	-
	கிரத்தம்		துவர், துகிர்		
முத்து			நித்திலம், தரளம் ஆரம்		
கடவுண்மணி			நிதி, நிதானம்		
சங்கநிதி			சங்கின் வடிவு	-	-
பதுமநிதி			தாமரை வடிவு		

பளிங்கு		காழ், உபலம்	பருக்கை, படிகம்	
சிந்தூரம்	சேலேகம்	திலகம்	-	-	-

❖ இலக்கிய இலக்கணங்களைப் போலவே நிகண்டு என்பதும் தமிழ்மொழியின் ஒரு தனிக்கூறாகும்.

❖ இன்றைய அகராதிகளின் தாய் நிகண்டு என்பது போல் நிகண்டுகளின் தாயாகத் தொல்காப்பியத்தின் உவம இயல், உரியியல் மரபியல் என்பவைகளில் சொற்களுக்குப் பொருள் உரைக்கின்றன.

❖ திவாகரரின் மகனே பிங்கலர் ஆவார். ஆனால் திவாகரர் காலத்தில் குறிப்பிட்ட சில சொற்கள் பிங்கலர் காலத்தில் வழக்கொழிந்து போயின. சில சொற்கள் அருகிய வழக்காகவும் காணப்படுகின்றன.

❖ சான்றாகப் பிங்கலர் மோர் என்ற பொருளுக்கு மதிதம், தக்கிரம் என்ற இரண்டு சொற்களை மட்டும் கூறிவிட்டு அதற்கடத்து மாற்றுமோர் என்பதில் 'முசர்' என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார். ஆனால் திவாகரர் மோர் என்ற நேர் பொருளிலே முசர் என்று கூறியுள்ளார். இவை போன்ற சில ஒற்றுமை வேற்றுமைகள் இந்நிகண்டில் காணப்படுகின்றது.

❖ ஒரு காலத்தில் வழக்கில் இருந்த சொற்கள் மக்கள் பயன்படுத்தாமையால் பிற்காலங்களில் வழக்கொழிந்து விடுகின்றன. அச்சொற்களையும் அதன் பொருள்களையும் அடுத்து வருகின்ற பல தலைமுறையினருக்கு எடுத்துரைக்கும் ஆசானாக நிகண்டுகள் விளங்கி வருகின்றன.

சைவ சமயக் கலைக்களஞ்சியம் ஒரு பார்வை

கு. பிரியா
தஞ்சாவூர்.

> **“திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
> **பொருளும் அதனினூஉங் கில்”**

என்ற குறளுக்கு ஏற்பத் திறம்பட உருவாகியவை நோக்கு நூல்கள் ஆகும். அகராதி, நிகண்டு, களஞ்சியம் என்று நோக்கு நூல்கள் பல. காலத்திற்கு ஏற்ப அவற்றின் தேவையும் அமைப்பும் மாறுபட்டுக் கொண்டே இருக்கும்.

> **“எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே”**

என்கிறது தொல்காப்பியம். சொல்லுக்குப் பொருள் கூறும் அகராதி வரிசையிலிருந்து வேறுபட்டது கலைக்களஞ்சியம். இவை கட்டுரை வடிவில் அமைக்கப்பட்டது. இதனை,

> **“மனிதன் அறிந்துள்ள அறிவுப் பொருள்களிலும் அழகுப் பொருள்களிலும் சாரமானவற்றைப் பற்றித் தனித்தனியாக அகர வரிசையில் சுருக்கமாகக் கூறும் நூலே கலைக்களஞ்சியமாகும்”**
>
> **(செந்தமிழ் வெட்டகம், ப.193)**

என்பர். இன்றைய சூழலுக்கு ஏற்பக்கள கலைக்களஞ்சியம் பல்கிப் பெருகுதலைக் காணலாம். சமயக் கலைக்களஞ்சியம் ஒரு குறிப்பிட்ட சமயத்தை அதன் ஆதி முதல் அந்தம் வரைக் கூற முற்பட்ட முயற்சியே ஆகும்.

1. ஸ்ரீ முருகன் கலைக்களஞ்சியம்
2. வைணவக் கலைக்களஞ்சியம்
3. சைவ கலைக் களஞ்சியம்

என்பன. இதில் சைவ சமயக் கலைக்களஞ்சியம்,

திருத்தலங்களும் விரதங்களும்
தோத்திரமும் சாத்திரமும்

என்ற இரண்டு நூலாக வெளியிட்டுள்ளார் திருச்சிற்றம்பலம். இவற்றில் ‘தோத்திரமும் சாத்திரமும்’ என்ற நூலின் உள்ளடக்கச் செய்திகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோத்திரமும் சாத்திரமும்

"பிறப்பானை பிறவாத பெருமையானைப்
பெரியானை அரியானைப் பெண் ஆன்ஆய" (6-7-7)

என்று பிறப்பற்று, ஆண் பெண் பேதமற்று உள்ளவன் சிவன் என்பார் அப்பர். அத்தகைய இறைவனை முழுமுதற் தெயவமாகக் கொண்டது சைவ சமயமாகும். சைவ சமய தொன்மையும், வழிபாட்டு முறைகளையும், அடியவர் வரலாறு களையும், புராண, தல வரலாறுகளையும் குறித்துப் பல்வேறு இலக்கியங்கள் இயற்றப்பெற்றுள்ளன. அவையனைத்தும் தோத்திர நூல்கள் எனப்படும்.

சான்று

திருவிளையாடற்புராணம், கந்தபுராணம்,
தேவாரம், திருவாசகம் போன்றன.

சைவ சமயத் தத்துவக் கூறுகளையும், சித்தாந்த உண்மை களையும், உலகம் மற்றும் உயிர்களின் தோற்றம் மறைவையும், பதி பசு பாசம் ஆகிய சித்தாந்த உண்மைகளையும் விளக்குவன சித்தாந்த சாத்திர நூல்கள் எனப்படும்.

சான்று

சிவஞான போதம், சிவப்பிரகாசம் போன்றன.

அந்நூல்களின் நுவல்பொருள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி அனைவரும் எளிதில் படித்துணரச் செய்யும் வகையில் "சைவ சமயக் கலைக்களஞ்சியம் தோத்திரமும் சாத்திரமும்" என்ற நூலில் அமையப் பெற்றுள்ளது.

களஞ்சியம் அமைப்பு முறை

முதன்முதலில் களஞ்சியம் உருவாக்கப்பட்ட போது அகர வரிசையிலோ, கட்டுரை வடிவிலோ அமைக்கப்பட வில்லை. கால ஓட்டத்தில் இவை மாற்றத்திற்கு உள்ளாகியது என்பதை.

"முதல் களஞ்சியமான சீனக் களஞ்சியத்தில் கட்டுரைகள் இடம் பெறவில்லை." (செந்தமிழ் பெட்டகம், ப.193)

கலைக் களஞ்சியத்தை வரிசைப்படுத்தித் தொகுத்தவர் ஆலஸ்டெட் (1588 – 1638). அதனை அகர வரிசையில் அச்சிட்டவர் ஜான்ஹாரிஸ் (1667 –

1719) என்ற பாதிரியாரே ஆவார். (செந்தமிழ் வெட்டகம் ப.194)

இதன் வழி அறியலாம். இதன்பின் கலைக்களஞ்சியங்கள் அகர வரிசையில் கட்டுரை வடிவில் வழங்கின. ஆனால் சைவ சமயக் கலைக் களஞ்சியம் இவ்வமைப்பு முறையை மாற்றிப் பொருள் அடிப்படையில் அமைந்த களஞ்சியமாக உருவாக்கப்பட்டுள்ளது.

சமய உண்மைகள், தொன்மை, புராணங்கள், இலக்கியங்கள், சாத்திரங்கள், சமயக் கொள்கைகள், வழிபாட்டு முறைகள் என்று பொருள் அடிப்படையில் அமைந்துள்ளது. இவ்வமைப்பு சைவ சமய இலக்கியங்களை 'கேசாதி பாதம் வரை' அறிய உதவும் வகையில் உள்ளது. இக்களஞ்சிய அமைப்பு முறை புதிய புதிய களஞ்சியங்கள் புதுமையான முறையில் மாற்றத்திற்கு உள்ளாகும் தன்மையைப் புலப்படுத்துகிறது.

அறுவகை சமயம்

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று தென்னாட்டு தெய்வம் எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தன்மையைப் போல் ஒரு சமயம் சார்ந்த நூலில் பிற சமய உணமைகளையும் காணமுடியும். அவை

சைவம்
வைணவம்
சமணம்
பௌத்தம்
கிருத்துவம்
இசுலாமியம்

என்ற ஆறு சமயங்கள் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. இவற்றின் வழி பல சமய உணமைகளையும் கொள்கைகளையும் அறிய முடியும்.

சான்றாக

"சமண சமயம் வலியுறுத்தும் மூன்று தத்துவங்கள் இரத்தினத்திரயம் எனப்பெறும். அம் - முப்பெரும் உண்மைகள், நற்சாட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகியன ஆகும்"

(சைவ சமயத் தோத்திரமும் சாத்திரமும், ப.19)

இதனைப் போன்று ஒவ்வொரு சமய உண்மைகள், பிரிவுகள், கடமைகள், நெறிகள் போன்றவற்றில் பிற சமய உண்மைகளை யெல்லாம் கோடிட்டுக் காட்டிவிட்டு சைவ சமயத்தினை விளக்குகிறார் ஆசிரியர்.

சைவ சமயத் தொன்மை

இந்திய மக்கள் சிவனைப் பன்னெடுங்காலமாகத் தொன்று தொட்டு வழிபட்டு வருகின்றனர். இச்சிவனிய சமயம் இந்தியாவில் மட்டுமல்லாது உலகம் முழுவதும் பரவியுள்ளது என்பதை வரலாற்று ஆய்வுகள் நமக்குக் காட்டுகின்றன. இச்சமய தொன்மையை ஹரப்பா, மொகஞ்சாதாரோ ஆகிய இடங்களில் கிடைத்த அகழ்வாராய்ச்சி மூலம் அறியலாம்.

"வடஅமெரிக்காவின் கொலடாரோ என்னும் ஆற்றங்கரையில் உள்ள மலைமேல் இருக்கும் சிவபெருமானுக்குரிய திருக்கோயிலின் பழமையால் நாம் நன்கு உணரலாம். இச்சிவன் கோயில் 10,000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்." (சைவ சமயத் தோத்திரமும் சாத்திரமும், ப.25)

இதன்வழி பழம்பெருமை வாய்ந்தது சைவசமயம் என்பதை அறிய முடியும். சிவ வழிப்பாட்டின் தொன்மையை, பல நாடுகளிலும் காணமுடியும். அயர்லாந்தில் சிவலிங்கங்களும், பல கிருத்துவ ஆலயங்களும் காணப்படுகின்றன. அவை 'சீலநாதிக்' (Shila-nagig) என்று வழங்குகின்றன. இது சிவலிங்கம் என்பதன் திரிபாகலாம் என்கிறார் ந.சி.கந்தையாப் பிள்ளை. இதனை,

"ஸ்பானியர் முதன்முதல் அமெரிக்காவுக்குச் சென்றபோது ஆலயங்களில் சிவலிங்கங்கள் வைத்து வழிபட்டதைக் கண்டார்கள். ஆப்ரிக்காவில் தகோபி (dahomi) என்னுமிடத்தில் இலிங்கம் லெங்பா (lengba) என்னும் பெயருடன் வைத்து வழிபடப்பட்டது."

(சைவ சமயத் தோத்திரமும் சாத்திரமும், ப.27)

இச்சான்றுகள் வழி உறுதிபடுத்துகிறார். உலகளாவிய சிவத் தலங்கள்

1087 இடங்களில் இருப்பதாகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. இதனை,

ஸ்ரீ கையிலாயேசுவரம்
பூதேசுவரம்
அம்பிகேசுவரம்
சுரேசுவரம்

என்று 1087 இடங்களின் பெயர் பட்டியலை இக்களஞ்சியம் தருகிறது.

வேதாகமங்கள்

சிவனைப் பற்றி அறிய இந்து சமய மறைநூல்களான ரிக், யசுர், சாம, அதர்வண வேதங்கள் மூலமும் சைவ ஆகமங்கள் வழியும் அறியலாம். அதனை,

வேதம் : காட்சி அளவையாலும் கருதல் அளவையாலும் அறியமுடியாதவற்றை அறிவதற்குக் கருவிகளாய் உள்ளவையே.

ஆகமம்: ஆன்மாக்கள் வீடுபேற்றை அடையும் வண்ணம் அவற்றின் ஆணவம், கன்மம், மாயை எனப் பெறும் மும்மலங்களையும் போக்குவன என்றும் பொருள் தருவதே ஆ+கமம்=ஆகமம் ஆகும்.

என்கிறார் ஆசிரியர். இவற்றின் வழி சைவ சமய உண்மை கொள்கை பிரிவுகளை அறிய முடியும்.

இலக்கியங்களில் சிவன்

தமிழ் இலக்கிய வரலாற்றில் காலத்தால் முற்பட்டவை சங்க இலக்கியங்கள். அவற்றில் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, இன்னிலை ஆகிய நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைக் குறித்துப் பாடப்பட்டது. சங்க இலக்கியத்தில் சிவன் திருப்பெயர்கள்,

"ஆதிரையான், ஆல்மர் செல்வன், நீலமணிமிடற்றான், மழுவான் நெடியோன், அருந்தவ முதல்வன், முக்கட் செல்வன், தென்முது கடவுள், கணிச்சியான், முது முதல்வன், நான்மறைமுதல்வன், சீர்கெழு சிறப்பினோன் என்பன குறிப்பிட்டுள்ளன.

காப்பியங்களில் சிவன்,

இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆனேனூர்ந்தோன் அருளின அறைவாய்ச் சூலத்து, ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டு, குழுவித் திங்கள் இமையவர், பிறை முடிக்கண்ணிப் பெரியோன், செஞ்சடைவானவன் எனவரும் அக்காப்பியத் தொடர்களே இதற்குப் போதிய சான்றுகளாகும். இதன்வழி பல இலக்கியங்களில் சிவபெருமான் பற்றிய செய்திகள் எழுத்தாளப் பட்டுள்ளதை அறியலாம்.

பன்னிரு திருமுறை

இக்காலத்தைப் பக்தி இயக்க காலம் என்று அழைப்பர். ஏனெனில் அகச் சமயமான சைவ வைணவ சமயங்கள் ஆளுமை இழந்து புறச்சமயமான சமண, பௌத்த சமயங்கள் மேலோங்கி இருந்த காலகட்டம் இது. இச்சூழலில் பல அடியவர்கள் தோன்றி அகச்சமயங்கள் மீண்டும் ஆட்சி செலுத்தத் தொடங்கியன. இதற்கு முழுமுதற் காரணமாக விளங்கியவர்கள் திருமுறை சான்றோர்கள் ஆவார்.

சைவ சமய வளர்ச்சிக்குக் காரணமாகி அச்சான்றோர் களின் வரலாறுகள், பன்னிரு திருமுறை அமைப்பு சிறப்பு ஆகிய வற்றையும் இக்களஞ்சியம் கூறுகிறது. இத்திருமுறைகளே தோத்திர நூல்கள் எனப்படும்.

சாத்திர நூல்கள்

தமிழ்மொழியின் இரண்டு கண்கள் போல்வன இலக்கியமும் இலக்கணமும் ஆகும். அதுபோலச் சைவ சமயத்திற்கு இரண்டு கண்கள் போல்வன தோத்திரமும் சாத்திரமும் ஆகும். சாத்திர நூல்கள் எனப்பெறுவன சைவ சித்தாந்த முப்பெரும் உண்மைகளைக் கூறும் பதினான்கு சாத்திர நூல்கள் ஆகும். அவை,

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்தி ரூபா உண்மை பிரகாசம் வந்த அருள்
பண்பு வினா போற்றி கொடிபாசம் இலாநெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று"

என்ற வெண்பா எடுத்துரைத்துள்ளது. சித்தாந்த நூல் ஆசிரியர்களை திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார், திருவதிகை மனவாசகம் கடந்தார், மெய்கண்டார்,

அருணந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் ஆகியோர். இவர்களைப் பற்றிய செய்திகளை 'சந்தான குரவர்கள் வாழ்வும் வாக்கும்' என்ற தலைப்பின் கீழ் அமைந்துள்ளது.

நிறைவுரை

சைவ சமயக் களஞ்சியம் என்ற இந்நூல் வழி சைவ சமயக் கருத்துகளை முழுமையும் அறிய முடியும்.

சைவ சமயத்தின் தொன்மை, சிறப்பு, வரலாறு, கொள்கை போன்றவற்றை அறிய கருவூலமாக இது பயன்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்த நூலில் பிற சமய உண்மைகளையும் அறிய முடிகிறது.

இக்கலை களஞ்சிய அமைப்பு முறை மாற்றம் புதிய கலைக்களஞ்சியங்கள் தோன்ற வாய்ப்பாக அமைந்துள்ளது.

நோக்குநூல்கள் அமைப்பு முறையில் மரஇனப்பெயர்த்தொகுதி - 2

நீ. மகேஸ்வரி
தஞ்சாவூர்

மரஇனப்பெயர்த்தொகுதி – 2 அமைப்பு

தமிழ் நிகண்டுகள், மருத்துவ அகராதிகள், தமிழ்ப் பேரகராதி போன்ற பல்வேறு நோக்குநூல்களில் இடம் பெற்றுள்ள மரஇனப்பெயர்களை ஒன்றாகத் திரட்டி அவற்றை முறைப்படுத்தி இருவர் கூட்டு முயற்சியால் வெளியிடப்பட்டது. 1986 ல் ஜனவரி திங்களில் முனைவர் எச்.சித்திரபுத்திரன் அவர்களும், முனைவர் பெ.மாதையன் அவர்களும் தமிழ்ப் பல்கலைக்கழகம் மூலம் வெளியிட்டனர். இவ்வகராதி மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1. அகராதிப்பகுதி
2. தாவரவியற்பெயர்ப் பகுதி
3. குறுக்கு நோக்கீட்டுப் பகுதி

1. அகராதிப் பகுதி

இப்பகுதியில் தலைச்சொல், தலைச்சொல்லுக்கான ஆங்கில ஒலிபெயர்ப்பு, தமிழ்ப்பொருள், ஆங்கிலப் பெயர் - பொருள், மூலநூல் போன்றவையும் தலைச்சொல்லுக்கான வேறு பெயர்களும் (Synonyms) கொடுக்கப்பட்டுள்ளன. வேறுபெயர் களை அடுத்து அவற்றின எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டாம தொகுதியில் உரிய தலைச்சொற்களின்கீழ் வேறு பெயர்களாய் இடம்பெறவேண்டிய மரஇனப்பெயர்கள் சில முதலாம் தொகுதியில் தலைச்சொற்களாகக் கொடுக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு தவறுதலாக முதலாம் தொகுதியில் தலைச் சொல்லாய் இடம்பெற்றுவிட்ட வேறுபெயர்கள் இவ்விரண்டாம் தொகுதியில் உரிய தலைச்சொற்களின் தமிழ்ப்பொருளை அடுத்துக்காண்க என்ற குறுக்கு நோக்கீட்டுடன் கொடுக்கப் பட்டுள்ளன.

2. தாவரவியற் பெயர்ப் பகுதி

இப்பகுதியில் தலைச்சொற்களுக்குரிய தாவரவியற் பெயர்கள் அகரவரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன. தாவரவியற் பெயர், அதற்குரிய தலைச்சொல் எனும் அமைப்பில் இப்பகுதி அமைந்துள்ளது.

3. குறுக்கு நோக்கீட்டுப் பகுதி

அகராதிப் பகுதியில் ஒவ்வொரு தலைச்சொல்லின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வேறுபெயர்கள் அனைத்தும் அகரவரிசைப் படுத்தப்பட்டு அவ்வவற்றிற்குரிய பொருளுடன் (தலைச் சொல்லுடன்) தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இடப் பகுதியில் உள்ளவை வேறுபெயர்கள், வலப்பகுதியில் வேறுபெயர் களுக்கான பொருள் (தலைச்சொல்) கொடுக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் ஆங்கில ஒலிபெயர்ப்புடன் கொடுக்கப் பட்டுள்ளன.

மரஇனப்பெயர் தொகுதி - 2ல் தலைச்சொல்லிற்குப் பொருளும், பொருள் இடம்பெற்ற எண்ணிக்கைகள், நூற் சுருக்கங்கள், தலைச்சொற்கள் அனைத்தும் அகரவரிசையில் இடம் பெற்றுள்ளன. செடிவகைகள், கொடிவகைகள், புல் வகைகள், மர வகைகள், தானியங்கள், காய்கள், கனிகள், கீரை வகைகள், பூக்கள், மருத்துவ குணம் நிறைந்த செடி, கொடிகள் போன்றவைகளின் அமைப்பு, பயன், இடம், மணம், நிறம், புதியவை இவ்வாறு பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஒருசிலவற்றை மட்டும் கருதுகோளாகக் கொண்டு நோக்குநூல்கள் வேறுபாட்டை எனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன்.

தலைச்சொல் எண்ணிக்கை

எழுத்து	தாவரவியற்பெயர் உடையன	தாவரவியற்பெயர் இல்லாதன	மொத்தம்
ச	*34*	*65*	*99*
சா	*17*	*19*	*36*
சி	*74*	*87*	*161*
சீ	*61*	*40*	*101*
சு	*21*	*32*	*53*
சூ	*7*	*9*	*16*

செ	46	97	143
சே	6	7	13
சை	-	1	1
சொ	3	10	13
சோ	10	9	19
சௌ	-	4	4
ஞா	-	2	2
த	21	47	68
தா	8	15	23
தி	21	39	60
தீ	1	11	12
து	14	12	26
தூ	3	7	10
தெ	2	2	4
தே	9	15	24
தை	1	-	1
தொ	5	5	10
தோ	2	3	5
ந	27	45	72
நா	37	29	66
நி	19	14	33
நீ	31	26	57
நு	4	3	7
நூ	2	4	6
நெ	13	16	29
நே	1	8	9
நொ	2	1	3
நோ	-	2	2
ப	45	85	130
பா	32	40	72
பி	16	33	49
பீ	6	11	17
பு	31	51	82
பூ	28	32	60
பெ	49	52	101
பே	21	25	46
பை	-	3	3

பொ	12	21	33
போ	1	-	1
ம	107	109	216
மா	14	19	33
மி	4	12	16
மீ	1	-	1
மு	46	32	78
மூ	10	9	19
மெ	-	4	4
மே	3	5	8
மை	3	2	5
மொ	4	6	10
மோ	1	1	2
ய	-	1	1
யா	2	10	12
ர	2	2	4
ரா	-	4	4
ரு	-	2	2
ரூ	-	2	2
ரோ	2	1	3
லா	1	1	2
லி	-	1	1
வ	29	78	107
வா	16	26	42
வி	11	34	45
வீ	3	1	4
வெ	74	92	166
வே	9	5	14
வை	-	1	1
வௌ	-	1	1
ஜ	-	1	1
மொத்தம்	1085	1501	2586

மரவகை

மரவகைகள் பல நிலைகளில் வேறுபட்டுள்ளதைப் பின்வருமாறு சுட்டலாம்.

எ.டு.

1. தண்பகம் — மரவகை
tanpakam — சண்பகந் தணபகம் பாடலம் (மேருமந். 585)
A tree

2. தம்பனை — மரவகை (த.பே.அ.)
tampanai — Long Leathery linear - oblong - obtuse - leaved tamana oil tree - Mischodon zeylanica.

3. திந்துகம் — மரவகை(சுக்கிரந்தி 228)
tintukam — A tree

4. திரிகோணமலை மரம் — மரவகை (சா.அ.)
tirikonamalai maram — Trincomalai wood, long tree ; Berrya cordifolia

கொழும்புரம் (சா.அ.), சமண்டிலை (சா.அ.) சமுள் (மலை), சவண்டலை (த.பே.அ.), சுவண்டிலை (த.பே.அ.) சவந்தலை (சா.அ.), செம்மரம் (சா.அ.), திருக்கணாமரம் (சா.அ.), திருக்கணாமலைக் கம்பமரம் (சா.அ.), திருக்கோண மரம் (த.பே.அ.), திருக்கோணமலை (சா.அ), திருக்கோணமலை மரம் (சா.அ.), திருக்கோணமல்லி (F.T.C.) ; வெண்தேக்கு (F.T.C.).

5. செம்பில் — மரவகை (த.பே.அ.)
Cempil — Cup-calyxed white cedar. everygreen tree ; Dysoxylum binectariferam

அகுணி (சா.அ.) அகுணியகில் (த.பே.அ.)
அகுணிவகில் (W.I.)

6. செம்மலையகத்தி — மலையகத்திவகை
Cemmalaiyakatti — A kind of hil sesban.

7. செவ்வாத்தி — செந்நிறப்பூ பூக்கும் பெருங்கொடிவகை (சா.அ.)

Cevvatti காண்க. கொடிமந்தாரை
A very large climber bearing brick - red flowers ; Bauhinia Phoenicea.

அரத்தொடுத்த (சா.அ.) குங்குமப்பேரிகம் (சா.அ.), சிகப்பாத்தி (சா.அ.)

8\. செவ்வாழை மணமுள்ள, செந்நிறமான காய் காய்க்கும்
Cevalai வாழை (த.பே.அ.)
A kind of plantain yielding red fruits of delicate flavour.

அரன்பாகிகம் (சா.அ.) இராசகுலவாழை (சா.அ.) இராசவாழை (சா.அ.), உதிரவாழை, (சா.அ), உதிரவாழை (சா.அ.), உதிரி (த.பே.அ), குறுந்தை (சா.அ.), குறுந்தைவாழைமரம் (சி.வை.அ.), சந்தான வஞ்சி (சா.அ.), சந்தான வஞ்சிமரம் (சி.வை.அ.) செந்நாலினி (சா.அ.) பீதகதலி (மலை.), பூவன் (த.பே.அ.).

நோயை உண்டாக்கும் முறைகள்

மனிதன் பிறப்பை நிர்ணயிக்கும் காலம் குறிப்பிடப் பட்டாலும் மனிதனுடைய இறப்பை யாராலும் குறிப்பிட முடியாது. அத்தகைய கொடிய நோயாகிய இறப்பைக்கூட தானாக உண்டாக்கமுடியும் என்பதை மரஇனப்பெயர்த் தொகுதி 2ம் தொகுதியின் நோக்குநூல்கள் மூலம் புலனாகிறது.

எ.டு.

1\. சங்கோசகம் இறப்பை உண்டாக்கும் ஒரு வகை
Cankocakam நச்சுக்கிழங்கு (சா.அ.)
A poisonous root causing death.

2\. சித்த மூருகி மனத்தடுமாற்றத்தை விளைவிக்கும் ஒரு
Cittamuruki பூடு (சா.அ.)
A plant causing preplexity of mind
சித்த முருகிச்செடி (சி.வை.அ.)

3\. நச்சுப்புல் உண்டார்க்கு நோயை விளைவிக்கும் ஒரு
naccuppul புல். (நான்மணி. 33 உரை)
A poisonous grass

ஆகாதவிஷத்திரணச்சோதி (சா.அ.), உண்ணக்கொல்லி (சா.அ.) சிவப்பிவேர் (சா.அ.) சிவப்புவேர் (சா.அ.), சூதத்தை மணியாக்கி (சா.அ.), நற்சாந்தம் (சா.அ.), பருவதவாசி (சா.அ.).

மருத்துவப் பயன்பாடு

மருத்துவ முறைகளில் பலவகையான தாவரங்கள் பயன் படுத்தப்படுகின்றன என்பதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டு மூலம் அறியலாம்.

எ.டு.

1.	சங்கிக்கடுக்காய்	யுனானி மருந்தில் பயன்படுத்தப்படும் கடுக்காய் (சா.அ.)
	Cankikkatukkay	A species of gall nut used in Unani medicine
2.	சக்கிரமண்டலி	வயிற்றுப்புண்ணைப் போக்கும் ஒருவகைச் செடி (சா.அ.)
	Cakkiramantali	A kind of plant supposed toheal all kinds of ulcers

சக்கிர மண்டலிச் செடி (சி.வை.அ.)

3.	சன்னிப்புல்	மூளை நோய்களுக்குப் பயன்படும் புல்வகை (சா.அ.)
	Cannippul	A grass used for brain apoplexy.

நிர்த்திப்புல (சா.அ.)

அமைப்பு

தாவரங்கள் அமைப்பின் அடிப்படையில் மரஇனப் பெயர்த்தொகுதி - 2ல் இடம்பெற்றுள்ளதை நோக்கு நூலில் கீழ்வருமாறு தரப்படுகின்றதுள.

எ.டு.

1.	தேங்காய்ப்பூக் கீரை	தேங்காய்த் துருவலைப் போன்ற பூவுள்ள கீரைவகை
	tenkayppukkirai	A kind of brown spinach, the flowers of which resemble scraped coconut

தேங்காய்க்கீரை (த.பே.அ.) தேங்காய்ப்பூ நாறி (சா.அ.)

2. நாமவாழை — செவ்வரியுள்ள இலைகளைக் கொண்ட வாழைவகை (சா.அ.)
namavalai — A kind of banana with red streaked leaves ; Musa zebrina.

3. நாய்க்குடை — குடைபோன்ற அமைப்புடைய காளான் (சா.அ.)
naykkutai — Umbrella mushroom.

ஆம்பி (சா.அ.), குடைக்காளான் (த.பே.அ.), நாய்க்காளான் (சா.அ.) முட்டைக்காளான் (சா.அ.)

ஒப்புருச்சொல் அமைப்பு

தேவதானி[1] — ஆனைமலையில் காணப்படும் ஒருமரம் (த.பே.அ.)
tevataji — A medium tree found in Anaimalai hills in Coimbatore district. Lansium anamallayanum.

நெல்வகை

நெல்வகைகள் பலவகையாக இடம்பெற்றுள்ளன. ஒருசில நெல்வகைகள் மட்டும் பின்வருமாறு குறிப்பிடப் படுகிறது.
எ.டு.

1. திருக்குறுங்கை நம்பிசம்பா — சம்பாநெல்வகை
"தென்னரங்கன் சம்பா
திருக்குறுங்கை நம்பிசம்பா" (நெல்வீடு.183)
tirukkurunkai nampicampa — A kind of Campa paddy.

2. தூர்ணகம் — காசுமீரத்து நெல்வகை (சா.அ.)
turnakam — A species of paddy grown in Kashmir.

ஒப்புருச்சொல் நெல்வகை

சாமை — தானியப் புல்வகை
"சாமை தினை வண்ண வோதனம்"
(விதான.யாத்திரை 8)

Camai — Little millet grass panicum miliare.

அக்கினிகருப்பை (சா.அ.) காட்டுக்கத்தோதிகம் (சா.அ.), சாவான் (சா.அ.), சான்வம் (சா.அ.), தட்சணப்புல் (சா.அ.), தட்சணபத்திர (சா.அ.), தினை (சா.அ.), நெல்லுப்புல் (த.பே.அ.) புற்சாமை (சா.அ.), லிகு (சா.அ.)

சாமை[2] — ஆவணி மாதத்தில் விதைக்கப்பெற்று ஆறு வாரம் முதல் நான்கு மாதங்களுக்குள் விளையும் புன்செய்த் தானியப்பயிர் (த.பே.அ.)

Camai — Poorman's millet, sown in avani and maturing in six weeks to four months. Echinochloa frumentacea.

காட்டுத்தர்ப்பை (சா.அ.), குதிரைவாலி (F.T.C.) புல்லுச்சாமை (F.T.C.)

மணம்

மணத்தை அடிப்படையாகக் கொண்டு பல தாவரங்கள் நோக்கு நூல்களில் இடம் பெற்றுள்ளன.

மைசூர்மல்லிகை — நறுமணமுள்ள அடுக்குப்பூப்பூக்கும் செடிவகை

maicurmallikai — A chinese shrub with sweet scented double flowers; Clerodendrum Philippinum.

பேனுப்பருத்திச்செடி (F.T.C)

ஒப்புருச்சொல்

சாரிசாதம்[1] — கத்தூரிமணமுள்ள ஒருவகைப்புல் (சா.அ.)

Caricatam — A grass, having the odour of musk.

சாரிசாதம்[2] — கத்தூரி மணமுள்ள ஒருவகை மரம்(சா.அ.)

Caricatam — A tree having the odour of musk.

நாடு

நாட்டின் பெயரைக் கொண்டு அமைந்த பொருள் பின்வருமாறு சுட்டப்படுகிறது.

சிங்கன்வாழை இலங்கை வாழை
Cinkanvalai A variety of plantain from ceylon.

சிங்க வாழை (த.பே.அ.)

ஆப்பிரிக்க நாட்டுச்செடி, மலேசியா கொடி போன்றவையும் இடம் பெற்றுள்ளன.

இடம்

நோக்குநூல்களில் வருகைபுரிந்துள்ள தாவரங்கள் இடத்தை மையமாகக்கொண்டு குறிப்பிடப்படுகிறது.

எ.டு.

1. தீவாந்தரவவரை கீழத் தீவுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட அவரைவகை
A bean from the eastern islands; vicia faba.
காபுலியவரை (சா.அ.)

2. சோடாப்புல் சதுப்பு நிலங்களிலும் நீர்நிலைகளிலும் வளரும் புல்வகை *(சா.அ.)*
Cotappul A perennial grass found in the marshes and still waters ; panicum pauldosum.

நிறம்

நிறத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை.

1. சிகப்புநெல்லி செந்நிறக்காய்காய்க்கும் நெல்லி (சா.அ)
Cikappunelli A gooose berry tree bearing red fruits.

அயிற்பூகம் (சா.அ.) அயிற்பூகமரம் (சி.வை.அ.), செந்தாமிய நெல்லி (சி.வை.அ.) செந்தாமியம் (சா.அ.), செந்நெல்லி (சா.அ.), செந்நெல்லிமரம் (சி.வை.அ.), செம்மராகிதம் (சா.அ.), செம்மராகிதமரம் (சி.வை.அ.) தொட்டிபாகிதம் (சா.அ.), தொட்டிபாகிதமரம் (சி.வை.அ.)

2. சிவப்பவரை சிவப்புப்பூ பூக்கும் அவரை (த.பே.அ.)
Civappavarai Country bean bearing red flowers.

இடும்பேரகச்செடி (சி.வை.அ.), இடும்போகம் (சா.அ.), சிகப்பவரை (சா.அ.), சேலிரு (சா.அ.), சேலிருவரை (சி.வை.அ.)

உயர்வான பண்பு

உயர்வான பண்புகளைக் கொண்ட தாவரங்கள் உள்ளன என்று மரஇனப்பெயர்த்தொகுதி - 2ல் நோக்குநூல்கள் மூலம் கூறப்பட்டுள்ளது.

சடைப்பருத்தி செம்மண் நிலத்தில் விளையும் உயர்ரகப் பருத்தி (த.பே.அ.)
Cataippayaru A superior kind of cotton grown in red sail.

அடுக்குப்பருத்தி (த.பே.அ.)

சம்பா உயர்ரக நெல்வகை (மலை.)
Campa A superior kind of paddy.

சம்பாநெல் (சா.அ.) , சாலிகம் (சா.அ.)
சுவேதசாலி (சா.அ.)

யானையறுகு பெரிய அறுகம்புல்வகை
Yanaiyaruku Large harialli grass.

ஆனையறுகு (த.பே.அ.) ஐந்து கீலறுகு (சா.அ.), ஐந்துசீலறகு (சி.வை.அ.), கசந்தலை (சா.அ.), கயந்தலை (சா.அ.), கயந்தலையறுகு(சி.வை.அ.), தீர்க்கவறுகு (சா.அ), பிப்பிலாச வறுகு (சி.வை.அ.), பிப்பாலசம் (சா.அ.), பெரிய அறுகு (சி.வை.அ.), பேரறுகு (த.பே.அ.), மாதிபா (சா.அ.), விகசனாதி (சா.அ.), விகசனாதியறுகு (சி.வை.அ.) *(14)*

புதுமை

புதுமையான கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன என்பதைப் பின்வருமாறு சுட்டப்படுகிறது.

1. சகஸ்திரபத்திம் ஆயிரவிதழ்த் தாமரை (சா.அ.)
Pattiram Thousand - petalled lotus.

2. சிவப்பவ்ரை சிவப்புப் பூக்கும் அவரை (த.பே.அ.)
Civappavarai Country bean bearing red flowers.

இடும்பேரகச்செடி (சி.வை.அ.), இடும்போகம் (சா.அ.), சிகப்பவரை (சா.அ), சேலிரு (சா.அ.), சேலிருவவரை (சி.வை.அ.)

3. சீலம்பாயறுகு பாய்போல் படரும் அறுகு (த.பே.அ.)
Cilampayaruku A kind of cynodon grass spreading like a mat

4. செந்தெங்கு செந்நிறக் காய் காய்க்கும் தென்னை (த.பே.அ.)
Centenku A kind of coconut palm bearing red fruit.

சிவப்பி (த.பே.அ.), செவ்விளை (ஜீ.)

ஒப்புருச்சொல்

என்பது வடிவத்தில் ஒன்றாகவும் பொருளில் வேறுபட்டும் அமையும் முறையாகும். மரஇனப்பெயர்த் தொகுதி[2] நோக்கு நூலில் இடம்பெற்றுள்ள ஒப்புருச்சொல்லில் பல வேறுபாடுகள் காணப்படுவதைப் பின்வருமாறு சுட்டலாம்.

1. தேவதாளி[1] ஆனைமலையில் காணப்படும் ஒரு மரம் (த.பே.அ.)
tevatali A medium tree found in Anaimalai hills in Coimbatore district ; Lansium anamallayanum.

சந்தனவிரை (சா.அ.), சந்தனைவரி (சா.அ.), சைவம் (சா.அ.)

தேவதாளி[2] தாளிக்கொடிவகை (சா.அ.)
tevatali A kind of bind - weed (tali)
கூகைதானி (சா.அ.)

2. தீர்க்கபத்திரம்[1] கசப்புக் கொடிவகை (சா.அ.)
tirkkapattiram A better creeper
தீர்க்கபத்திரம்[2] வெள்ளைப்பூண்டு வகை (யாழ்.அக)
tirkkapattiram A variety of garlic
தீர்க்கபத்திரம் (யாழ். அக)

3. *திறிடகாண்டம்*[1] *கொடிவகை (சா.அ.)*
tiritakantam A creeper
திறிடகாண்டம்[2] *வாசனைப் புல்வகை (சா.அ.)*
A fragrant grass

4. *தினை*[1] *சிறுதானிய வகை*
tinai *தினைக்காலுள் யாய் விட்ட கன்று மேய்க்கிற்பதோ (கலித். 108.33)*
Italian millet, cereal, setaria italica.

அலைத்திசம் (சா.அ.) இளடி (மலைபடு. 169), உட்டணம் (சா.அ.), எனம் (ஜீ), ஏலன் (சா.அ.), ஏனம் (சா.அ,), கக்காரம் (சா.அ.), கங்குர் (சா.அ,) காற்செபம் (சா.அ.), கானகவிருத்தி (சா.அ.), சகத்திரம் (சா.அ.), சித்திரத்தண்டுலம் (சா.அ.), சீனத் தானியம் (சா.அ.), செயமாகம் (சா.அ.), செழுமைபிறி (சா.அ.), சை (சா.அ.), சைவங்கம் (சா.அ.), திட்டி (மலை.), திணை (F.T.C) திருட்டி (சா.அ.),நிரியம் (சா.அ.), பாண்டுபோசனம் (சா.அ.), பைந்தினை (த.பே.அ.), போந்துகாதினை (சா.அ.), மஞ்சள் தினை (சா.அ), (25)

தினை[2] *ஒருவகைப்புல்*
Paddy field grass ; Paspalidium geminatum.
பொடிவரகு (த.பே.அ.)

5. *செம்பாளை*[1] *சிவப்பு நெல்வகை (த.பே.அ.)*
Cempalai A kind of red paddy
தில்லைக்கட்டை (த.பே.அ.)
செம்பாளை[2] *மரவகை (சா.அ.)*
Cempalai A tree

6. *செந்தாழை*[1] *செந்நிறமான தாழை*
Centalai Red species of screw - pine

சிவப்புமடல் (சா.அ.), சிவப்பு மடற்தாழை (சி.வை.அ.), துவர்க்கண்டல் (தைலவ - தைலவ 135), நெடுநீலி (சா.அ.), நெடுநீலிமரம் (சி.வை.அ.), பயனீகரி (சா.அ.), பயனீகரிமரம் (சி.வை.அ.) பீலகயம் (சா.அ.), பீலகயமரம் (சி.வை.அ.), முசலிகா (சா.அ.), முசலிகாமரம் (சி.வை.அ.)

செந்தாழை[2] நெல்வகை (குருகூர்ப்.58)
Centalai A kind of paddy

காண்க.

குறுக்குநோக்கீடு மரஇனப்பெயர்த்தொகுதி-2ல் இடம் பெற்றுள்ளன.

எ.டு.

1. சிங்கரா நீர்ப்பூடுவகை
Cinkara காண்க. குபேரகம்
Singhara nut, aquatic herb; Trapa bispinosa

சிங்கடாபருப்பு (சா.அ.), சிங்காரக்கோட்டை (த.பே.அ.), சிங்காரி (கு.பா.), சிரிங்காடகம் (சா.அ.), பண்ணிமோந்தான் கிழங்கு (கு.பா.), பன்றிமொத்தை (சா.அ.), பன்றி மொத்தைச் செடி (சி.வை.அ.), முள்ளிக்காய் (கு.பா)

2. சிவலிங்கமரம் அழகிய நீண்ட மரவகை (சா.அ.)
Civalinkamaram காண்க : கலிக்கிமரம்.

சாம்பிராணி (த.பே.அ.), சாம்பிராணி மரம் (சி.வை.அ.), தூபவிருட்சம் (சா.அ.), மாவகம் (த.பே.அ.), மாவாகம் (த.பே.அ), மாவுக்காய் (த.பே.அ.)

3. சிற்றழிஞ்சில் அழிஞ்சில் வகை (த.பே.அ.)
Cirralincil காண்க கோலி
A Cute leaved privet, small tree ;
Ligustrum perrottettii.

4. செவ்வந்தி பூஞ்செடிவகை (த.பே.அ.)காண்க
அக்கரகாரம்[2]

5. மலைநாரத்தை சிறுமரவகை (த.பே.அ.)
காண்க : குறுந்துமுள்தழை

தலைச்சொல்லிற்குப்ள பொருள் பார்த்ததன் ஆதாரமாக நோக்கு நூல்கள் சங்க இலக்கியங்கள், அகராதிகள், மருத்துவ நூல்கள், ஆங்கில நூல்கள் போன்றவை கையாளப்பட்டுள்ளன.

நோக்கு நூல்கள் அதிகமாக இருந்ததால்தான் எண்ணிக்கை தரப்பட்டுள்ளன. குறைவாக இடம்பெற்றமைக்கு எண்ணிக்கை தரப்படவில்லை. நோக்கு நூல்கள் இன்றி எந்த ஒரு ஆய்வும் சிறக்காது என்பதை இக்கட்டுரையின் மூலம் புலப்படுத்தப் பட்டுள்ளது. மூலிகை ஆராய்ச்சிக்கும், பயன்பாட்டுக்கும் தாவரங்கள் பற்றிய ஆராய்ச்சிக்கும், அகராதி உருவாக்கத்திற்கும் இந்த அகராதி நோக்குநூலாக அமைகிறது.

எழுத்துப்பெயர்ப்பு

வி.மணிபாலா
தஞ்சாவூர்

மொழிப் பயன்பாட்டின் அடிப்படை கருத்துப் பரிமாற்றமே ஆகும். ஒவ்வொரு மொழியின் வரலாற்றுப் போக்கிலும் இலக்கிய இலக்கணங்கள் தோற்றம் பெறுகின்றன. இதன் அடிப்படையிலேயே அகராதி உருவாக்கலும் நடைபெறுகிறது. சொல்லின் பொருளை அறிந்துகொள்ள அகராதிகள் பயன்படுகின்றன. காலந்தோறும் பயன்பாட்டில் இருக்கும் சொல் மற்றும்சொற் தொகுதிகளுக்குச் சரியான பொருளை உணர்த்துவதாக அகராதிகள் அமைகின்றன.

அகராதி – உருவாக்கம்

தனிமனிதனால் உருவாக்கப்படும் அகராதிகளும், பலர் ஒரு குழுவாக அமைந்து உருவாக்கும் அகராதிகளும் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையிலேயே அமைந்து காணப்படுகின்றன. காலந்தோறும் பல்வேறு பயன் பாட்டாளர்களின் பயன்பாட்டு நோக்கிற்கு ஏற்பப் பல்வேறு அகராதிகள் உருவாக்கம் பெறுகின்றன. பிற்காலத்தில் உருவாக்கப்படும் அகராதிகளுக்கு முன்னர் வந்த அகராதிகளும் அதன் பதிவமைப்பு நடைமுறைகளும் சிறந்த வழிகாட்டிகளாய் உள்ளன. இவ்வாறு அகராதி உருவாக்க நடைமுறைகளில் இருந்து அகராதிக் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன.

அகராதியின் வளர்ச்சி

ஒரு மொழியில் காணப்படும் அகராதிகள் அந்த மொழியின் வரலாற்றையும் வளர்ச்சியையும் காட்டும் கண்ணாடி போன்று விளங்குகிறது. ஒரு அகராதியில் காணப்படும் சொற்களின் எண்ணிக்கையைக் கொண்டு அம்மொழி அகராதி எந்த அளவிற்கு வளர்ந்துள்ளது என்பதை ஓரளவிற்குக் கணித்துக் கூறலாம். அம்மொழி எந்தெந்த துறையில் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதையும் அறிந்துகொள்ள ஏதுவாக அமைகிறது.

அகராதிக் கலை என்பது மிகப்பழைய காலத்தில் இருந்து வாழ்ந்து, வளர்ந்து வரும் கலையாகும். தமிழ்மொழியில் தொல்காப்பியரின் காலந்தொட்டே இக்கலை வளர்ந்து வருவதைக் காணலாம். இதன் அடிப்படையிலேயே நிகண்டுகளும் தோற்றம் பெற்றுள்ளன என்று அறிஞர்கள் குறிப்பிடுவதைக் காணலாம். மொழியின் பல்வேறு அமைப்புக் கூறுகளில் மிக எளிதாக மாறும் தன்மை கொண்டது சொல்லும் பொருளும் ஆகும். சொல் மற்றும் பொருளின் தன்மைகளையும் செயற்பாடுகளையும் நெறிமுறைப்படுத்துவது சொற் பொருண்மையியல் ஆகும். மொழியியல் ஆய்விலும் அகராதித் தொகுப்பிலும் ‘சொற்பொருண்மை’ மிக முக்கிய ஒன்றாகக் கருதப்படுகிறது.

எழுத்துப்பெயர்ப்பு

ஒவ்வொரு மொழிக்கும் உரிய எழுத்துகள் ஒலிப்புமுறை, எழுத்திணைவு ஆகிய நிலைகளுக்கு ஏற்ப வேறுபட்டு காணப்படுகின்றன. பிறமொழிகளுக்கு உரிய ஒலிப்பு நெறியையும் அறிந்து கொண்டால்தான் அவற்றைச் சரியாக உச்சரித்து அறிந்து கொண்டு பேச முடியும்.

எழுத்துப்பெயர்ப்பு என்பது ஆங்கிலத்தில் ‘Transliteration’ எனக் குறிப்பிடப்படுகின்றது. ‘Transliteration Table’ என்பது தமிழில் ‘தமிழ் எழுத்துகளுக்கு ஏற்ற ஆங்கில எழுத்துகளைக் குறிக்கும் அட்டவணை’ எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. ஏ.சிதம்பரநாத செட்டியார் ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் ‘Transliteration’ என்பதற்கு ‘எழுத்துப் பெயர்ப்பு’ என்பதே இணையான சொல்லாகக் குறிப்பிடுகின்றார். ஒருசொல் பிறமொழியில் இருந்து கடன் வாங்கப்படும்பொழுது எழுத்துப் பெயர்ப்பில் பேச்சுமொழி சொல்லே பயன்படுத்தப்படுகிறது. சொல்லையும் சொற் பொருளையும் அறிதல்போல் ஒலிப்பு முறையை அறிதலும் மொழிக் கற்றலின் அடிப்படைக் கூறாகும். எனவேதான் மொழிக் கற்றலுக்கான கருவியாக விளங்கும் அகராதிகளில் ஒலிப்புநெறியும் கொடுக்கப்படுகின்றது.

‘க’ என்னும் எழுத்து மூன்று வகைப்பட்ட ஒலிப்பு முறையை உடையது. அதாவது கப்பல் - Kappal, தங்கம் - Thangam, பகல் - Pahal என வேறுபட்டு ஒலிப்பதைக் காணலாம்.

காகம் என்னும் சொல்லில் முதல் கா - K எனவும்,

இரண்டாவது க - h எனவும் ஒலிக்கப்படுகின்றது. ஒருமொழிக் குள்ளே இயல்பாவும் பிறமொழிக் கலப்பாலும் உள்ள ஒலிப்புமுறை வேறுபாடுகளையும் அகராதிப் பதிவில் காட்ட வேண்டியது அவசியம் ஆகும்.

"கிரியா அகராதி" ஒரு மொழியின் சொல் ஒவ்வொன்றிற்கும் மற்றொரு மொழியில் குறியீடு தந்து எழுதுதல் 'Transliteration' எனப் பொருள் தருகிறது. இருமொழி அகராதிகளில் தரப்பெறும் இவ்வகையான எழுத்துப்பெயர்ப்பு மூலமொழியின் எழுத்துமுறையை அறியாத ஒருவர் இவ்வெழுத்துப் பெயர்ப்பின் மூலம் குறிப்பிட்ட சொல்லைக் கண்டு பொருளினை அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்படு கின்றது. முதன்முதலில் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் இம்முறை கையாளப்பட்டுள்ளது. ஆங்கில எழுத்துகளைக் கொண்டு தமிழ்ச் சொற்கள் எழுத்துப் பெயர்ப்புடன் குறிப்பிடப் பட்டு உள்ளது.

அகராதி வகைகளுக்கு ஏற்பவும் பயன்பாட்டாளர் வேறுபாட்டிற்கு ஏற்பவும் பதிவில் தரப்பெறும் மொழிகளில் எழுத்துப்பெயர்ப்பு இரண்டு வழிகளில் நிகழ்த்தப்படுகின்றன.

1. நேரடி எழுத்துப் பெயர்ப்பு
2. மாற்றுநிலை எழுத்துப் பெயர்ப்பு

ஆகியனவாகும்.

தமிழில் இரண்டு வகையான எழுத்துப் பெயர்ப்பு களாலும் புதுச்சொற்கள் படைக்கப்படுகின்றன.

1. நேரடி எழுத்துப் பெயர்ப்பு

நேரடி எழுத்துப் பெயர்ப்பில் கடன்பெறும் சொற்கள் ஒலிநிலையில் எவ்வித மாற்றமும் இன்றி ஏற்புமொழி எழுத்துகளில் எழுதப்பெறும். சான்றாக,

கவர், கார்டு, சினிமா, பஸ், காப்பி, புக், நோட், பென், பென்சில், வேன், பில் போன்றவையாகும். அறிவியல் நூல்களில் அறிவியல் கலைச்சொல் அதிகமாக நேரடி எழுத்துப்பெயர்ப்புச் செய்யப் பெற்றுப் பயன்படுத்தப்படுகின்றன.

அந்தஸ்து, ஆஜர், உஷ்ணம்,ஜன்னல், ஜப்தி, கச்சேரி, கிராக்கி, கோஷம், சேமியா, பங்களா, பத்திரிகை, பூஜை போன்றவை பிறமொழிச் சொற்களாகும்.

2. மாற்றுநிலை எழுத்துப்பெயர்ப்பு

பிறமொழிச் சொற்களை எழுத்துப் பெயர்ப்புச் செய்யும் பொழுது தமிழ் ஒலி அமைப்பிற்கு ஏற்றவாறு தகுமொழி ஒலிகளை, எழுத்துகளை மாற்றி அமைப்பது மாற்றுநிலை எழுத்துப் பெயர்ப்பாகும். தமிழில் பயன்படுத்தப்பெறும் கிரந்த எழுத்துகள் தமிழ் எழுத்துகளாக மாற்றியமைக்கப்பெறும். மாற்றுநிலை மற்றும் நேர்நிலை எழுத்துப்பெயர்ப்புச் சொற்கள் ஒரே சூழலில் பயன்படுத்தப்பெறினும் அவற்றுள் எந்தவிதமான மயக்கமும் ஏற்படுவதில்லை. அதாவது,

ஆக்ஸிஜன் - ஆக்சிசன்
டெலிஃபோன் - டெலிபோன்
பேன்ஸி - பேன்சி

என்று இவ்வாறு வரும்.

ஒருமொழியில் இல்லாத சொற்களைக் கடனாகப் பெற்று மற்றொரு மொழியில் எழுத்து (வரி) வடிவத்தில் எழுதும்போது பலவிதச் சொற்களைப் பற்றி அறிந்துகொள்ள இயலுகிறது. இதனால், பல்துறை சார்ந்த அறிவு பெருகுகின்றது. எனினும் இவ்வகையில் சொற்களை மாற்றும்போது மூலமொழிச் சொல் மாறாது இருக்கவேண்டும் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

திவாகரம், சூடாமணி, நிகண்டு - பூப்பெயர்கள் ஒப்பீடு

சு.மதிவாணி
தஞ்சாவூர்

தொல்காப்பியரது காலத்திற்குப் பின் தமிழ் இலக்கியப் பரப்பும் படைப்பும் விரிந்தன. சமயம் சார்ந்த இலக்கியங்கள் பல தோன்றின. அவை தத்தம் சிறப்பினை நிறுவப் போராடின. வடமொழியின் செல்வாக்கும் தமிழில் மிகுதியாகப் படியத் தொடங்கியது. தமிழ் மக்களின் பண்பாடு, மொழி இவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ்மொழியின் சொற்றொகை பெருகியது. மாறிவரும் மொழி அமைப்பையும், சொற்றொகுதி களையும் பிற்காலத்தவரும் புரிந்துகொண்டு பயன்பெறும் வகையில் செய்யுள் நடையினாலான நிகண்டுகள் தோற்றம் பெற்றன.

நிகண்டுகளின் தொடக்கம் தொல்காப்பியம் எனலாம். இந்நூலின் உரியியல் பகுதி இதற்குச் சிறந்த உதாரணமாகும். மேலும் இடையியல், மரபியல் பகுதிகளிலும் சொற்பொருள் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தின்,

> **"ஒருசொல் பல்பொருட்கு உரிமை தோன்றினும்**
> **பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்"**
> **(தொல். நூ. 297)**

என்ற நூற்பாவின் அடிப்படையில் நிகண்டுகளின் 11 - 12 ஆம் தொகுதிகள் அமைக்கப்பெற்றுள்ளன.

இன்று கிடைத்துள்ள தமிழ் நிகண்டுகளுள் முதலாவதாக வைத்து எண்ணப்பெறுவது சேந்தன் திவாகரம் ஆகும். திவாகரம் தொடங்கிப் பிங்கலத்தை, சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு என இருபதாம் நூற்றாண்டுவரை பல நிகண்டுகள் வெளி வந்துள்ளன. இவற்றுள் திவாகரம் மற்றும் சூடாமணி நிகண்டுகளின் மரப்பெயர்த் தொகுதியில் இடம்பெறும் பூக்கள் குறித்த சொற்களை ஒப்பிட்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

சேந்தன் திவாகரத்தின் காலம் கி.பி.8ஆம் நூற்றாண்டாகும். இதன் ஆசிரியர் திவாகரர் ஆவார். சூடாமணி நிகண்டு கி.பி.16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் ஆசிரியர் மண்டல புருடர் ஆவார்.

நிகண்டு – விளக்கம்

'நிகண்டு' என்னும் சொல்லுக்குக் 'கூட்டம் அல்லது தொகுதி' என்று பொருள். இன்ன சொல்லுக்கு இன்ன பொருள் என்றும், இன்ன பொருளுக்கு இன்ன சொல் என்றும் சொற்பொருள் குறிக்கும் நூல் 'நிகண்டு' ஆகும். இவ்வகையில் பல்வகையான சொற்களின் கோவையாகக் களஞ்சியமாக நிகண்டுகள் அமைந்துள்ளன.

அமைப்பு

திவாகரம் தெய்வப்பெயர்த்தொகுதி, மக்கட்பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த்தொகுதி போன்ற பன்னிரு தொகுதி களைக் கொண்டது. சூடாமணியும் இப்பன்னிரு தொகுதிகளை உடையது. திவாகரத்தின் 'தெய்வப்பெயர்' என்பது சூடாமணியில் 'தேவப்பெயர்' என மாற்றம் பெற்றுள்ளது.

மரப்பெயர்த் தொகுதி

திவாகரம், சூடாமணி ஆகிய இரு நிகண்டுகளிலும் நான்காவதாக இடம்பெறுவது மரப்பெயர்த் தொகுதியாகும். திவாகர மரப்பெயர்த்தொகுதி 1.மரம், 2.மர உறுப்பு, 3.செடி, 4.பயிர், 5.கொடி, 6. பூ, உறுப்பு எனும் நிரலில் அமைந்துள்ளது.

சூடாமணி நிகண்டில் முதலில் மரம், செடி, கொடி, பூ என்பன கலந்து வருமாறும் பின்னர் பல்வேறு மரப்பெயர்களும், அடுத்துப் பயிர், புல் முதலியனவும் அதன்பின் மர உறுப்புகளும் தரப்பட்டுள்ளன. இவற்றை அடுத்து மரச்செறிவு, மரப்பொந்து, சோலை, காடு, தூறு, குறுங்காடு, காவற்காடு போல்வனவும் தரப் பட்டுள்ளன. பின்னர் நீர்ப்பூக்கள் நிரல்படுத்தப்பட்டுள்ளன.

பூக்கள்

தமிழ் மரபில் பூக்கள் மங்கலப் பொருட்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இறைவனுக்குரிய பூசைப் பொருட்களுள் மலர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஐந்திணைக்குரிய கருப்பொருட்

களுள் ஒன்றாக பூக்கள் இடம்பெறுகின்றன. இத்தகு சிறப்பினை யுடைய மலர்கள்பல திவாகரம், சூடாமணி நிகண்டுகளில் கூறப் பட்டுள்ளன. இவற்றில் குறிஞ்சி, முல்லை, தாமரை, கைதை, மராம்பூ ஆகிய பூக்கள் மட்டும் ஒப்பீட்டிற்காக எடுத்துக் கொள்ளப் படுகிறது.

திவாகரத்திற்கும், சூடாமணி நிகண்டிற்கும் கால இடைவெளி 8 நூற்றாண்டுகளாகும். இருப்பினும் இவ்விரு நூல்களும் கூறும் பூக்களின் ஒருபொருள் பலபெயர்ச் சொற்கள் பெரும்பான்மையும் ஒன்றுபடக் கூறியுள்ளன. மேலும் இரு நிகண்டுகளிலும் வடமொழிச்சொற்கள் அதிகம் காணப்படுகின்றன. இது அக்காலத் தமிழ் இலக்கியங்களில் ஏற்பட்ட வடமொழித் தாக்கத்தைப் புலப்படுத்துகின்றது.

பூவின் பொதுப்பெயர்

திவாகரமும், சூடாமணி நிகண்டும் பூவின் பொதுப் பெயர்களைக் கூறுகின்றன. திவாகரம் பூ என்பதன் பிற பெயர்களாக அலர், தார், அலரி, போது, சுமம், குசுமம், மலர், இணர், வீ எ ஒன்பது பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது.

சூடாமணி மேற்கூறியவற்றுள் அலரி, சுமம் என்பதனை விடுத்து சுமனசம், தாமம், துணர் என்னும் புதிய சொற்களைக் கூறியுள்ளது.

சங்க இலக்கியங்களில் சுமம், சுமனசம், சூசுமம் என்ற சொற்கள் தவிர பிற சொற்கள் அனைத்தும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

"கள் கமழ் அலர தண் நறுங் காவி" (நற். 123 : 6)
" ....முடிபு அழிபு, இழிபு
தலை இறுபு தாரொடு புரள" (பரிபா. 2 : 41)

மேற்கூறப்பட்ட அலர், தார் என்பன முறையே மலர், மாலை என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளன. அலர் - பழமொழி (பரிபா.11-65), தார் - ஒருவகைப்படை (பதிற்று.24-4), ஒழுங்கு (பதிற்று.64-7) என்ற பொருள்களிலும் கையாளப்பட்டுள்ளது. பூ, மலர் என்ற சொற்களே இன்று வழக்கில் காணப்படுகின்றன.

(எ.டு.) பூச்சொரிதல் விழா, மலர் வணிகம், மலர்வளையம்

குறிஞ்சி

குறிஞ்சி தமிழ்நாட்டிற்குரிய செடியாகும். இதன் மலர் நீலநிறமானது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் இயல்புடையது. குறிஞ்சி என்னும் இப்பேரினத்தில் இதுவரை 192 சிற்றினங்கள் கண்டுபிடித்துக் கூறப்பட்டுள்ளன.

திவாகரம் குறிஞ்சியின் பெயர்களாகக் குறிஞ்சிசகசரி, கோணடரங்குறிச்சி ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளது.

சூடாமணி வாடாக்குறிச்சி, குறிஞ்சி, மழை வண்ணக் குறிஞ்சி எனக் குறிப்பிட்டு முறையே குரவகம், குரண்டகம், பாணம் என்ற சொற்களைக் கூறியுள்ளது. மேலும் பேரீந்து, கோட்டம், நாயுருவி என்னும் பெயர்களைக் குறிப்பிட்டு முறையே கர்ச்சூரம், குரவம், கரமஞ்சரி என்ற பிறசொற்களைக் குறிப்பிடுகிறார். இதன்மூலம் மணடலபுருடர் குறிஞ்சியின வகைகளை அறிந்து அவற்றிற்கு வழங்கப்பட்ட பெயர்களைக் கூறியுள்ளார் என்பது புலனாகும்.

திவாகரம் கூறும் கோண்டரகம் என்பதே பிற்காலத்தில் மருவி குரண்டகம் என்று சொல்லப்பட்டிருக்கலாம். அதனையே மண்டலபுருடரும் கூறியிருக்கலாம்.

முல்லை

மல்லிகை இனங்களுள் ஒன்று முல்லையாகும். இது ஒரு கொடிப்பூ. முல்லையில் காட்டு முல்லை, கொடி முல்லை போன்ற பல வகைகள் உள்ளன.

திவாகரம் முல்லைக்கு மௌவல், தளவு, கற்பு என்னும் பெயர்களைக் குறிப்பிட சூடாமணி, தளவு, மாகதி, மௌவல், யுதிகை என்ற பெயர்களைக் கூறியுள்ளது.

திவாகரம் முல்லைக்கு ''கற்பு'' என்ற பெயரைக் குறிப்பிடுகிறது. இச்சொல் 'ஒழுக்கம்' என்ற பொருளையும் கொண்டுள்ளது. மகளிரின் கற்புக்கு முல்லையை உதாரணமாகக் கூறுவர். 'கற்பு' என்பதன் பொருள் 'ஒழுக்கம்' என்பதே பெரு வழக்காகும்.

கௌரா தமிழ் அகராதி கற்பு என்பதற்கு 'முல்லைக்கொடி' என்பதையும், களவுக்கூட்டத்துக்குப்பின் தலைவன் தலைவியை

முறைப்படி மணந்து புரியும் ஒழுக்கம் என்பதையும் குறிப்பிட்டுள்ளது. ஆயினம் முற்கூறியது போன்று 'ஒழுக்கமே' பெருவழக்காதலின் சூடாமணியார் அதனை விடுத்திருக்கலாம்.

முல்லை, மௌவல், தளவு என்னும் சொற்கள் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சூடாமணி கூறும் யூதிகை என்பதை இன்று நாம் காட்டுமல்லிகை, வனமுல்லை என்றெல்லாம் அழைக்கின்றோம்.

தாமரை

தாமரை மலர் 'தெய்வமலர்' என்னும் சிறப்பினை உடையது. ஆகையால் 'திருமலர்' (திவாகரம்) என்றும் கூறப்படும். இது நன்னீர்க்கொடியில் வளரும். செந்தாமரை, வெண்தாமரை என இருவகைப்படும்.

திவாகரர் தாமரையின் பெயராகப் புண்டரீகம், பதுமம், நளினம் போன்ற 21 பெயர்களைக் குறிப்பிடுகிறார். சூடாமணி ஆசிரியரும் இவ்வெண்ணிக்கையில் ஒன்றுபடுகிறார். ஆயினும் திவாகரத்தின் நீரோருகம், திருமலர் என்பது சூடாமணியில் தரப்படவில்லை. மாறாக குசேசயம், சரோசம் என்ற பெயர்கள் கூறப்பட்டுள்ளன. திவாகரத்தின் 'திருமால் கொப்பூழ்' என்ற சொல் சூடாமணியில் 'திருமாலுந்தி' என சொல் மாற்றம் பெற்றுள்ளது.

இவையன்றி சூடாமணி தாமரை மலரின் பெயர்களாக இறும்பு, இராசீவகம் என்பனவற்றைக் கூறியுள்ளது. திவாகரம் இவற்றைக் குறிப்பிடவில்லை.

சங்க இலக்கியங்கள் தாமரை, கமலம் என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளன.

> **"தாமரை புரையும் காமர் சேவடிப்**
> **பவளத் தன்ன மேனி..." (குறுந்... 4)**
> **"மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய" (பரிபா. 2 : 14)**

பிற்கால இலக்கியங்களில் தாமரை, கமலம், பங்கயம் ஆகிய சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

(எ.டு) பெண்களுக்குச் செந்தாமரை, கமலம், பங்கஜம் போன்ற பெயர் சூட்டப்படுகிறது. தாமரை மலர் இன்றும்

பயன்பாட்டில் உள்ளது.

தாழை (கைதை)

தாழை என்பது தாழைமரம். தாழம்பூ, தெங்கம்பாலை என்பனவற்றைக் குறிக்கும்.

"கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை" என்ற குறிஞ்சிப் பாட்டடியில் (83) வரும் 'கைதை' என்பதற்கு நச்சினார்க்கினியர் தாழம்பு என்று உரை கூறியுள்ளார்.

'தாழை தளவம் முட்டாள் தாமரை' என வரும் குறிஞ்சிப் பாட்டடியில் (80) தாழை என்பதற்கு அவர் 'தெங்கிற்பாளை' என்று கூறினார்.

'வீழ்த்தாழைத் தாள் தாழ்ந்த' (பட்டி. 84)
'மடல்தாழை மலர் மலைந்தும்' (பட்டி.88)

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் தாழையைக் குறிப்பிடுதலின், நச்சினார்க்கினியர், 'விழுதை உடைய தாழையின் அடியிடத்தே' என்றும் 'மடலை உடைய தாழையினது மலரைச் சூடியும்' என்றும் உரை வகுத்தார். ஆதலின் தாழையின் அடிமரத்தில் விழுது உண்டென்பதும், தாழை மடலாகப் பூக்கும் என்பது புலப்படுகிறது.

'தாழையின் அரும்பு வெண்மையானது, கூரிய முனை உடையது. மலர் மணம் வீசும் மடல்களை உடையது என்று நற்றிணை (19:1-5) கூறுகின்றது.

மடல் பெரிய தாழம்பூவைத் 'தடமலர்த்தாழை' (கலி.131:10) என்று கலித்தொகை கூறும். இப்பூ நறுமணம் கமழும், மஞ்சள் நிறமுடைய நீண்ட, அகன்ற மடல்களை உடையது.

தாழம்பூவின் மணம் கடற்கரைப் பாக்கத்துச் சிறுகுடியில் பரவியுள்ள புலால் நாற்றத்தைப் போக்குவதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. (நற்.203:4-7))(அகம் : 130 :8)

திவாகரம் தாழைக்குக் கண்டல், கேதகை, மடி, கைதை, முடங்கல் என்ற பெயர்களைக் கூறியுள்ளது.

சூடாமணி இவற்றுடன் முண்டகம், முசலி, மடி என்பன வற்றையும் பட்டிகை, பறிவை என்பனவற்றையும் கூறியுள்ளது. மேலும் முள்ளி என்ற பெயரும் தாழைக்கு உண்டென இரு நிகண்டுகளும் குறிப்பிடுகின்றன.

தாழை என்பது தாழம்பூ என்ற பெயரில் இன்றும் வழக்கில் காணப்படுகிறது.

பாலை

பாலை நிலத்தில் காணப்படும் பாலைப்பூவினை இலக்கியங்கள் குடசம், வெப்பாலை, பாலை என்ற பெயர்களால் குறிக்கின்றன.

திவாகரம் வெட்பாலைக்கு குடசம் என்னும் பெயரைக் கொடுத்துள்ளது.

சூடாமணி குடசம் என்பதுடன் கிரிமல்லிகை என்ற பெயரையும் கூறியுள்ளது.

சிலப்பதிகாரத்தில் *(18:157)* புறஞ்சேரியிறுத்த காதையில் 'குடசம்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் வெட்பாலை என்றார். எனினும் ஊர்காண் காதையில் வரும் 'குடசம்' என்பதற்கு அவர் 'செங்குடசம்பூ-' என்று உரை கூறுவர். ஆதலின் குடசத்தில் செம்மை வகை உண்டென அறியலாம். மேலும் 'குரற்றலைக் கூந்தல் குடசம் பொருந்தி (சிலம்பு 14 : 87) என்றமையாய் இப்பூவை மதுரை மகளிர் சூடுவர் என்பது அறியப்படும்.

குடசம்பூ இடைக்காலத்தில் தான் கிரிமல்லிகை என்று கூறப் பட்டுள்ளது. ஆகையினாலேயே திவாகரம் இதனைக் கூறவில்லை. இன்றும் குடசப்பாலை, குளப்பாலை, வெட்பாலை, கிரிமல்லிகை என்ற பெயர்கள் வழக்கில் உள்ளன.

தொகுப்புரை

திவாகரம், சூடாமணி நிகண்டுகளுக்கிடையே கால

இடைவெளி அதிகம் இருப்பினும் மேற்கூறப்பட்ட பூக்களும் அவற்றின் பிற பெயர்களும் பெரும்பான்மையும் தொடர்ச்சி யாகவே காணப்படுகின்றன

சூடாமணியில் சிறுபான்மை திவாகரம் கூறிய சொற்களை விடுத்துப் பல புதிய சொற்களைப் புகுத்தியுள்ளது. இதன் காரணம் கால இடைவெளியில் வழக்கில் ஏற்பட்ட மாற்றமாகும்.

இவ்விரு நூல்களிலும் கூறப்பட்ட பூக்கள் இன்றும் காணப் படுகின்றன. இவற்றுள் சில அதே பெயரையும் சில வேறு பெயரையும் கொண்டு விளங்குகின்றன.

இன்று அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் போன்ற பல நோக்கு நூல்கள் காணப்படுகின்றன. அன்றைய காலகட்ட வழக்குச் சொற்கள் அனைத்தையும் அறிந்துகொள்ள நிகண்டுகளே நமக்குப் பெரிதும் உதவுகின்றன.

அடிக்குறிப்பு

1. *கௌரா, தமிழ் அகராதி.*
2. *சீனிவாசன், கு., சங்க இலக்கியத் தாவரங்கள், பக். 712.*

பார்வை நூல்கள்

1. *கௌரா தமிழ் அகராதி*
2. *சற்குணம், மா., தமிழ் நிகண்டுகள் - ஆய்வு, இளங்கோவன் பதிப்பகம், 2002.*
3. *சீனிவாசன், கு., சங்க இலக்கியத் தாவரங்கள், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 1986.*
4. *தொல்காப்பியம், கழக வெளியீடு, 2000.*
5. *மாதையன், பெ., தமிழ் வரலாற்று நிகண்டுகள் (உருவ உள்ளடக்க ஆய்வு), தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 2002.*

மொழி அகராதிகள்

பெ. மின்னல்கொடி
தஞ்சாவூர்

முன்னுரை

"தமிழுண்டு தமிழ்மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்லதொண்டு"

என்ற புரட்சிக்கவியின் வாக்கிற்கிணங்கத் தமிழ்மொழியை வளப்படுத்துகின்ற செம்மைப்படுத்துகின்ற நூல்கள் காலந் தோறும் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உதவும் நூல்களில் அகராதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பிறமொழியினரும் நம் தமிழ் மொழியைப் புரிந்து கொள்வதற்கு, கற்றுச் சிறப்பதற்கு அகராதிகள் பெரும் பங்காற்று கின்றன. அகராதிகள் என்பவை சொற்களின் தொகுப்பாய், சொற்களின் களஞ்சிய மையமாகத் திகழ்கின்றன. மொழி அகராதிகள் என்ற இக்கட்டுரையின் வழியாக ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி மற்றும் பன்மொழி அகராதி இவற்றின் விளக்கங்கள் மற்றும் இவ்வகைகளின் அடிப்படையில் தோன்றிய அகராதிகள் ஆகியவற்றை இக்கட்டுரையின் வழியே காண விழைவோம்!

அகராதி விளக்கம்

ஒருமொழியிலுள்ள சொற்களைத் திரட்டி அதனை அகரவரிசைப்படுத்திப் பொருள்கூறும் நூலிற்கு அகராதி என்பது பெயராகும்.

ஒவ்வொரு தனிச்சொல்லிற்கான பொருளையும் அகராதிகள் விரிவுபடுத்திக் கூறுகின்றன.

மொழி அகராதிகள்

அகராதிகள் சொற்றொகுதி, அதில் இடம்பெறும் மொழிகள் ஆகியவற்றின் அடிப்படையில் பலவாறாக வகைப்படுத்தப் படுகின்றன. அகராதிகளில் இடம்பெறும் மொழிகளின் எண்ணிக்கை அடிப்படையில் அவற்றைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

மொழி அகராதிகள்

ஒருமொழி அகராதி இருமொழி அகராதி பன்மொழி அகராதி
என்ற 3 வகைகளின் கீழ் அடங்கும்.

ஒருமொழி அகராதிகள் (Monolingual Dictionary)

மூலமொழியும், இலக்குமொழியும் ஒரே மொழியாக இருக்குமானால் அதை ஒருமொழி அகராதி எனப்படும்.

தலைச்சொல் பகுதியும், பொருட்பகுதியும் ஒரே மொழியில் இடம்பெற்றாலும் அவையும் ஒருமொழி அகராதியாகும்.

தமிழ் - தமிழ், ஆங்கிலம் - ஆங்கிலம், இந்தி - இந்தி என அமையும் இவ்வகராதிகளில் பதிவுகளுக்குப் பதிவுச்சொல்லின் மொழியிலேயே பொருள் விளக்கம் தரப்பட்டிருக்கும்.

ஒருமொழி அகராதிக்கான சான்றுகள்

வ. எண்	ஆசிரியர்	அகராதி பெயர்	காலம்
1,	வீரமாமுனிவர்	சதுரகராதி	1732
2.	சந்திரசேகரப் பண்டிதர்	மானிப்பாய் அகராதி	1842
3.	நா.கதிரைவேற் பிள்ளை	தமிழ்ப்பேரகராதி	1899-1901
4.	C.W.கதிரைவேற்பிள்ளை	தமிழ்ச்சொல்அகராதி	1904
5.	பி.இராமநாதன்	இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப்பேரகராதி	1909
6.	த.வே.வீராசாமி (பதிப்பாசிரியர்)	பெருஞ்சொல் அகராதி	1988

இவ்வாறு ஒருமொழி அகராதி வகைகளில் பல்வேறு காலகட்டங்களில் அகராதிகள் தோன்றின. இனி அதன் சிறப்பியல்புகளைக் காண்போம்.

1. சதுரகராதி

வீரமாமுனிவரால் 1732-ல் இவ்வகராதி எழுதப்பட்டது. திவாகர நிகண்டு சூத்திர நிலையில் 12 தொகுதிகளை உடையது. இதில்,

1 - 10 தொகுதிகள் ஒருசொல் பலபொருள் தொகுதியாகவும்,
11-12 தொகுதிகள் ஒருபொருள் பலசொல் தொகுதியாகவும் அமைந்துள்ளது. இதனடிப்படையிலேயே சதுரகராதியானது.

சதுரகராதி

பெயரகராதி பொருளகராதி தொகையகராதி தொடையகராதி

என 4 வகைகளில் அமைக்கப்பட்டுள்ளதாலே இது சதுரகராதி (சதுர்-4) எனப் பெயரிடப்பட்டது.

பெயரகராதி → ஒரு சொல் பல பெயர் அகராதி 12,187 சொற்கள்
பொருளகராதி → ஒரு பொருள் பல சொல் அகராதி 2,168 சொற்கள்
தொகையகராதி → தொகைப்பெயர்களை உள்ளடக்கிய அகராதி
தொடையகராதி → எதுகைச் சொற்களைக் கொண்ட அகராதி

(i) குறில்கீழ் எதுகை
(ii) நெடில் கீழ் எதுகை

சதுரகராதியானது 552 பக்கங்களை உடையது. திருந்திய பதிப்பானது 1819-ல் எல்லீசு என்பவரால் பதிப்பிக்கப்பட்டது. தொடர்ந்து எட்டுப் பதிப்புகள் வெளிவந்தன. இவ்வகராதியில் மெய்யெழுத்து சிலயிடங்களில் புள்ளியில்லாமல் உள்ளது.

2. மானிப்பாய் அகராதி

இது யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய் அமெரிக்க மிஷன் என்ற அச்சுக்கூடத்தில் வெளியிடப்பட்டது.

சதுரகராதியை விட 4 மடங்கு பெரியது. இதில் 58,500 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இது தொடையகராதியைத் தவிர

பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி ஆகிய மூன்று அகராதிகளைக் கொண்டுள்ளது.

3. தமிழ்ப் பேரகராதி

தமிழ்ப் பேரகராதியானது,

1. பெயரகராதி
2. பொருளகராதி
3. தொகையகராதி
4. தொடையகராதி

என்று 4 நான்கு அகராதிகளைக் கொண்டது.

தலைச்சொல் பகுதியில் பெயர்ச்சொல் தவிர எஞ்சிய சொற்களின் இலக்கணக்குறிப்புகள், இலக்கணக் குறியீடுகள் மூலம் காட்டப்படுகின்றன.

1. பெயரெச்சம்
2. வினையெச்சம்
3. வினைமுற்று
4. ஏவல் வினைமுற்று
5. வியங்கோள் வினைமுற்று
6. குறிப்பு வினைமுற்று
7. உரிச்சொல்



4. தமிழ்ச்சொல்லகராதி

இவ்வகராதி எந்தப் பிரிவுகளுமின்றி, தற்போதைய அகராதி போன்று அ முதல் வௌ வரை அகரவரிசைப்படுத்தித் தந்த அகராதி. இது 3 தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

முதல் தொகுதி - 1904
2-ம் தொகுதி - 1910
3-ம் தொகுதி - 1923

சிறப்புகள்

(1) சொல்மூலம் (Rootwords - வேர்ச்சொற்கள்) தரப்பட்டிருந்தது.

(2) குறிப்பான் தரப்பட்டிருந்தது.

(எ.கா)

இலக்கணக் குறிப்பான்கள் - அமைச்சன் (பெ)

வட்டாரவழக்குக் குறிப்பான்கள் - உள்ளி (நா.வ.வழக்கு)

(3) ஒரு சொல்லிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட பொருள் இருக்குமானால் பொருள் பகுதியில் பொருள் எண்ணிக்கைத் தரப்பட்டிருந்தது.

கண் → (1) உறுப்பு[1]

(2) வேற்றுமை உருபு[2]

(4) குறுக்கு நோக்கீடு (Cross Reference) தரப்படுதல்

(i) அமைச்சன் - அரசனுக்கு ஆலோசனை வழங்குபவன்

மந்திரி

மந்திரி - காண்க அமைச்சன்

(ii) பூ - மலர் இதழ்களையுடையது

மலர் - காண்க பூ

ஒரு பொருள் தரும் பல சொற்கள் ஓரே அகராதியில் இருக்கு மானால் அச்சொற்களை அகர வரிசைமுறையில் எழுதி, முதலில் பொருள் கூறிய சொல்லை எழுதி, காண்க என்று கூறுதல் குறுக்கு நோக்கீடு.

(5) மேற்கோள்கள் தரப்பட்டிருத்தல்

(5) இருபதாம் நூற்றாண்டு தமிழ்ப் பேரகராதி

இவ்வகராதி 1600 பக்கங்களையும் 14,341 சொற்களையும் கொண்டு 2 தொகுதிகளாக 1909-ல் வெளிவந்தது.

சிறப்புகள்

(1) தமிழ்ப் பேரகராதி வரலாற்றில் விளக்கப்படங்கள் தந்த முதல் அகராதி இது.

(2) இதில் 4 பிரிவுகள் அடங்கியுள்ளன.

பெயர், பொருள், தொகை, தொடை என்ற 4 பிரிவுகள். இவ்வாறு இதன் சிறப்புகள் அமைந்துள்ளன.

6. பெருஞ்சொல் அகராதி

1988 - ல் த.வே.வீராசாமி அவர்களைப் பதிப்பா சிரியராகக் கொண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெளியீடாக முதல்தொகுதி வெளிவந்தது.

முதல் தொகுதி - 1988
2-ம் தொகுதி - 1989
3-ம் தொகுதி - 1992
4-ம் தொகுதி - 2002

சிறப்புகள்

1. வினையடியைத் தலைச்சொல்லாகக் கொண்டது.
2. ஒப்புருச் சொல்லை எண்களுடன் தருதல்
   மாலை[1]
   மாலை[2]
3. வினை வகைப்பாட்டு எண்ணைத் தருதல்
   கிரால் என்பார் ஒவ்வொரு வினைக்கும் ஒரு எண் அமைத்தார்.
4. குறுக்கு நோக்கீடு தரப்பட்டிருந்தது.
5. மேற்கோள்கள் கால வரிசைப்படி தரப்பட்டிருக்கும்.

பாவானந்தம் பிள்ளை அவர்களின் தற்கால தமிழ் அகராதி 1925-ல் வெளிவந்தது.

மேலும் அனவர்தம்பிள்ளை ஆகியோருடைய அகராதி களும் ஒருமொழி அகராதிகளுக்குச் சான்றுகளுமாகும்.

(II) இருமொழி அகராதிகள்

மூலமொழி ஒருமொழியாகவும், இலக்கு மொழி பிறிதொரு மொழியாகவும் இருக்குமானால் அது இருமொழி அகராதி எனப்படும். தலைச்சொல் பகுதி ஒரு மொழியிலும், பொருட்பகுதி பிறிதொரு மொழியிலும் காணப்படும் அகராதி இருமொழி அகராதி ஆகும்.

இவ்வகையில் தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ், தமிழ் - மலையாளம், மலையாளம் - தமிழ், தமிழ் - தெலுங்கு, தெலுங்கு - தமிழ், வடமொழி - தமிழ், தமிழ் - வடமொழி என இருமொழி அகராதிகள் உருவாகும்.

பதிவுச்சொற்களுக்கு இணையான பிறமொழிச் சொற்களை, பிறமொழிப் பொருளை அறிந்து கொள்வதே இவ்வகை அகராதிகளின் அடிப்படை நோக்கமாகும். இருமொழி அகராதிகள் மூலமொழியாளர் இலக்குமொழியில் நூல்களைப் படைக்கவும், இலக்கு மொழியாளர் மூலமொழி நூல்களை விளங்கிக் கொள்ளவும், தம் மொழியில் மொழி பெயர்க்கவும் பயன்படுகின்றன.

இருமொழி அகராதிக்கானச் சான்றுகள்

வ. எண்	ஆசிரியர்	அகராதி பெயர்	காலம்
1.	அந்தம் தெ புரொயன்சா	தமிழ்-போர்த்துகீசிய அகராதி	*1679*
2.	ஜான் பிலிப்ஸ் பெப்ரீசியஸ் ஜான் கிறிஸ்டியன் பிரெய்தாப்ட்	தமிழ் - ஆங்கில அகராதி	*1779*
3.	J.P. இராட்லர்	J.P. இராட்லர் அகராதி	*1834*
4.	வின்ஸ்லோ	வின்ஸ்லோ அகராதி	*1862*
5.	ஜே.எஸ்.சாண்டர்ல் முதன்மைப் பதிப்பாசிரியர்	சென்னைப் பல்கலைக்கழக பேரகராதி	*1911* திட்டம் தொடங்கிய ஆண்டு

1. தமிழ் – போர்த்துகீசிய அகராதி

1679- ம் ஆண்டு *16,546* பதிவுச்சொற்களைக் கொண்ட தமிழ் - போர்த்துக்கீசிய அகராதி அந்தம் தெ புரொயன்சா (Antem de Proensa) என்பவரால் அம்பலக்காடு என்னுமிடத்தில் அச்சிடப் பட்டது. இதில் வினைச்சொற்கள் நிகழ்கால வினை முற்றாக இடம் பெற்றிருந்தன. பெயரெச்சம், வினையெச்சம், பெயரடை, வினையடையும் ஏராளமான பேச்சு வழக்குச் சொற்களும் இடம் பெற்றிருந்தன.

இதில் போர்த்துகீசிய முறைப்படி, தலைச்சொல் பகுதியில் அகரவரிசை இடம் பெற்றிருந்தது. போர்த்துகீசிய மக்களின் தமிழ் கற்றலுக்காக இம்முறை கையாளப்பட்டது.

2. பெப்ரீசியஸ் அகராதி

தமிழ் - ஆங்கில அகராதியான இது *1779*-ம் ஆண்டு வெளிவந்தது.

இதற்குத் 'தமிழ் - இங்கிலேசுமாய் இருக்கக்கூடிய அகராதி' 'தமிழ் - மலபார் அகராதி' என்ற வேறு பெயர்களும் உள்ளன. வினைச்சொற்கள் நிகழ்கால வினைமுற்றாகவே அமைந்திருக் கின்றன. முதன்முதலின் 4 வகையான ஒப்புருச் சொற்கள் தரப்பட்டிருந்தன. அவை மா, மது, மனு, மாலை ஆகியன.

3. J.P. இராட்லர் அகராதி

இந்தத் தமிழ் - ஆங்கில அகராதியின்
முதல் தொகுதி - 1834 ம் ஆண்டு
2-ம் தொகுதி - 1836 - 37
3-ம் தொகுதி - 1839
4-ம் அகராதி - 1841
என்று 4 தொகுதிகளாக வெளிவந்தன.

சிறப்புகள்

1. வினைப்பதிவை அடுத்து வினையின் சொல் விரிவுகள் தரப்பட்டுள்ளன.

(எ.கா) அமைகிறது
- ந்தேன்
- வேன்
- ய
- ந்து
- த்து
- வாய்

2. செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றாவினை ஆகியவற்றிற்குக் குறிப்புகள் தரப்பட்ட முதல் அகராதியும் இதுதான்.

3. துணைப் பதிவுகள் தந்த முதலகராதியும் இதுவே.

4. வினைச்சொற்கள் நிகழ்கால வினைமுற்றுகளாக அமைந்துள்ளன.

4. வின்ஸ்லோ அகராதி (winstow Dictionary)

தமிழ் - ஆங்கில அகராதியாக 1862 -ல் வெளிவந்தது. முதன்முதலாக வினையடிகளைத் தலைச்சொல்லாகத் தந்த முதல் அகராதி இது. இதில் சொல்விரிவுகளும் ஏராளமாகத் தரப்பட்டுள்ளன.

5. சென்னைப் பல்கலைக்கழக அகராதி

1911-ம் ஆண்டு ஜே.எஸ்.சாண்ட்லர் அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இத்திட்டம் தொடங்கப் பட்டது. இதில் 1,17,762 பதிவுச்சொற்கள் இடம் பெற்றிருந்தன. பின்னிணைப்பையும் சேர்த்து 7 தொகுதிகளில் இது வெளி வந்தது. 1926-ல் வையாபுரிப்பிள்ளை இதன் முதன்மைப் பதிப்பாசிரியராய் இருந்தார்.

சிறப்புகள்

1. ஒப்புருச் சொற்கள் தனிப் பதிவுகளாகத் தரப்பட்டன. இதற்கு எண் தரப்பட்டுள்ளது.

(எ.கா.)

அகவர்[1] - akavar, n.< id. People of a country.
நாட்டில் வாழ்வார் (பொருள் - 220)

அகவர்[2] - akavar, n.<அகவு - Bards w rouse the
சூதர். நாளீண்டிய நல்லகவர் (மதுரைக் - 223)

2. பதிவுச்சொற்களுக்கு எழுத்துப்பெயர்ப்புத் தரப்பட்டுள்ளது.
3. வினையடிப் பதிவுகளாகத் தருகையில் தல், த்தல் விகுதியும் தரப்பட்டுள்ளது.

(எ.கா) 1. ஆக்கிரமி - த்தல் a kkirami -, IIU. tr. <a - mana
seizing, taking by tone : வலிந்து கவர்கை.

2. அடிதொடு-தல் ati-totu-, v.intr. <id + to take
om oath, by touching anothers teet'.

4. சொல்மூலம் தரப்பட்டது.
5. பதிவுச்சொற்களின் இனமொழிச்சொற்களும் தரப்பட்டுள்ளது.
6. செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றாவினை குறிப்புத் தருதல்.
7. வட்டார வழக்கு, கொச்சை வழக்கு, சைவ வழக்கு, கோவை வழக்கு, நாஞ்சில் வழக்கு எனும் பலவகைக் குறிப்பான்களைத் தருதல்.
8. குறுக்கு நோக்கீடு தரப்பட்டுள்ளது.
9. மேற்கோள்கள், சான்றுகள் தரப்பட்டுள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகராதி

தேவநேயப்பாவாணரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு முதல்தொகுதி 1985-லும், 2-ம் தொகுதி இரா.மதிவாணனை ஆசிரியராகக் கொண்டு 1993-லும் வெளிவந்தது.

சிறப்புகள்

1. சொல்மூலம் தரப்பட்டது.
2. இனமொழிச்சொற்கள் தரப்பட்டிருந்தன.
3. படங்கள் மூலம் விளக்கப்பட்டிருந்தது.

கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி

1992-ம் ஆண்டு பா.ரா.சுப்ரமணியனை ஆசிரியராகக் கொண்டு முழுக்க முழுக்கக் கணிப்பொறி உதவியோடு வெளிவந்த முதல் அகராதி இது.

கிரியா பதிப்பகத்தின் பெயரால் இவ்வகராதி வழங்கப் பட்டுள்ளது.

சிறப்புகள்

1. சொற்களுக்கு விளக்கமான சொற்பொருள் உள்ளது.ள
2. வழக்குச் சொற்கள் ஏராளமாக இடம்பெற்றுள்ளன.
3. இலங்கை வழக்குச் சொற்களும் இடம்பெற்றன.
4. ஆங்கிலச் சொற்கள் தமிழ்ப்படுத்தப்பட்டுத் தலைச்சொல்லாகத் தரப்பட்டுள்ளன. (எ.கா.) காப்பி
5. தேவையான இடங்களில் படங்கள் இடம்பெற்றுள்ளன.

பன்மொழி அகராதிகள்

மூலமொழியானது ஒரு மொழியிலும், இலக்கு மொழி ஒன்றிற்கு மேற்பட்டதாய் இருந்தால் அவ்வகராதிகள் இலக்கு மொழிகளின் எண்ணிக்கைக்கேற்ப மும்மொழி அகராதி (Trilingual Dictionary) நான்குமொழி அகராதி (Quadrilingual Dictionary) என வகைப்படுத்தப்படுகின்றன. இவை எல்லாமே பொதுவாகப் பன்மொழி அகராதிகள் எனக்குறிப்பிடப் பெறுகின்றன.

1846 - ல் எல்.எஸ்.டியூபியல், எல்.எம்.மௌசெட் இருவராலும் இலத்தீன் - பிரெஞ்சு தமிழ் அகராதி தொகுக்கப் பட்டுள்ளது.

வீரமாமுனிவர் 1742-ல் போர்ச்சுகீசு, இலத்தீன், தமிழ் அகராதியைத் தொகுத்துள்ளார்.

1780-ல் பிரெஞ்சு தமிழ் - தெலுங்கு அகராதி உருவாக்கப் பட்டது. இதன் கையெழுத்துப்படி பாரீஸ் நூலகத்தில் உள்ளது.

தமிழை மூலமொழியாய்க் கொண்ட பன்மொழி அகராதிகளும் வெளிவந்துள்ளன.

சந்துலாலா 1881 - ல் தமிழ் - தெலுங்கு - ஆங்கில - இந்துஸ்தானி மொழிகள் அடங்கிய பாஷ்ய ஒகாபுலரி Bhasliya vocabulary, *ஒன்றைத் தொகுத்துள்ளார்.*

பி.தங்கவேலு முதலியார் நாலுபான்ஷ ஒக்காபிலேரி (தமிழ் - தெலுங்கு - ஆங்கிலம் - இந்துஸ்தானி) எனும் பன்மொழிச் சொற்றொகுதி ஒன்றை 1905-ல் வெளியிட்டுள்ளார்.

முடிவுரை

இவ்வாறாக மொழி அகராதிகள் அதில் இடம்பெற்றுள்ள மொழிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒருமொழி அகராதிகள், இருமொழி அகராதிகள், பன்மொழி அகராதிகள் என்ற 3 நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி இவைகளின் காலந்தோறுமான வளர்ச்சிநிலை மொழியின் வளர்ச்சிக்கும், வளமைக்கும் அடிப்படையாய் திகழ்கிறது. பன்மொழி அகராதிகளும் அதிகளவில் உருவாக்கப்பட வேண்டும்.

துறைச் சார்ந்த அகராதிகள்

க. மீனேஸ்வரி
தஞ்சாவூர்

தமிழ்மொழியில் சொற்களுக்குப் பொருள்கூறும் பணி தொல்காப்பியக் காலம் முதலே நடைபெற்று வந்துள்ளது. தொல்காப்பியம் நூற்பா நடையில் அமைந்த ஓர் இலக்கண நூலாகும். தொல்காப்பியத்தில் கடினமான சொற்களுக்குப் பொருள்கூறும் உரியியல் எனும் பகுதி காணப்படுகிறது. அதனையடுத்துச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தொல்காப்பியத்தை அடியொற்றிச் சொற்களைத் தொகுத்துப் பல்வேறு வகைகளில் சொற்பொருள் கூறும் நிகண்டுகள் தோற்றம் பெறலாயின. நிகண்டுகள் பெருகிவரும் சொற் கூட்டத்தினைப் பல்வேறு வகைகளில் பாகுபடுத்திப் பொருள் கூறியுள்ளன. நிகண்டுகளில் சொற்களின் பொருள்களைக் கூறும் நிலையைத்தான் காணமுடிகின்றதே தவிரச் சொற்களை எளிதாகக்காணும் நோக்கீட்டு நெறிமுறைகளோ அகரவரிசை முறையே காணப்படவில்லை. நிகண்டுகள் செய்யுள் வடிவில் அமைந்திருந்ததால் ஒரு சொல்லுக்குரிய பொருளை எளிதில் கண்டுபிடிக்க இயலாத நிலை ஏற்பட்டது. சொல் எந்தத் தொகுதியைச் சார்ந்தது என்றும் பின் அந்தத் தொகுதி முழுவதும் படித்தாலன்றிப் பொருள் புரிவது கடினம் என்னும் நிலையும் ஏற்பட்டது. எனவே ஐயங்களை உடனுக்குடன் தீர்க்க இயலாத நிலை ஏற்பட்டது. இச்சிக்கலிலிருந்து விடுபடுவதற்கும் எளிதாகப் பொருள் புரிந்து கொள்ளவேண்டிய நிலை மாறுவதற்கும் அகராதிகள் உருவாக்கப்பட்டன.

"அகராதி" என்பது சொற்களை அகரவரிசையில் தொகுத்துத்தரும் நூல் ஆகும்.

துறைச்சார்ந்த அகராதிகள் என்பன அந்தந்தத் துறைத் தொடர்பான சொற்களைத் தொகுத்து அகரவரிசையில் தருவனவாகும். அத்துறைச் சார்ந்த அகராதிகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கிய வகை அகராதி

சிற்றிலக்கிய வகைகளை அகராதி முறையில் காண்பதற்கு வாய்ப்பாகவும், ஆய்வாளர்க்கும், ஆர்வலர்க்கும் எளிமையாகப் பயன்கொள்ளத் தக்கதாகவும், 'இலக்கிய வகை அகராதி' என்ற அகராதியைப் புலவர் இளங்குமரன் தொகுத்துத் தந்துள்ளார். இவ்வகராதிபால் இலக்கிய வகைகள் என்ன, அந்த இலக்கியம் குறித்த செய்திகளைப் புரிந்து கொள்வதற்குத் துணையாக அமைந்துள்ளது.

தமிழ் இலக்கணப் பேரகராதி

ஒரு சொல்லுக்கு சொல் விளக்கமும் மேற்கோளும், தமிழ் இலக்கணப் பெரும்பரப்பை விரிவு செய்யும் சொல் விளக்கங்களும், தமிழ் இலக்கணம் கற்போருக்கும், இலக்கண ஆய்வாளர்களுக்கும் கைவிளக்காகப் பயன்படக்கூடிய வகையில் தமிழ் இலக்கணப் பேரகராதியைப் பண்டிதவித்துவான் தி.வே.கோபாலையர் அகரவரிசையில் தொகுத்து தந்துள்ளார்.

சான்று

அகணி - மருதநிலத்திற்கு ஒரு பெயர் -
சொன்னநீர் வளமைத்தாய சுரமைநாட்டு அகணிசார்ந்து,
அனனிலம் - அனல் நிலம் - வெப்பமிக்க பாலைநிலம்

ஒருசொல்லுக்குப் பலபொருள் இருப்பின் அவற்றை அடுத்தடுத்துக் கொடுத்துள்ளார்.

ஆங்கில இலக்கணச் சொல் அகராதி

மொழி இயலும் அகராதியியலும் நாளும் புதுக்கோலம் பூண்டு வளர்ந்துவரும் இன்றைய சூழலில் பழமையான இந்த நூலைப் புதுப்பிப்பதில் பல சிக்கல்கள் தோன்றின. இன்றைய மாணவர்களின் தேவை, ஆர்வம், புரிந்துகொள்ளும் திறன் முதலானவற்றை மனத்திற்கொண்டு வழக்கிழந்த சொற்களையும் தொடர்களையும் நீக்கி கூட்டுச் சொற்களைப் பிரித்து, எடுத்துக்காட்டு, பிழை திருத்தம், மரபுத்தொடர் போன்ற செய்திகள் இவ்வகராதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

வட்டார வழக்குச் சொல் அகராதி

எழுதப் படிக்கத் தெரியாத கிராம மக்களுக்கும் நடைமுறை அறிவு அதிகம் என்பது இவ்வகராதியின் மூலம் தெரியவருகிறது. கல்வெட்டுக்களில் காணப்படும் சொற்களும் கிராமங்களில் புழக்கத்தில் இருந்தன என்பதையும் இவ்வகராதி விளக்குகிறது.

சான்று

எதிரா - வரும்ஆண்டு (வட்டார வழக்கு)

எதிராம் ஆண்டு - சோழர் கல்வெட்டு

கி. ராஜநாராயணன எழுதிய வட்டாரவழக்கு அகராதி

இவ்வட்டார வழக்கு சொல்லகராதியில் அனைத்து வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்துக் கொடுத்த அகராதியும் உண்டு. குறிப்பிட்ட ஒரே ஒரு வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்த அகராதியும் உண்டு.

மரபுத் தொடர் அகராதி

ஒரு மொழியில் மரபாகி வருகின்ற சொல்லும் பொருளும் மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளை ஒட்டியே அமைகின்றன. மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்ப மரபுத்தொடர்களும், பழமொழிகளும் தொன்று தொட்டு வழக்காகி விடுகின்றன. ஒன்றனை முன்னோர் எவ்வாறு அழைத்து வந்தனரோ அப்படியே வழிவழியாக வழங்கிவருவதனை மரபு என்பதற்கு இலக்கணமாகக் கொண்டனர்.

மொழிக்கு உரிய அடையாளங்களுள் ஒன்று மரபு. அத்தகைய மரபு திரியாமல் வழங்குவது மரபுத்தொடர் அகராதியாகும். *1995* கிரியா பதிப்பகத்தால் வெளிவந்த மரபுத்தொடர் அகராதி இதற்கு எடுத்துக்காட்டாகும்.

உவமைச்சொல் அகராதி

உவமைச்சொல் அகராதியில் பழமொழிகளைப் போன்ற சொற்றொடர் அமைப்பு பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

மூலிகைகள் மருத்துவகுண அகராதி

இயற்கையோடு இணைந்து வாழ்வு நடத்திய நமது முன்னோர்களின் பட்டறிவிலிருந்து தோன்றிக் கிளைத்ததுதான் இந்த சித்த மருத்துவம். பல்லாயிரக்கணக்கான ஆண்டு தொன்மை வாய்ந்தது. உலகின் எந்த நாட்டு வைத்திய முறையை விடவும் நம் நாட்டு வைத்திய முறை சிறந்தது என்பதற்கு சான்றாகத் திகழ்பவை மூலிகைகள் அகராதியாகும். நமது சான்றோர்கள் நமக்கு வகுத்துக் கொடுத்திருக்கிற வாழ்க்கை முறையும், வைத்திய முறையும் நம்மைக் காக்கவல்லவை. நமது வீட்டு சமையலறை லாபரட்டரியிலேயே தயாரிக்கக்கூடிய நம் எளிய மருந்துகள் தீங்கற்றவை, சிக்கனமானவை. பக்கவிளைவு ஏதும் இல்லாதவை. அந்த வகையில் இந்த பயனுள்ள மூலிகைகள் மருத்துவகுண அகராதியை என்.ஜனார்த்தனன் அவர்கள் அகரவரிசையில் தொகுத்து தந்துள்ளது சிறப்புடையதாகும். மேலும் இந்த அகராதியில் மூலிகைப் பொருள்கள் எவை எவை என்பதை தெரிந்து கொள்வதற்கு இவை பயனுடையதாக அமைந்துள்ளது.

எதிர்ப்பத அகராதி

ஒரு மொழியின் சொல்வளத்தைப் பெறுவதற்கு ஒருபொருட் பன்மொழிகளைப் போலவே எதிர்ப்பதங்களும் துணை புரிகின்றன. ஒரு சொல்லோடு தொடர்புடைய கருத்துக்களை ஒருபொருட் பன்மொழிகள் காட்டுகின்றன. அதுபோலவே எதிர்பதங்களும் ஒரு சொல்லோடு எதிர்முகமாகத் தொடர்புடைய கருத்துக்களைத் தெரியப்படுத்துகின்றன. ஒரு சொல்லுக்குள்ள நேர்முகப் பொருளும் எதிர்மறைப் பொருளும் இரு துருவங்களைப் போன்றவை. இந்த இரண்டு எல்லைகளுக்கு மிடையே எத்துணையோ பொருள்கள் மறைந்து கிடக்கின்றன. அவற்றையெல்லாம் சிந்திப்பதற்கு இந்த அகராதி ஒப்பற்ற உதவி செய்யும்.

எதிர்ப்பத அகராதியில் சொற்பொருளின் நுண்மையை ஆராய விரும்புவார்க்கும், சொல்லவந்த கருத்தை நாகரிகமாக எதிர்மறை வாய்ப்பாட்டால் சொல்ல விழைபவர்க்கும் எதிர்மறை வாய்பாட்டைப் பயன்படுத்திக் கொள்ள நினைப்பவர்க்கும் ஒரு சொல்லின் நேர்பொருளுக்கும் அதன் எதிர்மறைப் பொருளுக்கும் உள்ள இரகசியத் தொடர்பை ஆராய விழைகுநர்க்கும், பாட்டில் முரண்தொடை அமைக்க விரும்பும் இளங்கவிஞர்களுக்கும்

உரைநடையில் எதிர்மறை வாய்பாட்டில் சொற்றொடர்கள் எழுதி விறுவிறுப்பை விளைக்க விரும்புபவர்க்கும் எதிர்ப்பதம் கண்டுபிடிக்கும் விளையாட்டை அடிக்கடி மேற்கொள்ள விரும்பும் இளம் மாணவர்களுக்கும், குறிப்பாகத் தமிழ்ச் சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ள விரும்பும் அனைவருக்கும் இந்த அகராதி பயன்தரும் வகையில் அமைந்துள்ளன. எதிர்ப்பத அகராதியியல் ஒரு சொல்லுக்கு எதிர்ச்சொல்லை எளிய வகையில் அறிந்துகொள்வதற்கு ஏற்ற வகையில் இவ்வகராதியை ஆசிரியர் அகரவரிசையில் தொகுத்துத் தந்துள்ளார்.

சான்று

அக்கச்சி × தங்கச்சி
அக்கணம் × இக்கணம்
அக்கரை × இக்கரை

ஐம்பொறி அகராதி

ஐம்பொறி அகராதியான இந்த அகராதியில் உடல் உறுப்புகளைக் குறிக்கும் பல்வேறு சொற்களிலிருந்து உண்டான ஆயிரக்கணக்கான தொடர்களைத் திரட்டித் தருவதால் சொல் அடிப்படையில் அமைந்தது. ஆயினும் அந்தத் தொடர் களுக்குரிய பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் ஐம்பொறி அகராதி செந்தமிழ் மொழியின் ஏற்றத்திற்கு ஏற்றதொரு சான்றாகத் திகழ்கிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளுக்குரிய பெயர்களைக் கொண்டு படைக்கப்பெற்ற பதினாயிரம் தொடர்கள், மரபுத்தொடர்கள், சொற்றொடர்கள் ஆகியவை அவ்வப்பெயர்களின் கீழ் அகர வரிசைப்படுத்திக் கொடுக்கப் பெற்றுள்ளன. "ஐம்பொறி அகராதி" என்ற அகராதியை ஆசிரியர் ச.மெய்யப்பன் ஐம்பொறிகளின் அடிப்படையில் தொகுத்துத் தந்துள்ளனர்.

சான்று

அங்கக்கிரியை - மெய்யாற் செய்யுந்தொழில்
அங்கஈனம் - உறுப்புக்குறை

ஒலிக்குறிப்பு அகராதி

கலகல, சலசல, பளபள, மொடமொட, கடகட, மடமட, கிடுகிடு, சடசட என்றவாறு ஒலிக்குறிப்பு, விரைவுக் குறிப்பு, பண்புக்குறிப்பு போன்ற இயல்புகளை வெளிப்படுத்தும் சொற்களைத் திரட்டித் தரும் அகராதி ஒலிக்குறிப்பு அகராதியாகும்.

மயங்கொலிச் சொற்பொருள் அகராதி

தமிழ் நெடுங்கணக்கில் மெய்யெழுத்து - உயிர்மெய் எழுத்துக்களில் மெல்லினத்தின்கண் ணகர, நகர, னகரங்களும் இடையினத்தின்கண் லகர, ழகர, ளகரங்களும் இடையின ரகரம், வல்லின றகரம் ஆகியனவும் தம்மளவில் நன்கு ஒலி வேறுபாடு உடையனவே ஆயினும் சொல்வார் நாவும், கொள்வார் செவியும் திருத்தமும் நுணுக்கமும் அற்றநிலையில் தடுமாற்றம் நிகழ வாய்ப்பு உண்டாகிறது. ஒலி வடிவின் தாக்கம் வரிவடிவிலும் நிகழ்தல் இயற்கை. இந்த வகையில் மயங்கொலி சொற்பொருள் அகராதி தொகுக்கப்பட்டுள்ளது. இந்த அகராதியில் சொற்களின் பிறப்பும், சொற்களை உச்சரிக்கின்ற முறைமைகளைப் பற்றியும் மலேசியா கனிமொழி அவர்கள் தம்முடைய அகராதியில் குறிப்பிட்டுள்ளார்.

சான்று

அண்ணம் - உண்ணாக்கு மேல்வாய்

அன்னம் - நீர், கவரிமான், நிலம், தங்கம், ஒருவகை அணி அன்னப்பறவை

குறுக்கவிளக்க அகராதி

ஒவ்வொரு மொழியிலும் சில சொற்கள் குறுக்கங் களாய்ப் பயன்படுத்தப்பெறும். இவை அம்மொழியில் நிலையான பயன்பாட்டை உடையனவாய் நிலைபேறு பெற்று விடும். மொழியில் பயன்படுத்தப்பட்டு நிலைபேறு பெற்ற குறுக்கங்களை அகரநிரலில் தொகுத்தளித்து விளக்கம் தரும் அகராதிகளே குறுக்க விளக்க அகராதிகளாகும்.

சான்று

தமிழில் முற்பகல், பிற்பகல் என்பனவற்றை மு.பி., பி.ப.

முதுகலை - மு.க, இளங்கலை - இ.க,

அறிவியல் அகராதி

அறிவியலில் நாளும் வழங்கப்படும் சொற்களைத் தொகுத்து பேராசிரியர் அ.கி.மூர்த்தி அறிவியல் அகராதியை ஆங்கில அகரவரிசை முறையில் தந்துள்ளார்.

சான்று

absolute hunidity - தனி ஈரநிலை காற்று வெளியில் நீராவி இருக்கும் அளவு (இய)

acapnia - வளிக்குறை : குருதியில் கரி இரு ஆக்சைடு (Co_2) குறைதல் (உயி)

இயற்பியல் அகராதி

இயற்பியல் அகராதியின் ஒவ்வொரு பதிவிலும் இலக்கணம், விளக்கம், கருத்து, பயன்பாடு எனும் நான்கு நிலையில் இவ்வகராதி தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் கூறப் பெறும் செய்திகளை அளவை செய்யப்பட்டுக் கூறப் பட்டிருக்கும். ஒவ்வொரு துறையின் அடிப்படைச் சொற்களை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் எனும் நோக்கில் இவ்வகராதி அமைக்கப்பட்டுள்ளது. இயற்பியல் துறைச் சார்ந்த அனைத்துச் சொற்களையும் தெரிந்து கொள்வதற்குப் பயனுடைய வகையில் ஆசிரியர் அ.கி.மூர்த்தி அவர்கள் அகரவரிசையில் அமைத்துத் தந்துள்ளார்.

சான்று

battery capacity - மின்கல அடுக்குத்திறன்

Definition : The capacity of a battery is usually specified in ampere hours

மின்கல அடுக்கின் திறன் வழக்கமாக ஆம்பியர் மணிகளில் குறிக்கப்பெறும்.

விளக்கம்

இந்த அடுக்கின் உழைக்கும் ஆற்றலும் மின்சாரம் தரும் ஆற்றலும் அதன் ஆற்றலைக் குறிக்கும். இஃது இத்தனை ஆம்பியர் மணி என்றால், ஓர் ஆம்பியர் மின்னோட்டத்தை 10 மணி நேரத்திற்குப் பெறலாம் என்பது பொருள்.

கருத்து

மின்திறன்

பயன்பாடு

மின்கல அடுக்கில் பயன்படுவது

விலங்கியல் அகராதி

விலங்குகளின் சாதாரணப் பெயர்களும் அவற்றின் இனப்பெயர், சாதிப்பெயர், வருணப்பெயர் என்பன அகர வரிசையில் விலங்கியல் அகராதியில் தொகுத்துத் தரப் பட்டுள்ளன.

ஒரு விலங்கைப் பற்றி அதன் முழு விபரத்தையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, இந்த விலங்கியல் அகராதியை ஆசிரியர் அகரவரிசையில் தொகுத்துத் தந்துள்ளார். இதனுடைய பயன் என்னவென்றால் ஒரு விலங்கினுடைய பெயர், அது எந்த இனத்தைச் சார்ந்தது, அதனுடைய வருணப் பெயர் என்ன என்பதை நாம் எளிதாகப் புரிந்துகொள்ளும் நோக்கில் இவ்வகராதி பயனுடையதாக அமைந்துள்ளது.

கழகப் புள்ளியியல் அகராதி

மக்களின் நன்மைக்கான பல துறைகளின் வளர்ச்சிக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் புள்ளியியல் இன்று இன்றியமையாத தாகிவிட்டது. ஆகாயம், காற்று, அனல், நீர், நிலம் எனும் ஐம்பெரும் பொருட்களுக்குள் இவ்வையக வாழ்க்கை அடங்கும். இவ்வையம் பெரும் மூலங்கள் பற்றிய அனைத்து விவரங்களையும் தருவது புள்ளியியலேயாகும். எனவே நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவை புள்ளி விவரங்களேயாகும். அந்த அடிப்படையில் இவ்வகராதி ஆசிரியர் மு.இளங்கண்ணன் அவர்கள் அகரவரிசையில் தந்துள்ளார்.

ஒரு நாட்டின் புள்ளி விவரங்களை எளிதாக தெரிந்து கொள்ளும் நோக்கில் இவ்வகராதி பயனுடையதாக அமைந்துள்ளது. மேலும் அறிவுத்திறன், கற்கும் ஆர்வம், உளவியல் முதலிய ஆய்வுகளிலும் காலநிலை, மழையளவு காற்றமுத்தம் முதலியவற்றை முன்கூட்டியே அறிந்து சொல்லும் வானவியல் ஆய்வுகளிலும், மண்வளம், நீர்வளம், காட்டுவளம், பசுமைப்புரட்சி ஆய்வுகளுக்கும் புள்ளியியல் முறை பயன்படுத்தப்படுகின்றன. புள்ளி விவரங்களின் பயன்கள் முன்னேற்றமடைந்த நாடுகளில்

மனித வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் பரவியுள்ளன.

கணிப்பொறி அகராதி

கணிப்பொறித்துறையில் தமிழகம் பெற்றுவரும் கணிசமான வளர்ச்சியும் உரிய பதிவுகளில் விளக்கப்பட்டுள்ளது. இத்துறையில் பல பிரிவுகளை மாணவர்களும் வாசகர்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கும் முதல் அகராதியே கணிப்பொறி அகராதியாகும்.

சான்று

Anjal - அஞ்சல், தமிழ் மின்னஞ்சல் பணி, பதிவுபெற்ற பயனாளிகள்

application programme - பயன்பாட்டு நிகழ்நிரல் குறிப்பிட்ட சிக்கலைத் தீர்க்க எழுதப்படும் நிகழ் நிரல் குறிப்பிட்ட அறிக்கையை உருவாக்கலாம். ஒரு குறிப்பிட்ட கோப்பை மேம்படுத்தலாம்.

கணிப்பொறி சொல் அகராதி

கணிப்பொறியில் கற்பவரும் மற்றவரும் புரிந்து கொள்ளும் வகையில் இவ்வகராதி அமைக்கப்பட்டுள்ளது.

சான்று

அனிமேஷன் : இயக்கப்படுதல் நிகழ்வு ஒன்றின் தொடர் வரிசைப்படங்களை மிக விரைவாக வெளிப்படுத்துவதின்மூலம் இயங்குவது போன்ற தோற்றத்தை உருவாக்குதல் இவ்வுத்தி கணிப்பொறி உருவாக்கும் திரைப்படங்களைத் தயாரிக்கப் பயன்படுகிறது.

மொத்த இருப்பகம் (பல்க் ஸ்டோரேஜ்)

மொத்த இருப்பகம் அதிக அளவில் தகவல்களை சேமிப்பது பொதுவாக நீண்டகால தேவைக்காக இவ்வாறு செய்யப்படும்.

மேற்கூறப்பட்டுள்ள துறைச்சார்ந்த அகராதிகளில் ஒவ்வொரு துறையையும் பற்றிய செய்திகள் அந்தந்தத் துறை வாரியாகத் தொகுத்து அகரவரிசையில் கொடுக்கப் பட்டுள்ளன. அகராதியைப் படிப்பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட துறை பற்றிய

செய்தி அல்லது ஒரு சொல்லுக்குரிய பொருளை உடனே தெரிந்து கொள்வதற்கு இந்த துறைச்சார்ந்த அகராதிகள் பயனுடையதாக இருக்கின்றன.

தமிழிலக்கிய அரபுச்சொல் அகராதி, கழகத்தமிழ் அகராதி, பாரதத்தின் புதிய அகராதி, தமிழ் ஆங்கில அகராதி, தொகையகராதி, பொருள்வாரி தனித்தமிழ் அகராதி, மாணவர் மொழியாக்க அகராதி, சித்தர் மறைப்பொருள் அகராதி, வாகட அகராதி, இலக்கியச் சொல்லகராதி, பல்பொருள் அகராதி, மானிடவியல் கலைச்சொல் அகராதி, கொங்கு வட்டாரச் சொல்லகராதி என ஏராளமான அகராதிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

துணைநூற் பட்டியல்

1. இலக்கிய வகை அகராதி, புலவர் இளங்குமரன், முதல் பதிப்பு, 1988 மணிவாசகர் பதிப்பகம்.
2. தமிழ் இலக்கணப் பேரகராதி
3. ஆங்கில இலக்கணச்சொல் அகராதி
4. வட்டார வழக்குச்சொல் அகராதி
5. மரபுத் தொடர் அகராதி
6. உவமைச் சொல் அகராதி
7. மூலிகைகள் மருத்துவகுண அகராதி
8. எதிர்ப்பத அகராதி
9. ஐம்பொறி அகராதி, ச.மெய்யப்பன்
10. மயங்கொலிச் சொற்பொருள் அகராதி
11. அறிவியல் அகராதி, அ.கி.மூர்த்தி, மூன்றாம் பதிப்பு, செப்.2000, மணிவாசகர் பதிப்பகம்.
12. கணிப்பொறி அகராதி, அ.கி.மூர்த்தி, முதல் பதிப்பு, டிசம்பர் 2000, மணிவாசகர் பதிப்பகம்.
13. கழகப் புள்ளியியல் அகராதி, மு.இளங்கண்ணன், கழக வெளியீடு, பதிப்பு 2004.

நோக்குநூல் வகையில் அகராதி

சா. லில்லிநேசம்
தஞ்சாவூர்

எழுத்தோடு ஒருபுடை ஒற்றுமை உடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது சொல்லாகும். இச்சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாய் அமையும். இஃது பெயர், வினை, இடை,உரி என்றும்; இயற்சொல், வடசொல், திரிசொல், திசைச்சொல் என்றும் இலக்கண நிலையிலும், மொழியியல் நிலையிலும் பாகுபாடு உடையதாய் அமையும். இத்தகு சொற்களின் பல்வேறு பொருள் களையும் பலவாறாக அறிந்து கொள்ளுதற்கும், அறிந்துள்ள செய்திகளுக்கும், கருத்துக்களுக்கும் அதிகமான செய்திகளையும், கருத்துக்களையும் அறியச் செய்வதற்கு நோக்குநூல்கள் இன்றியமையாதனவாக அமைகின்றன.

நோக்கு நூல்கள்

வளர்ந்துவரும் மொழி ஆய்வியல் தேவைக்கு முக்கிய ஆதாரமாக அமைவன நோக்கு நூல்களேயாகும். இவ்வகையில் நிகண்டுகள், அகராதிகள், கலைக்களஞ்சியம், சொல்லடைவு, பொருளடைவு, ஆய்வடங்கள் போன்றவை முக்கியப் பங்கு வகிப்பவைகளாகத் திகழ்கின்றன.

இந்நோக்கு நூல்களின் வகைகளில் ‘அகராதி’ என்பது மிக முக்கியமானதொரு சிறப்பிடத்தைப் பெற்றுத் திகழக்கூடியது. இவ் அகராதியானது சொல்-பொருள் விளக்க நிலைக்கும், ஆய்வில் தகுந்த சொற்களைப் பதிவு செய்வதற்கும் முக்கிய காரணியாக அமைகின்றது. மொழிப் பயன்பாட்டில் கவனம் செலுத்தும் எந்த ஒரு ஆய்வாளனும் அகராதியைக் கையாளாமல் (பயன் படுத்தாமல்) தனது ஆய்வினை சிறப்பாக நிறைவு செய்ய இயலாது.

அகராதி

அகரம் + ஆதி என்ற சொற்களின் கூட்டுச்சொல்லே ‘அகராதி’ ஆகும். ஒரு மொழியில் காணப்படும் சொற்களைத் தொகுத்து அகரவரிசைப்படுத்தி அவற்றிற்குப் பொருள் கூறுகின்ற

நூலுக்குத் (முறைக்குத்) தான் அகராதி என்று பொருள்படும். "Woards arranged alphabetically with meaning" - அதாவது சொற்களை அகரமுதலாக வரிசைப்படுத்திப் பொருள் விளக்கும் நூல் அகராதி (ப.13) என்று Tamil lexicon பொருள் கூறுகிறது. இவ்வாறே தமிழ்மொழி அகராதியில் நா.கதிரைவேற் பிள்ளை

> **நெடுங் கணக்கிலுள்ளபடி அகர முதலிய எழுத்துக்களால் தொடங்கும் சொற்கோவை (பக்.16)**

என்று விளக்கம் தருகிறார்.

'அகராதி' என்பதில் உள்ள 'ஆதி' என்ற வடசொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் 'முதலி' என்பதாகும். எனவே அகரம் + முதலி = அகரமுதலி என்று கூறுவதே பொருத்தமாகும். 'அகரம்' முதலான உயிர் எழுத்துக்களை வரிசைப்படுத்திய பின்பு 'கரம்' முதலான மெய்யெழுத்துக்கள் வரிசைப் படுத்தப்படல் வேண்டும். இம்முறைக்கு 'அகரவரசை' அல்லது 'அகரநிரல்' என்று பொருள் கூறுவர்.

தொல்காப்பியர் இவ்வகர வரிசைக் கூற்றினை

> **எழுத்தெனப் படுப**
> **அகர முதல் னகர இறுவாய் (தொல் : எழுத்து : 1)**

என்று இயம்புகிறார்.

அகராதித் தோற்றம்

நூற்பா வடிவிலான நிகண்டுகளின் அமைப்பை மனனம் செய்யும் நிலையினின்றும் எளிமைப்படுத்தப்பட்ட ஓர் வடிவமாக அகராதி தோன்றியது. அயலவர் வருகையால் தமிழில் கலந்த பிறமொழிச் சொற்களுக்குப் பொருள் கூற வேண்டியும், காலந்தோறும் உருவாகி வந்த புதிய கண்டுபிடிப்பு களால் தோன்றிய புதுச்சொற்களாலும் எளிமைபடுத்தப்பட்ட பொருள் கூறும் முறையிலான அகராதித்தோற்றம் தேவைப் பட்டது. அகராதிகளின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணியாகத் திகழ்ந்தது வீரமாமுனிவர் தோற்றுவித்த சதுரகராதியே ஆகும். இவ்வகராதி 1732 இல் தோற்றுவிக்கப் பட்டாலும் 1824 இல் தான் முழுமையாக அச்சேறியது.

தமிழ்மொழி அகராதி தோற்றம்

நனி சிறப்பு வாய்ந்த தமிழ்மொழிக்கண்ணுள்ள நூல்கள் அளவிறந்தனவாய்க் கிடைத்தலின் சொல்லின் அளவு மிகுதியாகக் காணப்படுகின்றன. அந்நூல்களையும், நூலில் உள்ள சொற் களையும் அச்சொற்களுக்குள்ள பொருள்களையும் ஒவ்வொரு வரும் எளிதில் உணர்தல் அரிதாகின்றது. ஆதலால் தம் அறிவிற்கு எட்டிய அளவில் அவற்றையெல்லாம் ஒருங்கு சேர்த்து உதவ நினைத்த யாழ்பாணத்து சரவணமுத்துப் புலவர், சந்திரசேகர பண்டிதர் முதலாய செந்தமிழ் விநோதச் செம்மல்கள் பலர் சேர்ந்து அகரவெழுத்தை ஆதியாக வரித்துச் சொற்களை எல்லாஞ் சேர்த்துப் பொருள்களையுங் காட்டி ஓர் அகராதியை 1842-இல் வெளியிட்டனர்.

இவற்றைத் தொடர்ந்து பின்னோர் சிலர் சில வடமொழி களையுஞ் சேர்த்து அகராதியை வெளிப்படுத்தினர். இவ்வாறாகவே சிற்சில அகராதிகள் காலந்தோறும் அவரவரால் வெளியிடப்பட்டன. இவை இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் நூல்களிலும் வேதாந்த சித்தாந்த நூல்களிலும் அகப்பொருள், புறப்பொருள் பாகுபாடுகள் குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகள், வெண்பா முதலிய பா வகை, பாவினம், அலங்கார வகை, பரதராகதானப் பகுதி, அங்கக் கிரியை, உடல் வருத்தனை, அவிநயம், நிலை, கூத்துவகற்பம் முதலிய கருவியிலக்கணம், பண், வண்ணப்பகுதி, வரிப்பகுதி, தத்துவம், முப்பொருளிலக்கணம் என்று இன்னோரன்ன முக்கிய இடங்களுக்குச் சொற்பொருட்தொகை இல்லாத நிலையினை நண்பர்கள் பலர் பலமுறை அறிவுறுத்த நா.கதிரைவேற்பிள்ளை துணைக்கொண்டு 1911 - ஆம் ஆண்டு பி.வே.நமசிவாயன் தமிழ்மொழி அகராதி தந்துள்ளார்.

அகராதி வகைப்பாடு

பல்வேறு அடிப்படைகளில் உருவாகும் நோக்கு நூலாகிய அகராதிகளைக் காலம். அகராதியில் இடம்பெறும் மொழி, சொல். சொற்களின் பொருள் வரையறை இயல்பு, பயன்பாட்டாளரின் நோக்கம், பதிவுகளின் நிரல், குறிப்பிட்ட துறை போன்ற பல்வேறு அடிப்படைகளில் வகைப்படுத்தலாம் என்கிறார் பெ.மாதையன்.

பொதுவாக அகராதியை,

1. மொழியை அடிப்படையாகக் கொண்ட அகராதிகள்
2. காலத்தினை அடிப்படையாகக்கொண்ட அகராதிகள்
3. சொல்வகையை அடிப்படையாகக் கொண்ட அகராதிகள்
4. சொற்சேர்க்கையை அடிப்படையாகக் கொண்ட அகராதிகள்

எனும் நான்கு வகையான அடிப்படையின் கீழாக வகைப் படுத்தலாம். இதுவரை உருவாக்கப் பெற்றுள்ள அகராதிகள் அனைத்தையும் மேற்குறித்த இந்நான்கு வகைப்பாட்டுள்ளாகவே அடக்கிவிட முடியும்.

மொழி அகராதி

அகராதியை உருவாக்கப் பயன்படுத்தப்பெறும் மொழியை அடிப்படையாகக் கொண்டே மொழி அகராதியை, ஒருமொழி அகராதி, இருமொழியகராதி, பன்மொழி அகராதி என வகைப்படுத்தலாம்.

காலமுறை அகராதி

கால முறையை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று அகராதியும், குறித்த கால நிலை அகராதியும் உருவாக்கப் படுகிறது. இவற்றுள் வரலாற்று அகராதி என்பது - வரலாற்றுப் பொருள்நிலை அகராதி, சொற்பிறப்பியல் அகராதி எனவும் வகைப்படுத்தப்படுகிறது. குறித்த கால நிலை அகராதியானது தகுமொழி விளக்க அகராதி மீவிளக்க அகராதி எனவும் வகைப் படுத்தப்படுகிறது. இவற்றால் அவ்வவ் காலத்து சொல் - பொருள் தன்மையினை அறிந்து கொள்ள முடிகிறது.

சொல்வகை அகராதி

சொல்வடிவ அடிப்படையிலும், இயல்பு அடிப்படையிலும் சொல்வகை அகராதி என்பது ஒப்புருச்சொல், குறுக்க விளக்கம், தலைப்பெழுத்துச் சொல் என்று வகைப் படுத்தலாம். மேலும், எதிர் அகரநிரல், புதுச்சொல் அகராதி, கடன்சொல் அல்லது பிறமொழிச்சொல் அகராதி, ஒலிகுறிப்பு அகராதி எனவும் வகைப்படுத்தப்படுகிறது. இவ்வகராதியின் வாயிலாக மொழிப் பயன்பாட்டில் பெருகியுள்ள சொல் வகைகளை உணர்ந்துகொள்ள முடிகிறது.

சொற்சேர்க்கை அகராதி

சொற்கள் பிற சொற்களாடு சேர்ந்து இயலும் நிலையில் அச்சொற் சேர்க்கைகள் - இயல்புச் சொற்சேர்க்கை, மரபுச் சொற்சேர்க்கை என இருவகைப்படும். இவற்றுள் மரபுச் சொற்சேர்க்கையில் - பழமொழி, மரபுத்தொடர், மேற்கோள், முதுமொழி, வழக்காற்று மரபுச் சொற்கள், இணை அமைதிச் சொற்கள் என்பன போன்ற அகராதிகளும் இவ்வகைச் சார்ந்ததாக அமைக்கப் பெறுகின்றன. இப்பொதுவான வகைப்பாட்டில் அமையும் அகராதி வகைகளோடு சொல்லாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அகராதியான சொல்லாக்க அகராதியும் உருவாக்கப்படுகிறது என்பதை இணைத்துக் கூறுகிறார் ஆசிரியர் பெ.மாதையன்.

சொல்லாக்க அகராதி

சொல்லாக்க அகராதி என்பது அடிச்சொற்களுடன் முன்னொட்டு, பின்னொட்டுகளை இணைத்துச் சொற்களை படைக்கும் நிலையை அறிவிப்பதாக உருவாக்கப்படுகிறது. இவ்வகராதியானது - சொற்பொருள் உறவு நிலையை அடிப்படையாகக் கொண்டு ; ஒருபொருட் பலசொல், எதிர்ச்சொல், பல்பொருட் சொல், பொருட்புலம், சொல்வகை நிலை என்றும் வகைப்படுத்தப்பெறும்.

மேலும் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று வகையாக அடங்குகின்ற அகராதிகளை சதாசிவம் அவர்கள் இருபது ஆண்டுகள் முயற்சியால் பல அகராதிகளைத் தொகுத்துத் தந்துள்ளார்.

1. எழுத்து அகராதி : ஒலிக்குறிப்பு அகராதி, அடுக்குமொழி அகராதி என்பவைகள் ஒலி அடிப்படையில் அமைந்து எழுத்துக்கு முக்கியத்துவம் தருபவை.

2.சொல் அகராதி : ஐம்பொறி அகராதி : உடல் உறுப்புக் களைக் குறிக்கும் பல்வேறு சொற்களிலிருந்தும் உண்டான ஆயிரக்கணக்கானத் (10,000) தொடர் களைத் திரட்டித் தருவதால் இதுசொல்

அடிப்படையில் அமைந்த அகராதியாக அமைந்துள்ளது.

3. பொருள் அகராதி : திருமகள் அருட்செல்வம், விநாயகர் செல்வம் போன்றவை பொருள் அடிப்படையில் அமைந்தவை.

4. சொல்-பொருள் அகராதி : எதிர்பத அகராதி - ஒரு சொல்லை எடுத்து அதன் எதிர்பதம் சுட்டுவதால் சொல்லும் பொருளும் இணைந்து நிற்பதாக இவ்வகராதி அமைக்கப் பெற்றுள்ளது.

அகராதி அமைப்பு / பதிவு

சொல்வகைக்கேற்ப அகராதிப் பதிவு சொல்லுக்குச் சொல் வேறுபட்டதாயும், அகராதி வகைக்கேற்ப அகராதிக்கு அகராதி வேறுபட்டதாயும் அமையும். தமிழில் உள்ள அனைத்து அகராதிகளிலும் அகரவரிசை முறையில் உயிர் மெய்யெழுத்தே இடம்பெறுகிறது. Tamil lexicon மற்றும் ஐம்பொறி அகராதியிலும் ஒற்றெழுத்து முன்பாகவும் உயிர்மெய் பின்பாகவும் அமைக்கப் பெற்றுள்ளது. அவ்வாறே தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியில் ஆய்தம் இரண்டாம் எழுத்தாய் அமைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறாகப் பதிவுத் தெரிவு ஒவ்வொரு அகராதிக்கும் வேறுபட்டதாய் இருப்பதை பெ.மாதையன் "பயில்வோர் அகராதிப் பதிவு பொது அகராதிப் பதிவினின்றும் பொது அகராதிப் பதிவு வரலாற்று அகராதிப் பதிவினின்றும்; வரலாற்று அகராதிப் பதிவு சொற்பிறப்பியல் அகராதிப் பதிவினின்றும் வேறுபட்டதாய் அமையும்" என்று அகராதி அமைப்பு நிலையை விளக்குகிறார்.

அகராதிச் சிறப்பு

சொற்பொருள் வரலாறு, சொல் மூலம், இலக்கணப் பொருள் என்பவற்றை உணரவும்; பிறமொழி, இனமொழிச் சொற்களை அறியவும் எனப் பல்வேறுபட்ட நோக்கங்களை நிறைவு செய்துகொள்ள பயன்படுவதால் அகராதியினை சொற்களஞ்சியம் (Store House), நீதிமன்றம் (Court house), தெளிவுக்கூடம் (Clearing house) என்று சிறப்பித்துள்ளார்கள்.

அகராதி இலக்கணத்தின் பின்னிணைப்பு என்பது தனிச் சிறப்பிடம் பெறுகிறது.

அகராதி உருவாக்கம்

மொழியின் இயல்பான சொற்பயன்பாடுகளை அறிவிக்கும் கருவி நூலாக அகராதி திகழ்வதால் அகராதி உருவாக்கமானது பல்வேறு படிநிலைகளைக் கொண்டதாக,

1. திட்டமிடலும் தரவு மூலச் சேகரிப்பும்
2. பதிப்புப் பணியும் பதிவுக் கட்டுமானமும்

என்ற இருவேறு நிலைகளில் உருவாக்கப் பெறுகின்றது.

1. திட்டமிடலும் தரவு மூலச் சேகரிப்பும்

ஒரு மொழியின் சொல்வளம், சொற் பயன்பாடு, சொற் சூழல் பொருள் போன்றவற்றை அறியவும் , சரியான ஒலிப்பு முறை, உரிய எழுத்துமுறைப் போன்றவற்றைத் தெரிந்து கொள்ளவும், சொற்களின் வேறுபாடுகளை உணரவும் பயன்பாடுடைய வகையில் அகராதி அமைக்கப்படுகிறது.

இத்திட்டமிடலும் தரவுமூலச் சேகரிப்பும் இரு நிலைகளில் ஆராயப் பெறுகிறது.

1. அகராதி உருவாக்கப் படிநிலைகள்
2. திட்டமிடல்

என்பவைகள்.

மொழியின் இயல்பான சொற்பயன்பாடுகளை அறிவிக்கும் கருவி நூல்களாய் இருப்பதனால் இத்திட்டமிடல் பணி பல்வேறு படிநிலைகளை உடையதாக

அகராதித் திட்டம் - திட்டமிடல் - அகராதி வகை, உருவாக்கம், துறை, நிறுவனத் தொடர்பு, பதிப்பாசிரியர் குழு, கால எல்லை, வரைபடம் - தரவு மூலங்கள் என்றவாறு உருவாக்கப் பெறுகிறது.

சொல் தெரிவு - முற்றுச் சொற்பிரிப்பு, பகுதிச் சொற் பிரிப்பு, சிறப்புச் சொற்பிரிப்பு என்றவாறும்,

அகராதிச் சொற்சூழல் அமைப்பாகவும்,

பதிவுத்தெரிவு - பழஞ்சொல், வழக்கொழிச்சொல், புதுச்சொல் கலைச்சொற்கள், கூட்டுச்சொற்கள் - மரபுச் சொற் சேர்க்கை - மரபுத் தொடர், பேச்சு வழக்குகள், அடைகள் போன்றவாறான சொற்களையும் அமைத்து உருவாக்குகிறது.

பதிப்பும் பணியும் பதிவுக் கட்டுமானமும்

ஒவ்வொரு அகராதிச் சொல்லும் ஒலியனியல், உருபனியல், பொருண்மையியல் கூறுகளைக் கொண்டது. இவை சொல்லை அடுத்து முறையாய்த் தரப் பெறும். ஒவ்வொரு அகராதிக்கும் பதிவுக் கூறுகள் வேறுபடும்.

அகராதிகளில் சொற்-பொருளை அறிந்து கொள்வதோடு கூடுதற் செய்திகளாக அச்சொல் பற்றிய பிறவகைச் செய்தி களையும் விள்க்குவதாகப் பதிவுகளில் இலக்கணக் குறிப்பு, சொல் மூலம், இனமொழிச் சொல், சொல்வகை, ஆக்கம், கூட்டுச்சொல் சொற்பிறப்பு, தமிழ்ப்பொருள், ஆங்கிலப்பொருள் குறிப்பான், மரபுத்தொடர் / பழமொழி, துணைப்பதிவு என்பன போன்ற வற்றையும் கொண்டதாக அமைக்கப் பெறுகிறது.

இவ்வாறாகப் பல்வேறு படிநிலை அமைப்புகளையும் கொண்ட அகராதியானது ஆய்வின் நோக்குநூல் பயன்பாட்டிற்குத் தனிச்சிறப்பிடம் பெற்றதாகத் திகழ்கிறது. மேலும், மொழிச் சமூகத்தின் பல்வேறு படிநிலைகளில் உள்ளோராலும் அவரவர் தம் குறிப்பிட்ட தேவைக்கேற்பக் காலந்தோறும் தொடர்ந்து பயன்பட்டுவரும் அகராதிகள் ஏனைய படைப்புகளைப் போலன்றி என்றென்றும் பயன்படும் நோக்குநூல்களாய் உள்ளன என்பது உணரத்தக்கதாகும்.

குறிப்புதவி நூல்கள்

1. அகராதியியல், பெ. மாதையன்.
2. தமிழ்மொழி அகராதி, நா. கதிரைவேற் பிள்ளை
3. Tamil lexicon, Vol. I.
4. தற்காலத் தமிழ் அகராதி
5. அகராதிக்கலை - தா.வே. வீராசாமி.

குறிப்பான்கள் (Labels)

தா. வைதேகி
தஞ்சாவூர்

தலைச்சொல்லிற்கும், பொருளுக்கும் கூடுதல் விளக்கங்களையும், அதன் சிறப்புத் தன்மைகளையும் குறிப்பிடுவதற்குக் குறிப்பான்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மொழிப் பயன்பாடு என்பது பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு சொல் அல்லது குறிப்பிட்ட பொருள் ஒரு வட்டாரம் சார்ந்ததாகவோ, காலம், துறைச் சார்ந்ததாகவோ இருக்கும். பதிவுச் சொல்லின் வழக்காற்று இயல்பு குறித்த தகவல்களைத் தரும் அகராதிப் பதிவுக் கூறே 'குறிப்பான்' எனப்பெறும்.

குறிப்பான்கள் தனித்தனிச் சொல் பற்றியனவாய் அன்றிக் குறிப்பிட்ட சொற்றொகுதி பற்றியனவாய் உள்ளன. ஒரே குறிப்பான் பல பதிவுகளிலும் இடம்பெறும்.

அகராதியில் பதிவுச்சொல் புதுச்சொல்லா, பழஞ்சொல்லா, வட்டார வழக்கு, மத வழக்கு, இழி வழக்கு, உயர்வழக்கு, சாதி வழக்கு, வழக்கொழி சொல், அருகிய வழக்கு என்பதை அறிந்து கொள்ள உதவும் குறிப்பாகும். சொற்களைக் குறிப்பிட்ட வட்டாரங்களிலிருந்தோ, துறைச் சார்ந்த நூல்களிலிருந்தோ திரட்டுகையில் அக்குறிப்புகளும் உடன் திரட்டிக் கொள்ளப்படும். எனவே, அகராதியில் தரப்பெறும் குறிப்பான்களை தீர்மானித்துக்கொள்ள வேண்டும். சொற்களின் இயல்பைப் பொறுத்துப் புதுக் குறிப்பான்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

குறிப்பான் – உதாரணம்

(i) இரச குளிகை - பெ - (சித்த) - 1.இரசத்தினால் செய்த மாத்திரை, 2. சித்தர் குளிகை, 3. இரும்பைப் பொன்னாக்கும் மருந்து.

(ii) உரி-தல் (செ. குன்றா. வினை) 1. ஆடை கழலுதல்,

இவற்றுள் அடைப்புக் குறிக்குள் இடம்பெறும் செய்தியே குறிப்பான் ஆகும். இத்தகைய குறிப்பான்களைப் பொதுநிலையில் மூன்றாய் வகைப்படுத்தலாம்.

1. செயற்பாடு (Function)
2. துறை அல்லது பிரிவு (Subject)
3. தகுதி (Status)

1. செயற்பாட்டுக் குறிப்பான்கள்

சொற்களின் இலக்கணச் செயற்பாடு பற்றியனவாய் அமைவன செயற்பாட்டுக் குறிப்பான்கள் ஆகும். இவற்றை இலக்கணக் குறிப்பான்கள் எனவும் கூறலாம்.

இவை மொழியின் இலக்கண மரபுக்குத் தக்கவாறு வேறுபடும். தமிழ் அகராதிகளில் தரப்பட்ட செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றா வினை, குறிப்பான்கள் இத்தன்மையைச் சார்ந்தன. பதிவுச் சொற்களின் பெயர், வினை, பெயரடை, வினையடை,இடைச்சொல் எனும் இலக்கணக் குறிப்புகளே இலக்கணக் குறிப்பான்கள் ஆகும்.

2. துறை அல்லது பிரிவுக் குறிப்பான்கள்

சைவம், வைணவம், சமணம், பௌத்தம் எனும் மதங்களில் சொல் எம்மதம் சார்ந்தது. இலக்கணம், இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் எத்துறைச் சார்ந்தது எனும் குறிப்புகளாய் இது அமையும்.

3. தகுதிக் குறிப்பான்கள்

சொற்களின் பயன்பாட்டுத் தகுதி நிலை பற்றியனவாய் அமையும். இழி வழக்கு, உயர்வழக்கு, பழஞ்சொல், புதுச்சொல், அருகிய வழக்கு, பெருவழக்கு, பொதுவழக்கு, பார்ப்பன வழக்கு என்றாற்போல வரும் வழக்கு வேறுபாட்டு நிலைகள் பற்றிய்னவாய்த் தகுதிக்குறிப்பான்கள் அமைகின்றன.

மேலும் இவற்றை காலம், இடம், நடை எனவும் பாகுபடுத்தலாம்.

இடம்பற்றிய குறிப்பான்கள்

வட்டார வழக்கு, சாதி வழக்கு, அகில உலக வழக்கு, தேசிய வழக்கு, தனிமனித வழக்கு என்பன அடங்குகின்றன. தமிழின் இருமொழி அகராதிகளில் குறிப்பான்கள் மிகுதியாய் இடம் பெற்றுள்ளன. கிரியா அகராதியில் வழக்கு, துறை அடிப்படையில் பல குறிப்பான்கள் தரப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக்கழகம் பேரகராதியில் மதம், இனம், இடம், துறை, தகுதி, வழக்கு எனும் பல்வேறு அடிப்படைகளில் ஏறத்தாழ 100 குறிப்பான்கள் இடம்பெற்றுள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலியில் தரப்பட்டுள்ள குறிப்பான்கள்

வழக்கு	இனம்	காலம்	மதம்
அருகிய வழக்கு	குல வழக்கு	இக்காலம்	உரோமன்
படைப்பு.வழக்கு	ஆதிதிராவிடர்	இடைக்காலம்	கத்தோலிக்கர்
பெருவழக்கு	வழக்கு	வழக்கொழி	கிறித்தவ வழக்கு
	பரவல் வழக்கு	சொல்	சமணம்
	பள்ளர் வழக்கு	பழைய வழக்கு	வைணவம்
	பிராமணர் வழக்கு		
	மீனவர் வழக்கு		

என வழக்கு, இனம், காலம், மதம் தொடர்பான பல குறிப்பான்கள் இடம் பெற்றுள்ளன.

பதிவுச்சொல்லை அடுத்தும் பொருட் பகுதியிலும் என இரண்டு இடங்களில் இவை தரப்பெறும்.

அடர் - பெ - அ (வேதி)
அடவு - பெ (நாட்டியம்)
இடையினம் - பெ (இலக்கணம்)
இடைத்தரகர் - பெ (பெ.வ)

மேற்கண்டவை கிரியா அகராதியில் தரப்பெற்றுள்ள குறிப்பான்கள் ஆகும்.

அக்கினிபஞ்சகம் - n (Astrol)
அகச்சமயம் - n (Saiva)
அந்தரக் கொட்டு - n (Dram)
அந்தரகாந்தாரம் - n (Mus)

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் மேற்கண்ட குறிப்பான்கள் தரப்பட்டுள்ளன.

மதம் சார்ந்த சொற்களுக்கு இரு குறிப்பான்கள் தரலாம். அவ்வகையில், சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் வைணவ வழக்குகளுக்குக் குறுக்க விளக்கப்பட்டியலில் Vais - Vaisnava usage (Vaisn) - Vaisnava philosophy என இருவிதக் குறிப்பான்கள் தரப்பட்டுள்ளன.

குறிப்பான்கள் நிலைபேறு உடையனவல்ல. அகராதி உருவாக்க ஆரம்பத்தில் அருகியதாயும், புது வழக்காயும் இருப்பது அகராதி முடிவடையும் காலத்தே வழக்கு மிகுந்த சொல்லாகலாம். அகராதிகளில் தரப்பட்ட குறிப்பான்களை அப்படியே ஏற்காமல் மாற்றம் உண்டா என்பதையும் ஆராய்ந்து பார்த்தே ஏற்க வேண்டும். குறிப்பான்கள் மொழிப் பயன்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரிகின்றது என்பதை அறிந்து செயல்பட வேண்டும்.

மருங்கூர் வட்டார நாடார் வழக்குச் சொல்லும் பொருண்மையும்

முனைவர் சகோ.விர்ஜின் விமலா பாய்

பெரியகுளம்

முன்னுரை

மொழியானது மாறிவரும் பண்பாடு, அரசியல் முதலிய சூழல்களை உள்வாங்கிக்கொண்டு காலத்துடன் ஒன்றி வாழ்ந்து வளர்ந்து வருகின்றதொன்று. இதன் அடிப்படையில் தமிழ் இலக்கண வளர்ச்சியும் மொழியியல் சிந்தனைகளும் உருவாயின. குறிப்பாக ஐரோப்பியர் வருகைக்குப் பின் ஏற்பட்ட கல்விமுறை மாற்றங்களும் மொழியியல் வளர்ச்சியும் அச்சியந்திர வரவும் தமிழ் இலக்கண வரலாற்றில் அகராதிகள் உருவாகக் காரணமாக அமைந்தன. தற்போது அகராதியியல் வளர்ந்துவரும் துறையாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், மருங்கூர் வட்டார நாடார் வழக்குச் சொற்களும் அவை உணர்த்தும் பொருண்மை பற்றியும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

அன்றாட வாழ்வின் பயன்பாட்டு வழக்குச்சொல்

மனித வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் பேசும்போதும் ஒருவரையொருவர் கேலி செய்யும்போதும் விருப்பு வெறுப்புகளின் போதும் வழக்குச்சொற்கள் இடம்பெறுவதைக் காணலாம். சான்றாக,

ஒங்கிட்ட	- உன்னிடத்தில் "ஓங்கிட்ட அப்போ ஒண்ணு சொன்னேனே"
தாப்பா	- தாழ்ப்பாள்
ஒட்டுத்திண்ண	- வீட்டிற்கு வெளியே ஒட்டிய வெளிப்புறமுள்ள திண்ணை
பால் காய்ச்சல்	- புதுமனை புகுதல்
பிஞ்சி போச்சி	- பிய்ந்துவிட்டது
சிரங்கை	- உள்ளங்கையால் எடுக்கும் அளவு. "சிரங்கைத் தானியம் அள்ளிப்போடு"
ஓர்மை	- ஞாபகம்

திடுதிப்புன்னு	- எதிர்பாராமல். "திடுதிப்புன்னு இப்படி வந்து நின்னா என்ன செய்யுறது"
இந்த வாட்டி	- இந்தத் தடவை
காம்பிபோச்சி	- ருசிமாறுதல்
எச்சிதுப்ப இடமில்ல	- கூட்டம்
அந்தா	- அதோ "அந்தா பாருங்க ஏரோப்ளேன் போகுது"
அம்மாடீ	- பயத்தோடு கூடிய ஆட்சேபனை "அம்மாடீ நா மாடேம்மா"
இத்தினிக்காணு	- ரொம்ப சிறிய "இத்தினிக்காணு எனக்கு வேண்டாம்"
ஆயுசுநூறு	- ஒருவரைப் பற்றி நினைத்தவுடன் அந்த இடத்துக்கு வந்துவிடுதல்
ஏதாச்சும்	- ஏதாவது "ஏதாச்சும் இருக்கா சாப்பிட"
கோரி	- மொண்டு, "அந்த ஏனத்திலிருக்கிற தண்ணிய கோரி கோரி ஊத்து"
தாசா பண்ணுதல்	- சமாதானம் பண்ணுதல்
கோணூசி	- கோணிச்சாக்கு தைக்கும் ஊசி

நேரம் / காலம் குறிக்கும் சொற்கள்

காலம் அல்லது நேரம் என்பது மனித வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்று. 'காலம் பொன் போன்றது' என்பது காலத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. காலத்தைக் குறித்து நிற்கும் சொற்களும் பயன்பாட்டில் உள்ளன. சான்றாக,

செத்த	- கொஞ்சம் "செத்த நாழி கழிஞ்சி வாயேன்"
அப்போ	- அப்பொழுது
இப்போ	- இப்பொழுது
அப்பல	- சற்று முன்பு "அப்பல வந்து எட்டிப் பார்த்துட்டுப் போனது நீ தானா"?
காலங்காத்தால	- விடிந்தவுடன்
இங்ஙன	- இவ்விடத்தில் "இங்ஙன தான் வைச்சேன்"
காலம்பற	- அதிகாலையில்
கூப்பிட்டுத்தொலை	- எழுப்பும் குரல் கேட்கும் தூரம்
அந்தி	- மாலைநேரம் "அந்திப்பனை சீவணும்"

மதியம் - நண்பகல்
தாக்காட்டி - தாமதம் "ஆள கொஞ்சம் தாக்காட்டி வையுங்க"
பைய - மெதுவாக

வசைச் சொற்கள்

வாழ்வில் பிரச்சனைகள் ஏற்படும்போது வசைச் சொற்கள் மொழிவதும் உண்டு. சான்றாக,

பம்பை - சிலிர்த்த முடி "பம்பைத்தலை"
களவாணி - திருடன்
கட்டையில்போக, குழியில்போட - வசைச்சொற்கள்
மண்டைக்கனம் - கர்வம், "பையனுக்கு மண்டைக்கனம் ஜாஸ்தி"
பருப்புவேகாது - காரியம் பலிக்காது, "அந்தப்பருப்பு இங்க வேகாது"
தின்னிமாடன் - சோத்துமாடன்
கசவாளி - கயவன் "சுத்த கசவாளிப்பயல்"
தெத்துவாளி - ஏமாற்று, "சரியான தெத்துவாளி அவன்"
நாக்கைப் பிடிங்கிட்டுச் சாக வேண்டாமா? - மானத்தைவிட்டு வாழ்பவனைக் குத்திக் காட்டுவது
நாயைக் குளிப்பாட்டி நடுவீட்ல வச்சாலும் - கீழ்த்தரமான புத்தியுள்ளவனைத் திட்டுவது
சோப்ளாங்கி - உதவாக்கரை
ஆக்கங்கெட்ட - விருத்திகெட்ட. "சுத்த ஆக்கங்கெட்ட பயல்"
பூசை - உதை "பூசை கிடைத்ததா"
சிங்கி - ஆமாம் சாமி போடுகிறவன்
கை நீளம் - களவு. "அவனுக்குக் கொஞ்சம் கை நீளம்"
கோணப்பையன் - நேர்வழி அல்லாதவன். "கோணையன்"
கூட்டுக்களவாணி - திருட்டுத்தனத்தில் சேர்ந்து கொண்டவன்.
குந்தாணி - குட்டையாகவும் குண்டாகவும் இருப்பவளைக் கேலி செய்வது.

உறவுப்பெயர்கள்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. தனித்து வாழ முடியாதவன். அவன் குடும்பமாகச் சமூகமாக வாழ்கிறான். உறவு பரிமாற்றம் அன்றாட வாழ்வில் முக்கியம் பெறுகிறது. சான்றாக,

மதினி - அண்ணனின் மனைவி

ஆத்தா - அக்கா
மாமா - அம்மாவின் தம்பி
மாமி - அம்மாவின் தம்பி மனைவி
அத்தான் - அக்காவின் கணவன்
அவிய - அவர்களை. "அவியளைக் காணோமே"
ஏங்க - கணவனை விளிக்கும் சொல்
கடக்குட்டி - கடைசிக் குழந்தை
அருமந்த - பிரியமான, "அருமந்தபிள்ளை"

உணவு வகைகளில் வழக்குச் சொற்கள்

உணவின்றி வாழ்தல் இயலாத ஒன்று. உணவு வகைகளிலும் வட்டார வழக்கு முக்கிய இடம் பெறுகிறது. சான்றாக,

உள்ளி - வெங்காயம்
பாசிப்பயிறு - சிறுபயிறு
சருகு - வெற்றிலை "சாமி ஒரு சருகு இருந்தா கொடு"
சீனி அவரை - கொத்தவரை
சீனிக்கிழங்கு - சக்கரை வள்ளிக்கிழங்கு
வத்தல் - காய்ந்த மிளகாய்
கருப்பட்டி - கருப்புக்கட்டி
பதனி - பதனீர்
கூப்பதனி - பாகுபோல் காய்ச்சிய பதனீர்
கொத்தமல்லி - மல்லி
நல்லமிளகு - மிளகு

பாராட்டுச்சொற்கள்

பாராட்டு என்பது மனிதன் உயர்நிலையை அடைய இன்றியமையாத ஒன்று. பாராட்டு ஒருவனை மேலும் மேலும் உயர்நிலைக்கு இட்டுச்செல்லும் நல்வழி. சான்றாக,

பிச்சி உதறிட்டான் - நன்றாகப் பேசினான் / பாடினான்
கையில் பிடிக்க முடியாது - தாங்க முடியாத சந்தோஷம்
தலைகீழா ஒப்பிப்பான்- எந்த இடத்திலிருந்து எப்படிக் கேட்டாலும் ஒப்பிப்பான்
கையொடிஞ்ச மாதிரி -"அவன் இல்லாமல் எனக்குக் கையொடிஞ்ச மாதிரி இருக்கு"
கண்ணுக்குள்ளே இருக்கு - பார்க்க ஆசையா இருக்கு

உடை

உடுத்தும் உடை தொடர்பான சொற்களும் இடம் பெற்றுள்ளன. சான்றாக,

நேரியல் - ஜரிகை போட்ட துண்டு
சுங்கிடிச்சேலை - ஒரே நிறத்தில் அமைந்த சேலையில் மற்றொரு நிறப்புள்ளி போட்ட சேலை
கோடி -புதுசு, "கோடி வேஷ்டி"
கண்டாங்கி சேலை - வெண்ணிறமல்லாத கலர் சேலை
ரவிக்கை - சட்டை (பெண்கள் அணிவது)
கைலி - லுங்கி

அணிகலன்

பெண்கள் அணியும் அணிகலன்களிலும் வழக்குச் சொற்கள் மிகுதியாகக் காணக்கிடக்கின்றன. சான்றாக,

பாம்படம் - காது வளர்த்த பெண்கள் அணியும் காதணி
தொங்கட்டான் - பெண்கள் காதில் அணியும் அணி
அட்டியல் - கழுத்தையொட்டி அணியும் அணி
அருணாகயிறு - அரைஞாண் கயிறு
தண்டை - காலில் அணியும் அணி

நோய் குறித்த சொற்கள்

"நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்" என்பதற்கு ஏற்ப மனிதன் வாழ்வில் எந்நேரமும் மகிழ்ந்திருக்கவே விரும்புகிறான். ஆனால் அவன் வாழ்வில் நோயின் குறுக்கீடுக்குக் கணக்கில்லை. சான்றாக,

பூ விழுதல் - கண்ணின் கருவிழியில் வெள்ளைப்புள்ளி விழுதல்
மாந்தம் - அஜீரணம். சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்
மூச்சுக்குத்து - ஒருவித வாயு சம்பந்தமான நோய்
சீக்கு - நோய்
சீக்காளி - நோயாளி
கிறுகிறுண்ணு வருது - மயக்கமாக வருகிறது
ஒட்டுவாரொட்டி - தொற்றுநோய்
ஒமட்டுது - வாந்தி உணர்வு
உளுக்கு - கை கால் சுளுக்கு
தப்பளம் -- நெற்றி தலை ஆகிய இடங்களில் பற்றுப்போடுதல்
கிறுகிறுப்பு - மயக்கம் "கிறுகிறுண்ணு வருது"
கண்ண இருட்டிச்சி - மயக்கம்

விளையாட்டு

உடற்பயிற்சி விளையாட்டு நல்வாழ்விற்கு இன்றியமையாததாகும். அதிலும் வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. சான்றாக,

நொண்டி - பெண்கள் விளையாட்டு
கொலை கொலையா முந்திரிக்காய் - விளையாட்டில் ஒன்று
கிட்டிக்குச்சி - சிறுவர் விளையாட்டு
கண்ணாம்பூச்சி - கண்ணைப் பொத்தி ஆடும் விளையாட்டு
தாயம் - பெண்கள் விளையாட்டு
பாண்டி - பெண்கள் விளையாட்டு

தொழில் தொடர்பான சொற்கள்

ஒவ்வொருவரும் தாம் செய்யும் தொழிலைத் தெய்வமாக மதித்துப்போற்றி வருகின்றனர். அதிலும் வட்டார வழக்குச் சொற்கள் மிஞ்சி நிற்கின்றதைக் காணலாம். சான்றாக,

பைதா - வண்டிச் சக்கரம்
மறுகால் - குளம் நிறைந்து கலுங்கு வழியாகத் தண்ணீர் ஓடுதல்
பலப்படுதல் - சினையாகுதல்
பனைசீவல் - பாளையைச் சீவி பதனீர் இறக்குதல்
பாட்டம் - பனை குத்தகை, "பாட்டம் எடுக்கணும்"
தொரட்டி - ஆடு மேய்க்கிறவர்கள் வைத்துக்கொள்ளும் கம்பு
தண்ணி காட்டுதல் - மாட்டிற்குத் தண்ணீர் வைத்தல்
சாவி - பதர். "நெல்லு சாவியாப் போச்சு".
சக்கடவண்டி - கட்டைவண்டி
சக்கைப்போடு - அமோக விளைச்சல். "வெள்ளாமை இந்த வருஷம் சக்கைப்போடு"
புண்ணியமில்ல - சரியில்லை. "வெள்ளாமை ஒண்ணும் புண்ணியமில்லை".
பொலி - களத்தில் தானியத்தின் குவியல்
படப்பு - மாட்டுத் தீவனத்தை மழைக்கு நனையாமல் கூரைபோல் ஒழுங்கு செய்து வைத்தல்
பாளையருவா - பனை பாளையும் சீவும் அரிவாள்
பிணையல் - கதிரடிக்க மாடுகளை இணைப்பது
கையைப் பிடிக்கும் - நஷ்டம் வரும். "கையைப் பிடிக்கும்"
அடைப்பான் - மாட்டுக்கு வரும் நோய்களில் ஒன்று.
அட்டை - மாட்டின்மேல் ஒட்டிக்கொள்ளும் ஒருவகை ஈ. இதனைக் கையால் நசுக்கினால் சாகாது.

சும்மாடு - தலையில் பாரம் அழுத்தாமலிருக்கத் துணியை வட்டமாகச் சுற்றி வைத்துக்கொள்வது
கூந்தல் - பனங்காயின் சீவிய மேல் பகுதி. "நொங்கு தின்னவனை விட்டுவிட்டுக் கூந்தல் நக்கினவனைப் பிடிச்ச மாதிரி"
கருக்கு - அரிவாளின் பல், "பன்னருவாருக்குக் கருக்க வைக்கணும்"
கலப்பை மூட்டுதல் - கலப்பையில் கொழுவை ஏற்றுதல்
கலப்பைக் குத்தி - கலப்பையாகச் செதுக்குவதற்கு முன்னுள்ள, கருவை மரத்தின் ஓரளவு செதுக்கப்பட்ட குத்தி
களம் தெளித்தல் - களத்தின் தரையைக் கெட்டியான சாணிப்பால் கொண்டு தெளித்துச் சுத்தம் செய்தல்

வீட்டு உபயோகப் பொருட்கள்

வீட்டில் பயன்படுத்தும் பொருட்களிலும் வட்டார வழக்குச் சொற்கள் பின்னிப் பிணைந்துள்ளன. சான்றாக,

பாதாளக் கரண்டி - கிணற்றில் தவறி விழுந்த வாளியை எடுக்க உதவும் கருவி
ஈருவலி - தலையில் ஈரு (பேன்) உருவ உதவும் மரத்தினாலான கருவி
நார் பெட்டி - பனை நார் கடவம்
மிஞ்சி - மிச்சம். "சாப்பாடு மிஞ்சி போச்சி".
சொளவு - முறம்
தடுக்கு - உட்காரப் பயன்படுத்தும் ஓலையினாலான தட்டு
ஏனம் - பாத்திரம்
கும்பா - உணவு உண்ணும் ஏனம்
பின்னு - கோழியின் ரோமத்தைப் பிடுங்குதல்
உரப்பெட்டி - அரிசி குத்தும்போது சிந்தாமல் இருக்க உரலின்மேல் வைக்கும் உரல்பெட்டி
உடுமாத்து - மாற்றி உடுத்திக்கொள்ளும் துணி

முடிவு :

மருங்கூர் வட்டார வழக்குச் சொற்களையும் பொருண்மையையும் பன்முகப்பதிவுகளையும் இக்கட்டுரை எடுத்தியம்பியுள்ளது.

நாமதீப நிகண்டில் தெய்வப்பெயர் வர்க்கம் ஓர் உள்ளடக்க ஆய்வு

இரா. வீரா
தஞ்சாவூர்

முன்னுரை

தமிழ்க்கல்வியில் இலக்கியம், இலக்கணம், நிகண்டு என்னும் மூன்றும் மூன்று கண்கள். நிகண்டு என்னும் உரிச்சொல் பனுவல்கள் சொற்பொருள் விளக்கும் நூல்களாகும். எனவே நிகண்டுக் கல்வியால் இலக்கிய இலக்கணப் பயிற்சி எளிதாகும். ஆதலின நிகண்டு கற்பதற்கு நம் முன்னோர்கள் முதலிடம் தந்திருக்கின்றனர். இது நிகண்டுகளின் முதன்மைச் சிறப்பாகும்.

இன்றைய அகராதிகளின் நிலையில் பாடல் வடிவில் அமைந்த சொற்பொருள் விளக்கநூல்கள் நிகண்டுகளே ஆகும். ஏறத்தாழ 1200 ஆண்டுகளாக இவ்வகை நூல்கள் பல்வேறு காலங்களில் அவ்வக் காலத்திற்கு ஏற்பத் தோன்றி பயன் தந்துள்ளன. இந்நிகண்டு வரலாற்றின் தொடக்க நூல் திவாகரம் ஆகும்.

இலக்கியச் சொற்களைக் காலந்தோறும் கணித்து அறிவது மொழி வளர்ச்சிக்கும் பயிற்சிக்கும் எவ்வளவு இன்றியமை யாததோ அதுபோன்றே நிகண்டுச் சொற்பொருள்களை வரன்முறைப்படி தொகுத்துப் பயில்வதும் இன்றியமையாத தாகும். நிகண்டுகளில் தெய்வப்பெயர் முதலாகப் பல்வேறு பெயர்களையும் தனித்தனியாகத் தொகுத்து தருவது மரபு.

ஒரு சொல்லுக்குரிய பல்வேறு பொருள்களையும் முறையாகத் தொகுத்துத் தரும் தொகுதி மிக முக்கியமாகக் கருதத்தக்கது ஆகும். இது அகராதிபோலப் பயன்படுவதற்குரிய தனிப்பகுதியாகும். சில நிகண்டுகள் இந்த ஒருசொல் பலபொருள் பற்றியே தனிப்படவும் தோன்றியுள்ளன.

நிகண்டுப் பெயர் வரலாறு

நிகண்டு என்பது இலக்கணம் போன்றதொரு கருவி நூல். நிகண்டு என்னும் சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்பது பொருள். உயர்திணை அஃறிணை பற்றிய பல்வேறு பெயர் களையும் வினை பற்றிய பெயர்களையும் பாகுபாடு செய்து, அவற்றைத் தொகுத்துக் கூறுதலோடு அச்சொற்கள் குறிக்கும் பொருள்களையும் வரையறுத்து உணர்த்துவது நிகண்டு நூல்களின் பொது இயல்பு. எனவே, மொழிப்பயிற்சிக்கு இன்றியமையாத கருவி நூல்களாக இந்நிகண்டுகள் அமைந்துள்ளன.

முதன்முதலில் நிகண்டு என்பது வடமொழியில் வேதத்திற்கு அங்கமாய், வைதிகச் சொற்களின் பொருள்களை உணர்த்தும் கருவி நூலுக்கு மட்டும் சிறப்பாக வழங்கப்பட்டது. பின்னர், நாளடைவில் சொற்பொருள் உணர்த்தும் நூற்களுக்கு எல்லாம் இப்பெயர் வழங்கப்படலாயிற்று. தமிழில் நிகண்டு நூலை 'உரிச்சொல்' என்றும் 'உரிச்சொல் பனுவல்' என்றும் வழங்கும் வழக்கம் இருந்தது.

வேதாங்கம் ஆறனுள் ஒன்று நிகண்டு

வேதச் சொற்களை விளக்கும் நூலை 'நிருத்தம்' என்று வழங்குவர். மணிமேகலையில் சமயக்கணக்கர் தந்திறம் கேட்ட காதையில் வரும்,

> **'கற்பங்கை சந்தங்கால் என்கண்**
> **தெற்றென் நிருத்தம் செவி, சிக்கை மூக்கு,**
> **உற்ற வியாகரண முகம் பெற்றுச்**
> **சார்பில் தோன்றா ஆரண வேதக்கு**
> **ஆதி அந்தம் இல்லை அது நெறி எனும்**
> **வேதியன் உரையின் விதியும்கேட்டு'**
> **(சமயக். 100 – 105)**

என்னும் பகுதி வேதங்களாகிய கற்பம், சந்தோபிசிதி, சோதிடம், நிருத்தம், சிக்கை, வியாகரணம் என்னும் ஆறனையும் உருவகமாகப் பேசுகிறது. இவற்றுள் நிருத்தம் என்பது வேதச் சொற்களின் விளக்கம் என்பதனை உலகியற் சொல்லையொழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும் என நச்சினார்க்கினியர் உரைப்பதனாலும் (தொல். புறத். 20 வரை) அறியலாம். வேதச்

சொல் விளக்கமாகிய நிருத்தம், அதாவது நிகண்டு பின்பு உலகியல் சொல் விளக்க நூல்களுக்கும் உரிய பெயராய் வழங்கத் தலைப்பட்டுள்ளது.

நிகண்டுப் பொருள் வரையறை

சொற்பொருள்களை வரையறுத்து உணர்த்தும் பகுதி நிகண்டு நூல்களில் ஒரு முக்கிய கூறாய் அமைந்து விளங்குகின்றது. இப்பகுதி நூலின் இறுதியில் அமைந்து, சொற்பொருள் விளக்கக் களஞ்சியமாய்க் காணப்படுகிறது. மேலும், தெய்வப்பெயர் மக்கட்பெயர் முதலியனவாக ஒரு பொருளுக்குரிய பல பெயர் களையும் தொகுத்துக்கூறும் பகுதி நூலின் முதற்பகுதியாகும். இங்ஙனமாகப் பொருள்களை வகைப்படுத்துவதற்கும் தொல்காப்பியம் உதவியுள்ளது.

தொல்காப்பியச் சொல்லதிகாரத் தொடக்கத்திலேயே சொற்கள் உயர்திணை, அஃறிணை என்னும் இரு பகுதியாகப் பிரிந்து பொருள் விளக்கும் இயல்பு புலப்படுத்தப்பட்டுள்ளது. உயர்திணை என்பதில் தெய்வப்பெயர் மக்கட்பெயர் என்பவையும் அடங்கும்.

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே ;
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே

(தொல். சொல் 1)

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறிவும் அந்தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கின் பால்பிரிந் திசைக்கும்

(தொல். சொல். 4)

என்னும் நூற்பாக்கள் தெய்வப்பெயர், மக்கட்பெயர் ஆகியவற்றை உயர்திணை எனப் பாகுபடுத்திக் கூறுகின்றமையைக் காணலாம்.

நிகண்டு கற்றலின் இன்றியமையாமை

இலக்கிய இலக்கணங்களைப் போலவே நிகண்டு என்பதும் தமிழ் மொழியின் ஒருதனிக்கூறு ஆகும். இலக்கிய இலக்கணங்களின் பயிற்சிக்கு முன்பாகவே நிகண்டு படித்தல் வேண்டும் என்பர். அவற்றில் வரும் சொற்பொருள் விளக்கத்திற்குத் துணை நிற்கும் நூல் நிகண்டு ஆதலின் கல்வி நிலையில் நிகண்டு முதலிடம் பெறுவதாகிறது.

நாமதீப நிகண்டு

ஆசிரியர் - சிவசுப்பிரமணியக் கவிராயர்
காலம் - 19 ஆம் நூற்றாண்டு
தொகுதி - ஒருபொருட் பலபெயர்
பா வகை - வெண்பா

முழுமையான தமிழ் நிகண்டுகளில் முத்திறக் கூறுபாடு களைக் காணலாம். அவையாவன ;

1. ஒருபொருட் பல்பெயர்த் தொகுதி
2. ஒருசொல் பல்பொருட்பெயர்த் தொகுதி
3. பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி

இவற்றுள் இந்நாமதீப நிகண்டு முதற்கூறாகிய ஒருபொருட் பல்பெயர்த் தொகுதியாய் அமைந்துள்ளது. ஒரு பொருட் பல்பெயரை வடமொழியாளர் ‘ஸமாநார்த்தபதம்’ என்பர். நிகண்டுகளுள் பெரும்பாலனவும் திவாகரரின் அமைப்பு முறை தழுவியே அமைந்திருக்கின்றன. ஆனால், இந்நாமதீப நிகண்டு புதியதொரு முறையில் பொருட்பாகுபாடு செய்துள்ளது.

நாமதீப நிகண்டின் பொருளடைவு



இந்நிகண்டு காலத்தால் முற்பட்ட உரிச்சொல் நிகண்டு போல வெண்பாயாப்பில் அமைந்தள்ளது. நூல் முழுவதும் 808 வெண்பாக்கள் . இவற்றுள் பாயிரம் 8 செய்யுள். ஏனைய 800 செய்யுட்களும் பொருட் பெயர்களையே விரித்துரைக்கின்றன.

நாமதீப நிகண்டில் அமைந்த பெயர்களின் சிறப்புத்தன்மை

‘பெயர்களுள் சங்க காலம் தொட்டு ஆசிரியரது காலம் வரையும் தமிழில் பயின்றுள்ள சொற்களைக் காணலாம். மலை நாட்டிலிருந்து தமிழில் புகுந்த சில திசைச் சொற்களும் இதன்கண் உள்ளன. ‘தைநாறு கன்று’ என இந்நூல் கூறும். மலையாள மொழியில் மரக்கன்று ‘தை’யென இன்றும் வழங்கப்படுகின்றது. ஆட்சி என்பது வாரத்தின் பெயரென இந்நூலுணர்த்தும், மலையாளத்தில் இம்மொழி இன்றும் இப்பொருளில்

வழங்குகின்றது. இவை போன்றனவும் பிறவும் அறிந்து இன்புறுதற்குரியன. பல்லாயிர நிகண்டில் பண்டிதர்கள் சொன்ன பொருளெல்லாம் எளிதாக இனிதுணர... பன்னுதமிழ் நாமதீபம் என்று பாயிரத்தில் வந்துள்ள அடிகளை நோக்கும்போது இந்நூலை இயற்றுதற்கு நெடுங்காலமாய் இதன் ஆசிரியர் உழைத்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

தெய்வம் என்னும் பெயர்

தெய்வம் என்னும் பெயர் கடவுள் பொதுப்பெயராகச் சங்க காலத்திற்கு முன்பிருந்தே வழங்கிவருகிறது. தொல்காப்பியர் கருப்பொருள்களை விளக்குமிடத்து, 'தெய்வம் உணாவே' (தொல்.பொருள் 1:20) என்று தொடங்கி நிலத்திற்குரிய தெய்வத்தையே முதலில் வைத்துள்ளார். மக்களைப் போலவே தெய்வம் சுட்டிய பெயரும் உயர்திணை என்னும் விளக்கமும் அவர் தந்துள்ளார். (தொல்.சொல் 1:4) மேலும், 'பால்வரை தெய்வம்' (தொல். சொல் 1:58) மொழிப் பொருள் தெய்வம் (தொல். பொருள் 1;39) உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக் கொள்ளும் (தொல். பொருள் 1:50) வழிபடு தெய்வம் (தொல்.பொருள் செய்.106) என்றாற்போலப் பல இடங்களில் தெய்வம் என்னும் பெயரைத் தொல்காப்பியர் மிகுதியும் ஆண்டிருக்கிறார்.

ஒத்தாழிசைக்கலி கடவுளை முன்னிலையாகத் துதிக்குமிடத்து வருமென்பார்.

'ஏனை ஒன்றே
தேவர் பாரா அய முன்னிலைக் கண்ணே'
(தொல்.பொருள்.செய்யுள் – 133)

என்னுமிடத்தில் 'தேவர்' என்று குறிப்பிடுகிறார்.

உயர்திணை படலத்தில் தெய்வ வர்க்கம்

தெய்வம்

- பெரு தெய்வம்
  - சிவன் (148)
  - விஷ்ணு (110)
  - பார்வதி (82)
  - சுப்பிரமணியன் (63)
  - கணபதி (35)
  - பிரம்மன் (27)
  - இலக்குமி (18)
  - சரஸ்வதி (14)
- சிறுதெய்வம்
  - ஆண்பாற்பெயர்
    - 1.வீரபத்திரன்
    - 2.மன்மதன்(46)
    - 3.இந்திரன்(28)
    - 4.எமன் (25)
    - 5.வீரவாகு (20)
    - 6.சாத்தா (16)
    - 7.வயிரவன்(13)
    - 8.பலதேவன்(10)
    - 9.நவவீரர்(9)
    - 10.நந்திகேச்சுரன்(7)
  - பெண்பாற் பெயர்
    - இந்திரன்தேவி(5)
    - காடுகாள் (7)
    - 1.மூதணங்கு
    - 2.கொற்றி
    - 3.மாரி
    - 4.வருகி
    - 5.வருகன்றாய்
    - 6.மோடி
    - 7. சூரி

தேவர்கள்

1.முப்பத்துமுன்று தேவர்கள்

ஏகாதசி சருத்திரர்	11
துவாதசாதித்தர்	12
அஷ்டவசுக்கள்	8
மருத்துவர்	2
	33
2.குபேரன்	13

அசுரர்கள்

1.அந்தரர்
தோர்க்கொன்னார்
2.அவுணர்
3.தகுவர்
4. திதிமைந்தர்
5.தயித்தியர்

இயற்கை (10)

1. நீர் (39)
2. தீ (34)
3. மேகம் (24)
4. வாயு (19)
5. காற்று (17)
6. இடி (7)
7. மின்னல் (7)
8. மழை (60
9. ஆழம் (5)
10. வெயில் (3)

வானியல்

கோள்கள்

1. சூரியன்
2. சந்திரன் (32)
3. செவ்வாய் (16)
4. சுக்கிரன் (19)
5. புதன் (18)
6. சனி (16)
7. வியாழன் (15)
8. இராகு (4)
9. கேது (4)

இராசி

1. மேஷம்
2. இடபம்
3. மிதுனம்
4. கடகம்
5. சிம்மம்
6. கன்னி
7. துலாம்
8. விருச்சிகம்
9. தனுசு
10. மகரம்
11. கும்பம்
12. மீனம்

நட்சத்திரம்

1. அசுவதி (8)
2. மிருகசீரிசம் (8)
3. உரோகிணி (7)
4. அத்தம் (7)
5. பரணி (6)
6. புனர்பூசம் (6)
7. சித்திரை (6)
8. மூலம் (6)
9. மகதம் (5)
10. சோதி (5)
11. திருவோணம்(5)
12. சதையம் (5)
13. கார்த்திகை (4)
14. திருவாதிரை(4)
15. பூசம் (4)
16. கேட்டை (4)
17. பூரம் (4)
18. அவிட்டம் (4)
19. ஆயிலியம் (3)
20. உத்திரம் (3)
21. உத்திராடம் (3)
22. பூரட்டாதி (3)
23. உத்திரட்டாதி (3)
24. ரேவதி (3)
25. அருந்ததி (3)
26. அனுடம் (3)
27. பூராடம் (2)
28. விசாகம் (1)

நாமதீப நிகண்டில் உயர்திணைப் படலமான தெய்வப் பெயர் வர்க்கத்தை 1.தெய்வம், 2.தேவர்கள், 3.அசுரர்கள், 4.இயற்கை, 5.வானியல் என்று ஐந்து வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

இவற்றுள் தெய்வப்பெயர் பெருதெய்வம், சிறு தெய்வம் என்றும், சிறுதெய்வத்தை ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள் என்றும் இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

பெருதெய்வங்களாக எட்டு தெய்வங்கள் காணப்படு கின்றன. அவை,

1. சிவன், 2.விஷ்ணு, 3.பார்வதி, 4.சுப்பிரமணியன், 5.கணபதி, 6.பிரம்மன், 7.இலக்குமி, 8.சரஸ்வதி . இவற்றுள் சிவனுக்கே அதிகப்பெயர்கள் காணப்படுகின்றன. ஏறத்தாழ 148 பெயர்கள் காணப்படுகின்றன. குறைவான பெயர்கள் இடம்பெற்றுள்ள தெய்வம் சரஸ்வதி ஆகும். இந்த தெய்வத்திற்கு 14 பெயர்கள் காணப்படுகின்றன.

சிறுதெய்வங்களான ஆண்பாற் பெயர்களில் பத்து தெய்வங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் வீரபத்திரன் என்ற தெய்வத்திரு அதிகபட்சமாக 29 பெயர்கள் காணப்படுகின்றன. குறைவான பெயர்கள் காணப்படக்கூடிய தெய்வம் நந்திகேச்சுரன் ஆகும். இதற்கு 7 பெயர்கள் மட்டுமே காணப்படு கின்றன.

தேவர்கள்

1. முப்பத்து மூன்று தேவர்கள், 2. குபேரன்

ஏகாதச சருத்திரர்	11
துவாதசாதித்தல்	12
அஷ்டவசுக்கள்	8
மருத்துவர்	2
மொத்தம்	33

குபேரனுக்கு 13 பெயர்கள் காணப்படுகின்றன.

அசுரர்கள்

அசுரர்களாக நாமதீப நிகண்டில் ஐந்து பேர்கள் காணப் படுகின்றனர். 1. அந்தரர்தோர்க்கொன்னார், 2.அவுணர், 3.தகுவர், 4.திதிமைந்தர், 5.தயித்தியர்

இயற்கை

நாமதீப நிகண்டில் இயற்கைக்கு 10 பெயர்கள் காணப் படுகின்றன. இந்த பத்தில் நீருக்கு அதிகப்பெயர்கள் காணப்படு கின்றன ஏறத்தாழ 39 பெயர்கள் இடம்பெற்றுள்ளன. வெயிலுக்கு 3 பெயர்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

வானியல்

வானியலை மூன்று பிரிவாக நாமதீப நிகண்டில் பிரித்துள்ளனர். அவை 1.கோள்கள், 2.இராசிகள், 3.நட்சத்திரங்கள் ஆகும்.

இவற்றுள் கோள்கள் 9 காணப்படுகின்றன. இந்த ஒன்பதில் சூரியனுக்கே அதிகப்பெயர்கள் ஏறத்தாழ 64 பெயர்கள் காணப்படுகின்றன. குறைவாக பெயர்கள் கொண்ட கோள் கேது ஆகும். இதற்கு 4 பெயர்கள் மட்டுமே காணப்படுகின்றன

இராசிகள் 12 காணப்படுகின்றன. நட்சத்திரங்கள் 28 காணப்படுகின்றன. இவற்றுள் அசுவதி, மிருகசீரிசம் என்ற நட்சத்திரத்திற்கு அதிகமாக 8 பெயர்கள் காணப்படுகின்றன விசாகம் என்ற நட்சத்திரத்திற்கு 1 பெயர் மட்டுமே காணப்படு கின்றன.

முடிவுரை

இவ்வாறாக நாமதீப நிகண்டில் உயர்திணைப் படலமான தெய்வப்பெயர் வர்க்கத்தில் நிகண்டுப் பெயர் வரலாறு, வேதாங்கம் ஆறனுள் ஒன்று நிகண்டு, நிகண்டுப்பொருள் வரையறை, நிகண்டு கற்றலின் இன்றியமையாமை, நாமதீப நிகண்டு, நாமதீப நிகண்டில் பொருளடைவு, நாமதீப நிகண்டில் அமைந்த பெயர்களின் சிறப்புத்தன்மை, தெய்வம் என்னும் பெயர், தேவர்கள், அசுரர்கள், இயற்கை, வானியல் முதலியன விளக்கப்பட்டுள்ளன.

அறிவியல் களஞ்சியத்தின் பதிவுக்கூறுகள்

ச. ஜெயந்தி
தஞ்சாவூர்

முன்னுரை

தமிழில் அறிவியல் என்னும் சொல்லே புதுவழக்காகும். அறிவியலை முதலில் விஞ்ஞானம் என்றே கூறினர். தற்பொழுது அறிவியலின் முயற்சி படுவேகமாக முன்னேறி வருகின்றது. அறிவியலின் ஒவ்வொரு வளர்ச்சியையும் தெரிந்துகொள்ள அறிவியல் களஞ்சியம் பயன்படுகின்றது. நோக்கீட்டு நூலாக பயன்படும் அறிவியல் களஞ்சியத்தில் பதிவுக்கூறுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலைக்களஞ்சியம்

கலைக்களஞ்சியம் என்பது Encyclopaedia என்னும் கிரேக்கச் சொல்லின் தமிழ்ச் சொல்லாகும். 'encyclo' என்றால் general என்றும் 'paedia' என்றால் education என்றும் பொருள். எனவே encyclopaedia என்றால் பொதுவான கல்வி அல்லது அறிவு பற்றிய நூல் என்று பொருள். நெல்லைத் திரட்டி வைக்கின்ற இடம் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படுவது போன்று கலை மற்றும் அறிவியல் தொடர்பான செய்திகளைத் தொகுத்துத் தருகின்ற நூல் கலைக்களஞ்சியம் எனப்படுகின்றது.

கலைக்களஞ்சியத்தின் வகைகள்

கலைக்களஞ்சியங்களைப் பொதுவாக இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. பொதுக் கலைக்களஞ்சியம்
2. சிறப்புக் கலைக்களஞ்சியம்

பொதுக்கலைக்களஞ்சியம்

அறிவியல் மற்றும் வாழ்வியல் துறை தொடர்பாக உருவாக்கப்படும் களஞ்சியங்கள் பொதுக்கலைக்களஞ்சியங்களாகும். இது பல்வேறு துறையினராலும் பொதுமக்களாலும் பயன்படுத்தப்படும்.

சிறப்புக்கலைக்களஞ்சியம்

குறிப்பிட்ட ஒரு துறை பற்றியோ, குறிப்பிட்ட ஆசிரியரின் படைப்பு ஆராய்ச்சி பற்றியோ, புலவர் பற்றியோ, இலக்கியம் பற்றியோ தொகுக்கப்படும் களஞ்சியங்கள் சிறப்புக் கலைக்களஞ்சியங்களாகும்.

அறிவியல் கலைக்களஞ்சியம்

அறிவியல் என்பது உலகில் இருந்திடும் இயற்கையின் நியதிகளை கவனித்து, சோதித்து நிரூபணம் செய்து பெற்றிடும் அறிவு பற்றிய ஒரு துறை என்கிறது நர்மதாவின் தமிழ் அகராதி. அறிவியல் துறை செய்திகள் அனைத்தையும் திரட்டி, கட்டுரை வடிவில் திறம்படத் தொகுத்து தரும் நூல் அறிவியல் கலைக் களஞ்சியமாகும்.

அறிவியல் களஞ்சியத்தின் கட்டமைப்பு

அறிவியல் களஞ்சியத்தின் பதிவுக்கூறுகளே இக்கட்டுரையின் நோக்கமாகும். இருப்பினும், அறிவியல் களஞ்சியத்தின் வடிவமைப்பு பற்றி தெரிந்து கொள்வது புதிதாய்ப் படிப்பவருக்கு எளிமையாய் புரியும். நுகர்வு பகுதியில் களஞ்சியப் பணி பற்றிய விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. அதனையடுத்து நெறிப்படுத்துங்குழு, கருத்தறிகுழு, பதிப்புக்குழு, வல்லுநர்குழு, கட்டுரையாளர்கள் விவரம், பொது இயற்பியல் மாறிலிகள், குறுக்க விளக்கங்கள், நன்றியறிவிப்பு ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாகத் தரப்பட்டு உள்ளது.

சொல்லிற்கான பொருள்விளக்கம் தரும் பகுதியில் அறிவியல் துறையின் பல்வேறு பிரிவுகளுக்கேற்பப் பதிவுச் சொல்லும், பொருள்விளக்கமும் தரப்பட்டுள்ளது. பொருள் விளக்கப் பகுதியில் துறைச் சொல்லிற்கு ஏற்பச் சிறப்புப்பண்புகள், பொதுப்பண்புகள், வகைகள், பயன்கள், பொருளாதாரச் சிறப்புகள், படங்கள், அதற்குரிய பாகங்கள், அமிலம் தயாரிக்கும் முறை, குறியீடுகள், சமன்பாடுகள், நோய்களுக்கான அறிகுறிகள், பாதுகாப்பு முறைகள் என்னும் நிலையிலும், அறிவியலின் பல துறைகளிலும் இன்று வரையுள்ள வளர்ச்சிகளை விரிவாகவும் ஆழமாகவும் கட்டப்படங்கள், வரைப்படங்கள், ஒளிப்படங்கள், வண்ணப்படங்கள், அட்டவணைகள், வாய்பாடுகள், சமன்பாடுகள்

ஆகியவற்றின் துணையோடு எடுத்தியம்புகின்றது. ஒவ்வொரு கட்டுரையின் இறுதியில் நூலோதி தரப்பட்டுள்ளது.

முடிவில் சொல்லை எளிதில் கண்டறியும் வண்ணம் பொருள் சுட்டு அகர நிரலில் தரப்பட்டுள்ளது. அதனையடுத்து கலைச்சொல் தரப்பட்டுள்ளது.

அறிவியல் களஞ்சியத்தின் பதிவுகள்

களஞ்சியத்தில் சொல் பற்றிய தகவல்கள் அடங்கிய பகுதி பதிவு எனப்பெறும். அறிவியல் சொல்லுக்கு பொருளை கட்டுரை வடிவில் விளக்கப்படம், அட்டவணை, குறியீடு, சமன்பாடு கொண்டு விளக்கும் பகுதிக்கு அறிவியல் களஞ்சியப்பதிவு எனப்பெறும்.

அறிவியல் களஞ்சியத்தின் பதிவுக்கூறுகள்

அறிவியல் களஞ்சியத்தின் பதிவுக்கூறுகளை இரு நிலைகளில் பிரிக்கலாம்.

1. தலைச்சொல் பகுதி (Lemma part)
2. பொருட்பகுதி (Meaning Part)

தலைச்சொல்

அறிவியல் களஞ்சியத்தில் தலைச்சொல்லிற்கு பெயர்கள் மட்டுமே பதிவாய் தரப்பெற்றுள்ளது. ஏனெனில் அறிவியல் சொற்கள் பெரும்பாலும் கலைச்சொல்லாய் அமைந்திருக்கும். அறிவியல், தொழில்நுட்பம் தொடர்பான கருவிகளும், கோட் பாடுகளும், கண்டுபிடிப்புகளும், இயந்திரங்களும், தொழில்நுட்பம் தொடர்பான வரலாறுகளும், நோய்களுக்குரிய பெயர்களும் மற்றும் பலவும் அறிவியல் களஞ்சியத்தில் பதிவாய் அமைந்துள்ளது. தலைச்சொல்லில் சில பதிவுகள் உள்ளடங்கி வருகின்றன. அவையாவன,

1. விளக்கச் சொல்
2. துறை விளக்கச்சொல்
3. குறியீட்டு விளக்கச்சொல்

1. விளக்கச்சொல்

இவ்வகையில் தலைச்சொல்லை விளக்க தலைச் சொல்லிற்கு பக்கத்தில் விளக்கச்சொல் அடைப்புக்குறிக்குள் இடம் பெற்றுள்ளது.

சான்று : குலம் (சுழற்சி)
குவாண்டம் எண் (ஒத்த சுழற்சி)
குவாண்டம் கோட்பாடு (கதிர்வீச்சு)

2. துறை விளக்கச்சொல்

இவ்வகையில் தலைச்சொல்லை அடுத்து தலைச்சொல் எத்துறையைச் சார்ந்தது என்ற குறிப்புள்ளது.

சான்று

அசுவினி (வானியல்)
குலம் (முழுநேரியல்)
குவாசர்கள் (கணிதம்)
குவாண்டம்கோட்பாடு (நிறமாலையியல்)
குழித்தைலம் (சித்த மருத்துவம்)
குளிர் பதனிடுதல் (தாவரவியல்)

அறிவியல் துறைகளான இயற்பியல், வேதியியல், வானியல், கணிதம், புள்ளியியல், மக்கள் தொகையியல், நிலவியல், நிலவரையியல், வானிலையியல், கடலியல், பொறியியல், தொழில்நுட்பத் துறைகள், தாவரவியல், வேளாண்மையியல், சூழலியல், விலங்கியல், உடல் இயக்கவியல், உயிர்வேதியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம், சித்த மருத்துவம் மற்றும் இன்னும் பல்வேறு அறிவியல் சார்ந்த துறைகளை அடைப்புக் குறிக்குள் தந்துள்ளது.

குறியீட்டு விளக்கச் சொல்

இவ்வகையில் குறியீட்டைத் தலைச்சொல்லிற்கு அருகில் அடைப்பு குறிக்குள் தந்துள்ளனர். இது வேதியியலில் மட்டும் இடம் பெற்றுள்ளது.

சான்று

அசெட்டனிலைடு ($C_6H_5NHCOCH_3$)

அசெட்டால்டிஹைடு (CH_3CHO)

பெரிலியம் ஹைட்ராக்சைடு ($Be(OH)_2$)

பெரிலியம் சல்ஃபேட் ($BeSO_4\ 4H_2O$)

பெரிலியம் நைட்ரேட் ($Be(NO_3)_2$)

பொருட்பகுதி (Meaning Part)

களஞ்சியம் என்றாலே சொற்பொருள் தருதல் எனும் நோக்கமே அடிப்படை இலக்காகும். எனவே சொற்பொருளே களஞ்சியத்தின் மையப்பகுதி ஆகும். அறிவியல் களஞ்சியம் பொருள் தரும்போது தாம் எண்ணுகிற, இதுதான் பொருள் எனத் தான் வலியுறுத்த விரும்புகிற ஒன்றைப் பொருளாய்த் தர இயலாது. சோதனை செய்த நிரூபணம் செய்த முடிவு ஒன்றைத் தான் பொருளாய்த் தருதல் இயலும்.

சொல்லிற்கான பொருளைச் சொல்லின் சோதனையின் முடிவே தீர்மானிக்கின்றது. இச்சோதனையின் முடிவை உரிய படங்கள், செய்முறை விளக்கத்துடன் அறிவியல் களஞ்சியம் தந்துள்ளது. அறிவியல் கோட்பாட்டு சொற்களுக்கு விளக்கச் சொற்பொருளைத் தந்துள்ளது. அறிவியல் அடிப்படையிலான இயற்கை நிகழ்வுகளைக் குறித்த சொற்கள் மிகக் கவனத்துடன் விளக்கப்பட்டுள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான வரலாறுகளும், கருவிகளும் விளக்கப்பட்டுள்ளது.

அறிவியல் களஞ்சியம் நீண்ட விளக்கத்துடன் இருப்பதாலும், அறிந்த மற்றும் அறியாத பல பொருட்களை தருவதாலும் பிற நூல்களைத் தேடிப்போக வேண்டிய நிலையில்லை.

குறுக்குநோக்கீடு (Cross reference)

களஞ்சியப் பதிவுக்கான இடத்தையும் சொற்பொருள் எழுதுவதற்காகும் நேரத்தையும் மீதப்படுத்தும் பதிவமைப்புக் கூறுகளுள் குறுக்குநோக்கீடும் ஒன்று. ஒத்த பொருளுடைய சொற்களுக்கு மீண்டும் மீண்டும் பொருளை எழுதாமல் பொது வழக்கில் உள்ள வழக்குப் பயிற்சி மிகுந்த அனைவருக்கும் தெரிந்த ஒரு சொல்லில் மட்டுமே பொருளை தந்துவிட்டு ஏனைய

பதிவுகளில், பொருள் விளக்கம் தரப்பட்ட சொல்லைக் காண்க, பார்க்க எனக் குறிப்பிடுவதே பொதுவாய்க் குறுக்குநோக்கீடு எனப்படும்.

இக்குறுக்கு நோக்கீட்டைப் பொதுவாய் வெளிப்படைக் குறுக்கு நோக்கீடு எனவும் மறைமுகக் குறுக்குநோக்கீடு எனவும் இரண்டாய்ப் பாகுபடுத்துவர்.

வெளிப்படைக் குறுக்குநோக்கீடு

குறிப்பிட்ட சொல்லின் பொருட்பகுதியில் பொருள் விளக்கம் செய்யப்பட்ட ஒரு சொல்லை 'காண்க', 'பார்க்க' என வெளிப்படையாய்க் குறிப்பிடுவதே வெளிப்படைக் குறுக்கு நோக்கீடு. இது பயன்பாட்டாளரை நேரிடையாய் ஆற்றுப்படுத்தும் வகையில் இவ்வாறு தரப்பெறும்.

சான்று

அச்சு உலோகம் - பார்க்க உலோகக்கலவைகள்
கங்லாமரேட் - காண்க உருந்திரளை
சாக்குத்துணிகள் - காண்க சணல் துணிகள்
சாகுபடி முறைக்கட்டுப்பாடு - காண்க பயிரிடும் திட்டம்
செம்மறி ஆடு - காண்க ஆடுகள்

மறைமுகக் குறுக்குநோக்கீடு

மேலதற்கு எதிரானது இது. இக்குறுக்கு நோக்கீட்டில் காண்க, பார்க்க என்பன போன்ற சொற்களோ குறியீடுகளோ பயன்படுத்தப்படுவதில்லை. குறுக்குநோக்கீட்டிற்கான சொல் மட்டுமே தரப்பெறும். இம்முறை அறிவியல் களஞ்சியத்தில் இடம்பெறவில்லை.

பட விளக்கம்

எவ்வளவுதான் விரிவான விளக்கங்கள் தந்தாலும் சில சூழல்களில் சொற்களின் முழுபொருட் சூழலையும் விவரித்து விட முடியாது. தமிழில் மலரின் பல்வேறு படிநிலைகளைக் குறிப்பிடும்போது அரும்பு, மொக்கு, அலர், பூ, மலர் என்பன போன்ற பல்வகைச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சொற்களால் மட்டுமே இவற்றின் நுண்ணிய வேறுபாடுகளை விளக்கிவிட முடியாது. படங்களின்மூலம் இவற்றை எளிதில்

விளக்கிக் காட்டலாம். இவ்வாறு பல்வேறுபட்ட சொற்களின் பொருட்பரிமாணங்களை மேலும் செம்மையாய் விளக்கும் நோக்கில் படங்கள் களஞ்சியங்களில் அமைந்துள்ளன. அறிவியல் களஞ்சியத்தில் படவிளக்கங்கள் தரப்பட்டுள்ளன. படங்களுக்கு பாகங்கள் குறிக்கப்பட்டுள்ளன. படங்களைக் கட்டப்படங்கள், வரைபடங்கள், ஒளிப்படங்கள், வண்ணப்படங்கள் என பல்வேறு வகைகளாகப் பிரித்து வழங்கியிருக்கின்றது.

❖ அறிவியல் தொழில்நுட்பம் காரணமாய் அறிமுகமான புதிய கண்டுபிடிப்புகளுக்கு படங்கள் தரப்பட்டுள்ளது.

❖ தாவரங்கள், விலங்குகள் போன்றவற்றில் காணப்படும் பல்வேறு வகைகளுக்கும் படங்கள் தரப்பட்டுள்ளன.

❖ வரலாற்றில் நீங்கா இடம்பெற்ற அறிஞர்கள், மேதைகள், கண்டுபிடிப்பாளர்கள் படங்கள் தரப்பட்டுள்ளன.

விளக்கக் குறிப்புகள் (Glosses)

சொற்பொருளை மேலும் தெளிவாய் விளங்கிக் கொள்வதற்கு ஏற்பச் சொற்பொருளோடு சேர்த்துத் தரப்பெறும் கூடுதல் தகவலே விளக்கக்குறிப்பு எனப்பெறும். சொற்பொருளி லிருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் இவ்விளக்கக் குறிப்பு அடைப்புக் குறிக்குள் தரப்பெற்றுள்ளது.

சான்று : கேசோலின் (பெட்ரோல்)
குவார்ட்ஸ் (கனிமம்)
சுற்றுப்பாதையின் வடிவம் (வட்டம் அல்லது நீள்வட்டம்)

எழுத்துப்பெயர்ப்பு (Transliteration)

ஒரு மொழியின் சொற்களைப் பிறிதொரு மொழியின் நெடுங்கணக்கால் எழுதும் முறையே எழுத்துப்பெயர்ப்பு எனப்படும். அறிவியல் களஞ்சியத்தில் எழுத்துப்பெயர்ப்பு பொருட்பகுதியில் தரப்பட்டுள்ளது.

சான்று :பாலோனாசட் (bleonaste)
கங்கிரினைட் (cancrinite)
விட்ரெயின் (Vitrain)
கிளரெயின் (Clarain)
டியூரெயின் (durain)

அறிவியல் களஞ்சியத்தில் இடம்பெற வேண்டியவை

அறிவியல் களஞ்சியத்தில் மேலே குறிப்பிட்ட பல்வேறு பதிவுகள் இருந்தாலும், ஒருசில அடிப்படை பதிவுகள் விடுபட்டுள்ளன. அவற்றையும் சேர்த்து அறிவியல் களஞ்சியம் வெளிவந்தால் மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பெரும் பயனுள்ளதாக அமையும்.

சொல் மூலம்

பதிவாய்த் தரப்பட்ட சொல் எச்சொல்லின் அடியாய்ப் பிறந்தது எனும் குறிப்புகள் பதிவில் தருவது சொல்மூலம் ஆகும். அறிவியல் என்பது மேலைநாட்டில் உருவான அற்புதம். இவ்வற்புதத்தை நமக்கு தமிழ்ப்படுத்தித் தரும் நிலையில் அச்சொல் எந்த நாட்டில், எச்சொல்லின் மூலம் பிறந்தது என்னும் குறிப்பைத் தருவது மிக அவசியமாகும். இச்சொல்மூலம் அறிவியல் களஞ்சியத்தில் இடம்பெறாதது பெருங்குறையே.

இனமொழிச்சொற்கள்

பதிவில் தரப்பட்டிருக்கும் சொல்லிற்கு இனமான சொற்களைத் தருவது இனமொழிச் சொல்லாகும். பிறமொழி ஒலிகளுக்கான எழுத்துக் குறியீடுகளைத் தாய்மொழியிலேயே உருவாக்கிக் கொண்டு அவ்வெழுத்துக்களுக்கு இனமானச் சொற்களைத் தரலாம்.

சான்று : ஆக்ஸிஜன் - உயிர்வளி.

முடிவுரை

அறிவியல் சொற்கள் பெரும்பாலும் கலைச்சொற் களாகவே அமைந்திருக்கின்றன. அவற்றைக் கொண்டு உருவாக்கப்படும் அறிவியல் களஞ்சியம் ஆரம்பம் முதல் தற்பொழுது வரையுள்ள அனைத்துச் செய்திகளையும் நுட்ப மாகவும், ஆழமாகவும் வழங்குகின்றது. செய்திகள் வழங்குவது மட்டுமல்லாமல் எளிதில் புரியும் வகையில் பல்வேறு படங்களையும் வழங்குகின்றது. இவ்வாறு அமைவதால் நோக்கீட்டு நூலாக மட்டுமின்றி ஆய்வு மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது. சொல்மூலம், இனமொழிச்சொற்கள் போன்ற ஒருசில குறைபாடுகள் களையப் பட்டால் அறிவியல் களஞ்சியம் அனைத்து மாணவர்களையும் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

பலபொருள் சொற்களின் தோற்றம்

ஜோ.ஜெனிட்டா ஜோப்
தஞ்சாவூர்

மொழி கால வளர்ச்சியில் அதன் அமைப்பிற்கு ஏற்ப பல மாற்றங்களை அடைகின்றது. மொழியில் அக அமைப்பு, புற அமைப்பு என்ற இரு பிரிவுகள் உள்ளன. மொழியின் அக அமைப்பைவிடப் புறஅமைப்பில் மாற்றங்கள் எளிதாக ஏற்படுகின்றன. மொழியில் சொல் மற்றும் பொருளில் ஏற்படும் மாற்றம் தவிர்க்க இயலாதது. சொற்களில் காணப்படும் மாற்றம் சொற்களின் எண்ணிக்கை மாற்றமாகவும், சொற்றொகுதியின் அளவு சார்ந்த மாற்றமாகவும் உள்ளது.

பலபொருள் சொற்களின் விளக்கம்

பலபொருள் என்ற சொல், ஒரு சொல்லின் பலபொருட்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகவே கையாளப் படுகின்றன.

கள் - கருமை
- மேகம்
- மழை
- பருவம்
- நெல்

ள
பலபொருள் சொற்களில் தொடர்புடைய பொருட்களும், தொடர்பற்ற பொருட்களும் இடம்பெறுகின்றன.

(சான்று) கார்[1] - கருமை
↓
மேகம்
↓
மழை — தொடர்புடைய பொருட்கள்
↓
காலம்

கார்[2] - வாகனம்

மேற்கூறிய சொல்லின் பொருள் தொடர்புடையதாகவும் தொடர்பற்ற பொருளாகவும் காணப்படுகின்றது. இவை வடிவத்தில் ஒத்திருந்தாலும் பொருளில் மாறுபாடுடையன வாகும்.

அறிஞர்களின் கருத்து

பலபொருள் தன்மை ஒரு மொழியின் வளர்ச்சி அடைந்த குணத்தையும், நெகிழ்வுத் தன்மையையும் காட்டும் என்றும், பல பொருள் தன்மையால் மொழிப் பரிமாற்றத்திறன் வளரும் என்றும், இது மொழிக்கு மிகவும் இன்றியமையாதது என்றும் கிரேக்கத் தத்துவ அறிஞர்களான அரிஸ்டாட்டில், பிரேயல், பிரட்டிரிக் போன்றோர் குறிப்பிடுகின்றனர்.

தொல்காப்பியத்தில் பலபொருள் செய்திகள்

தொல்காப்பிய உரியியலின் முதல் இரண்டு நூற்பாக்களில் பல பொருள் சொற்கள் பற்றி தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

> "ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
> பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்"
> (தொல். உரி. 1)

என்ற வரிகளின் மூலம் ஒருசொல் பலபொருள் பற்றி குறிப்பிட்டுள்ளார். இதன் மூலமாக மக்களிடையே பேச்சு வழக்கில் பெரும்பாலும் இல்லாத சொல்லுக்குப் பொருள்தரும் முறையைக் கையாண்டுள்ளார்.

> "வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
> வெளிப்பட வாரா உரிச்சொல் மேன"
> (தொல். உரி. 2)

இந்நூற்பாவில், அனைவரும் அறிந்த பொருளைக் கூறாமல், அறியாத கடினமானப் பொருளை மட்டுமே குறிப்பிட வேண்டுமெனத் தொல்காப்பியர் இந்நூற்பாவின்மூலம் சுட்டிக் காட்டுவதை உணரலாம்.

(சான்று)

> "கடி என் கிளவி
> வரைவே கூர்மை காப்பே புதுமை

விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்தேற்று ஆயீரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டாகும்மே"
(தொல். உரி. 85)

என்ற நூற்பாவின் மூலமாக 'கடி' என்ற சொல்லுக்குப் பன்னிரண்டுப் பொருட்கள் கூறியுள்ளார். இதன் மூலமாகப் பலபொருள் சொற்களின் தோற்றம் தொல்காப்பியத்தில் இருந்தே தொடங்கியது என்று கருதலாம்.

பலபொருள் சொற்களின் வகைகள்

பலபொருள் ஒருசொல் பற்றி கிளவியாக்கத்தில் இரண்டு வகையாகக் குறிப்பிடப்படுகின்றது.

"வினை வேறுபடூஉம் பலபொருளொடு சொல்
வினை வேறுபடாஅப் பல பொருளொடு சொல்லென
றாயிரு வகைய பல பொருளொரு சொல்"
(தொல். கிளவி. 52)

இந்நூற்பாவின்படி பலபொருள் ஒருசொல்லினை இரு வகையாகப் பிரித்துள்ளார். அவைகளாவன,

1. வினைவேறுபடூஉம் பலபொருள் சொல்
2. வினைவேறுபடா பலபொருள் சொல்

என்பனவாகும்.

1. வினைவேறுபடும் பலபொருள் சொல்

"வினை வேறுபடூஉம் பலபொருளொடு சொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருட்டெறி நிலையே"
(தொல். கிளவி. 53)

வேறுபடு வினையாலும், வேறுபடா வினையாலும் பல பொருள் தோன்றும். அவ்வாறு தோன்றும்பொழுது வேறுபடு வினை இனம், சார்பு ஆகியன துணைப்புரிகின்றன என்பது தொல்காப்பியரின் கருத்தாகும்.

(சான்று) மா பூத்தது
மா ஓடிற்று
மா பறந்தது

மேற்கூறிய சான்றில் ‘மா’ என்ற சொல்லின் பின்னால் வரும் வினையினால் பொருள் மயக்கம் நீங்குகின்றது. மா பூத்தது என்பதில் பூத்தது என்பது வேறுபடு வினையாகும்.

2. வேறுபடா பலபொருள் ஒருசொல்

“ஒன்று வினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினை வேறுபடா அப் பலபொருள் ஒருசொல்
நினையுங் காலை கிளந்தாங்கு இயலும்”
(தொல். கிளவி. 54)

வேறுபடா வினை வருமிடத்துச் சொல்லுக்கு முன்னரோ பின்னரோ அடைமொழி பெயர்ச்சொற்களைக் கூறும் போது பொருள் மயக்கத்தினை நீக்கிவிடலாம் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும்.

(சான்று)

மா வீழ்ந்தது (மரம்)
↓
மாமரம் யானை
முறித்தலால் வீழ்ந்தது (விலங்கு)

இவ்வாறு சொல்லின் முன்னும், பின்னும் சொற்கள் “மா வீழ்ந்தது” என்பதில் வீழ்ந்தது என்பதன் மூலமாக மரம் என்ற பொருளை அறியமுடிகிறது. “யானை முறித்தலால்” என்பதனால் விலங்கு என்ற பொருள் மயக்கம் தீர்க்கப்படுகின்றது.

மரபிலக்கணங்களில் பலபொருள் கோட்பாடு

தொல்காப்பியர் கிளவியாக்கம், வினையியல், உரியியல், எச்சவியல் ஆகிய இயல்களில் பலபொருள் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றார்.

“ஒரு சொற்பலபொருட் குரிமை தோன்றினும்
பல சொல் ஒரு பொருட்குரிமை தோன்றினும்” **(தொல். உரி. 1)**

என்ற நூற்பாவின் மூலமாகச் சொற்பொருள் உறவுகளை வரையறுத்துக் காட்டியுள்ளார்.

"ஒருபொருள் குறித்த வேறு சொல்லாகியும்
வேறுபொருள் குறித்த ஒரு சொல்லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி"

(தொல். எச். 3)

என்ற எச்சவியல் நூற்பாவில் திரிசொல் பற்றி குறிப்பிடும்போது அதன் இருநிலைகளைக் குறிப்பிடுகிறார். உரிச்சொற்களுக்கும், திரிசொற்களும் உரிய இச்சிறப்பு பண்பை பிற சொற்களுக்கும் உரிய பொதுப்பண்பாகக் கொள்ளலாம்.

பலபொருள் தோன்றுவதற்கான காரணங்கள்

பலபொருள் தன்மை தோன்றுவதற்கு இரண்டு வகையான காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன.

1. மொழிக் காரணங்கள்
2. வரலாறு மற்றும் சமுதாயக் காரணங்கள்

மொழிக் காரணங்கள்

மொழிச்சூழல் - சிறப்புச்சூழல் - அணி நயம்
(உருவகம், ஆகுபெயர்)

1:1 மொழிச் சூழல்

மொழிக் காரணங்கள் பல்வேறு சூழல்களின் அடிப்படையில் உருவாகின்றன. ஒரு சொல்லின் முன்னும், பின்னும் வருகின்ற சொற்களுக்கு ஏற்ப, ஒருசொல் பல பொருட்களைப் பெற்று வந்தால் அது சூழல் சார்ந்த பொருளாகும்.

(சான்று) கண் - உடல் உறுப்பு
- வாசியின் துவாரம்
- மயில்தோகையின் பகுதி
- மூங்கில் கண்
- நுங்கு

கை - உடலின் உறுப்பு
- நாற்காலியின் கை
- வீட்டின் பகுதி

- பறவையின் இறகு
- துதிக்கை

1:2 சிறப்புச் சூழல்

ஒரு சொல் ஒவ்வொரு துறையில் பயன்படுத்தப்படும் பொழுதும் சிறப்புப்பொருளைப் பெறுகிறது.

(சான்று) சீட்டு - சிறுகுறிப்பு (பொது)
- விளையாடும் சீட்டு (விளையாட்டு)
- பயணச்சீட்டு (போக்குவரத்து)
- ஏலச்சீட்டு (பொருள் சேர்ப்பு)

மேற்கூறிய சான்றில் சீட்டு என்பது பொதுப்பெயராக வருகின்றது. எனினும், அது ஒவ்வொரு துறையில் வெவ்வேறு பொருளைப் பெற்று வருவதனால் சிறப்புப் பெயராகின்றது.

1:3 அணிநயம்

உருவகம் மற்றும் ஆகுபெயரால் பொருள் விரிவுபடுத்தப் பட்டு தோன்றுமேயானால் அது அணிநயப் பொருளைச் சாரும்.
(சான்று) அவர் கணக்கில்புலி - கணக்கில் மிகச் சிறந்தவர் / "திறமையானவர்"
அவர் ஒரு குரங்கு - குறும்புகாரர் / "எதையும் உடைத்து அழித்துவிடுபவர்"

மேலே சொன்ன சான்று உருவகத்திற்காகும்.
(சான்று)

மதுரை மணக்கும் - மதுரை மல்லிப்பூ மணக்கும்
சிவகாசி வெடிக்கும் - சிவகாசி பட்டாசு வெடிக்கும்.

இதில் மல்லிப்பூ, பட்டாசு இரண்டு சொற்களும் அவற்றிற்குத் தொடர்புடைய ஊர்களின் பேரில் ஆகிவந்து இருப்பதனால் இது ஆகுபெயர்களுக்குச் சான்றாகும்.

இச்சான்றின் மூலமாக மதுரைக்கும், அங்கு உற்பத்தியாகும் மல்லிப்பூவிற்கும், சிவகாசிக்கும், அங்கு தயாரிக்கப்படும் பட்டாசிற்கும் உள்ள தொடர்பினை அறியாதவர்கள் இந்த மாற்றத்தினைப் புரிந்துகொள்ள முடியாது.

பலபொருள் சொற்கள் பழங்காலத்தில் இருந்தே பயன்பாட்டில் உள்ளதை அறிய தொல்காப்பியம் தக்க சான்றாக விளங்கிவருகின்றது. பழங்காலத்தில் இப்பயன்பாடு ஒரு குறையாகக் கருதப்பட்டு வந்தாலும் பிற்காலத்தில் அதன் நெகிழ்வு தன்மை அறிந்து கொள்ளப்பட்டது. கவிதைகளில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. வளர்ந்துவரும் மொழியியல் ஆய்வினால் பலபொருள் சொற்களின் தேவையும், அதன் பயன்பாடும் நன்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நோக்கீட்டு நூல்கள்

1. தொல்காப்பியம்
2. அகராதியியல் - பெ.மாதையன்
3. தமிழ் அகராதியியல் - எச்.சித்திரபுத்திரன்

இனம் - சொற்பொருள்

மு. இராஜம்
தஞ்சாவூர்

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்க ளோடும்
பொங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்"

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடுகின்றார். தமிழின் சிறப்பையும், தொன்மையையும் அகம், புறம் சார்ந்த பல சான்றுகள் நிறுவுகின்றன. அவற்றுள்,

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி"

என்று புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியரும்,

"சேர சோழப் பாண்டியர் போலப் படைப்புக் காலந்தொட்டு
மேம்பட்டு வரும் குடி"

எனப் பரிமேலழகரும் கூறுவன தமிழ்க்குடி மக்களின் தொன்மையைக் கூறுகின்றன.

இவ்வகையான சிறப்பினைப் பெற்றது தமிழ்க்குடி. 'தமிழினம்' என்னும் சொல்லில் 'இனம்' என்னும் சொல் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், நிகண்டுகள் போன்றவைகளில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதைப் பற்றி இக்கட்டுரையில் ஆய்வோம்.

தமிழினத்தின் தோற்றம்

மானிடவியலார் இந்திய இனங்களைப் பற்றி ஆய்வுகள் பல செய்துள்ளனர். எனினும், தமிழினத்தைப் பற்றி தனியாக ஆய்வு செய்யவில்லை. ஆனால், 'திராவிடம்' என்ற பேரினத்தைச் சுட்டுகின்றனர். இந்திய இனங்கள் நிலவியல், பண்பாட்டியல், சமூகவியல், உடற்கூற்றியல் அடிப்படையில் பாகுபாடு செய்யப் பட்டுள்ளன.

மானிட இயல் நோக்கில் தமிழினத்தை ஆராய்ச்சி செய்தவர்களில் பெரும்பாலோர் தமிழர் வெளிநாட்டிலிருந்து வந்தவர் என்றே குறிப்பிடுகின்றனர். ஆனால், இதை உறுதி செய்வதற்குரிய சான்றுகள் எதுவும் காணப்படவில்லை.

'இனம்' – ஆராய்ச்சியாளர்கள் கருத்து

ஹேடன் என்பவர் நிலவியல் அடிப்படையில் இந்திய இனங்களை மூன்றாகப் பிரித்துத் தெற்கில் வாழும் மக்களைத் 'திராவிடர்' என்று சுட்டுகிறார். இத்திராவிடருக்குள்ளேயே திராவிடருக்கு முற்பட்டோர், திராவிடர், தெற்கத்தியக் குறுந்தலையர், மேற்கத்தியக் குறுந்தலையர் ஆகிய இனக்கூறுகள் இருப்பதாகக் கூறுவார்.

பி.எஸ். குகா என்பவர் பண்பாட்டு அடிப்படையில் இந்திய மக்களை ஆறு இனங்களாகப் பாகுபாடு செய்து திராவிடரை நடுநிலக்கடல் பகுதிக்குரிய பண்டைய மக்களோடு அடக்கிக் காட்டுவார்.

எஸ்.கே. சட்டர்சி நடுநிலக்கடல் பகுதியின் கீழ்த் திசையிலிருந்து இந்தியா வந்தவர் திராவிடர் என்று குறிப்பிடுவார்.

மங்கோலிய இனத்தவரில் ஒரு பெருங்கிளையே தமிழர் என்றும், அவர் கங்கை முகத்திலிருந்த வாணிகக் களமான தாமத்தியிலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்தவர் என்றும் அறிஞர் கனகசபை குறிப்பிடுவார் (1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்)

இனம் – சொற்பொருள்

'இனம்' என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் கையாளப்பட்டுள்ளது. தொல்காப்பியம் காலம் முதல் இன்றுவரை உள்ள இலக்கியங்களை ஆராய்ந்தால், அவற்றுள் 'இனம்' என்ற சொல்லுக்குப் பொருள் விரிவடைந்து வந்துள்ளதை நம்மால் அறிய முடியும்.

தொல்காப்பியம்

தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களிலும் பதினோரு இடங்களில் 'இனம்' என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. இனம், இனமணி, இனமொழி, இனஒற்று போன்ற சொற்கள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. 'இனம்' என்ற சொல் உறவு, நெருக்கம், வகை என்னும் பொருள்களிலும் இடம்பெற்றுள்ளன.

சங்க இலக்கியம்

தொல் காப்பியத்தில் அஃறிணைப் பொருள்களின் கூட்டத்தை மட்டும் குறித்த 'இனம்' என்ற சொல் சங்க இலக்கியத்தில் மாந்தர் குழுவைக் குறித்தும் சில இடங்களில் வந்துள்ளன. கலித்தொகையில்,

'தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவரினம்'
(கலி : 39 - 47)

எனுமிடத்தில் 'இனம்' என்னும் சொல் சான்றோர் கூட்டத்தையும், பட்டினப்பாலையில்,

'இருங்கிளை யினனொக்கல்
கருந்தொழில் கலிமாக்கள்' (பட். 61 – 62)

எனும் வரிகளில் 'இனன்' என்னும் சொல் சுற்றத்தினரையும் குறிக்கிறது.

சங்க இலக்கியங்களில் 'இனம்' என்ற சொல் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் அஃறிணைத் தொகுதியைச் சுட்டிக் காட்டும் குறியீடாகவே இடம் பெற்றுள்ளது.

'எருமையினம்' (மலைபடு – 472)
'வண்டினம்' (ஐங். 240 – 2)
'களிற்றினம்' (மதுரைக் – 242)
'இனநாரை' (பொருநரா – 204)

போன்ற இடங்களில் விலங்கு, பறவைகளின் கூட்டத்தை 'இனம்' என்னும் சொல் மேலும் குறிக்கின்றது. நிலத்திலும், நீரிலும் வாழும் விலங்குகளைச் சார்ந்துவரும்பொழுது திரள், கூட்டம், நிரை என்னும் பொருள்களில் இடம் பெற்றுள்ளது.

திருக்குறள்

திருக்குறளில் கூட்டம், சுற்றம், உற்றார், உறவுடையார், சார்பு, நல்லோர் போன்ற பொருள்களில் 'இனம்' என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

"நல்இனத்தின் ஊங்கும் துணைஇல்லை தீஇனத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்" – 460

கூட்டம் என்னும் பொருளிலும்,

"குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு" - 793

சுற்றம் என்னும் பொருளிலும்,

"இனம்போன்(று) இனம் அல்லார் கேண்மை
மனம்போல வேறுபடும்" - 822

உற்றார் என்னும் பொருளிலும்,

"சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி இனம்
ஏமப் புணையைச் சுடும்" - 306

உறவுடையார் என்னும் பொருளிலும்,

"தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த(து) இல்" - 446

சார்பு என்னும் பொருளிலும்,

"இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் - சினத்து ஆற்றிச்
சீறின் சிறுகும் திரு" - 568

நல்லோன் என்னும் பொருள்களிலும் 'இனம்' என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது.

நிகண்டுகள்

நிகண்டுகள் சொற்பொருள்களைக் கூறுவதோடு சொல்லின் தொகுதிகளையும் குறிப்பிடும். சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு போன்ற நிகண்டுகளில் ஒக்கல், சுற்றம், உறவு, கிளை, கேள், நட்பு, மேவினர், சார்ந்தவர், உற்றார், பந்தம், கூளி, கடும்பு, குடும்பம், நந்தமர், சிறந்தோர், நட்டோர், இகுளை, நள்ளி, நண்பு, பற்றினர் ஆகிய இருபது சொற்கள் உறவு, சுற்றம் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களாக இடம்பெற்றுள்ளன.

நிகண்டுகளில் மக்கட்பெயர்த் தொகுதியில் 'இனம்' என்ற சொல்லுக்குப் பொருள் விரிவாகக் காணப்படுகின்றது. 'இனம்' என்னும் சொல்லுக்குச் சூடாமணி நிகண்டு கீழ்க்கண்ட பொருள்களைத் தருகிறது. ஒருகுடிச் சுற்றத்தைக் குறிக்கும் சொற்களாக,

"ஞாதியர் தாயத் தாரே நாட்டுந்தங் குடியிற் சுற்றம்" - 77

என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், 'இனம்' என்னும் சொல்லுக்கு,

"உற்றவர் இகுளை நட்டோர் உறவுஒக்கல் கிளையே சார்ந்தோர்
பற்றினர் சிறந்தோர் நட்புப் பந்தமே பரிச னங்கேள்
குற்றமில் நண்பு கூளி குடும்பமே கடும்பு நள்ளி
சுற்றம்மூ வாறு பேரும் சூழ்ந்தபா சனமும் சொல்லும்" – 53

என்னும் பொருள்களிலும்,

"சவை சமவாயஞ் சங்கஞ் சமுதாயஞ் சமூகங் கோட்டி
அவை குழாங் குழுவே கூட்டம் அடர்திரள் கணங்கள் ஈராறு
இவைதிரண் டோர்பேர் பண்ணை எய்திய ஓரை பொய்தல்
அவை பெண்கள் கூட்டம் ஆயங் கெடவரல் அதுவு மாமே"

என்னும் பொருள்களிலும் 'இனம்' என்னும் சொல் கையாளப் பட்டுள்ளதை அறிய முடியும்.

அகராதி

தமிழ்ப் பேரகராதி 'இனம்' என்ற சொல்லுக்கு வருக்கம், குலம், சுற்றம், நிறை போன்ற பொருள்களைத் தந்துள்ளது. 'வருக்கம்' என்னும் சொல் இன்றைய வழக்குச் சொல்லாகப் பயன்பட்டு வருகின்றது. அகராதி பல சொற்களுக்குப் பொருள் கொடுப்பதாயினும், வழக்குச் சொற்களை எளிதில் பொருள் விளங்கப் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

முடிவுரை

மனித இனம் பல வேறுபாடுகள் உள்ள மக்களைக் கொண்டது. இந்த வேறுபாடுகள் உடல் அமைப்பையோ உடல் அளவையோ அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். இவை இணக்கத்துக்கு உட்படாதவை களாகவும், ஒரு பொதுக்கால் வழியில் வந்தவைகளாகவும் இருக்கும். இனம் என்பது மக்கள் இனத்தில் பெரும்பிரிவு, ஒரு பொதுத் தோற்றமும், ஒரு பொதுக் கால்வழியும் அமைவது இயல்பு என நெகிழ்வுடைய பொருளில் 'இனம்' விளக்கப் பட்டுள்ளது.

இனம் என்ற சொல்லுக்குப் பழந்தமிழரும் இன்றைய ஆய்வாளரும் கொண்டுள்ள பொருள் ஏறக்குறைய ஒத்துச் செல்வது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனினும் ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்று வரையறுக்கப்பட்ட தன்மை இரண்டிலும் காணப்படவில்லை. எனவே இனம் என்ற சொல் மிகுந்த பொருள் விரிவுடையது என்பதை இவ்ஆய்வின் இறுதியாகும்.

‘அம்’ எனும் பெயரடையின் பயன்பாட்டுச் சூழலும் சொற்பொருண்மைச் செயல்பாடும்

முனைவர் த. இளஞ்செழியன்
தஞ்சாவூர்

முன்னுரை

சங்க இலக்கியப் புலவர்ள் பாடல்களில் ஒரு கருத்து அல்லது உலகப் பொருளைக் குறிப்பதோடு மட்டுமல்லாமல் சிறப்பித்துக் கூறும் வகையில் ஒரு பெயருடன் பல பெயரடைகளைக் கையாண்டுள்ளனர். இத்தகைய பெயரடைகள் பெயர்களின் சிறப்புகளைத் தனித்தும் வேறுபடுத்தியும் சிறப்பித்தும் காட்டும் வகையில் சிறப்புப் பெற்று அமைந்துள்ளன.

சங்க நூற்களில் 137 பெயரடைகள் காணப்படுகின்றன. அவற்றின் அகர வரிசையைநோக்கும்போது ‘அம்’ எனும் பெயரடை முதற்கண் நிற்கின்றது எனலாம். இப்பெயரை 186 இடங்களில் பயின்று வந்துள்ளது. இப்பெயரடை பொதுவாகத்தன் அடிப்படைப் பொருளான ‘அழகிய’ எனும் பொருளைக் குறித்து ஆளப்பட்டிருப்பினும் தான் சார்ந்து வரும் உலகப் பொருள்களுக்கும் ஏற்ப,

அழகிய, இனிய, மிகுதி, பெரிய, சிறிய, தூய்மை, அடர்ந்த, விருப்பமான, மென்மை, சுவை என 10 வகைப் பொருள்களைப் பெற்றுக் காணமுடிகிது. இப்பொருண்மைகளை வரிசை முறையில் கீழே ஆராயப் பெற்றுள்ளது.

அழகிய

அம் எனும் இசையின் அழகினைக் குறிக்கும் வகையில் ஆளப்பட்டுள்ளதை,

இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும்
ஆம்பல் அம் குழலின் ஏங்கி (நற் 113-10,11)

என்ற பாடல்வரியின் பலம் அறியமுடிகிறது. இங்குக் களம் பாடுநருடன் வாச்சியம் வாசிப்போர் ஊதுகின்ற ஆம்பல் என்னும் பண்ணையுடைய புல்லாங்குழல் இசையின் அழகினைக் குறிக்கும் வகையில் இப்பெயரடை ஆளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

இனிய

இப்பெயரடை ஓரிடத்தில் புளிச்சுவை எனும் சொல்லுக்கு அடையாகப் பயின்று சூழலில் இனிய எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

> "................... பெருங்காட்டு
> நெல்லிய அம்புளிச் சுவை" (நற் 87:3,4)

இத்தொடருக்குப் "பெரிய காட்டின் கண் உள்ள நெல்லி பழத்தின் இனிய புளச்சுவை" என்று விளக்கம் தரப்படப்பட்டுள்ளது. புளிச் சுவை என்ற சொல்லிட்சிக்கு முன் அம் எனும் அடை பயின்று வருவதால் இது இனிய எனும் ஆளப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

மிகுதி

அம் எனும் பெயரடைகள் என்ற சொல்லுக்கு அடையாக வரும் சூழலில் மிக்க எனும் பொருளில் பயன்பாட்டில் உள்ளமையைக் காணமுடிகிறது.

> "................... வரு நர்க்கியும்
> புனல் அம் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்" (புறம் 343–8,9)

இத்தொடரில் பொன்மாலையணித்த குட்டுவன் தன்பால் வரும் இரவலர்க்குத் தெண்ணீர் போல கள்ளை மிகுதியாகக் கொடுத்தத்திறன் வெளிப்படுகிறது. இப்பொருள் விளக்கத்தின் வழி நோக்க கள்ளின் 'மிகுதியை'க் குறிக்கவே 'அம்' எனும் அடை பயன்படுத்தப்பட்டிருந்தமை புலனாகிறது.

பெரிய

'அம்' எனும் பெயரடை 'பெரிய' எனும் பொருளில் ஓரிடத்தில் ஆளப்பட்டுள்ளது இவண் நோக்கத்தக்கது.

'உடலநர்க் கடந்த கடல் அம்தானை' (அகம் 138 -6) இத் தொடருக்குப் பகைவரை வென்று வாகை கொண்ட கடல் போன்ற பெரிய படை என்பது பொருளாகும். இங்கு 'அம்' எனும் அடைபடை வீரர்களின் தொகுதியைக் குறிக்கும் வகையில் 'பெரிய' எனும் பொருளில் ஆளப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

சிறிய

'அம்' எனும் பெயரடை ஓரிடத்தில் 'சிறிய' எனும் பொருளைப் பெற்றுக் காணப்படுவதைக் கீழ்வரும் சான்று பகருகின்றது.

"...................... ஆகு அமைதும்பி குயின்ற
அகலா அம்துளை கோடை முகத்திலின்
நீர்க்கு இயங்கு இனநிரை பின்றை வார்கோல்
ஆய்குழல் பாணியின் ஐதுவந்து இசைக்கும்" (அக225 : 15-18)

ஆடு அமை என்றது ஆடுகின்ற முங்கிலை, முங்கிலின் கண் வண்டுகளால் துளைக்கப்பட்ட சிறுதுறை காற்றினை ஏற்றுக் கொள்ளுதலாலே உண்டாகின்ற ஓசை புல்லாங்குழல் ஓசை போல இசைக்கும். இப்பாடல் பொருளை நோக்க 'அம்' எனும் அடை மூங்கில் உள்ள சிறுதுறையைக் குறிக்கும் வகையில் கையாளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

தூய்மையான

இப்பெயரடை 'தூய்மை' எனும் பொருளில் நற்றிணையில் ஓரிடத்தில் பயின்று வந்துள்ளது.

"புகையுண்டு அமர்த்த கண்ணன் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அம்துகில் தலையின் துடையினள்" (நற் 120 : 6-8)

பிறை போன்ற நுதலின்கண் உண்டாகிய வியர்வை நீரைத் தன் அழகிய முன்றானையின் நுனியாலே தலைவியானவள் துடைக்கப்பெற்ற செய்தி இங்கு விளக்கப்பெற்றுள்ளது. இங்கு அழகிய முன்றானை என விளக்கம் பெற்றிருப்பதால் 'அம்' புத்தம் புதிய (துகில்) அல்லது (துகிலின்) தூய்மையைக் குறித்தது எனலாம்.

அடர்ந்த

வேங்கை மரங்களின் 'அடர்ந்த' பகுதியைக் குறிக்கும் வண்ணம் இப்பெயரடை ஓரிடத்தில் ஆளப்பட்டுள்ளது.

"............... கருந்தாள்
வேங்கை அம்குவட்டிடை" (நற் 351 : 5,6)

இத்தொடருக்குக் கரிய அடியையுடைய வேங்கை மரங்கள் நிரம்பிய அழகிய குன்று என உரை விளக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய சூழலை நோக்க 'அம்' எனும் அடை குன்றின் அடர்ந்த பகுதியைக் குறிக்கும் வகையில் கையாளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

விருப்பமான

'அம்' எனும் பெயரடை 'கிளவி' என்ற சொல்லுக்கு அடையாகப் பயின்று வரும் சூழலில் 'விருப்பம்' எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக கீழ்வரும் பாடலடிகளின் மூலம் அறியமுடிகிறது.

> "பூங்கட் புதல்வன் தூங்குவயின் ஓங்கி
> வந்தீக எந்தை என்றும்
> அம்தீம் கிளவி கேட்க நாமே" (நற் 221 : 11-13)

இத்தொடரில் வினைமுற்ற மீளும் தலைவன், தன் காதல் புதல்வன், எந்தாய வருக என்று அழைக்கின்ற அழகய இனிய வார்த்தையை மகிழ்ந்து ஏற்கும் வண்ணம் விரைந்து தேரைச் செலுத்துக என்று பாகனை வேண்டிய செயல் சுட்டப்பெற்றுள்ளது. இங்கு 'அம்' எனும் பெயரடை தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள காதல் விருப்பத்தைக் காட்டும் வகையில் பயன்பாட்டில் உள்ளமையை அறியமுடிகிறது.

மென்மை

'அம்' எனும் பெயரடை 'கழை' என்ற சொல்லுக்கு அடையாக இரு இடங்களில் பயின்று வந்துள்ளது. இவ்விரு இடங்களில் இப்பெயரடை மூங்கிலின் மென்மையைச் சுட்டுவதாகவுள்ளதைக் கீழ்வரும் பாடலடியின் மூலம் அறிய முடிகிறது.

> "வாளிலங் கருவிதா அய்நாளை
> இருவெதிர் அம்கழை ஒசியத் தீண்டி" (அகம் 278 - 8,9)

> "ஆமை ஆடு அம்கழை தீண்டிக் கல்லென
> ஞெமை இலை உதிர்த்த எரிவாய்க் கோடை" (அகம் 353 : 6-8)

முதல் பாடலிடியில் அருவிகள் குதித்தமையால் பெரிய மூங்கிலின் அழகிய கொம்புகள் முறிந்தமையையும் இரண்டாவது பாடலில் காற்று வீசியமையால் செங்குத்தாக நிற்கும் மூங்கிலின் அழகிய கோல் முறிந்தமையையும் விளக்கப்பட்டுள்ளது. இவ்விரு பாடல்

விளக்கங்களை நோக்க 'அம்' எனும் அடை முறியும் தன்மை வாய்ந்த 'மென்மையை' குறிப்பதை அறிய முடிகிறது.

சுவை

சங்க நூல்களில் 'அம்' எனும் பெயரடை பொதுவாக அழகிய எனும் பொருளைத் தரினும் களி, கள் போன்ற சொற்களுக்கு அடையாக வரும் சூழலில் 'சுவை' எனும் பொருளில் பயன்பாட்டில் உள்ளமையைக் கீழ்வரும் சான்றுகள் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது.

'அம்' எனும் பெயரடை களி என்ற சொல்லுக்கு அடையாக ஓரிடத்தில் பயின்று வந்துள்ளது.

'அவையா அரிசி, அம் களித்துழவை' (பெரும் 275)

என்ற தொடருக்குக் குற்றாத கொழியல் அரிசியை அடிசினையுடைய களியாகத் துழாவிய கூழ் என்பது பொருளாகும். இங்கு அழகிய களி என்பது சுவைமிக்க களி எனக் கொண்டால் 'அம்' எனும் பெயரடை சுவையைக் குறிக்கப் பயன்பட்டமையை அறிய முடிகிறது.

புறநானூற்றில் 'கள்' என்ற சொல்லுக்கு அடையாக 'அம்' ஓரிடத்தில் காணமுடிகிறது.

செங்கண் மகளிரொடு சிறுதுனியளை இ
அங்கள் தேறல் ஆய் கலத்து உகுப்ப (புறம் 366 : 14,15)

இத்தொடர் அழகிய கள்ளினது தெரிவை ஆராய்ந்து கலத்திற் பெய்த நிலையை விளக்குகிறது. இச் சூழலை நோக்க இப்பெயரடை சுவை என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

முடிவுரை

பெயரடைகள் பொதுவக எந்த ஒரு பொருளையும் கொண்டிருப்பதில்லை, அது சார்ந்துவரும் பொருள்களின் பண்பு, தன்மை, வடிவம் ஆகியவற்றுக்கு ஏற்பவே பொருளைப் பெற்றுக் காணப்படுகின்றன. இவ்வகையில் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 'அம்' எனும் பெயரடை சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பயின்று அவ்வப் பெயரின் தன்மைக்கு ஏற்றபடி பத்து வகையான பொருள்களைப்பெற்று, காணப்படுகிறது.